இரண்டாம்பதிப்பு


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 32 | கதிர் 85 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 07, ஞாயிற்றுக்கிழமை 19.02.2017

## இழுபறிக்குப் பின் எடப்பாடி அரசுக்கு கிடைத்தது வெற்றி



சென்னை, செப். 19
தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. >> 52

### லாண்ட் மாஸ்ரர் - மோ. சைக்கிள் மோதி

## நெல்லியடி கோர விபத்தில் இளைஞன் பரிதாபச் சாவு



யாழ்ப்பாணம், பெப். 19
லாண்ட் மாஸ்ரரும் மோட்டார்சைக்கிளும்நேருக்கு நேர் மோதியதால் ஏற்பட்ட கோர விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் >> 52




## கிளியில் கர்ப்பிணிப் பெண்கள் இருவருக்குப் பன்றிக்காய்ச்சல்

### வடக்கில் இதுவரை 7 பேர் பாதிப்பு

கிளிநொச்சி, பெப். 19
கிளிநொச்சியில் பன்றிக்காய்ச்சல் எனப்படும் என்1எச்1 வைரஸினால் கர்ப்பிணிப் பெண்கள் 2 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவ ஆய்வு மையத்தின் பரிசோதனை அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.
பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை வடக்கில் 7ஆக அதிகரித்துள்ளது என்று >> 52

## மகிந்த அணி விலகுவது நன்மைக்கே

### கூறுகிறார் பொன்சேகா

கொழும்பு, பெப். 19
அரசமைப்புத் தொடர்பிலான உபகுழுக்களில் இருந்து மகிந்த ஆதரவு கூட்டு எதிரணி விலகப் போவதாக அறிவித்துள்ளமை நன்மை பயக்கும் விடயம்.
இவ்வாறு அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார். களனி பிரதேசத்தில் >> 52

## அரிசி வகைகளுக்கு சில்லறை விலைகள் அரசால் நிர்ணயம்

கொழும்பு, பெப். 19
இறக்குமதி மற்றும் உள்நாட்டில் உற்பத்தியாகும் அரிசி வகைகளுக்கான கட்டுப்பாட்டுச் சில்லறை விலைகள் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன.
இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி ஒரு கிலோ 72 ரூபா, உள்நாட்டு நாட்டரிசி ஒரு கிலோ 80 ரூபா, இறக்குமதி செய்யப்படும் பச்சை அரிசி ஒரு கிலோ 70 ரூபா, உள்நாட்டுப் பச்சை அரிசி ஒரு கிலோ 78 ரூபா, இறக்குமதி >> 52



## கொழும்புக்கு நேற்று வந்தார் ஜெய்சங்கர்

### மைத்திரி, ரணிலுடன் நாளை முக்கிய பேச்சு

கொழும்பு, பெப். 19
இந்திய அயலுறவுச் செயலாளர் ஜெய்சங்கர் 3 நாள்கள் பயணமாக நேற்றுக் கொழும்புக்கு வருகை தந்தார்.
நாளை திங்கட்கிழமை அரச >> 52

### முல்லைத்தீவு மக்களின் காணி விவகாரம்

# மைத்திரியுடன் கூட்டமைப்பு அவசர சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 19
முல்லைத்தீவு மக்களின் காணி விடுவிப்புக்காக அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் விரைவில் சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பு பெரும்பாலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறக்கூடும். அதேவேளை நாடாளுமன்றத்தில் மீண்டும் ஒரு முறை சபை ஒத்திவைப்புப் பிரேரணையைக் கூட்டமைப்பு முன் வைக்கவுள்ளது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். >> 52

## 19ஆவது நாள்

### பிலக்குடியிருப்புப் போராட்டத்தில் தாயக உறவுகள் பலர் பங்கெடுப்பு



யாழ்ப்பாணம், பெப். 19
பிலக்குடியிருப்பு மக்களின் அறப்போர் மூன்று வாரங்களை நெருங்கும் நிலையில், அந்த மக் களுக்குத் தாயக தேசத்தின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் ஆதரவு வழங்கும் தரப்புக்களின் எண் ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.
வாக்குறுதிகள் - உறுதிமொழிகள் >> 52

## தோட்டக் காணிக்குள் புதைக்கப்பட்ட மோ. எறிகணையும் குண்டும் மீட்பு

தென்மராட்சி, பெப். 19
சாவகச்சேரியில் தோட்டக் காணியை உழுத போது புதைக்கப்பட்டிருந்த மோட்டார் எறிகணையும் கைக்குண்டும் வெளிவந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரி பெருங்குளம் முருகமூர்த்தி கோவிலுக்கு அருகில் உள்ள காணியில் நேற்று இடம்பெற்றது. >> 52

## சூடு எச்சரிக்கையை நீக்கியது வான் படை



யாழ்ப்பாணம், பெப். 19
வான்படையினரால் வைக்கப்பட்ட எச்சரிக்கைப் பலகையில் நேற்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
'உள்நுழைந்தால் சுடப்படுவீர்கள்' என்ற வாசகம் நேற்று வைக்கப்பட்டுள்ள பலகையில் காணப்படவில்லை. (வ-5-7)

## காணிகளை விட்டு ராணுவத்தை வெளியேறக் கோரி சுழற்சி முறை உணவு ஒறுப்புத் தொடர்கிறது

முல்லைத்தீவு, பெப். 19
புதுக்குடியிருப்புப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் 682ஆவது படையணி பொது மக்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணியை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் தகரக்கொட்டகை அமைத்து 11 நாள்களாக தொடர் அறவழிப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டு வந்தனர். தங்கள் போராட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் >> 52



## பத்திரிகையாளரைக் கடத்தித் தாக்கிய குற்றச்சாட்டில் 3 ராணுவத்தினர் கைது

கொழும்பு, பெப். 19
'த நேசன்' பத்திரிகையின் ஊடகவியலாளர் கீத் நோயரை 2008ஆம் ஆண்டு கடத்திச் சென்று தடுத்து வைத்து தாக்குதல் நடத்தியமை தொடர்பான சந்தேகத்தில் இராணுவச் >> 52

## சந்திரிகாவின் குற்றச்சாட்டை மறுக்கிறது ராணுவம்

போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ தமிழ்ப் பெண்கள் இராணுவத் >> 52

## இந்திய மீனவர் படகுகளை விடுவிக்க 3 நிபந்தனைகள்

### யாழ்ப்பாண மீனவர் சமாசத்தால் முன்வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 19
இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் விடுவிக்கப்பட வேண்டுமானால், எங்களின் 3 நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்.
இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்தார். 122 சங்கங்கள் >> 52

SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி

011 5 411 411
www.sdb.lk | @SDBbank
www.facebook.com/sdbbank

12.50% வ.தே.வ. 13.10% 03 மாதங்கள்

12% வ.தே.வ. 12.36% 06 மாதங்கள்

12.25% வ.தே.வ. 12.25% 12 மாதங்கள்

SDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிட்டன

*சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு*

முல்லைத்தீவு, பெப். 19

அரசு கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டன. இதுவரைக்கும் உறுதியான முடிவுகள் எவையுமின்றி புதுக்குடியிருப்பு, பிலக் குடியிருப்பு மக்களுடைய தொடர் அறவழிப் போரட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு -பிலக் குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடு விக்கக் கோரி மக்கள் நடத்தி வரும் தொடர் அறவழிப்போராட்டத்தை அடுத்து புதுக்குடியிருப்பு காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தலைமை அமைச்சரும், பிலக்குடியிருப்பு காணிகளை விடுவிப்பதாக அரச தலைவரும் சொன்னார்கள். அவர்களது வாக்குறுதிகள் எல்லாம் தற்போது காற்றில் விடப்பட்டுள்ளன. இவை எல்லாம் இங்கு இராணுவத்தின் நிர்வாகமே நடக்கின்றது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களின் கோரிக்கையை நிறை வேற்ற வலியுறுத்தியும் மாணவர்காளல் நாளைய தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது. வடக்கு மாகாணத்தில்உள்ளசகலபாடசாலைமாணவர்களும்காலையில் ஒரு மணி நேரம் முன் னெடுக்க உள்ளனர். எங்கள் பகுதிகளில் இன்றும் அகதி வாழ்க்கை வாழும் மாணவர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கவேண்டும் - என்றார். (வ-7)

# வவுனியாப் பூங்காவில் ஊஞ்சல் சரிந்ததில் மாணவன் படுகாயம்

வவுனியா, பெப்.19

வடக்குமாகாணமுதலமைச்சரால்அண்மையில் திறந்து வைக்கப்பட்ட வவுனியா நகர சபைக்குச் சொந்தமான பூங்காவின் ஊஞ்சல் அடியோடு பாறி விழுந்ததில் ஊஞ்சல் ஆடிய மாணவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றது. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 11வயதுடைய சிறுவனே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வவுனியா நகரசபை பூங்காவில் கம்பியால் அமைக்கப்பட்ட ஊஞ்சலில் மூன்று சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த சமயத்தில் ஊஞ்சல் அடியோடு பாறி வீழ்ந்ததில் இரு சிறுவர்கள் தெய்வா தீனமாக காயங்களின்றி தப்பினர். எனினும் மற்றையசிறுவன்காயங்களுக்குஉள்ளான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பல மில்லியன் ரூபா நிதியில் சீரமைக்கப்பட்ட பூங்காவில் உள்ள ஊஞ்சல் அமைக்கப்பட்டுள்ள கம்பிகள் ஆழமாக புதைக்கப்படாமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக பொது மக்கள் விசனம் தெரிவித்தனர்.





உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டிலும், வவுனியா நகர சபையினால் 9 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குறித்த பொது பூங்காவை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் கடந்த 3ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார். 'இந்த பூங்கா முன்னாள் நகர சபை செயலாளர் பதவியில் இருக்கும்போதே அனைத்து வேலைகளும் இடம்பெற்று நிறைவு செய்யப்பட்டது. இன்று இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளதையடுத்து சிறுவர்கள் விளையாடும் அனைத்து உபகரணங்களையும் பரிசோதனைக்குட்படுத்துமாறு பணித்துள்ளேன்' என்று வவுனியா நகர சபை செயலாளர் ஆர். தயாபரன் தெரிவித்தார். (வ-21)

# ஜப்பான் நுழைவிசைவைப் பெற கொழும்பில் தனியான மையம்

கொழும்பு, பெப். 19

ஜப்பானுக்கான நுழைவிசைவு (விசா) அனுமதியைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தமது விண்ணப்பங்களை புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மைய நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும். தூதரக அலுவல்கம் இனிமேல் நுழைவிசைவு விண்ணப்பங்களைப் பொறுப்பேற்காது. இவ்வாறு அந்த நாட்டுத் தூதரகம் அறிவித்தது.

கொழும்பு 03 இல் அமைந்துள்ள கீதாஞ்சலி பிளேஸ் என்ற வீதியில் 41/1 என்ற இடத்தில் ஜப்பானுக்கான நுழைவிசைவு வழங்கும் மைய நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே ஜப்பான் தூதுவர் கெனெச் சுஹனுமா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரக அலுவலகம் ஜப்பான் நாட்டுக்கான நுழைவிசைவு விண்ணப்பங்களை கையாளுவதற்கென தனியான மைய நிலையமொன்றை அமைத்துள்ளது. ஜப்பான் மற்றும் இலங்கைக்கு இடையே சுற்றுலாத்துறையில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த வருடத்தில் ஜப்பான் தூதரகத்துக்கு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. விண்ணப்பங்களைச் சேகரித்தல் மற்றும் விநியோகித்தலுக்காக கண்டி, குருநாகல், காலி, புத்தளம், கட்டுநாயக்க, பேலியகொட, பியகம மற்றும் இரத்மலானை ஆகிய நகரங்களிலும் இவ்வாறான மைய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன' என்று ஜப்பான் தூதுவர் தெரவித்தார்.

இந்த இடங்களில் பொறுப்பேற்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்பு மைய நிலையத்துக்கு சமர்ப்பிக்கப்படும். யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான மைய நிலையம் திறக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# வைத்தியத்தை வியாபாரம் செய்யிறவங்கள் சையிட்டத்திற்கெதிரா சாகிறாங்கள் !!!!



அம்பலத்தாடி

அப்புச்சி

aappuchchi@gmail.com

காலங்காலமா பேப்பர் படிக்கிறதும் புத்தகங்கள் படிக்கிறதும்நல்லஉலகசினிமா பார்க்கிறதும் தான் மனசுக்குப் பிடிச்ச விசயம் பாருங்கோ. இப்பகொஞ்ச நாளா கண்பார்வை கொஞ்சம் மறைப்பா இருக்கென்றுபோட்டு கொண்டுபோய்க் காட்டினா கண் பூஞ்சை பிடிச்சுப் போச்செென்றாங்கள். பிறகு அந்த ரெஸ்ட் இந்தத் ரெஸ்ட் என்று அலைக்கழிச்சுக் கற்றாக் ஒப்பரேசன் செய்யவேணும் என்றும் சொல்லிச்சினம். பிறைவேற்றில காட்டினாத்தானே டொக்ரர்மாரை ஈசியா இப்ப பிடிக்கலாம்.

கண் வைத்தியத்துக்கு இப்ப யாழ்ப்பாணத்தில கடும் போட்டி பாருங்கோ. டொக்டரைப் பதிஞ்சு வாசிக்க முடியேல்லை மங்கலாத் தெரியுதென்று கண்ணைக் காட்டினன். எல்லாம் சோதிச்சினம். சலரோகம் இருக்குதோ? கட்டுப்படுத்தவேணும் கண்ணைத்தான் பாதிக்கும். சாடையா குளுக்கோமா இருக்கிற மாதிரி இருக்கு. பிறகு பார்ப்பம். இப்ப கண்ணாடி எடுங்கோ. எங்கட ரெக்னீசியன்ரெஸ்ட்பண்ணித்தருவார். அதைக் காட்டிக் கண்ணாடிக்குப் பதியுங்கோ. எல்லாம் இங்க எங்களிட்டையே இருக்கு என்று துண்டைத் தந்தார். சரி என்று ரெக்னீசியன் பெடியனிட்டபோக அவன் ஏதோ அவசரத்தில கண்ணாடிகளை மாத்தி மாத்தி அது தெரியுதோ இது தெரியுதோ அங்க தெரியுதோ இங்க தெரியுதோ உதுக்கால ஏதும் தெரியுதோ என்று புடுங்கியெடுத்திட்டான். இடைக்கிடை கையில இருந்த போனையும் நோண்டிக் கொண்டிருந்தான்.

எனக்கு எல்லாம் மங்கலாத்தான் தெரிஞ்சுது. நான் ஹஹ தம்பி மங்கலாக் கிடக்கு இன்னொருக்காப் போட்டுப் பார்ப்பம்" என்றன். அதெல்லாம் சரி பார்க்கத் தேவையில்லை. "இதைக் கொண்டுபோய் டொக்டரிட்டக் காட்டுங்கோ" என்று அவசரப்பட்டு அனுப்பிவிட்டான். டொக்டர் அதை வாங்கிப் பார்த்துப் போட்டு "பவர் லென்ஸ்தான் ஐயா போடவேணும்;;" என்று சிட்டையைப் பக்கத்தில நின்ற பிள்ளையிட்ட வீசினார். இதுக்கிடையில நான், "டொக்டர் ரெக்னீசியன் அவசரமாப் பார்த்தவர். எனக்கென்னவோ திருப்தியில்லாம இருக்கு" என்று இழுத்தன். உடன டொக்ரர் சொன்னார் ஐயா! ஒரு நாளைக்கு இரு நூறு, இருநூற்று ஐம்பது பேரைஒரு இரண்டு மணித்தியாலத்தில மட்டும் பார்க்கிறம். அந்த ரெக்னீசியன் அரச ஆசுப்பத்திரியில வேலைசெய்யிறவர். அவர் பிழைவிடமாட்டார். என்றாலும் உங்கட திருப்திக்குத் திருப்பிச் சோதிக்கச் சொல்லுறன்" என்றார்.

உடன ரெக்னீசியனைக் கூப்பிட்டு ஐயாவுக்கு திருப்தியா இல்லையாம். திரும்ப ஒருக்காப் பாருங்கோ என்று கட்டளையும் பிறப்பிச்சார். நல்ல மனிசன் என்று நினைச்சுக்கொண்டு ரெக்னீசியனுக்குப் பின்னாலபோனன். அங்க அவன் கதிரையில இருத்திப்போட்டு என்னை வெருட்டினான். என்ன டொக்டருக்குச் சொன்னீங்கள். உங்களுக்கு என்ன தெரியுமென்று சொல்ல வெளிக்கிட்டனீங்கள்? என்று வெருட்டி வெருட்டி இது தெரியுதோ அது தெரியுதோ என்றுபோட்டு "அதே அளவுதான். முதல் எழுதினது சரிதான்" என்றான். நாங்கள் ஒரு நாளுக்கு நூற்றுக் கணக்கானாக்களைப் பார்க்கிறம். நீங்கள் ஒன்றும் தெரியாமல் கதைக்க வெளிக்கிடுகிறியள் என்றான். இதைக் கேட்டதும் எனக்குச் சுர்ரெண்டு பத்திக் கொண்டு வந்திட்டுது. கிழட்டு வயதில நாங்கள் வந்தா நீ நினைச்சதெல்லாம் செய்யலாமென்று நினைக்கிறியோ. நான் தாறகாசுக்குத் தானே நீ வேலை செய்யிறா. எனக்குத் திருப்திவரும் வரையும் நீ செய்யவேணும் என்று தெரியுமோ. மருத்துவத் துறையின்ர தார்மீகம் தெரியுமோ. நோயாளியின்ர உரிமை பற்றிப் படிச்சிருக்கிறியோ. நீங்கள் எல்லாம் என்னமும் செய்துபோட்டுக் காசு பறிக்கலாமென்று நினைக்கிறீங்களோ. உன்ர வேலை முடிஞ்சு வந்து ஒரு இரண்டு மணித்தியாலத்தில இருநூறு பேரைப் பார்க்கிற னென்று மார் தட்டுறாய். இவ்வளவு தொகைகளை ஒரு இரண்டு மணித்தியாலத்தில பார்க்க முடியுமே? அறம் தெரிஞ்சவங்கள் இப்பிடிச் செய்யமாட்டாங்கள். உனக்கெதிரா கேஸ் போட்டா என்ன நடக்குமென்று தெரியுமே! நான் கத்த இரண்டு மூன்று சின்னப் பிள்ளையள் ரீசேட்டுகளோட ஓடிவந்து ஐயா இதில நின்று சத்தம் போடக் கூடாது ஏதாவது முறைப்பாடென்றா எழுதி முறைப்பாட்டுப் பெட்டிக்க போடுங்கோ என்று சொன்னாளவையள். "ஓம்! ஓம்! இப்ப நான் எழுதிப் போட்டா உடன பண்ணிக் கிழிச்சுப் போடுவியள் போல என்று கத்திப்போட்டு வந்திட்டன்.

வைத்தியத் துறையைக் காசு சம்பாதிக்கிற ஆசாமிகள் கையில குடுத்துப் போட்டு எங்களை வெருட்டுறாங்கள் பாருங்கோ. "எல்லாம் அந்தச் சாமிக்குத்தான் வெளிச்சம். அவன் ஒருநாள் கேக்காமல் விடமாட்டான்" என்றுபோட்டு நான் அவன் தந்த துண்டோட மற்றக் கண்டொக்டரின்ர இடத்துக்குப் போனன். "கண்ணாடிபோட ரெஸ்ட் பண்ணவேணும்" என்று கேட்க அங்க நின்ற வடிவான பிள்ளையள் பக்குவமா விவரம் கேட்டு ரெக்னீசியனிட்டக் கொண்டுபோய் விட்டாங்கள். அவன் பெடியன் ரெஸ்ட் பண்ணித் துண்டை எழுதி முடிய முன்னம், ஏற்கனவே முதல் ஆள் எழுதித் தந்திருந்த துண்டை நீட்டி "இதில இருக்கிறதும் உங்கடயும் ஒன்றோ" என்று கேட்டன். அதை வடிவாப் பார்த்திட்டு அவன் சொன்னான் "இது வித்தியாசமா இருக்கு. இப்போதைக்கு நீங்கள் பவர் லென்ஸ் பாவிக்கத் தேவையில்லை" என்றான். "சரிதம்பி" என்றுபோட்டு அவங்கட கண்ணாடிக் கடையிலேயே கண்ணாடிக்கு ஓடர் குடுத்துப் போட்டு வந்தன்.

மனிசரை வைச்சு எப்பிடியெல்லாம் பிழைப்பு நடத்துறாங்கள்?; என்று மனதுக்க கறுவிக்கொண்டு சைக்கிள எடுத்து உளக்கிக் கொண்டுவந்து கொண்டிருக்க வெள்ளைக் கோட்டோட சின்னப் பெடியள் கைகாட்டி "ஐயா நில்லுங்கோ" என்று மறிச் சாங்கள். தட்டுத் தடுமாறி சைக்கிளை நிற்பாட்டி இறங்கினன். ஐயா! நாங்கள் தனியார் மருத்துவக் கல்லூரி சையிட்டத்திற்கு எதிராப் போராடுறம். அதுக்கு மக்களின்ர ஆதரவத் திரட்டுறம் நீங்களும் ஆதரவு தரவேணும். இதில ஒரு கையெழுத்துப்போடுங்கோ. ஊர்வலம் நடத்திறம் அதுக்கும் வாங்கோ" என்றாங்கள். "ஏன் தம்பியவை! தனியார் கல்லூரி வந்தால் நல்லதுதானே நிறைய டொக்டர்மார் வந்தால் வைத்தியத்துறையில ரவுடிகள் கொஞ்சம் பேர் குறைவினம்தானே என்றன். அதுக்கு அவங்கள் சொன்னாங்கள் ஐயா தனியார் நடத்தினா தரமான டொக்ரர்மார் வரமாட்டினம். எதிர்காலத்தில வைத்தியத்துக்கு நீங்கள் எல்லாம் நிறையக் காசு செலவளிக்கவேண்டிவரும்.;"

"இப்ப என்ர வைத்தியம் எல்லாத்துக்கும் நிறையச் செலவளிக்க வேண்டித்தானே இருக்கு. என்ரயும் மனிசியின்ரையும் மருந்துச் செலவுக்குப் பிள்ளைகளுக்கு மாதாந்தம் பத்தாயிரத்துக்கு மேலபோகுது. தனியார் நிறைய வந்தா போட்டியில உந்த வைத்தியர்மாரின்ர செலவுகள் குறையும்தானே. கீரைக் கடைக்கும் ஒரு எதிர்க்கடை இருக்கிறது நல்லது. தரமாகவும் மலிவாகவும் விரைவாகவும் இலகுவாகவும் கிடைக்கிறதுக்கு வழிவகுக்கும். அரசு தான் இயங்கவே திண்டாடுது. அதுக்கு ஒரு அளவுக்கு மேல ஒன்றும் இயலாது. நீங்கள் ஏன் அரசின்ர குடும்பியச் சீவிறிங்கள். கொஞ்சம் இருந்தா கிராக்கி அதிகம் என்று தெரிஞ்சு வைச்சிருக்கிறியள் போல என்று நான் கதைக்க பெடியளின்ட முகமெல்லாம் இருண்டு போயிட்டுது.

எல்லாரிண்ட நினைப்பும் தாங்கள் கிளிச்சகோட்டிலதான் எல்லாரும் நிக்கவேணும் எண்டதுதான். "நிறைய இருந்தா எல்லாத்துக்கும் நல்லது. எங்களப் போல ஆக்களுக்கு நல்லதுதானே. உந்த 'நோ பி.எம்.சி', 'நோசையிட்டம்' என்றதை விட்டிட்டுப் போய் படிக்கிற அலுவலைப் பாருங்கோ என்று போட்டு சைக்கிளை எடுத்தன். சாத்தான் ஏன் வேதமோதுவான்? என்று நினைச்சுக்கொண்டே சைக்கிளை மிதிச்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லாகூர் போர்ப் பயிற்சிக் கல்லூரியில்*

# கடற்புலிகளின் எழுச்சி குறித்து கடற்படைத் தளபதி விரிவுரை

கொழும்பு, பெப். 19
இலங்கைக்கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்தன, பாகிஸ்தான் கடற்படையின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் கடற்புலிகளின் எழுச்சி தொடர்பாக விரிவுரையாற்றினார் என்று தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த கடற்படைத் தளபதி கடந்த புதன்கிழமை லாகூரில் உள்ள பாகிஸ்தான் கடற்படையின் போர்ப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றிருந்தார்.

பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகளுடன் இலங்கைக் கடற்படை உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் கடற்படை அதிகாரிகள், லாகூர் கடற்படை போர்க் கல்லூரியில் அதிகாரிகளுக்கான கற்கை நெறியை பயின்று வருகின்றனர்.

இலங்கைக்கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்தின, 1995ஆம் ஆண்டில், இந்த போர்ப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை பெற்றிருந்தார்.

பயிற்சி பெற்று வரும் அதிகாரிகள் மத்தியில், 'மரபுசாரா எதிரியுடனான சிறிலங்கா கடற்படையின் போர் அனுபவங்கள்' என்ற பொருளில் இலங்கைக்கடற்படைத் தளபதி உரையாற்றினார்.

மரபுசாரா எதிரியுடன் இலங்கைக் கடற்படை எவ்வாறு போரிட்டது, இந்த அச்சுறுத்தலை ஒரு மரபுசாரா கடற்படை எவ்வாறு எதிர்கொண்டது, மூன்று பத்தாண்டுகளாக நீடித்த போரில் வெற்றியீட்டியது எப்படி என்று அவர் தனது உரையில் விரிவாகவிளக்கிக்கூறினார்.

மேலும், கடற்புலிகளின் பரிமாண வளர்ச்சி, கரும்புலிகளின் தற்கொலை தாக்குதல் அச்சுறுத்தல், இலங்கைக் கடற்படையின் பதில் நடவடிக்கை, தற்கொலை தாக்குதல்களை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள், சிறிய படகுகள் கருத்திட்டம், அபிவிருத்தியும், விடுதலைப் புலிகளின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களின் அழிப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து இலங்கைக்கடற்படைத் தளபதி விளக்கமளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

# குடாநாட்டில் குற்றச்செயல்கள் தற்போது கட்டுப்பாட்டுக்குள்

## *பிரதிப் பொலிஸ்மா அதிபர் சொல்கிறார்*

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம் பெற்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரின் நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தில் தற்போது குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு அமைதி திரும்பியுள்ளது.



இவ்வாறு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித் தார்.

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் இரவு நேர ரோந்து நடவடிக்கைக்காக பொலிஸ் துவிச்சக்கர வண்டிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரிவுக்கு சிறப்புப் பயிற்சி பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறப்புப் பிரிவின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர் களிடம் கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம் பெற்ற குற்றச் செயல்கள் தொடர்புடைய குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. சந்தேகநபர்கள் அனைவரும் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த 10 நாள்களாக யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக எந்தப் பதிவுகளும் இல்லை. யாழ்ப்பாணத்தை குற்றச்செயல்களிலிருந்து பாதுகாத்து அமைதியாக்கியுள்ளோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரின் இரவு நேர ரோந்து நடவடிக்கைக்காக துவிச்சக்கர வண்டிப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கபட்டுள்ளது. பொது மக்களுக்கு எந்தவித இடையூறுகளையும் ஏற்படுத்தாது தேவையான பகுதிகளில் துவிச்சக்கர வண்டி மூலம் ரோந்து நடவடிக்கையை முன்னெடுப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

பொலிஸாருக்குத்தேவையான துவிச்சக்கர வண்டிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை அவர்கள் முறைப்படியாக பயன்படுத்த வேண்டும். கடமையில் ஈடுபடுபவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அவர் களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குத் தேவையான மேலதிக உபகரணங்கள் மற்றும் உதவிகள் ஆகியவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட் டுள்ளன.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த குறுகிய கால கடமையில் நாளாந்தம் 2 ஆல்லது 3 மணித்தியாலங்கள் வரையில் அவர்கள் கடமையுணர்வுடன் சேவைவழங்குவர் என்று நம்புகின் றேன்.

மோட்டார் சைக்கிள் கும்பல்கள், தவறான முறையில் வாகனங்களைச் செலுத்துபவர்கள்,பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் சம்பவ இடத்திலேயே வைத்து இந்தப்பிரிவினால் கைது செய்யப்படுவார்கள். கைது செய்யப்படுவோர் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கையளிக்கப்படுவர்.

குற்றச் செயல்களை பொலிஸார் கட்டுப்படுத்தும் போது பொதுமக்களிடம் நன்மதிப்பையும் அவர்களின் உதவிகளையும்பெறமுடியும் என்று நம்புகின்றேன் - என்றார். (வ-4,8)

# தென்னிலங்கை மாணவர்கள் இடையே யாழ். பல்கலையில் நேற்றுக் கைகலப்பு

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் தென்னிலங்கையைச் சேர்ந்தமாணவர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது. தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலைய யத்தில் முறைப்பாடு செய்தனர் என்று பொலிஸார் தெரிவித் தனர்.

யாழ். பல்கலைகழக விளையாட்டு மைதா னத்தில் மூன்றாம் வருட மாணவர்களும் இரண்டாம் வருட மாணவர்களும் விளை யாடிக் கொண்டிருந்த வேளையிலேயே நேற்று மாலை இந்தக் கைகலப்பு ஏற்பட்டுள் ளது.

இரு பிரிவு மாணவர்களும் நேற்றுச் சனிக்கிழமை மாலை விளையாடிக் கொண்டிருந்த வேளையில், இரண்டாம் வருட மாணவர்கள் மூன்றாம் வருட மாணவர்களுடன் தகராறில் ஈடுபட்டனர்.

அந்த தகராற்றின்போது மூன்றாம் வருட மாணவர்கள் தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர். அந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணை மேற்கொள்ளப்படுவதாக கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-106)

SINGER FINANCE
முச்சக்கரவண்டிக்கான குத்தகை வசந்தகாலம்
பதிவுசெய்யப்பட்ட
முச்சக்கரவண்டிகள் தொடர்பில்
இலவசமாக
MRF
ரயர்கள் 02
QA 0001
காப்புறுதி இலவசம்
இல்லை
எந்தவொரு சிங்கர் காட்சியறையிலும் மாதாந்த தவணைக் கொடுப்பனவை செலுத்தலாம்
தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

Job Vacancies
*Admin Secretory
*Educational Counselors
Send your CV to below address on or before 24-02-2017
iCS DREAM BEYOND BOARDERS Foreign Education Services
77,Clock Tower Road, Jaffna
sutha@icssrilanka.com
021 - 4926222

Study in Australia
Western Sydney University
Charles Sturt University
Macquarie University
Edith Cowan ECU
James Cook University
Deakin College
University of Canberra
La Trobe University Australia
Griffith University
The University of Newcastle Australia
Curtin University
Why Study in Australia?
After G.C.E. O/L or G.C.E A/L or Degree
Foundation / Diploma / Bachelors / Masters
படிக்க ஓர் அரிய வாய்ப்பு!
அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்கள்
இலகு Visa நடைமுறைகள்
குறைந்த பாடநெறிக் கட்டணங்கள்
பகுதி நேர வேலை வாய்ப்புகள் (20Hours per week)
Admission open for 2017 Intakes
iCS DREAM BEYOND BOARDERS Foreign Education Services
Admission Help line
077 3013060
107, B 1/1 Galle Road,Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892



**40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற**

**' றோயல் குளுக்கோஸ்'**

தற்போது புதிய வடிவில்!!

இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

**" றோயல் குளுக்கோஸ்"**

Packed By:
Royal Industries, Colombo - 13.
**077 727 7670**




**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 2567**


## முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்

**பதவி :- கணக்காளர்**
**சம்பளக் குறியீட்டு இல :-** 104/10
**சம்பள அளவுத்திட்டம் :-** 15305 - 170x10 - 190 X 10 - 18 905 (66/2006 **இன்படி**)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத் திட்டக் கணக்குப் பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுது வினைஞர் பதவியொன்றில் (3) மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) ஐக்கிய இராச்சியக் கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திர சித்தி / கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டு கால அனுபவம். அல்லது க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுக்கான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வுத்துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**நிபந்தனைகள்**

01. வயதெல்லை 18 - 45 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)
02. கூட்டுறவுச் சங்கங்களில் கடமைபுரிபவர்கள் குறித்து சங்கத்தினூடாக விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டும்.
03. விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதியும் இணைக்கப்பட வேண்டும்.
04. மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தால் விதிக்கப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும். சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
05. விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
06. விண்ணப்ப முடிவு திகதி :- 2017.03.04
07. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி.

தலைவர்,
முல்லைத்தீவு கிழக்கு பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கரைச்சிக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
(AJA/794)(11,17)

**வாடகைத்தாய் தேவை**
30 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் Ivf மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.
077 637 3804

**தேவை**
யாழ்.நகரில் உள்ள ஸ்ரூடியோ ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.
(AJA CS 06314)(14,17,18)
தொடர்பு: 077 801 4704

**காணி விற்பனைக்கு**
யாழ். வண்ணார்பண்ணையில் யாழ். இந்துக் கல்லூரி, பெரியாஸ்பத்திரி, ரவுனுக்கு நடை தூரத்தில் ஒரு பரப்புக்காணி சுற்றிவர மதில் சுவருடன் பங்குக்கிணற்றுடன் உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 077 227 7465

**மணமகள் தேவை**
யாழ். இந்து 1979 கார்த்திகை 4 இல் பிறந்த அரச உயர் தொழில் புரியும் மணமகனுக்கு படித்த பண்பான மணமகள் தேவை. கிரகபாவம் 70 குறுகிய காலத்தில் விவாகரத்து பெற்றவர்.
076 662 4880

**மணமகன் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1993 கார்த்திகை சூரியன் செவ்வாய் 8இல்அரச தொழில் பார்க்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 075 289 5346

**காணி விற்பனைக்கு**
K.K.S. வீதி, சுன்னாகத்தில் வீட்டுடன் 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வீடு, திருமணமண்டபம், விடுதி அமைக்க உகந்த இடம்.
077 513 2261

**விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள மரம் அரியும் பாட்டு வாள் பட்டடை, டீசல் இயந்திரங்களும், மோட்டர்களும் விற்பனைக்கு
077 431 4227 (AJA/CS/444)(22,17)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
அரியாலை நெடுங்குளம் சந்தியிலிருந்து (A9) 100 m தொலைவில் 3 அறைகளுடன் கூடிய வீட்டுடன் காணி உடன் விற்பனைக்குண்டு.
077 033 3910 / 021 221 1414

**மணமகள் தேவை**
யாழ் இந்து விஸ்வப் பிரம்மகுலம், வயது 28, உயரம் 5'6" உடைய கொழும்பில் பிரபல IT Companyயில் Senior Software Engineer ஆக நிரந்தரப் பதவியுடன் பணிபுரியும் MSc. in Computer Science கற்ற மணமகனுக்கு, பட்டதாரியான அழகிய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.
0777 198 675, 0766 611 293

**பூக்கன்றுகள் விற்பனை**
நல்லின குரோட்டன்கள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். பூச் சாடிகள், மீன் தொட்டிகள், பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.
**பூக்கன்று ஒவ்வொன்றும் 80/=**
**யாழ். அக்சுரியம்**
**917.K.K.S.றோட், யாழ்ப்பாணம்.**
075 991 0060, 077 707 0711

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**
புறொய்லர் கல்பேட் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
U.S.A பாம்
குழப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.
077 868 9500

**வாடகைக்கு**
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ் தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல.8 புகையிரத வீதி வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள். இணைந்த குளியறை யுடன் கூடிய அறைகள் நாள், கிழமை மாத வாடகைக்குண்டு.
011 250 4281, 071 299 1256

**வீடு விற்பனைக்கு**
ஒஸ்கா வீதி, உரும்பிராயில் சகல வசதிகளுடனும் மூன்று அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 746 0447

**சேவை**
உங்கள் கனவு வீட்டினை அமைத்துக் கொள்வதற்கும், வரைபடம் தயாரித்தல், உத்தேச மதிப்பீடு தயாரித்தல் (BOQ), தர மேற்பார்வை செய்தல் போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ள எம்மை அழையுங்கள்.
Sugesh homes and Construction
077 296 0017, 075 622 9565

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1974 இல் பிறந்த பரணி நட்சத்திரம் உடைய சுவிஸ் குடியுரிமை பெற்ற மணமகனுக்கு (சாதாரண தரம்) படித்த மணமகள் தேவை.
077 371 5867

**வேலை ஆள்கள் தேவை**
யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள பூக்கடை ஒன்றிற்கு பெண் பிள்ளைகள் தேவை.
(18-30 வயது)
076 547 3487

**தங்குமிட வசதி**
யாழ் நகரின் மத்தியில் அரச, தனியார் கம்பனி ஊழியர், விற்பனைப்பிரதிநிதிகள் போன்ற தொழில் புரிவோருக்கு மாத வாடகையில் தங்குமிட வசதி உண்டு.
077 899 5973

**SB வீசா Ticket குறைந்த விலையில்**
சகல நாடுகளுக்குமான பயணச் சீட்டுக் களையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். இந்தியாவுக்கான Ticket களை 29 500/= க்கும் வீசா விண்ணப்பப்படிவம் 100/= பூர்த்திசெய்து தரப்படும். அத்துடன் பிரயாண காப்புறுதி, திகதி மாற்றமும் செய்துதரப்படும். தொடர்புகளுக்கு அழையுங்கள்.
SB Travels and Tours Pvt Ltd.
021 222 9555, 021 222 8555,
076 691 1080, 076 691 1083

**மர அரிவு ஆலை விற்பனைக்கு உண்டு**
மிருசுவிலில் உள்ள மர அரிவு ஆலை விற்பனைக்கு உண்டு.
077 255 7761

**மணமகன் தேவை**
யாழ்.இந்துக் குடும்பத்தில் 1986 ஆம் ஆண்டு மூல நட்சத்திரத்தில் பிறந்த ஆங்கில ஆசிரியைக்கு நல் ஒழுக்கமுடைய மணமகன் தேவை. அரச சேவையாளர்கள் விரும்பத்தக்கது.
தொ.பே. 072 759 6630

**காசாளர் தேவை**
தெல்லிப்பளையில் இயங்கும் பிரபல வியாபார நிறுவனத்திற்கு காசாளராகப் பணிபுரிவதற்கு ஆள் தேவை.
077 348 5856, 077 123 5942

**SB TRAVELS & TOURS (Pvt)Ltd.**
சகல நாடுகளுக்குமான பயணச்சீட்டுக்களையும் விசாக்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
இங்கு Air Ticketing வகுப்புக்களும் 2மாத பயிற்சிகளும் நடைபெறுகின்றன.
No 216, Kasthuriyar road, Jaffna.
021 222 9555/ 021 222 8555/
076 691 1083, 82, 80

**Wanted Distrbutors**
We need expeirianced agents to distrbuter 200ml, 500ml, 1000ml fruit drinks in blastic bottles in the following areas,
Jaffna
Kilinochchi
Trincomalee
Contact- Paradisa Beverages
No-35, 2nd lane,
Ratmalana.
T.P- 077 456 3350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




edexcel CIOB RICS

UGC அங்கீகாரம் கொண்ட
UK Degree
பட்டப்படிப்புகளை
இலங்கையிலேயே
பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...

INTAKE NOW ON

**பிரித்தானிய**
**உயர் தேசிய டிப்ளோமா**
**மற்றும் பட்டப்படிப்புகள்**



- BM – Business Management
- CSD – Computing & Systems Development
- CE – Civil Engineering
- QS – Quantity Surveying
- BMS – Biomedical Science
- LLB – Law

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

**FOUNDATION PROGRAMMES**
- Diploma in IT (DIT)
- Diploma in CAD & BS
- BMAc
- Certificate in English
- Diploma in English
- National Dip. In Engineering

GCE O/L › GCE A/L / Foundation Programme › BTEC Pearson BTEC HND Programmes › Degree Programmes (BA (Hons), BSc (Hons), B.Eng (Hons), LLB (Hons)) › Masters Programmes (MBA, MSc)

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131, 077 960 3753
COLOMBO 077 253 4595

**Jaffna Campus**
16, Point Pedro Road,
Jaffna.

**Corporate Office**
32, Dharmarama Road,
Colombo 6.
T : 0112597217

HOTLINE : 021 221 9910 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

## எமது பாடசாலையின் மார்ச்மாத அனுமதிகள்

» 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்
» வயதின் அடிப்படையில் வகுப்புக்கள்

### பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் - 3 வரை | 2+ முதல் - 4 வரை | 4+ முதல் - 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

» அனுமதிக் கட்டணம் ஒரு தடவை மட்டும்
» வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்க முடியும்
» கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

## English Classes for Children

**சிறார்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்**
குடாநாட்டிலுள்ள 12 BBC வளாகங்களிலும் வார இறுதி நாட்களில் சிறார்களுக்கான சிறு குழு (Small Group) Class நடாத்தப்படுகின்றன.

| Age | School Class | Level |
|---|---|---|
| 5+ - 6 | Pre-School & Year - 1 | Pre -Foundation |
| 6+ - 7 | Year - 2 | Foundation |
| 7+ - 8 | Year - 3 | Intermediate I |
| 8+ - 9 | Year - 4 | Intermediate II |

» சிறார்கள் தங்கள் திறனிற்கேற்ற பிரிவில் சேர்க்கப்படுவர்.
» பாடசாலை Syllabus உடன் இவ்வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
» தேர்ச்சி பெற்ற ஆசிரியைகள்.
» வார இறுதி வகுப்புக்கள்.
» மாதம் 600/= மட்டுமே.

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் | நீர்வேலி |
|---|---|---|---|
| இல.653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | இல.625, K.K.S வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. | பருத்தித்துறை வீதி, நீர்வேலி சந்தி, நீர்வேலி. |
| **மானிப்பாய் 1** | **மானிப்பாய் 2** | **சுன்னாகம் 1** | **சுன்னாகம் 2** |
| இல. 252, யாழ். வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி, (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சுபாரத்தினம் வீதி, சுன்னாகம். | இல.142, K.K.S வீதி, சுன்னாகம். (NSB வங்கி முன்பாக) |
| **வடமராட்சி** | **சாவகச்சேரி** | **சங்கானை** | **புத்தூர்** |
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பொன்னாலை வீதி, பிரதான வீதி, சங்கானை. | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி முன்பாக) |

**BRITISH BUSINESS COLLEGE** இல.653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 077 468 2951

## வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 142 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations · ICDL · bcs · abe Accredited College · SQA

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

**காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.**

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

14, March, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

**காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்**

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

05, March, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### IELTS

**சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை**

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

### KIDS' Class — Grade 1-10

**சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்**

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**British Way® English Academy**
**Contact (Jaffna Branch) : 021 300 55 55**
நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் எடை குறைய வேண்டுமா

★ உடல் எடை குறைக்க வேண்டுமா?
★ ஊளைச்சதையா?
★ வயிறு மார்பு குறைக்க வேண்டுமா?
★ எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
★ 100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (டொனிக் குளிசை.கிறீம்)

**ஆச்சரியம் 10 நாள்களில் வயிறு மார்பு குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு**

விலை 3500/= 5500/= 9000/=

**இதனைப் பாவித்து 10 நாள்களில் அபரீதமான மாற்றத்தை உணர்வீர்கள்**

பதிவு இல. 16168 **077 210 6155** 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா ?


* தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
* இள நரையா ?
* முடி கொட்டுகிறதா ?
* தலையிடியா ?
* பேன், பொடுகு தொல்லையா?

பொன்னாங்காணி, வல்லாரை, இலாமிச்சை வேர், மருதாணி, கரு சலாங்கண்ணி, கருவேப்பிலை சேர்த்து காய்ச்சிய ஆயுள் வேத எண்ணை.

100% இயற்கை மூலிகைகளால் ஆன இவ்வெண்ணையைப் பாவித்து 2 வாரங்களில் பலனை உணர்வீர்கள்.

பதிவு இல : 16168
077 263 9037
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**கடந்த 18.01.2017 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்**

அமரர்
**சின்னத்தம்பி சிவஞானம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மயிலணி வடக்கு,
சுன்னாகம்.**

பெறாமக்கள்
(ரூபன், சசி, அஜந்தன்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12
.
06
.
1981



மறைவு
18
.
02
.
2016

**நடனசபாபதி யாழினி**

நீங்கள் பறந்து போய்
ஆண்டு ஒன்று அசைந்த போதும்
அழியாத ஓவியமாய் – என்றும்
எம் நெஞ்சில் நீங்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(நினைவஞ்சலி 18.02.2017 கிளிநொச்சியில் நடைபெற்றது.)


**நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.**

செ. செல்வராசா

## மரண அறிவித்தல்

**பொன்னையா இராசரத்தினம்**

(ஓய்வுபெற்ற நீதி உதவியாளர், பிரதேசசெயலகம், தென்மராட்சி)



மலர்வு 07.08.1941 உதிர்வு 16.02.2017

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் (ஓய்வுபெற்ற நீதி உதவி யாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி) (16.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சுரேஷ் (UK), காமினி (UK), ரமேஷ் (UK), பாமினி (UK), ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலை வாணி (UK), அற்புதஜெயம் (UK), கருணா (UK), ஜெயதிஸ்ஸ (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனோஜிகா (UK), ஆகாஷ் (UK), கமிஷா (UK), கமேஷ் (UK), தியானா(UK), தபிஷன் (UK) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு
இராமாவில், கொடிகாமம்.**

தகவல்: குடும்பத்தினர்.
077 994 3979

## கார் விற்பனைக்கு

Nissan Sunny Diesel FB 13 ரக கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :- 077 614 1328, 077 927 1494

## கடை வாடகைக்குண்டு

புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டில் இரண்டு மாடிக் கட்டடத்தில் இருக்கும் கடை வாடக்கைக்கு விடப்படும்.
தொடர்பு :- 021 223 0310

## வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு :- 077 614 19 28

## வேலையாள்கள் தேவை

யாழ். பிரபல போன்சொப் ஒன்றுக்கு Cashier Clerk (பெண்) மற்றும் போன் திருத்தவேலை செய்யக்கூடிய அல்லது பழகவிரும்பும் (ஆண்) வேலையாள்கள் தேவை.
தொடர்பு : 077 044 6317

## கட்டுத் தேர் விற்பனைக்கு

புங்குடுதீவு மேற்கு கொம்மாபிட்டி மூத்தநாயினார் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் கட்டுத்தேர் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- செயலாளர் - 077 471 57 02
தலைவர் - 077 769 82 78

## சிறுநீரகம் தேவை

65 வயதுடைய ஆண் ஒருவருக்கு O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு :- 076 86 87 545

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, இராசபாதை வீதியில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :- 077 90 91 944

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், கீரிமலை வீதியில் விளான் சந்தியில் இருந்து சேந்தாங்குளம் சந்திக்கு போகும் பாதையில் கிழக்கு பக்கமாக 13 1/2 பரப்பு மேட்டுக்காணி இளவாலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 077 84 49687

## வேலை ஆள்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல பசன் காட்சியறைக்கு வேலை ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். Photoshop, Web Designing இல் ஆரம்ப அறிவு உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு :- 077 351 5980
077 373 41 09

## தவறிவிட்டது

எனது தேசிய அடையாள அட்டை, வாகன சாரதிப் பத்திரம், வாகனவரிப்பத்திரம், வாகன காப்புறுதிப் பத்திரம், சிறிய நாட் குறிப்பேடு மற்றும் சிறியளவிலான பணம் அடங்கிய பேர்ஸ் ஓட்டுமடம்-யாழ்ப்பாணம் சந்திக்கும் அராலி றோட் மற்றும் கல்லூரி வீதி இடையில் தொலைந்து விட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு கூர்ந்து கீழே தரப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவுமாறு வேண்டுகிறேன்.
தொ.பே.இல :- 077 65 89 443

## தேவை

1. களஞ்சியம் வாடகைக்குத் தேவை.
2. களஞ்சியக் காப்பாளர்கள் - ஆண்
3. கணக்கியல் தெரிந்த கணினி அனுபவமுள்ள பெண்கள்

Siva Brothers No-15,
Fourth Lane, Brown Road, Jaffna.
077 77 22 215

## தேவை

கொழும்பிலுள்ள பிரபல பாதுகாப்பு சேவை கம்பனிக்கு அனுபவமுள்ள அனுபவமற்ற OIC, JSO உடன் தேவை. சம்பளம் 35,000/= வரை. தங்குமிடம் இலவசம். [illegible]
[illegible] ROAD,
இராஜகிரிய. 011 287 1280,
தமிழில் - 071 244 6926

## நல்லூரான் பஸ் புக்கிங் சென்ரர் & திருமணசேவை

யாழ் - கொழும்பு ஆசனப்பதிவிற்கும், ரிக்கற் பெற்றுக்கொள்வதற்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும், வீட்டில் இருந்தவாறே அழையுங்கள் வீட்டிற்கு கொண்டு வந்து தருகின்றோம். எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களை பெற்றுக்கொள்ளவும் உடன் அழையுங்கள்.
தொடர்பு - 077 553 4437

## கண்ணீர் அஞ்சலி



மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி ஆலய திருப்பணி சபையில் கடந்த 40 வருடங்களாகச் செயலாளராக பணியாற்றி ஆலய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியதுடன் தன்து குடும்பத்தினருடன் இணைந்து சொந்தச் செலவில் ஆலய வளாகத்தில் கட்டடங்களை அமைத்து வழங்கிய

**பொன்னையா இராஜரத்தினம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய திருப்பணிச்சபை,
மீசாலை வடக்கு, இராமாவில் கந்தசாமி ஆலயம்.**

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**தம்பிப்பிள்ளை கனகராசா**
(கணித ஆசிரியர்,
யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி)



*மண்ணில்* 30.10.1950 *விண்ணில்* 19.02.1998

*ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் மனத்துயரம்
எம் ஆழ்மனதில் உங்கள் அன்பு முகம்
என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும்.*

எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

**ரவிந்திரராஜா திவ்வியா**




பிறப்பு 10.03.1996 இறப்பு 18.02.2017

அன்னாரின் பூதவுடல் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**32, பாரதி ஒழுங்கை, நாயன்மார் கட்டு,
யாழ்ப்பாணம்.**

தகவல்
குடும்பத்தினர்.



## பொன்னையா சீவரத்தினம்

**(ஓய்வுபெற்ற லிகிதர் - யாழ்ப்பாணம் வைத்தியசாலை)**

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சீவரத்தினம் 17.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 15, கோணாவளை ஒழுங்கை,
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.**

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக சட்டசபையில் அடிதடி, அமளிதுமளி

சென்னை, பெப். 19

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, தன்மீதான பெரும்பான்மை ஆதரவை நிலைநாட்டுவதற்காக சட்டசபை நேற்றுக் கூடியது. அ.தி.மு. கழகத்துக்கும் தி.மு. கழகத்துக்கும் இடையிலான கருத்து மோதலை அடுத்து சபையில் பெரும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பகிரங்கமாக அல்லாமல் இரகசியமாக வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று தி.மு. கழகத்தினர் வலியுறுத்தினர். இதற்கு சபாநாயகர் உடன்படவில்லை. இதனால் தி.மு. கழகத்தினர் சபாநாயகர் தனபாலை முற்றுகையிட்டனர். இதனால் சபை காலை 11 மணியில் இருந்து பிற்பகல் 1 மணிக்கு பிற்போடப்பட்டது.

ஒரு மணிக்கு சபை கூடியதும். சபாநாயகரின் கதிரை தி.மு. கழகத்தாரால் உடைக்கப்பட்டது. சபாநாயகரின் ஒலிவாங்கி தூக்கி வீசப்பட்டது. இதனால் பிற்பகல் 3 மணிவரை மீண்டும் சபை பிற்போடப்பட்டது.

தி.மு. கழகத்தினர் தொடர்ந்தும் குழப்பங்களில் ஈடுபட்டதால், அவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இந்த தள்ளுமுள்ளுகளில் தி.மு. கழகத்தின் செயல் தலைவர் ஸ்டாலின் தாக்கப்பட்டார். அவரது சட்டை கிழிக்கப்பட்டது.

தி.மு. கழகம் வெளியேற்றப்பட்டதன் பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டமைக்கு ஸ்டாலினும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் தமது கண்டனத்தை வெளியிட்டனர்.

ஸ்டாலின் தாக்கப்பட்டதை அடுத்து தமிழகத்தின் சில இடங்களில் சாலை மறியல்கள் இடம்பெற்றன. பேருந்துகளுக்கு கல் வீசப்பட்டன என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட் டன.

தான், தாக்குதலுக்கு உள்ளானதைக் கண்டித்தும், தாம் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டமையைக் கண்டித்தும், ஸ்டாலின் மெரீனா கடற்கரைக்குச் சென்று உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவருடன் தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களும் உணவு ஒறுப்பில் ஈடுபட்டனர். சில நிமிடங்களில் பொலிஸார் அவர்களைக் கைதுசெய்தனர். (ம)



## பரிசளிப்பு விழா இன்று

அச்சுவேலி, பெப்.19

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சைவபரிபாலனசபையின் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.கல்வி வலய கல்விப்பணிப்பாளர் என்.தெய்வேந்திரராசா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக திருவாசகமணி பண்டிதர் வ.பேரின்பநாதன் கலந்துகொள்வார்.

பரிசளிப்பு விழாவில் சைவபரிபாலன சபையினால் நடத்தப்பட்ட சைவநெறி மற்றும் தமிழ்மொழித் தேர்வுகள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தினப் போட்டிகள் புண்ணிய நாச்சியம்மையார் தினப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படுவதோடு மகேஸ்வர வழிபாடும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (வ-11)

# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரவேண்டும்

## மாவை எம்.பி. வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 19

சொந்தக் காணிகளை விடுவிக்குமாறுகோரி முல்லைத்தீவு மக்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் தீர்வு கிடைக்கும் வரை தொடர வேண்டும். நாடாளுமன்றிலும் இந்த விடயம் பேசப்பட்டும் அரசு இன்னும் கண்டு கொள்ளாததால் தொடரும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகின்றோம். நிலமீட்புக்காகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதையும் வரவேற்கின்றோம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முல்லைத்தீவில் அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கக் கோரியும் அந்த நிலங்களில் மீளக்குடியேறி வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளமைக்கு எதிராகவும் அறவழிப் போராட்டங்களை கடந்த பல நாள்களாக பிலக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு மக்கள் நடத்திவருகின்றனர்.

இன விடுதலைப் போராட்ட காலங்களில் துன்பமான, துயரமான இழப்புக்களையும் அனுபவித்த மக்கள் திடசங்கற்பம் கொண்டு நடத்தும் போராட்டங்களை நாம் ஆதரிக் கின்றோம். ஒரு திட்டமிட்ட அடிப்படையில் அனைவரும் ஒருங்கிணைந்து இலக்கை எட்டும் வரை போராடுவது நியாயமானதே. இந்தப் போராட்டங்களில் அமைதியான வழியிலான, வன்முறைகளுக்கு இடமளிக்காத அறவழிப் போராட்டங்களில் அனைவரும் பங்குகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்து அவற்றுக்குச் சொந்தமான மக்களை மீளக் குடியமர்த்துவோம் என்று அரச தலைவரும் அரசும் வாக்குறுதி அளித்து இரண்டு வருடங்களாகிவிட்டன. இந்தக் காலத்தில் ஒரு சிறு முன்னேற்றம் ஏற்பட்டதே தவிர, மக்களின் நிலங்கள் பெருமளவில் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

ஐ.நா.மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தில் பெருமளவு நிறைவேற்றப்படாமல் அரசும், அரச தலைவரும் இழுத்தடிப்புச் செய்து வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இத்தகைய போராட்டங்களை நடத்தியும் பங்களிப்புச் செய்தும், ஆதரித்தும் வந்த வரலாற்றைக் கொண்ட நான் கடந்த 9ஆம் திகதி அன்று நினைவிழக்கும் வரையிலான கொடிய நோயொன்றினால், நீண்ட நாள்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். இதனால் மக்களின் போராட்டங்களில் பங்குபற்ற என்னால் முடியாமல் போனதற்கு மன வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மருத்துவர்களின் ஆலோசனைப்படி நோயிலிருந்து தேறுவதற்கு மருந்து உட்கொண்டு விரைவாகத் தேறி வருகின்றேன். விரைவில் போராட்டங்களில் பங்கெடுக்க முடியும் என்று நம்புகின்றேன். (வ-4)

## நிதி மோசடியில் ஈடுபட்ட நைஜீரியர்கள் கைது

இலங்கையில் தங்கியிருந்த நிலையில் பல்வேறு நபர்களிடம் 2 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதியை மோசடி செய்தனர் என்று கூறப்படும் நைஜீரியாவைச் சேர்ந்த 10 பேரை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கைது செய்துள்ளது.

கடவுச்சீட்டு மற்றும் நுழைவிசைவு என்பன இல்லாத நிலையில் அவர்கள் நாட்டுக்குள் தங்கியிருந்துள்ளனர். தெஹிவளை, கல்கிஸ்சை ஆகிய பிரதேசங்களில் அவர்கள் தங்கியிருந்துள்ளனர்.

இந்த நைஜீரியர்கள் 10 பேரும் திட்டமிட்ட அடிப்படையில் முகநூலின் ஊடாக பல்வேறு நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியே நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் வெளிநாட்டு நுழைவிசைவு என்பன பெற்றுத் தரப்படும் என்று கூறியே அவர்கள் பணம் அறவிட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் காலி, உடுகம பிரதேசத்தில் முதலில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னரே ஏனையோர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## கட்டடத் தொகுதி திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், பெப். 19

மக்கள் நலன் பேணும் அமைப்பின் அலுவலகமும், இலவச தையல் பயிற்சி நிலையமும் அடங்கிய கட்டடத் தொகுதி இன்று காலை 10 மணிக்கு குட்செட் வீதி, கோண்டாவிலில் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார்.

50 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் கல்வி உதவி நிதி வழங்கப்படவுள்ளது. தையல் பயிற்சி இலவசமாக வழங்கி தேவை உள்ளோரைக் கண்டறிந்து தையல் இயந்திரங்களும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## நடமாடும் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு இலவச நடமாடும் மருத்துவ முகாம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது என்று நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மு.ப. 9 மணிக்கு தொடக்கம் பி.ப.3மணி வரை மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

நடமாடும் உபகரணங்கள் வழங்குதல், செயற்கைக் கால் மற்றும் சார்புறுப்புக்கான அளவெடுத்தல், செயற்கைக்கால் சிறிய திருத்த வேலைகள்செய்தல் போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன. பயன்பெறக்கூடிய மாற்றுத்திறனாளிகள் பங்குபற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)




புகைத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள் தற்போது முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் மெய்வன்மைப் போட்டியில் இல்ல அலங்காரம் ஒன்று படத்தில் உள்ளவாறு வடிவமைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் சமூகவலைத்தளங்களில் பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன. "இவ்வாறு இல்லம் அலங்கரிக்கப்பட்டமை எமக்குத் தெரியாது. மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் இல்லம் இவ்வாறு அலங்கரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது" - என்று பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ற-21)

## 4 நூல்கள் வெளியீடு வதிரியில் இன்று

நான்காவது பரிமாணம் நிறுவனத்தால் க.நவம் சியாமளா நவம் ஆகியோர் எழுதிய பரதேசம் போனவர்கள் படைப்புகளும் பார்வைகளும் இயற்கையுடன் வாழுதல் தடங்களைக் கடந்து செல்லும் காலநதி ஆகிய நான்கு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வரவேற்புரையினை நடேசு ஆதவனும் வாழத்துரைகளை யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கவிஞர் த.ஜெயசீலன் கவிஞர் வதிரிசிரவீந்திரன் வடக்குமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் ஆகியோரும் வெளியீட்டுரையை ஜீவநதி ஆசிரியர் க.பரணிதரனும் நிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ.கிழங்குச் செய்கையாளருக்கு வாய்ப்பான நிலமை இல்லை

## யாழ்.மாவட்ட விவசாயிகள் கவலை

அச்சுவேலி,பெப்.19
யாழ்.மாவட்ட உருளைக்கிழங்குச் செய்கையாளர்களுக்கு வாய்ப்பான நிலையை உருவாக்குவதற்கு அரசு முன்வரவில்லை. யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படும் காலப்பகுதியில் உருளைக்கிழங்கின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தல் மற்றும் உருளைக்கிழங்கின் இறக்குமதிவரியை அதிகரிக்க வேண்டும் என்ற எமது கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறு யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம் கவலை தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த வருடம் யாழ். மாவட்டத்தில் கூடுதலான அளவு நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. 800க்கு மேற்பட்ட விவசாயிகள் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் அறுவடை செய்யப்படும் உருளைக்கிழங்கை தம்புள்ளை மத்திய சந்தை, கொழும்பு புறக்கோட்டை சந்தை ஆகியவற்றுக்கு விவசாயிகள் கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். அங்கு கிலோ 60 ரூபாவுக்கும் 70 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது. இதன்மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் சராசரிக்குக் குறைவாகவே உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படும் ஜனவரி, மார்ச் மாதங்கள் உள்ளடங்கிய காலப்பகுதியில் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதுடன் இறக்குமதி வரியையும் அதிகரிக்க வேண்டும் என காலத்துக்குக் காலம் கோரிவந்துள்ளோம். இந்த வருடமும் உரியமுறையில் கோரிக்கை விடுத்தோம். யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் விவசாய திணைக்களம் என்பனவும் அரசிடம் கோரிக்கை விடுத்தன.

எமது கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக அரசு காலத்துக்குக் காலம் வாக்குறுதி வழங்கியபோதிலும் செயன்முறைப்படுத்தவும் விவசாயிகளுக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தவும் முன்வரவில்லை. இது கவலை அளிக்கின்றது.

எமது கோரிக்கையை ஏற்று இப்போதாவது செயன்முறைப்படுத்தினாலும், கணிசமான அளவு விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும்.- என்றார். (ற-11)



# தொழில்நுட்பச் செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப்.19
வடக்கு தகவல் தொழில்நுட்பத்துறை தொழில்நுட்பச் செயலமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது என்று வடக்கு தகவல் தொழில்நுட்பத்துறை சம்மேளனத் தலைவர் த.தவரூபன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை சார் நிறுவனங்களை ஒன்றிணைக்கும் வடக்கு தகவல் தொழில்நுட்ப சம்மேளனம் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கைபேசிச் சாதனங்களில் தமிழில் தட்டச்சுச் செய்ய பயன்படுத்தும் செல்லினம் மென்பொருளையும் மற்றும் முரசு அஞ்சல் மென்பொருளையும் அப்பிள் நிறுவனத் தயாரிப்புக்களில் உள்ள தமிழ் விசைப்பலகை மென்பொருளையும் வடிவமைத்த மலேசியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்பவல்லுநரும் முரசு நிறுவனத்தின் நிறுவுநருமான முத்துநெடுமாறன் செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மாணவர்கள், பொதுமக்கள் ஏனைய தொழிற்றுறை சார்ந்த சகலரும் கலந்து கொண்டு பயன்பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# ஒன்றரை வருடங்களில் 100,000 கிலோ நண்டு ஏற்றுமதி



யாழ்ப்பாணம் பெப். 19
ஊர்காவற்றுறை தம்பாட்டியில் உள்ள நண்டு பதனிடும் தொழிற்சாலையால் கடந்த ஒன்றரை வருடகாலத்தில் ஒரு லட்சம் கிலோ கிராமுக்கு அதிகமான நண்டுகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இவ்வாறு தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் செயலர் அ.அன்னராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஏற்றுமதிகள் அதிகரிக்கப்பட உள்ளன. ஊர்காவற்றுறைப் பகுதியைச்சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த் பெண்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

2015 ஆம் ஆண்டு இந்தத் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டபோதிலும் சரியான ஒப்பந்தகாரர் இன்மையால் 6 மாத காலம் பூட்டப்பட்டிருந்தது. பின்னரே நண்டு பதனிடும் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது 20 பேர் வரையான பெண்கள் இங்கு வேலை செய்கின்றனர். புதிதாக ஒப்பந்த அடிப்படையில் இணைந்து கொண்ட ஒப்பந்தகாரர் இதுவரை நண்டுபதனிட்ட முறையிலிருந்து மாறி, நண்டைச் சுத்தம் செய்து சதையைப்பிரித்துஎடுத்துஅதனை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். அதற்கு இந்தத் தொழிற்சாலையில் போதிய வசதிகள் இல்லை தற்போது உட்கட்டுமான வேலைகள் நடை பெறுகின்றன. வேலைகள் முடிவுறும் நிலையில் இருப்பதால் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து மீண்டும் இந்தத் தொழிற்சாலை நவீன முறையில் இயங்க வுள்ளது. வேலை செய்பவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்தக்கூடிய வாய்ப்பு உள்ளது.

20 பெண்கள் வேலை செய்த இடத்தில் 100 பெண்கள் வேலை செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளது. இதில் 50 பெண்கள் தம்பாட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர்களும், ஏனைய 50 பேர் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்குட்பட்டவர்களுமாக இணைத்துக் கொள் ளப்படவுள்ளனர்.

நண்டு ஏற்றுமதியைப் பொறுத்து வேலைவாய்ப்பின் தொகையும் அதிகரிக்கப்படும். இதுவரை காலமும் தம்பாட்டி கிராம மீனவர்களிடமே நண்டுகள் கொள்வனவு செய்யப்பட்டு வந்தது. இனி வரும் காலங்களில் ஏனைய இடங்களில் இருந்தும் நண்டுகள் கொள் வனவு செய்யப்படும். ஒரு நாளைக்கு 400 கிலோ நண்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த நிலையில் இனிமேல் ஒரு நாளைக்கு ஆயிரம் கிலோவுக்கு மேல் நண்டுகள் ஏற்றுமதி செய்யப்படும். இந்த நண்டு பதனிடும் தொழிற்சாலையால் எமது கிராம மீனவர்களின் வாழ்வாதாரம் மிகச் சிறப்பாக இருப்பதோடு இனிவரும் காலங்களில் ஊர்காவற்றுறை பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரமும் சிறப்படையக்கூடிய வாய்ப்பு உள்ளது.
- என்றார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடனும் நோர்வே நாட்டின் நிதிப்பங்களிப்புடனும் ஊர்காவற்றுறை தம்பாட்டியில் 2 கோடி 30 இலட்சம் ரூபா செலவில் உருவாக்க்கப்பட்ட நண்டு பதனிடும் தொழிற்சாலை கடந்த 2015ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலை, தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

(ற- 21,10)



# தொழில் வாய்ப்பு தேர்வு தொடர்பான ஊர்வலம்

யாழ்ப்பாணம்.பெப்.19
சர்வோதயம் நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான சிறந்த தொழில்வாய்ப்பைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான கலந்துரையாடலும் ஊர்வலமும் நேற்று நடைபெற்றன.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இருந்து ஆரம்பித்து ஊர்வலம் யாழ்ப்பாணம் மாநகரசபைமைதானத்தில் நிறைவுபெற்றது. அங்கு இளைஞர் யுவதிகளுக்கான தொழில்சார் துறையின் வழிமுறைகளின் தேர்வு பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது.

தொழிற்பயிற்சியுடனான வேலைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள துறைகளாக ஏற்பாட்டாளர்களால் விருந்தோம்பலும் சுற்றுலாத்துறையும், கட்டுமானத்துறை, மோட்டார் வாகனத்துறை, மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை போன்றவை குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் இருந்து அழைத்து வரப்பட்ட இளைஞர் யுவதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.(ற-ரி)

# வழக்குப் பதிந்ததால் உயிரை விட முயற்சி!

தென்மராட்சி, பெப்.19
நீர்த் தொட்டிக்குள் டெங்கு நுளம்பின் குடம்பி காணப்பட்டதை அடுத்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்ததால் விரத்தியுற்ற குடும்பத் தலைவர் நச்சுத் திராவகம் அருந்தினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டிலிருந்தோர் உடனடியாகச் செயற்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதால் அவர் காப்பாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று நுணாவிலில் நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியால் விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் நுணாவில் பகுதியில் முன்னெடுக்கப்பட்டன.

வீடொன்றுக்குச் சென்ற பரிசோதனைக் குழுவினர் அங்கு காணப்பட்ட நீரத்தொட்டிக்குள் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதையடுத்து இவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர். அதனால் விரக்தியடைந்த குடும்பத் தலைவர் நேற்றுக் காலை நச்சுத் திராவகத்தை அருந்தினார் என்று கூறப்படுகின்றது. குடும்பத்தினர் அவரை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# மன்னார் பேருந்து நிலைய மதிப்பீட்டறிக்கை தயாரிப்பு

## மாவட்டச் செயலர் தகவல்

மன்னர், பெப்.19
மன்னார் மாவட்டத்துக்கான பேருந்து நிலையம் மற்றும் நவீன சந்தை என்பவற்றுக்கான [illegible] வரவு - செலவு மதிப்பீடுகளையும் நிதி அமைச்சுக் கோரியுள்ளது.

இவ்வாறு மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-
பேருந்து நிலையமும், நவீன சந்தையும் அமைக்கப்பட வேண்டும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். கோரிக்கைகளை ஆராய்ந்த நிதி அமைச்சர், இரண்டு திட்டங்களுக்குமான செலவு மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் என்பனவற்றைச் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார்.

இரு திட்டங்களும் சுமார் 400 மில்லியன் ரூபாவுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இரு திட்டங்களும் உடன் தயார் செய்யப்படுகின்றன.

இந்த ஆண்டின் நடுப்பகுதியில் திட்டங்கள் அனுமதிக்கப்படலாம் என எதிர்பார்க்கின்றோம்-என்றார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பம்பைமடுவில் கழிவு மீள்சுழற்சித் திட்டம்

## 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

வவுனியா, பெப். 19

வவுனியா பம்பைமடு பிரதேசத்தில் தொடர்ச்சியாகக் கொட்டப்பட்டு வரும் குப்பைகளால் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பாதிப்பைக் கருத்தில் கொண்டு குப்பைகளை மீள் சுழற்சி செய்து உரமாக்கும் திட்டத்துக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் முயற்சியால் ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீனின் வேண்டுகோளுக்கிணங்க உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா இந்த நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



வவுனியா பம்பைமடுவில் குப்பைகள் குவிந்து கிடக்கும் மேட்டுப் பிரதேசத்துக்கு நேற்றுமுன்தினம்காலைஉள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிகாரிகள் சகிதம் அமைச்சர் ரிசாத் பதியுதீன் சென்றார்.

வவுனியா மாவட்டத்தில் சேரும் அன்றாடக் குப்பைகள் இந்த இடத்தில் தொடர்ந்தும் கொட்டப்பட்டு வருவதால் நாங்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றோம். துர்நாற்றம் எழுவதால் சுவாசிக்க முடியாது பெரிதும் சிரமப்படுகின்றோம். சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டு நோய்களுக்கு ஆளாக வேண்டி நேரிடுகின்றது. இந்தக் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று சாளம்பைக்குளம் மற்றும் அயல் கிராம மக்கள் அமைச்சர் ரிசாத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

உயர் அதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை நடத்தினார். குப்பை மேட்டுக்கு அப்பால் உள்ள 10 ஏக்கர் நிலத்தில் மீள் சுழற்சி மேற்கொள்ளும் செயற்றிட்டத்தை 200 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் ஒரு வருட காலத்துக்குள் நடைமுறைப்படுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட காணியை விடுவித்தல், சூழல் ஆய்வு அறிக்கை பெறுதல், தொழில்நுட்ப உதவி மற்றும் மாகாண சபை அமைச்சுடன் இந்தத் திட்டத்துக்கான ஒருங்கிணைப்புப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளேன். தற்போது குப்பை கொட்டப்பட்டு வரும் இடத்துக்கு மாற்றீடாக தற்காலிகமாக வேறு இடங்களை பயன்படுத்தலாமா என ஆலோசியுங்கள். சுமார் ஒரு வாரத்துக்குள் இந்த பணிகளை ஆரம்பிக்க வேண்டும் - என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ற-21)

# சுண்டிக்குளம் தொடுவாயில் இந்திய மீனவர் வலைத் திருட்டு

## கட்டைக்காடு சென்.மேரிஸ் கடற்றொழில் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.19

சுண்டிக்குளம் தொடுவாயில் உள்ளூர் மீனவர்களின் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வலைகள், இந்திய மீனவர்களால் திருடப்பட்டுள்ளன என்று கட்டைக்காடு சென். மேரிஸ் கடற்றொழில் சங்கத் தலைவர் ஜெ.கிறிஸ்டிராஜா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கரையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் கடலில் போடப்பட்ட வலைகளே திருடப்பட்டன. பாதிக்கப்பட்ட மீனவர்களில் ஒருவர் மிகவும் வறுமைப்பட்டவர். கடன் பெற்று வலைகள் கொள்வனவு செய்து தொழிலில் ஈடுபட்டவர். வலைகள் களவாடப்பட்டதும் மன உளைச்சலால் தனக்குத் தானே தீ மூட்ட முயன்றுள்ளார்.

திருட்டுத் தொடர்பாக கடற்படைக்கும், கடற்றொழில் சமாசத்துக்கும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று அவர் தெரிவித்தார். (ற-8)

# கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது

கிளிநொச்சி, பெப்.19

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூரில் 10 போத்தல்கள் கசிப்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து நடத்தப்பட்ட தேடுதலில் விற்பனைக்குத் தயாராக 100 பைக்கட்டுக்களில் அடைக்கப்பட்ட கசிப்பு மீட்கப்பட்டது.

சந்தேகநபர்கள் அவற்றைத் தமது வீடுகளுக்கு அருகே உள்ள பற்றைக்குள் மறைத்து வைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-6)

# நெடுங்கேணி வைத்தியசாலைக்கு பொலிஸ் பாதுகாப்பு

## யானைகளிடம் இருந்து பாதுகாக்க

முல்லைத்தீவு, பெப்.19

நெடுங்கேணி வைத்தியசாலைக்குள் புகும் யானைகளைக் கட்டுப்படுத்த துப்பாக்கி ஏந்திய இரு பொலிஸார் தினமும் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று பிரதேச செயலாளர் பரந்தாமன் தெரிவித்தார்.

இவ்வாறு வைத்தியசாலைத் தரப்புகள் தெரிவித்தன.

நெடுங்கேணி வைத்தியசாலைக்குள் இரவு வேளையில் புகும் காட்டு யானைகள் அட்டகாசம் செய்கின்றன. கடந்த வியாழக்கிழமை மருத்துவர் விடுதிக்குள் யானை புகுந்து அச்சுறுத்தியது. வைத்தியசாலையை இரவு நேரத்தில் இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த பொறுப்பு மருத்துவர், வைத்தியசாலையை மாலை 4 மணியுடன் மூடவேண்டும் என்று பிரதேச செயலகம், வனஜீவராசிகள் திணைக்களம், பொலிஸாருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

தற்போது வைத்தியசாலையில் துப்பாக்கி ஏந்திய இரு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவர் என்று கூறப்படுகின்றது.

யானைகளால் மக்களின் வாழ்வாதாரம், தங்குமிடம் என்பவை பாதிப்படைவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு கிட்டும்வரை வைத்தியசாலையை இயக்காதிருக்க முடியாது. வைத்தியசாலைக்குத் தினமும் இரவு நேரத்தில் இரண்டு பொலிஸார் துப்பாக்கிகள் சகிதம் காவல் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார். நிரந்தரத் தீர்வாக வைத்தியசாலையின் எல்லைப் பகுதிகளில் நிரந்தர சூரியகல மின் விளக்குகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது - என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர். (ற-101)

# நட்டஈடு வழங்கவில்லை என மக்கள் விசனம்

அச்சுவேலி, பெப்.19

யாழ். மாவட்டத்தில் பிரதான வீதிகள் அகலிக்கப்பட்டபோது கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கும், தறிக்கப்பட்ட பயன்தரு மரங்களுக்கும் இழப்பீடுகள் எவையும் வழங்கப்படவில்லை என்று பொது மக்கள் தெரிவித்தனர்.

2010ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லைப் பாலம் முதல் கோப்பாய்ச் சந்தி வரையான வீதி அகலிக்கப்பட்டது. வீதியோரங்களில் இருந்த கணிசமான அளவு நிலங்கள் அகலிப்புக்காகக் கையகப்படுத்தப்பட்டன. பலா, மா மரங்கள் உட்பட பல பயன்தரு மரங்களும் தறிக்கப்பட்டன.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்று அப்போது தெரிவிக்கப்பட்டதோடு, காணி உரிமையாளர்களிடம் இருந்து பாதிப்புக்கள் குறித்த விவரங்களும் சேகரிக்கப்பட்டன. தற்போது ஐந்து ஆண்டுகள் கடந்துள்ளபோதிலும், இதுவரை நட்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை என்று பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். (ற-11)

# குப்பைகளை அகற்ற கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.19

குருநகர் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இருந்து கிழக்குப் புறமாக குருநகர் இறங்குதுறை வரையுள்ள கடற்கரை குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றது. அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பிளாஸ்ரிக் போத்தல்கள், சொப்பிங் பைகள், கழிவுப் பேப்பர்கள் கொட்டும் இடமாக இந்தக் கடற்கரைப் பகுதி மாறியுள்ளது. கடற்கரையின் அணைக்கட்டு பல இடங்களில் உடைந்துள்ளது. இந்த அணைக்கட்டைச் செப்பனிட்டு இந்தக் குப்பை கூளங்களை அப்புறப்படுத்த யாழ்.மாநகர சபை உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த குப்பை போடாதீர்கள் என்ற அறிவித்தல் பலகையையும் இந்த இடங்களில் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-51)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் விசேட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடு

தென்மராட்சி, பெப்.19

டெங்கு நுளம்பின் குடம்பிகள் காணப்பட்ட எட்டுக் குடியிருப்பாளர்களுக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம் விசேட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுத்தது. கால்நடைகளுக்கு வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள், நீர்த்தொட்டிகள் மற்றும் பாவனைக்குதவாத பிளாஸ்ரிக் கொள்கலன்களுக்குள் காணப்பட்ட மழை நீரில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்தக் குடியிருப்பாளர்கள் மீது பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவை எதிர்வரும் 21 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சியில் டெங்குத் தொற்று அதிகமாகக் காணப்படுகின்றது. டெங்குத் தொற்று அதிகம் இனங்காணப்பட்ட பகுதிகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட கல்வயல், நுணாவில் போன்ற பகுதிகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இரு பிரிவுகளிலும் பற்றைகளாகக் காணப்பட்ட காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலை காணப்பட்ட 121 காணிகளின் உரிமையாளர்களுக்கு இரு வார கால அவகாசத்தில் பற்றைகளைத் துப்புரவாக்குவதற்கான அறிவுறுத்தல் வழங்கி சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. கால அவகாசத்துக்குள் துப்பரவு செய்து அறிவிக்காத காணி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. 363 இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலை காணப்பட்டது. அந்தக் குடியிருப்பாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, அவற்றைத் உடனடியாகத் துப்புரவாக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

அடுத்த வாரம் 21 ஆம் திகதி மட்டுவில் வடக்கு மற்றும் மட்டுவில் தெற்குப் பிரிவுகளிலும், 23 ஆம் திகதி சாவகச்சேரி நகரம் மற்றும் கோவிற்குடியிருப்பு போன்ற பிரிவுகளிலும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அந்தப் பகுதி மக்கள் தத்தமது குடியிருப்புக்கள் மற்றும் காணி களைத் துப்புரவாக வைத்திருந்து சட்ட நடவடிக்கையைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் 84 பேரும், பெப்ருவரி 15 ஆம் திகதி வரை 45 பேருமாக மொத்தம் 129 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ற-9)

# உளுந்து, நிலக்கடலைக்கு நியாய விலை இல்லை

## முல்லைத்தீவு விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, பெப்.19

முல்லை. மாவட்டத்தில் தற்போது அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், நெல், உளுந்து, நிலக்கடலை என்பவற்றுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்ததாவது:

[illegible] மேற்கொண்டு நியாயமான விலையைப் பெற ஆவன செய்ய வேண்டும்.

தற்போது அறுவடை செய்யும் நெல், உளுந்து, நிலக்கடலை என்பவற்றைத் தனியார் வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர். நெல் பச்சையாக மூடை 2 ஆயிரத்து 200 ரூபாவுக்கும், நிலக் கடலை 8 ஆயிரத்து 500 ரூபாவுக்கும், உளுந்து கிலோ 80-100 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

[illegible] வைக்க வசதியில்லாத நிலையில் விவசாயிகள் இந்த விலைக்கே கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளனர் - என்றனர். (ற-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் வில்லைகளின் விலைகள் குறைப்பு

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு,பெப்.19

மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 38 வகையான கண் வில்லைகளின் விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் இது தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கண் வில்லைகளின் புதிய மற்றும் பழைய விலைகள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கண் வில்லைகளின் விலைகள் குறைக்கப்பட்டிருப்பதால், கண் சத்திர சிகிச்சைக்கான கட்டணங்களும் பெருமளவில் குறைவடைவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

மக்களின் பயன் கருதி ஏனைய மருந்துகள், மருந்து உபகரணங்கள், தனியார் மருத்துவமனைகளின் கட்டணங்கள் மற்றும் தனியார் துறையில் முன்னெடுக்கப்படும் அனைத்து மருத்துவப் பரிசோதனைகளினதும் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் வெகு விரைவில் முன்னெடுக்கப்படும்.

சுகாதாரம் என்பது இலாபம் உழைக்கும் வியாபாரம் அல்ல. இது ஒரு சேவை. நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த நடைமுறையில், மாற்றத்தை கொண்டுவரும் போது பெரும் பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்க நேரிட்டது. எனினும் இது தவிர்க்க முடியாதது. இதன் இறுதியில் மக்களுக்கே நன்மை கிட்டியுள்ளது.-என்றார். (ஐ)

# வளர்ப்பு மகள் கொலை விவகாரம் தாயாருக்கு விளக்கமறியல் நீடிப்பு

அம்பாறை,பெப்.19

அம்பாறை, மத்தியமுகாம் 11 ஆம் கொலனி பிரதேசத்தில் வளர்ப்பு மகளை அடித்துக் கொலைசெய்தார் என்ற சந்தேகத்தில் நபரான தாயாரை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் மன்ற பதில் நீதிவான் ஏ.பேரின்பராஜா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த மே மாதம் 31 ஆம் திகதி தாய்க்கும், வளர்ப்பு மகளுக்கும் இடையில் மதம்மாறியமை தொடர்பில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, தாயார் கட்டில் பலகையால் வளர்ப்பு மகளைத் தாக்கியுள்ளார். இந்த நிலையில், மகள் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மகளின் சடலத்தை வீட்டின் பின்புறத்தில் கிடங்கு வெட்டித் தாயார் புதைத்தார் என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்தது.

தனது வளர்ப்பு மகளான செல்வநாயகம் ஜனனி (வயது 21) என்பவரை அடித்துக் கொலை செய்துவிட்டு, சடலத்தைப் புதைத்த சம்பவத்தைத் தொடர்ந்து, சந்தேகத்தின் அடிப்படையில் வளர்ப்பு மகளின் தாயார் (வயது 55) சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படடிருந்தார்.

குறித்த சந்தேக நபரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மீண்டும் கல்முனை நீதிவான் மன்ற பதில் நீதவான் ஏ. பேரின்பராஜா முன்னிலையில் முற்படுத்தியபோது, எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)




# ஆற்றில் மிதந்த குழந்தையை அள்ளியெடுத்த பொலிஸார்

### பின்னர் தந்தையிடம் ஒப்படைத்தனர்





கொழும்பு,பெப்.19

மொனராகலையில் கைவிடப்பட்ட குழந்தை ஒன்றை, பொலிஸ் பெண் உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்று, பராமரித்து வந்தமை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

மொனராகலை கச்சேரி சந்தியிலுள்ள ஏரி ஒன்றில், நான்கு மாதங்களான பெண் குழந்தை ஒன்று வீசப்பட்டு அநாதரவாகக் காணப்பட்டது. அதனை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் அந்தக் குழந்தையை மீட்டு, மொனராகலைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

ஏரியில் மீட்கப்பட்ட குழந்தையை மொனராகலை பொலிஸ் நிலையத்தின் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குளிப்பாட்டி, பால் கொடுத்துப் பராமரித்தனர். பின்னர் அந்தக் குழந்தையை அவரது தந்தையிடம் ஒப்படைத்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தல பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே அந்தக் குழந்தையைக் குறித்த ஏரியில் வீசியுள்ளார். அந்தப் பெண்ணே குழந்தையின் தாயார் எனவும், அவர் சிறிது மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

WANTED
OFFICE SPACE - IN JAFFNA
A pioneering brand activation and integration agency in Sri Lanka is looking for a Space around 100 sq feet area, with parking facility, to run an office, close to Jaffna Town.
Call 0777684554

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறை வாடகைக்குண்டு

குறைந்த விலையில் நாள் வாடகைக்கு Room ரூபா 700 - ரூபா 4000 வரை A/C, T.V Attach Bathroom வசதிகளுடன் உண்டு. Hotel Villa City 422/1, Galle Road Wellawatte இராமகிஷ்ண Shed க்கு அருகில் 072 255 2222

## விற்பனைக்கு

கொழும்பு 06 இல் Semi Luxury தொடர்மாடி மனை விற்பனைக்குண்டு. 24 million 3 படுக்கையறை 1350 sqft Seaview/பாதுகாப்பு/தனிப்பட்ட வாகன தரிப்பிடம்/Swimming pool/GYM கட்டுமான வேலை முடிவு/உறுதி April 2017 இல் கிடைக்கும்.

Ravi- 077 442 3800 (C/28455) (22,17)

## விற்பனைக்கு

கொழும்பு 5 Layard's வீதியில் புதிய தொடர் மாடி மனை (Apartmant) விற்பனைக்கு உண்டு. (1000/1600/2500sqft) April 2017 இல் குடியிருக்கலாம்.

RE/MAX Gajan 077 934 7222 (C/28456) (22,17)

## வாடகைக்கு

கொழும்பு 06 இராமகிருஷ்ணா வீதி வெள்ளவத்தையில் Restaurant வாடகைக்கு உண்டு. Furniture வுடன் கொடுக்கப்படும்.

RE/MAX Gajan- 077 934 7222 (C/28457) (22,17)

## விற்பனைக்கு

கொழும்பு 06 இல் Brand New Apartmant விற்பனைக்கு.
2 BHD-975 sqft 3 BHD-1150/1300/1350 sqft
டுப்ளக்ஸ் தொடர் மாடி 4BHD-1375/1600/2100 sqft
5 BHD-2150 sqft

பிரகலாதன்- 076 558 7045 (C/28458) (22,17)

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.00 / 1.00 / 4.00 / 7.00
சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
வெள்ளி/சனி/ஞாயிறு 9.30 PM




ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
வெள்ளி/சனி/ஞாயிறு 9.30 PM

விசாரணை ☎ 021- 2227712

facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## வீடு வளவு விற்பனைக்கு

A9 வீதிக்கு அண்மையில் எல்லா வசதிகளும் கூடிய இடத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கையில் நல்லமாடி " மாளிகை வீடு " 10 அறைகள், 2குளியலறை, வற்றாத கிணறு ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. மிகவும் பாதுகாப்பான உறுதியான குளிர்மையான வீடு. பயன்தருமரங்கள் நிறைந்தவை. International School, Hotel மற்றும் நிறுவனங்கள் நடத்தக் கூடிய நல்லராசியான வீடு. Lawyers, Doctors களுக்கு உகந்தது. இதற்கு அண்மையில் 50 பரப்பு குடியிருப்புக் காணி சுற்றிவர Carpet Road, மின்சார வசதியுடன் கூடிய காணியும் விற்பனைக்கு உண்டு. பலவிதமான தொழிற் சாலைகள், பண்ணைகள் வைப்பதற்கு உகந்தது.

**077 559 6054/ 077 809 7740/ 076 378 3408/ 077 356 5345**

## பகுதிநேர வேலை வாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு.**காப்புறுதி ஆலோசகராக**, யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

* 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்:
  யாழ்ப்பாணம்,நெல்லியடி ,சங்கானை

### அடிப்படைத் தகைமைகள்

* G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
* 18-55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 28.02.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல : 5523**
C/O உதயன்,
**361.கஸ்தூரியார் வீதி.யாழ்ப்பாணம்.**

## நாகபூஷணி திருமண சேவை

(மணமகள்மாருக்குப் பதிவுக் கட்டணங்கள் இலவசம்)
(19.02.2017 தொடக்கம் 28.02.2017 வரை)

எம்மிடம் ஏராளமான மணமக்கள் ஜாதகங்கள் போட்டோக்களுடன் உண்டு. நீங்கள் விரும்பும் மணமகனையோ / மணமகளையோ மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்துதரப்படும்.

**383/14B, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(நல்லூர் கோயில் வடக்குப் பக்கமாக)
T.P: 021 222 9306, 077 138 7596

## முக்கிய அறிவித்தல்

எங்கள் ஸ்தாபனம் Koolair Northern Engineering (PVT) Ltd, No.395,Kandy Road, Mambalam Junction Ariyalai, Jaffna இல் கடமை ஆற்றிய பொது முகாமையாளர் (Genral Manager) மட்டுவில் தெற்கு சாவகச்சேரியில் வசிக்கும் திரு.S.சண்முகதேவன் அவர்கள் இராஜினாமா செய்துவிட்டார். என்பதனை எங்கள் ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்ளும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இயக்குனர்.


## கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு தேவை - வவுனியா

மின்னியல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் விநியோகத்தில் முன்னணி வகிக்கும் நிறுவனத்தின் விற்பனைக்குப் பின்னரான சேவைகளை நடத்துவதற்கு கட்டடம் தேவை.

* ஏறத்தாள 6000 - 8000 சதுர அடிகள் (கீழ்த்தளம் அண்ணளவாக 3000 சதுர அடிகள் அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.)
* 10 வருடங்கள் குத்தகைக்கு / வாடகை.
* 10 வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள்.
* (03 ways)03 அவத்தை மின்னிணைப்பு.
* நுழைவுக்காக ஆகக்குறைந்தது 20 அடி கொண்ட வீதி.

**Singer (Srilanka) PLC**
scjaffna@singersl.com
**Contact: 077 176 8331**

## முதல் முறையாக வெள்ளவத்தையில்...



## WELLAWATTE - ROYAL FERTILITY CLINIC

உங்கள் நோக்கமே பெற்றோராதல்!

குழந்தையின்மைக்கான பிரபல பிரதான ஆலோசகர்
UK, USA மற்றும் Australia வில் 25 வருட கால அனுபவமுள்ளவர்.



எமது சேவைகள்:

* Consultation & Counseling
* Lab Investigation
* Ultra Sound Scanning
* IUI, IVF, ICSI procedure
* Egg / Sperm Donor program
* Egg / Sperm / Embryo Freezing

பரிசோதனை நேரம்:
தினமும் காலை 9.00 மணியிலிருந்து பகல் 1.00 மணி வரை

**அழையுங்கள்: 0772 825 869**

**ROYAL HOSPITAL (PVT) LTD**
62, W.A. Silva Mawatha, Wellawatte, Colombo 06.
**Phone:** 94-11-2586581, 2584212, 2597565

*Care...when and where you need it most*

FLEX Graphic

## புதுசு வேணுமா?

**யாழ். Colour Plusz இற்குத் தான் வரணும்**

ஆம் ! புத்தம் புதிய டிசைன்களில் ஒவ்வொரு வாரமும் புத்தம் புதிய வரவுகள் நேரடியாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது

Daily wear Sarees, சுடிதார்துணி வகைகள் மற்றும் சாறிகளுக்கு ஏற்ப Blouse வகைகள் lining voil மற்றும் Special Party Blouse துணிவகைகள்

☞ விலையோ குறைவு ☞ தரமோ மேல் ☞ டிசைன்களோ புதுசு



**ஒருமுறை வாரீர் ! விலைகளின் அதிசயத்தை பாரீர்**

Colour Plusz
141, Power House Road.(ராணி தியேட்டர் அருகில்) Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகை ஒப்பனையாளர் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.19
மட்டுப்படுத்தப்பட்ட சுன்னாகம் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு மாவை சாரதி சனசமூக நிலைய பொதுநோக்கு மண்டபத்தில் தலைவர் ஆ. உதயசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினரும் இளைஞர் விவகார, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரும் ஒன்றிய ஆலோச கருமான இ.ஆனோல்ட்டும், சிறப்புவிருந்தினராக தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யு.எல்.டி. சுமித்பிரியந்தவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் இ.ஆனோல்ட்டின் உதவித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் மூலம் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப் படவுள்ளன. அன்றைய தினம் சுன்னாகம் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச்சங்கத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களுக்கும் பொது விடுமுறை வழங்கப்படுகிறது என்றும் தலைவர் தெரிவித்தார். (ற-ரி)

# எறும்புண்ணி செதில்கள் கடத்த முயன்றவர் கைது

கொழும்பு, பெப்.19
எறும்புண்ணி செதில்களை இந்தியாவுக்குக் கடத்த முயற்சித்த இலங்கைப் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கவிமானநிலையத்தின் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் அந்தப் பெண் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்படவிருந்த எறும்புண்ணி செதில்கள் 11 கிலோ எடையுடையவை என்று பொலிஸாார் குறிப்பிட்டனர். இந்தச் சம்பவத்தில் கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவரையே சுங்க விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

எறும்புண்ணி விலங்குகள் பன்னாட்டு ரீதியாக அருகி வரும் விலங் கினங்கள் என சுங்கத்திணைக் கள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த போதை மாத்திரைகள் சிக்கின

கொழும்பு, பெப்.19
இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த ஒரு இலட்சத்து 88 ஆயிரம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகள் தமிழகத்தின் பாம்பன் பகுதியில் அந்த நாட்டுச் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் முந்தல் முனை கடற்கரைப் பகுதியில் கடத்துவதற்குத் தயார் நிலையில் இருந்த படகு குறித்து சுங்க அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. சுங்க அதிகாரிகள், குறித்த பகுதியை சோதனைக்கு உட்படுத்தினர். கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகொன்றைக் கைப்பற்றிய சுங்கத்துறை அதிகாரிகள், அதைக் கரைக்குக் கொண்டு வந்து சோதனைக்கு உட்படுத்தியதில் ஆறு பொதிகளில் இருந்து போதை மாத்திரைகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

அந்தப் போதை மாத்திரைகளில், வலி நிவாரணி மற்றும் கருத்தடை மாத்திரைகள் என்பனவே அதிகமாக இருந்தன என சுங்க அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடத்தலுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## நீங்கா நினைவில் முதலாம் ஆண்டு



அமரர் **கனகசபாபதி கஜமுகன்**
(மின் பொறியியலாளர் சவுதி அரேபியா)
திதி: துவாதசி (09.03.2017)

நேற்று நடந்தது போல ஓராண்டு
காலம் கடந்து விட்டாதும் உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
உங்களை எந்நாளும்
நாம் மறவோம் !

**மனைவி, பிள்ளைகள்**
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்

மலர்வு 02.06.1965
உதிர்வு 19.02.2016

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி **பரமேஸ்வரி இராசலிங்கம்**

மலர்வு 02.02.1940
உதிர்வு 25.01.2017

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் உடுவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கொட்டடி,
உடுவில், சுன்னாகம்.
021 224 1315

**குடும்பத்தினர்.**
(பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்)

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மன்னார் வலைப்பாட்டு
கடலில் சங்கமமான
**திருச்செல்வம் கமலேந்திரராணி** (குமுதினி)
**திருச்செல்வம் கம்சினி**
**சிவலிங்கம் திருச்செல்வம்**

தோற்றம்: 23.06.1974
தோற்றம்: 05.06.1996
தோற்றம்: 08.02.1972
மறைவு 19.02.1997

ஆறாது எம்துயரம் ஆண்டு பல சென்றாலும்
மாறாது எம்மனதில் உங்கள் மதிப்பான உருவம்
நீறாகிப் போனதென்று பேறாகப்பெற்ற பெருமக்களே
பிரிந்திருக்க மாட்டோம் யாம்
நினைத்திருப்போம் எந்நாளும்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சி.தேவகுஞ்சரம்,**
**கதிரிப்பாய், அச்சுவேலி.**

உங்கள் பிரிவால் துயருறும்
**அம்மா, அக்கா, அத்தான், அண்ணாமார், அண்ணிமார், பிள்ளைகள்.**

(சி.எஸ்.) (13)

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



# திருமதி திலகராஜா லீலாபதி

தோற்றம் 28.01.1928
மறைவு 21.01.2017

21.01.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம் திருமதி திலகராஜா லீலாபதி (காலஞ்சென்ற மலேசியா S.குலசிங்கம் M.B.E அவர்களின் மகள்) அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல், முகநூல் ஆகியவற்றின் மூலமும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள், மலர் வளையம் மூலமும் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் மேலும் எமது துயரில் பங்குகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இயதபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (20.02.2017) திங்கட்கிழமை எமது இல்லத்தில் காலை 7.00 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருவும்)

கொத்தியகாடு,
உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.

**தி.இராஜசிங்கம் (பவுண்)**
(சதுரங்கப் பயிற்றுவிப்பாளர்,
முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 15.08.1935
மறைவு 22.01.2017

# அமரர் இராசதுரை செல்வகணேசபிள்ளை

22.01.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் இராசதுரை செல்வகணேசபிள்ளை அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களிற்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களிற்கும் மற்றும் பல வழிகளில் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.02.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தகரையிலும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் 21.02.2017 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

யாழ்ப்பாணம்

**குடும்பத்தினர்.**

(AJA 00483) (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறக்கொட்டாஞ்சேனை மனித எச்சங்கள் ஆய்வு நடவடிக்கைகள் நாளை ஆரம்பம்



மட்டக்களப்பு, பெப்.19

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ் சேனையில் இராணுவ முகாமுக்கருகே மனித எச்சங்கள் காணப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட இடத்தை ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து இரு தினங்கள் இடம்பெறவுள்ளன என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். -

மனித எச்சங்கள் என்று சந்தேகிக்கப்படும் தடயங்கள் காணப்பட்ட இடத்துக்கு இந்த மாதம் 2 ஆம் திகதி, மேலதிக நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய முஹம்மத் இஸ்மாயில் முஹம்மத் றிஸ்வி, சிரேஷ்ட வைத்திய நிபுணர் எம். சிவசுப்பிரமணியம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் பி.சி.சுரங்க பெரேரா, கண்டி வைத்தியசாலை வைத்திய நிபுணர் அஸித்த கீர்த்தி, மாத்தளை பொது வைத்தியசாலை வைத்திய நிபுணர் டி.ஐ. வைத்தியலங்கார, புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரி ஜே.ஏ.ரி.வி. பிரியந்த ஆகியோர் அடங்கிய விசேடகுழு சென்றிருந்தது. அந்தக்குழு நாளை தொடக்கம் தொடர்ந்து இரு தினங்கள் குறித்த இடத்தை மேலும் அகழ்ந்து ஆய்வுசெய்வதற்குத் தீர்மானித்திருந்தது. அதற்கமைவாக நாளை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மட்டக்களப்பு-கொழும்புபிரதானநெடுஞ்சாலை அருகே முறக்கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள அந்த இராணுவ முகாம், கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருவதாக உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர். அந்த இடத்தில் பெரும்பாலான காணிகளையும், பொது மக்களின் குடிமனைகளையும், அரச பாடசாலையையும் கைப்பற்றியிருந்த படையினர் தாம் கைப்பற்றியிருந்த காணிகளில் பொதுமக்கள் ஒரு சிலரது காணிகளை 2014 ஆம் ஆண்டு மீளவும் ஒப்படைத்திருந்தனர்.

கையளிக்கப்பட்ட காணிகளில் தற்போது புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சின் உதவியுடன் 78 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளில் இராணுவ முகாமின் வேலியுடன் சேர்ந்ததாக உள்ள, தங்களுக்குச் சொந்தமான காணியில் மலசல கூடத்தை அமைக்கும்போது, அந்த இடத்தில் 30.10.2016 அன்று எலும்பு எச்சங்களும், ரயர் மற்றும் புகையிரத சிலிப்பர் கட்டைகளை எரித்த கரிகளும் தென்பட்டன. அதனையடுத்து ஏறாவூர்ப் பொலிஸாருக்கு விடயம் அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அங்கு மேலதிக நீதிவானும்மேலதிகமாவட்ட நீதிபதியு மாகிய முஹம்மத், ஸ்மாயில் முஹம் மத் றிஸ்வி, நிபுணத்துவ சட்ட வைத்திய அதிகாரி சாலக பெரேரா ஆகியோர் முன் னிலையில் மீட்கப்பட்ட எலும்பு எச்சங் களும், அவை அகழப்பட்ட இடமும் 31.10.2016 அன்று பரிசோதிக்கப்பட்டன.

அதன் பின்னர் குறித்த இடத்தை மேலும் அகழ்வுசெய்யக்கருதியும், எச்சங்களைப் பகுப்பாய்வுக்குஉட்படுத்தவும்உத்தரவிட்டோடு அந்தப் பகுதியில் எந்தவித அகழ்வுப் பணியிலும் ஈடுபடவேண்டாம்என்று வீட்டு உரிமையாளருக்குக் கட்டளையிடப்பட்டு குறித்த பகுதிக்குப் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையிலேயே நான்கு மாதங்களாகப் பாதுகாக்கப்பட்டு வந்த குறித்த இடம் மேலும் அகழப்பட்டு பரிசோதிக்கப்படவுள்ளது.

## ஆக்கங்கள் அனுப்பலாம்

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலா சாரப் பிரிவால் 2017 ஆம் ஆண்டுக்கான கலாதரம்" எனும் பிரதேச மலர் வெளியீடு செய்யப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசம் சார்ந்த விடயங்கள் மற்றும் கலை பண்பாட்டம்சங்களுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடங்கிய ஆக்கங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம் வலி தென்மேற்கு, சண்டிலிப்பாய்" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலாளர் யு.ஜசோதா கேட்டுள்ளார். (ற)


## மரண அறிவித்தல்கள்

### இராமமூர்த்தி சண்முகநாதன்



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும், வவுனியா, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமமூர்த்தி சண்முகநாதன் (ஸ்தபதி) 15.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராமமூர்த்தி - உதயகுமாரி தம்பதிகளின் பாசமிகு மகனும், ஸ்ரீபிரியா, பத்மபிரியா, சிந்துஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவரூபன், கஜேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், சாருகா, சஸ்ருகா, வர்சனா, அபிராம் ஆகியோ ரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பொரளை லங்கா மலர்ச்சாலையிலிருந்து மாதம்பிட்டிய இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

395/01, அளுத்மாவத்தை, கொழும்பு 15.

தகவல்: குடும்பத்தினர்.

(C/28460) (11,17)

078 959 1684



### சண்முகம் பிரபாகரன் (பிரபா)

(அபிஷா கட்டடப் பொருள் உரிமையாளர் - அளவெட்டி)

மலர்வு 03.05.1971 உதிர்வு 17.02.2017

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பிரபாகரன் (பிரபா) 17.02.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு திருமதி சண்முகம் - சுபத்திரை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கவிதாவின் அன்புக் கணவரும் அபிஷாயினி, ரர்ஜனா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பாஸ்கரன், பரராஜசிங்கம், முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரணிதா, விஜிதா, சகிதா, திருக்குமார், கோமலேஸ்வரி, கலைமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் அளவெட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மலைவேம்படி தெற்கு, மலைவேம்படி, அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.

077 684 6293/ 077 624 7543

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகம்மா அரியக்குட்டி



கோண்டாவில் அன்னங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா அரி யக்குட்டி 17.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 11.00 மணிய ளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு, அன்னங்கை.

தகவல்: குடும்பத்தினர்

### செல்லத்துரை சிவலிங்கம் (ராசன்)



மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், இல.21, ஸ்கந்தபுரம் அக்கராயனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவலிங்கம் கடந்த 16.02.2017 வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சீதேவி தம்பதிகளின் அன்பு மகனும், தாமோதரம்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருகனும், தனலச்சுமியின் அன்புக் கணவரும், சிவஞானம், தங்கம்மா, செல்வரத்தினம், நாகரத்தினம், சிவமணி, சிவபாக்கியம் (ராணி) காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சின்னோ) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராசா, சிதம்பரவடிவேல், பத்மாவதி, சிவசக்தி, வசந்தகுமார், காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்: பெறாமகன் விக்னேஸ்வரன்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சண்முகம்

(ஓய்வு பெற்ற பிரதம எழுது வினைஞர், நொறகல எஸ்ரேற் நிவித்திகல)



உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகம் (17.02.2017) வெள்ளிக்கிழமை தனது 97 ஆவது அகவையில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பார்வதி தம்பதியரின் அன்பு மரு மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் வாலாம்பிகை, இராஜேஸ்வரி, கமலேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீதரன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை), சர்வேஸ்வரன் (ஓய்வு பெற்ற அதிபர்), இரவிச்சந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாழினி சத்தியமூர்த்தி, நளாயினி விஜய ராயா, ராஜினி சேந்தன், நிரோஜினி சபேசன் (ஆஸ்தி ரேலியா), துஸ்யந்தி தரேந்திரா (ஆஸ்திரேலியா), பிரியந்தி ராயூசன் (ஆஸ்திரேலியா), வினோத்சங்கர் (நியூசிலாந்து) ஆகி யோரின் அன்புப்பேரனும் ஜனந்தினி, தயூரன், தரணியா, டிலக்சனா, காருண்யா, கார்த்திக், ஆதிரை, ஆவகன், பிரிந்தன், தமிரா, சித்தாத், சாயா, ஆழியா, அர்ச்சுன், ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர் களான பீகாம்பரம், செல்லையா, மயில்வாகனம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஸ்வரி வாசா, கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



தோற்றம் 24 . 07 . 1937

மறைவு 18 . 02 . 2017

## செல்லையா வேதராஜா

**(ஓய்வுபெற்ற கிராம சேவகர் - மானிப்பாய்)**

இல.6. கல்லூரி வீதி. மானிப்பாயை நிரந்தர முகவரியாகக் கொண்ட செல்லையா வேதராஜா நேற்று (18.02.2017) சனிக்கிழமை சிவபதம் எய்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் வள்ளியம்மை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான இந்திராதேவியின் அன்புக் கணவரும், சுமதி, சதீஸ்குமார்.ரஜெஸ்குமார், சுதாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜ்குமார், அனுஷா, பிரியா, சுரேஸ் ஆகியோரின் மாமனாரும், சுலோஜனன், சுஜி, ரவிக்குமார், சிந்துஜா, திலக்ஷி, சந்தோஷ், வருண், இந்திரதியா ஆகியோரின் பேரனும், ஜஸ்மினின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான இராசையா, அழகம்மா, இரத்தின சிங்கம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சுமித்திராதேவி மற்றும் சரோஜினிதேவி, விமலாதேவி, வசுந்தராதேவி, சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கல்லூரி வீதி, மானிப்பாய்.** **சதீஸ்குமார் / சதன்(மகன்)**

(AJA/595)(11,17) 076 809 4871



பிறப்பு 13 . 01 . 1944

இறப்பு 17 . 02 . 2017

## தாமோதரம்பிள்ளை குலசிங்கம்

கலட்டித்துறை இமையாணன் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் திக்கானை, கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை குலசிங்கம் 17.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இலஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மங்கையற்கரசியின் அன்புச் சகோதரனும், கணபதிப்பிள்ளையின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இரகுநாதன், சிவகுமார் மற்றும் சாந்தகுமார், இந்திரகுமார் (சுவிஸ்), செல்வதி, கலாவதி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜலிங்கம் (C.T.B பருத்தித்துறை), பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), பத்தும இறஞ்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், கீர்த்தனன், (யாழ். மருத்துவபீடம்), ஜனார்த்தனன், ஈஸ்வரன், ரிசியா, கரிஸ், ராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திக்கானை**
**கரணவாய், கரவெட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

(என். 265) (13) T.P.:077 625 8522 / 021 226 2661


# கூட்டுறவாளர் விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.19

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 ஆண்டுகள் கூட்டுறவாளர்களாகச் சேவையாற்றிய நான்கு கூட்டுறவாளர்கள் நாளை விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு தலைவர் வீ.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும்.

கூட்டுறவாளர்களான பொ.கந்தசாமி, சி.சிவகுமார் க.ரவிச்சந்திரன், பொ.தெய்வேந்திரம் ஆகிய நான்கு பேருக்கே விசேட விருதுகள் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோரும், மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகனும் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.நோ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

மறைந்த கூட்டுறவுச் சேவையாளர், கூட்டுறவாளர் அமரர் சு.கந்தையாவின் சிலைக்கான அடிக்கல்லை மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் நடுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)

# இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் உயர்தேசிய டிப்ளோமா பாடநெறிகள் தொடர்பான இலவசக் கருத்தரங்கு நாளை திங் கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப.3மணி வரை நடைபெறவுள்ளது என்று அதன் பணிப்பாளர் தெரிவித்தார்.

இல.665.2, கடற்கரை வீதி, குருநகரில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் உயர்தேசிய டிப்ளோமா பாடநெறிகளில், சிறப்பாக சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கை நெறி தொடர்பாக நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.(ற-10)



# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## புஸ்பராசா கஜிதா



தோற்றம் 13.10.1987

மறைவு 19.02.2009

பாதம்பட்ட இடமெல்லாம் பார்த்து மனம் ஏங்குதம்மா
கண்பார்க்கும் இடமெல்லாம் - உந்தன்
அழகு முகம் தெரியுதம்மா!
காட்டி நின்ற உன் அன்பு கைத்தடியாய்
வழி நெடுக வந்திடாதோ !
கானல் நீராய் எமையெல்லாம் கலங்க வைத்து போனதென்ன?
எம் பாசம் கசந்ததுவோ ஏங்குதம்மா எங்கள் மனம்
உன் பாசத்தை கசந்ததுவோ ஏங்குதம்மா எங்கள் மனம்
உன் பாசத்தை சிந்தையிலே ரசித்தோம் !
இன்று தனியே தவிக்கவிட்டு நீர் மட்டும் எமைப் பிரிந்த மாயமென்ன?
உன் வதனம் காணாது எம் உள்ளம் வாடுதம்மா இனி எங்கு காண்போமே
உங்கள் வரவினில் சாத்தியமில்லை என்றாலும்
மறு ஜென்மம் உண்டென்பதை மனதார நம்புகின்றோம்
மீண்டும் வருவீர்கள் எனக் காத்திருக்கும்

**கைதடி தெற்கு,**
**கைதடி.**

அண்ணா ஜெகதீஸ்வரன்
குடும்பம் (பிரான்ஸ்),
குடும்பத்தினர்(கைதடி)

# மரண அறிவித்தல்

## பரமு (ஓடலி சண்முகம்) கிருபாலரட்ணம்

**(விளானை, களபூமி, காரைநகர், லண்டன், பிரித்தானியா)**



காரைநகர், களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும், லண்டன், பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட பரமு (ஓடலி சண்முகம்) கிருபாலரட்ணம் 13.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு (ஓடலி சண்முகம்) - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் யோகமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவமலரின் (சியா) அன்புக் கணவரும், உஷாந்தன், பிருந்தன், பிரசாந்தன், குகப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் Hendon Cemetery & Crematorium, Holders Hill Road, London NW7 1NB என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் அதேயிடத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**விளானை, களபூமி,காரைநகர்.** (AJA/470) (11) **குடும்பத்தினர்.**

077 853 1721 - இலங்கை,
0044 2089 037677 - லண்டன்/078 387 24794


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரநாயக்க - றைனோ
# வீட்டுக் குடியிருப்பு திட்டம்
# பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வுவு





தேசமான்ய ஏ.வை.எஸ்.ஞானம் ஞாபகர்த்த றைனோ வீட்டுக் குடியிருப்பு திட்டத்தை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையிலும் அரசாங்க தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கபீர் ஹசிம் வழிகாட்டலின் கீழும் இடம்பெறுகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இத் திட்டமானது றைனோ ரூபிங் புறொடக்ட்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் திரு.ஜெயசீலன் ஞானம் அவர்களின் எண்ணக்கருவினால் உருவானது.

இத்திட்டமானது, சாமஸர கந்தவில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்டு எலங்கபிட்டிய சமூகத்திலுள்ள குடும்பங்களுக்கு 20 வீடுகளை வழங்குகின்றது. இந்த வீடுகள் 3 மாதங்கள் எனும் குறுகிய காலத்திற்குள் ரூ.45 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டன. இது இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புகலிடம் வழங்கும் றைனோவின் மற்றுமொரு முன் முயற்சியாகும்.

Colorup
MARKETED BY RHINO
www.rhinocolorup.com

றைனோ ரூபிங் புறொடக்ட்ஸ் லிமிட்டட்
இலங்கையின் நம்பர் வன் கூரைத்தகடுகளுக்கு றைனோ

RHINO

உடன் தொடர்புக்கு
0115 748 728 / 0115 748 738

/ RhinoRoofinglk
ஈ-மெயில்: telemarketing@rhino.lk வெப்: www.rhino.lk

நாம் கிறிஸோடைலின் பைபர் பாதுகாப்பான பாவனைக்கான நம்பத்தகுந்த நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்குள் மீண்டும் பிளவை ஏற்படுத்த ரணில் முயற்சி

## மாகாணசபை உறுப்பினர் சந்தேகம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப்.19
தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, தமிழ் மக்களுக்குள் மீண்டும் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றாரா? என்ற நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது. -இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வண்மைப்போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்திலேயே, விடுதலைப்புலிகள் கட்சிக்குள் பிளவு ஏற்படுத்தப்பட்டது. இப்பொழுதும் ரணிலின் ஆட்சியிலேயே கருணா, கட்சி ஆரம்பிக்கும் நிலையேற்பட்டுள்ளது. எமது மக்கள் அனுபவித்த துன்பங்கள், இழப்புகள் பற்றி நாங்கள் நன்கு அறிவோம். எமது ஆயுதப் போராட்டத்தின் போது, எமது குழுக்களுக்குள் ஏற்பட்ட மோதல்களால் போராட்டத்தில் பின்னடைவைச் சந்தித்தோம். அதன் பின்பு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரே குழுவாக, எமது இனத்தின் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடினார்கள்.



2004 ஆம் ஆண்டுதலைமை அமைச்சராகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவால், மிகத் தந்திரமாகக் கருணா அம்மான் என்று அழைக்கப்படுகின்ற விநாயகமூர்த்தி முரளிதரனைக்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இரண்டாக உடைக்கப்பட்டது. அந்தச் சதியின் மூலம் எமது போராட்டம் சின்னாபின்னமாக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு எமது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக, ஒன்றாக ஒரு கொடியின் கீழ் போராடிக் கொண்டிருந்தார்கள். மகிந்த ராஜபக்ச அரசால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைக்க முடியவில்லை.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நல்லாட்சி என்கின்ற கூட்டு அரசும் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பை உடைப்பதற்கு முயற்சிக் கின்றதோ? என்கின்ற சந்தேகம் எமக் குள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைக்க முடியாது என்று நினைத்து, மீண்டும் கருணா அம்மானைக் கொண்டு வந்து அரசியல் ரீதியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும், தமிழ் மக்களையும் உடைப்பதற்குச் சதி நடக்கின்றதா? என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

ஒரு தமிழ்க் கட்சி பெரிய கட்சியுடன் சேரவுள்ளது என்று பிரபல ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அந்தத் தமிழ்க் கட்சி 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்ற காலத்தில் மூட்டைப்பூச்சிச் சின்னத்தில், நாம் திராவிடர் எனும் பெயருடன் தமிழ் மக்களின் வாக்குகளை சிதைப்பதற்காக உருவாக்கப்பட்டது. பதிவு செய்யப்படாத இரண்டு பேர் கொண்ட அந்தக் கட்சியைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு தமிழ் மக்களை அரசியல் ரீதியாகப் பிரிப்பதற்கு அவர்கள் முயற்சிக்கின்றார்களோ என்ற சந்தேகம் தோன்றுகின்றது.

அகிம்சைப் போராட்ட காலத்திலும், ஆயுதப் போராட்ட காலத்திலும், தற்போது நடக்கும் ராஜதந்திரப் போராட்ட காலத்திலும் எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடாது, சுயாட்சி நடக்கக் கூடாது, இணைந்த வடக்கு, கிழக்கில் எங்களை நாங்கள் ஆள்கின்ற சுயாட்சி உருவாகி, தமிழ் மக்கள் நிம்மதியாக வாழக்கூடாது என்று நினைக்கின்ற பேரினவாதிகளுக்கு ஆதரவாக அங்கு இவர்கள் புல்லுருவிகளாகச் செயற்பட்டு வருகின்றார்கள் - என்றார். (ஐ-ய-47)

# விவசாயிகளுக்கான கொடுப்பனவை 50,000 ரூபாவாக்குக

## அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு, பெப்.19
வறட்சியால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு அரசு வழங்குவதற்கு முன் மொழிந்துள்ள 10 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப் பனவு போதுமானதல்ல.

இவ்வாறு அகில இல ங்கை விவசாயிகள் சம் மேளனம் தெரிவித்தது.

ஒரு ஏக்கருக்கு ஒரு விவசாயிக்கு குறைந்தது 50 ஆயிரம் ரூபாவாவது கொடுக்கப்பட வேண்டும் என சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கரு ணாரத்ன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-
கொடுப்பனவுகள் வழங்கப்படும் போது விவசாயி களுக்கு நிபந்தனையிடு வதை அரசு தவிர்க்க வேண்டும். தாம் குறிப்பிடும் இந்த நஷ்டஈட்டை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு, விவசாயத்துறை அமைச்சுக் காக கூலிக்கு பெற்றுள்ள ராஜகிரிய விலுள்ள கட்டடத் துக்கு செலவு செய்யும் தேவையற்ற பணம் மாத் திரம் போதுமானதாகும். - என்றார்.

ஜனாதிபதி நேற்றுமுன்தினம் நடைபெற்ற அதிகாரிகளுடனான கூட்டத்தின்போது பாதிக்கப்பட்ட விவசாயிக ளுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் மாதாந்தம் வழங்க வேண் டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப் புரை விடுத்திருந்தார். (ற)

# கைக்குண்டுடன்இளைஞர் கைது

கொழும்பு, பெப்.19
கைக்குண்டு மற்றும் துப்பாக்கியுடன் இரண்டு இளைஞர்கள் எல்பிட்டிய, திவிதுரவத்தை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து வெளிநாட்டுத் தயாரிப்புக் கைக்குண்டு ஒன்றும் உள்நாட்டு தயாரிப்பான 09 மில்லி மீற்றர் வகைத் துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

எல்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 21 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் எல்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும், மேலதிக விசாரணைகள் முன்னெக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# சைட்டத்துக்கு ஆதரவான தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டுக்கு முடிவு

## இலங்கை மருத்துவ சபை எடுத்தது

கொழும்பு,பெப்.19
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியான சைட்டம் நிறுவனம் மருத்துவப் பட்டத்தை வழங்க, சட்ட பூர்வமாக அதிகாரம் உள்ளது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவித்து, உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யவுள்ளோம் என்று இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் காலோ பொன்சேகா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஒன்றுகூடிய மருத்துவச் சபையின் உறுப்பினர்களால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
எதிர்வரும் 42 நாள்களுக்குள் உயர் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டைத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளோம். மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியான சைட்டம் நிறுவனத்துக்கு மருத்துவப் பட்டத்தை வழங்க, சட்ட பூர்வமாக அதிகாரம் உள்ளது என்று கடந்த மாதம் 31 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் சைட்டம் நிறுவனத்தில் பட்டம்பெற்றவர்களை மருத்துவத் துறையில் பதிவுசெய்ய, இலங்கை மருத்துவச் சபை மறுப்பதாகக் குற்றம்சாட்டி, சில மாணவர் கள் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது- என்றார்.

இந்தத் தீர்ப்பை வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி விஜித் மலலேகொட தனது தீர்ப்பில் தெரி வித்ததாவது:
சைட்டம் நிறு வனம் மருத்துவப் பட்டத்தை வழங்குவது சட்ட விரோதம் என்று பிரதிவாதிகள் தரப் பான இலங்கை மருத்துவச் சபையால் சில ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனினும் அவை அனைத்தையும்நிராகரித்துள்ளோம். உயர் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்த மானிக்கு அமைய சைட்டம் நிறுவனத் துக்கு மருத்துவப் பட்டத்தை வழங்கச் சட்டப்படி உரிமை உள்ளது- என்றார். (ஐ)

# காணாமல்போனவர்களை கண்டுபிடிக்க மக்களிடம் உதவி கோரும் பொலிஸார்

கொழும்பு,பெப்.19
நாட்டில் சில பிரதிதேங்களில் இருந்து காணாமல் போயுள்ள நான்கு நபர்களைக் கண்டுபிடிப்பதற்கு, பொது மக்களின் உதவி வேண்டும் என்று பொலிஸ் தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு, சீன ஊரணி பிரதேசத்தைச் சேர்ந்த பீடர் மைகல் (வயது-52) என்பவர் கடந்த 13 ஆம் திகதியும், கிருலப்பனைப் பிரதேசத்தைச் சேர்ந்த பியுமால் மது சங்கர (வயது-17) என்ற இளைஞன் கடந்த 14 ஆம் திக தியும், காத்தான்குடி, பைசால் வீதி பிரதேசத்தைச் சேர்ந்த அன்சார் மொஹ மட் பஸ்னி (வயது-18), வரகாகொட பிரதேசத்தைச் சேர்ந்த விராஜ் தேவேந்திர (வயது -12) ஆகியோர் கடந்த 15 ஆம் திகதியும் காணமல் போயுள்ளனர் என்று உறவினர்களால் பொலிஸ் நிலையங்களில் முறையிடப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் குறித்த தகவல்கள் தெரியுமாயின், அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் உடன் அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ)




noolaham.org | aavanaham.org

# அரசியல் பழிவாங்கல்களுக்கு மக்கள் உரிய பதில் கொடுப்பர்

## இப்படிக் கூறுகிறார் கோத்தபாய



கொழும்பு,பெப்.19
தற்போது முன்னெடுக்கப்படும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு, நாட்டு மக்கள் உரிய நேரத்தில், தக்க பதில் கொடுப்பார்கள் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நேற்று முன்தினம் பொலிஸ் நிதிமோசடி விசாரணைபிரிவில் அவர் முன்னிலையாகியிருந்தார். இதனையடுத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

'அவன்காட் நிறுவனம் மற்றும் மிக் ரக விமானக் கொள்வனவு தொடர்பான மோசடிகள் குறித்து எம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனக்கு அநீதி இழைக்கும் நோக்கிலேயே இவ்வாறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், அநுராதபுரம் சந்தஹிருசேய புனித தளத்தில் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து இன்று (நேற்று முன்தினம்) வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர் - என்றார். (ஐ)


# SUPPLIERS WANTED IN JAFFNA

An international brand communication company is looking for suppliers who got facilities of Fabricating of Boards, Vehicle Branding, Digital, Screen and offset Printing, Supplying of Promoters, Hiring of Vehicles, DJ and Sound Systems, Stage Platforms, Marquees, G I Poles etc. please share some of the work you have done, along with your company details, for registration purposes. Please respond within 7 days to.

E mail : jaffnaprojectrecruit@gmail.com


# தலவாக்கலை காட்டுப்பகுதிக்கு இனந்தெரியாதோர் தீவைப்பு

## 15 ஏக்கர் எரிந்து நாசம்

நுவரெலியா, பெப்.19
தலவாக்கலை - நானுஓயா தோட்டத்துக்கு அண்மித்த பாதுகாப்பு வனப்பகுதிக்கு நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது. அதனால் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட காட்டுப்பகுதியில், 15 ஏக்கர் காடு தீயால் எரிந்து நாசமாகியுள்ளது.

அதன் காரணமாக அந்தப் பிரதேசத்தில் உள்ள அரியவகை மரங்கள், உயிரினங்கள் அழிந்து போயிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, அந்தக் காட்டுப்பகுதியில் இருந்தே நானுஓயா தோட்ட மக்கள் குடி தண்ணீரையும் பெற்றுக்கொள்கின்றனர்.

தொடர்ச்சியாக மலையகத்தில் உள்ள காட்டுப் பகுதிகளுக்கு தீ வைப்பதால் எதிர்காலத்தில் பெரும் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சூழல் ஆய்வாளர்கள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ய-43)

# அடிப்படை தேவைகளை நிறைவேற்றாத கூட்டு அரசு

கொழும்பு,பெப்.19
நாட்டின் தற்போதைய அரசு மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத நிலமையில் உள்ளது என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா குற்றஞ்சாட்டினார்.

நாராஹேன்பிட்டியில் உள்ள அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரிசி விலை அதிகரித்துள்ளதன் காரணமாக மக்கள் உணவுத்தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத கஷ்டமான நிலமையில் உள்ளனர். அரிசி விலை அதிகரித்துள்ளது மட்டுமல்ல, சந்தையில் அரிசிக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு - கிழக்கை இணைக்காவிட்டால் பாதிக்கப்படப்போவது யார்?

வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைப்பது சாத்தியமா காது என்று தெரிவித்திருக்கிறார் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம். இரு மாகாணங்களையும் இணைப்பதற்கு எதிரான நிலைப்பாட்டிலேயே முஸ்லிம் மக்கள் இன்றும் உள்ளனர் என்பதுடன், அதனைச் செய்வதற்கு நாடாளு மன்றத்திலும் அறுதிப் பெரும்பான்மை இல்லை என்பதால் இணைப்பு சாத்தியமில்லை என்று கூறியிருக்கிறார் ஹக்கீம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்காமல் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வைப் பெற முயலவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மாற்றுத் தீர்வு குறித்துச் சிந்திப்பதற்கு முன்னர், வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்காமல் விட்டால் அதனால் அதிகம் பாதிக்கப்படப்போகின்றவர்கள் யார் என்கிற கேள்வி முக்கியமானது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டால் அதில் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராகவும், முஸ்லிம் மக்கள் முத லாவது சிறுபான்மையினராகவும், சிங்கள மக்கள் இரண்டாவது சிறுபான்மையினராகவும் இருப்பார்கள். அத்தகைய நிலையில் தமிழ் மக்களிடம் இருந்து தமக்குத் தேவையான நியாயமான உரிமைகள் அனைத்தையும் கோரிப் பெறக்கூடிய வல்லமையை முஸ்லிம் மக்கள் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

அதுவே, வடக்கும் கிழக்கும் பிரிந்துவிட்டால், வடக்கு, தமிழர்களுக்கு மட்டுமே உரித்தானதாக மாறிவிடும். கிழக்கு மூன்று தரப்பினருக்குமான அதிகாரப் போட்டிக்குள் சிக்கிக்கொள்ளும். இந்த அதிகாரப் போட்டியில் படிநிலையில் முதலிரு ஆதிக்கச் சக்திகளாகவும் இருக்கக்கூடிய சிங்களவர்களும் தமிழர்களும் ஒன்றிணைவதற்கான சாத்தியங்கள் வெகு அதிகம். உலகெங்கும் ஆதிக்கப்படிநிலைகளின் வரலாற்றில் அதுவேதான் நடந்திருக்கிறது. எனவே கிழக்கில் சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து ஆட்சியமைத்தால், அங்கு முஸ்லிம்களின் நிலைமை இருதலைக்கொள்ளி எறும்பின் துன்பத்துக்கு ஒப்பாகிவிடும்.

இரு ஆதிக்கச் சக்திகளும் சேர்ந்தே முஸ்லிம்களை நசுக்கிவிடும் நிலை ஏற்படும். இது முஸ்லிம்களுக்கு உவப்பான செய்தியல்ல.

வடக்கையும் கிழக்கையும் தனித்தனியே வைத்துக்கொண்டு ஒரு தீர்வை தமிழர்களாலும் சிங்களவர்களாலும் அடையமுடியும் என்றால், அந்த இரு பகுதியினருமே சேர்ந்துகொண்டு கிழக்கில் முஸ்லிம்களை ஒடுக்கமாட்டார்கள் என்று அடியோடு மறுத்துவிட முடியாது.

இந்த அடிப்படையில் கிழக்கு தனியே பிரிந்துசெல்வதால் அதிகம் பாதிக்கப்படப்போகிறவர்களாக முஸ்லிம் மக்களே இருப்பார் கள். வடக்கும் கிழக்கும் இணைக்கப்படாமல் முஸ்லிம்கள் இன்று வலியுறுத்தும் தனியலகும் அவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை. எனவே பாக்குவெட்டிக்குள் சிக்கிக்கொண்ட பாக்குப் போன்று முஸ்லிம்கள் துவம்சம் செய்யப்படும் நிலையை அது உருவாக்கி விடும்.

அத்தகைய ஒரு மோசமான நிலையை முஸ்லிம்கள் எட்டுவதற்கு முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய முஸ்லிம் கட்சிகளும் இடமளிக்கக்கூடாது. குறுகிய கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் இலங்கையில் முஸ்லிம்களின் எதிர்காலம், நலன்கள் குறித்துச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

இதுவரையான இலங்கை வரலாற்றில், தமது இனம் சார்ந்த தூரநோக்குள்ள அரசியல் ஒன்றை அஷ்ரப் தவிர்ந்த முஸ்லிம் தலைவர்கள் எவரும் ஆற்றினார்கள் என்று சொல்ல முடியாது. இப்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையிலும் அவர்கள் அப்படியே செயற்பட நினைப்பது அவர்களுக்கே ஆபத்தாக முடிந்துவிடும்.

தமிழர்களுடன் கைகோர்த்துக்கொண்டு தமக்குத் தேவையான முழு உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்கு முயல்வதே, முஸ்லிம்களுக்கு முன்னால் உள்ள யதார்த்தமானதும், இலகுவானதும், சாத்தியமானதுமான தெரிவாகும். மாற்று வழிகளைத் தேடிக்கொண்டிருப்பது ஒட்டுமொத்தமாக அனைத்தையும் அடித்துவிடவே வழிகோலும். முஸ்லிம் தலைமைகள் குறுகிய நலன்களை விடுத்துத் தூரநோக்கோடு சிந்தித்துச் செயலாற்ற முன்வர வேண்டும்.

# கேப்பாபிலவு மக்களது பிரச்சினையின் முடிச்சை அவிழ்ப்பார் யாரோ? எப்போதோ?

ந.லோகதயாளன்

காற்றில் பறந்த ஜனாதிபதியின் வெற்று வாக்குறுதியினால், கொட்டும் பனியிலும், கொழுத்தும் வெய்யிலிலும் வாடும் கேப்பாபுலவு மக்கள் தமது மீட்பர் யார் என்ற கேள்விக் குறியோடு ஏங்கித் தவிக்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவு மக்களின் போராட்டம் தொடர்பில் நீதி கிடைக்குமா? என்பதே தற்போது பென்னம்பெரிய வினாவாகத் தலைதூக்கிநிற்கிறது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 69 ஆண்டுகள் ஆகி விட்ட நிலையில், சுதந்திரத்திற்கு முன்னர் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில், சுதந்திரம்




கிடைத்ததாக கூறப்படும் காலத்தின் பின்பு இடம்பெற்ற போராட்டங்களின் எண்ணிக்கையே அதிகமாகும். இவற்றில் அதிகமான் போராட்டங்களுக்குக் கூட சுதந்திரம் மறுக்கப்பட்டதே காரணமாகும். தற்போது கேப்பாபிலவு மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கான ஓர் உரிமை மறுப்பின் காரணமாக, தமது சொந்த நிலத்தைக் கோரி நிற்கும் அவலம் தொடர்கின்றது. அந்த மக்களது குரல்கள் அதிகார வர்க்கத்தின் காதுகளில் ஏறுவதாகத் தோன்றவில்லை. அரசியல்வாதிகள் முதல் தென்னிலங்கையர் வரை ஏதே சுற்று லாத்தலம் ஒன்றுக்கு வருவது போல் கேப்பாபிலவுக்கு வந்து செல்கின்றனர். ஆனால் எவராலுமே அந்த மக்களது பிரச்சினைக்கான தீர்வெதனையும் பெற்றுக் கொடுக்க இயலாது போயுள்ளது. நாட்டின் உயர்தலைவரான ஜனாதிபதியால் வாக்குறுதியளிக்கப்பட்ட, தாம் வாழ்ந்த பாரம்பரிய பிரதேசமொன்றைக் கோரியே அவர்கள் போராட்டம் நடாத்துகின்றனர். இந்த நாட்டில் ஜனாதிபதி உத்தரவிட்ட ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்தவே படையினர் இவ்வளவு நாள்கள் பின்னடிக்கின்றனர் என்றால், ஜனாதிபதியின் கீழ்த்தான் இந்தப் படையினர் செயற்படுகின்றனரா? அல்லது படையினரின் பிடியில் மக்களும் நிலங்களும் உள்ளமை போன்றே, ஜனாதிபதியும் இராணுவத்தினரது நிர்வாகக் கட்டமைப்புக்குள்தான் உள்ளாரா? என்ற சந்தேகம் எழுகின்றது.

### பாதுகாப்புப் படையினருக்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் வழங்கிய ஜனாதிபதி யார்?

இலங்கை இராணுவத்தினைப்பொறுத்தமட்டில், இந்த நாட்டின் இருஜனாதிபதிகளின் காலமே அவர்களது பொற்காலம். அதாவது, “நீயும் அள்ளு, நானும் அள்ளுறன்”, என ஜனாதிபதிகள் படையினரது சுதந்திர செயற்பாட்டிற்கு அனுமதித்த காலம். அதில் ஒன்று, அம்மையார் சந்திரிக்காவின் காலம்; இரண்டாவது மகிந்தவின்கால்ம். அதிலும் மகிந்தவின் காலம் என்பது இராணுவத்தின் சாதாரண சிப்பாய்க்குக் கூட நினைக்க முடியாத அளவுக்கு கட்டுப்பாடு அற்ற சுதந்திரம், நினைத்ததைச் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இராணுவத்தினரில் பெரும் பகுதியினர் இன்று வரை ஜனாதிபதி விசுவாசம் என்பதற்குப் பதிலாக, மகிந்த விசுவசத்திலேயே மூழ்கிக் கிடக்கின்றனர். அதன் பிரதிபலிப்பே கேப்பாபிலவில் மக்களது காணிகளை விடுவிக்க மறுப்புத் தெரிவிப்பது. இதன் காரணமாகவே, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் என அனைவரும் ஒன்றிணைந்தும் இராணுவத்துக்கு உத்தரவிடமுடியாமல், தற்போதுவரை கோரிக்கை விடுத்து வருவதாகவே எண்ணத்தோன்றுகின்றது.

இன்று இந்த நாட்டில் அரச இயந்திரமோ அல்லது நிர்வாக இயந்திரமோ செயற்படுவதில் ஓர் முட்டுக்கட்டையோ அல்லது தடையோ ஏற்படுமானால், அதில் நிச்சயம் படைகளின் பின்புலம் இருந்தே தீரும். போர் இடம்பெற்ற காலகட்டத்தில் தாம் அனுபவித்த சுதந்திரத்தை அனுபவிக்க, தமக்கு பொருத்தமான எஜமான் மகிந்த என்றே அவர்களில் பெரும்பாலோர் நம்புகின்றனர்.

### மகிந்த தரப்புக்கு விசுவாசம் காட்டும் படைத்தரப்பினர்கள்

இதற்கு வலுச் சேர்ப்பதான மற்றுமோர் விடயம், மகிந்தவின் உடன்பிறப்பான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவுக்கு படைகளிடம் இன்றும் உள்ள நெருங்கிய உறவு. தற்போதைய ஆட்சியாளர்களில் எவருக்குமே அத்தகைய நெருக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. இவைகளே இன்றும் பல நெருக்கடிகளுக்கு வித்திடுவது தற்போது புலனாகின்றது. இந்தக் காரணத்தினால் நல்லாட்சி அரசிடம் இருந்து மக்களைப் பிரிக்கும் சூழ்ச்சியை, மகிந்த நிறைவேற்ற, அதற்கு பாதை சமைக்கின்றது இராணுவம். இதனை அறியாத ஆட்சியாளர்கள் வெறும் வாய் வாக்குறுதிகளை மட்டுமே வழங்குவதனாலேயே கேப்பாபிலவு இன்று கேட்பார் அற்ற புலவாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான செயல்பாடுகளினால் தென்னிலங்கையர் தமது ஆதிக்கத்தை செலுத்துவதற்காக அன்றும் போர் மூலம் தமிழர்களைப் பலி கொடுத்தனர். இன்று அதிகாரப் பலப் பரீட்சையில் தமிழர்களின் வாழ்வியலைக் கூறுபோடுகின்றனர். அவ்வாறான அதிகார இழுபறியானது, ‘பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன்போகுது’ என்னும் நிலையை ஒத்தது. இங்கு ஜனாதிபதி வாக்குறுதி அளித்தும் குறித்த பிரதேசம் விடுவிக்கப் படாத நிலையில், படைத்தரப்பினர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்னிலங்கை கூறுகின்றது.

அவ்வாறே படைத்தரப்புக்கள் அதிகாரத்தில் இருப்பின், இந்த நாட்டில் ஆட்சித் தலைவர்யார் என்ற பலமான கேள்வி எழுகிறது. ஆட்சி இயந்திரம் பெயரளவில்தான் இயங்குகின்றதே அன்றி, இராணுவ ஆட்சியே நீடிக்கின்றது என்பதனை ஆட்சியாளர்களே ஒப்புக் கொள்வதாகவே அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டுக்களும் பொய்களும் மலிந்துபோன இலங்கை அரசியல் களம்

சிங்கள மூலம் காசியப்ப லியனகே
தமிழில் - வீ.எஸ்.ரீ.

'கிராமத் தலைவனும், கிராமத்துக் காவற்காரனும் ஒன்று சேர்ந்தால், இரவு கழிந்து பொழுதுவிடியும்வரைதிருட்டை மேற்கொள்ள இயலும்' என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உண்டு. இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதும் அத்தகையதொரு திருட்டே என்ற கருத்து மக்கள் மத்தியில் நிலவுகிறது. சம்பவம் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில், அது மிகப் பாரதூரமானதொரு திருட்டு என்பதுடன், ஆரம்பகால கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட நட்டம் குறித்தே தம்மால் தமது அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக இந்தக்குற்றம் இடம்பெற்று வந்துள்ளதாகவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். குறித்த குற்றத்தால் அரசின் கௌரவம் சீரழிந்து போயுள்ளது.

இழந்த கௌரவத்தைச் சீர்செய்யும் நோக்கில் அரசு சிற்சில நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் மத்திய வங்கியின் பிணை முறி வழங்கல் தொடர்பாக அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்ளப் பிரதமர் ரணில், குழுவொன்றை நியமித்துள்ளதன் மூலம், வங்கியின் முன்னாள் ஆளுநரது கௌரவத்தைக் காப்பாற்ற முயன்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் நூறுநாள் வேலைத்திட்ட வேளையில், நாடாளுமன்ற உறுப்பினர் டியூ. குணசேகரவின் தலைமையில் இயங்கிய கோப் குழு, மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல் குறித்து விசாரணை செய்து அறிக்கை வெளியிடவிருந்த கடைசி வேளையில், ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டிருந்தார். அதன் மூலம் குறித்த ஊழல் தொடர்பான விவரங்கள் வெளியாவதைத் தவிர்க்க ஜனாதிபதியும் உதவினார் என்ற எதிரணியினரது குற்றச்சாட்டுக்கு ஜனாதிபதி உட்பட நேர்ந்தது.

### சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான கோப் குழுவின் அறிக்கை தெளிவானது

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உருவான நாடாளுமன்றத்தில், கோப் குழுவின் தலைவரான ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தியின் குழு, மத்திய வங்கி பிணை முறி வழங்கலில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாகத் தெளிவான அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது. அதே சமயம் குறித்த விடயம் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையும் கோப் குழுவுக்கு வழங்கப்பட்டது. அவற்றின் மூலம், இடம்பெற்ற ஊழல் தொடர்பான சகல விடயங்களும் வெளிக் கொணரப்பட்டிருந்தன. அந்த வகையில் ஊழல் மோசடிக்காரர்களைக் கண்டுபிடிக்கப் புறப்பட்ட நல்லாட்சி அரசு, பெரும் ஊழல் சம்பவமொன்றுக்குப் பொறுப்பாளி ஆக்கப்பட நேர்ந்தது. இதனையடுத்து, குறித்த மோசடி குறித்து விசாரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, தற்போது தனது விசாரணையை ஆரம்பித்துள்ளது. விசாரணை ஆணைக்குழுவை நியமித்ததன் மூலம் குறித்த மோசடியில் தாம் எந்த வகையிலும் சம்பந்தப்படவில்லை என நாட்டு மக்களுக்குக் காட்ட ஜனாதிபதி முயன்றுள்ளார். குறித்த மோசடி குறித்து மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணை முறி வழங்கல் மோசடியால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு இலேசானதொன்றல்ல. தமது மருமகனது நிறுவனத்துக்குப் பெரும் இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும் விதத்தில் பிணைமுறி வட்டி வீதத்தை அதிகரித்த விதத்தில் நிர்ணயித்து வழங்கியதாக மத்திய வங்கியின் அவ்வேளைய ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மீதான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு எதிர்பார்க்கப்பட்ட தொகைக்கு மேலதிகமான தொகையைக் கூடிய வட்டிக்கு மத்திய வங்கிக்குத் தமது மருமகனது நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்டதாகவும் அர்ஜுன் மகேந்திரன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதனால் நாட்டின் சாதாரண வங்கிகள் பொது மக்களுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதமும் அதிகரிக்கப்பட நேர்கிறது. இதனால் நாட்டுக்கும் மக்கள் சமூகத்துக்கும் ஏற்பட்டுள்ள நட்டம் இலேசில் கணக்கிடப்பட முடியாததொன்று. இந்த மாபெரும் மோசடி தொடர்பாக குடிசார் வழக்கொன்றைத் தொடுத்து விட்டுக் கையைக் கழுவிக் கொள்ள பிரதமர் அலுவலகம் முயற்சிப்பது, ஆரம்பத்தில் குறிப்பிட்டமை போன்று 'கிராமத்துத் தலைவனும் கிராமத்துக் காவற்காரனும் ஒன்று சேர்ந்து விட்டால், பொழுது விடியும் வரை திருட்டை மேற்கொள்ள முடியும்' என்பதற்குப் பொருத்தமானதாகக் கொள்ளத்தக்கது. ஆயினும் குடிசார் வழக்காக அல்லாது சம்பந்தப்பட்டோர் மீது குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்வதற்காகவே தாம் விசாரணை ஆணைக்குழுவை நியமித்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பது கருத்தில் கொள்ளத் தக்கதொன்றே.

### பாரதூரமான நிதிமோசடிக் குற்றச்சாட்டுக்கு குடிசார் வழக்கா?


மத்திய வங்கி மோசடி தொடர்பாகக் குடிசார் வழக்கொன்றைத் தொடுக்க ஆர்வம் காட்டும் அதேவேளை, கூட்டு எதிரணிப் பிரமுகர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவியல் வழக்குத் தொடுக்க அரச தரப்பு உற்சாகம் காட்டுவதும் இங்கு கருத்தில் கொள்ளத்தக்கதொன்றே. இதற்குப் பொருத்தமான உதாரணமாக விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கைக் குறிப்பிட இயலும்.

முறைகேடான விதத்தில் அரச வாகனங்களைப் பயன்படுத்தியதான குற்றச்சாட்டுக்கு குற்றவியல் வழக்குத் தொடுப்பதானால், மிகப் பெரும் மோசடியாகக் கருதப்படும் மத்திய வங்கி பிணை முறி வழங்கல் மோசடிக்கு எதிராக குடிசார் வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களமும் பிரதமர் அலுவலகமும் முயல்வது எந்தவகையில் நியாயமாகும்? இது ஒரு விதத்தில் "வழக்கும் அரசினுடையது; மோசடி செய்யப்பட்ட பொருளும் அரசினுடையதே" என்ற நிலையை ஒத்ததாகும். கூட்டு எதிரணிக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்களும் மகிந்தவின் முன்னைய அரசுடன் தொடர்பு கொண்டிருந்த பிரமுகர்களுக்கு எதிரான முறைப்பாடுகளை மட்டும் விசாரணை செய்யும் நிதி மோசடி விசாரணைப்பிரிவுக்குப் பிரதமர் அலுவலகத்தின் கீழ் செயற்படும் குற்றத் தடுப்புப் பிரிவால் முறைப்பாடு மேற்கொள்ளப்படுகிறது. வேறு எந்தவித முறைப்பாடுகளையும் அந்த நிதி மோசடி விசாரணைப் பிரிவு விசாரணை செய்வதில்லை. அது அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுவதாக ஜனாதிபதி கூட ஒரு சந்தர்ப்பத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அந்த வகையில் மத்திய வங்கி மோசடியைப் பாரதூரமான நிதி மோசடியொன்றாகக் கருதாமையாலா, நிதி மோசடி விசாரணைப் பிரிவு அது குறித்து விசாரணை மேற்கொள்ளவில்லை என்ற வினா மேலெழுகிறது. ஆனால் முறையற்ற விதத்தில் அரச வாகனங்களைப் பயன்படுத்தியதான குற்றச்சாட்டில் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, விமல் வீரவன்சவைக் கைது செய்து விளக்க மறியலில் வைத்துள்ளமை அரசுக்கு எதிராகப் போராடும் அவரைப் பழிவாங்கும் நோக்கிலாகும் எனக் கருத முடியும்.

குற்றமிழைக்காத எவரும் தாம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படும்போது எவ்வித அச்சமுமின்றி அதனை எதிர்கொள்ளத் தயங்குவதில்லை. அதற்கான சக்தி அவர்களிடம் காணப்படும். அரச நிறுவனமொன்றின் தலைவரான மைத்திரி குணரத்ன என்பவர், அரசவாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதான குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்து சிறையில் அடைப்பதானால், தற்போது நாட்டிலுள்ள சிறைச் சாலைகளில் இடமே இருக்காத அளவுக்குப் பெருந்தொகையானோர் கைது செய்யப்பட வேண்டியிருக்கும் எனத் தெரிவித்திருந்தார். அந்த வகையில் விமல் வீரவன்ச விடயத்தில் அரசின் அணுகுமுறை அரசுக்கே பாதிப்பை ஏற்படுத்தக் காரணமாகிறது.

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்று பழமொழி ஒன்றுண்டு. அரசு இன்று அளவுக்கு மிஞ்சிச் செயற்பட முனைந்துள்ளது. பாரதூரமான பாதிப்பைச் சந்திக்க நேரும்போதுதான், அமுதமே நஞ்சாகியுள்ளதை அரசு உணர நேரும். கடலில் மூழ்கும் கப்பலுக்கு ஒன்பது மாலுமிகள் இருப்பினும், அதனால் பயனேதும் கிட்டப் போவதில்லை. அரசு இப்போதாவது தனது போக்கைச் சரியான பாதையில் திரும்பியாக வேண்டும். குறிப்பாக ஜனாதிபதி, இது குறித்துப் புரிந்து உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே அவரைப் பதவியில் அமர்த்திய இந்த நாட்டு மக்களுக்கு அதனால் பயன் கிட்டும்.



## வாசகர் திருமுகம்

### நீதி மறுக்கப்பட்டால் பொங்கி எழுதல் நியாயமே!

கும்பிடு போடுவதற்கு நான்கு குண்டர்கள் இருந்தால் போதும். எவரும் மக்கள் தலைவராகி விட முடியும். இப்படியும் ஒரு கேடு கெட்ட அரசியலா? ஒரு சில கதாநாயகிகளிடம் தஞ்சமடைந்து கிடந்த அயல்நாட்டு அரசியல் சற்று விழிப்புணர்வடைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். ஊமையனுக்குக் கோபம் வந்தால் ஊரே தாங்காது என்பார்கள். அதேபோல அடக்குமுறை அளவு மீறும்போது பொங்கி எழுந்து நீதி கேட்கும் நிலமை ஏற்படும் என்பதற்கு அயல்நாட்டு அரசியல் போன்று, வன்னித் தமிழர்களது அகிம்சைப் போராட்டமும் உதாரணங்களாக அமைகின்றன.

நீதிக்கு ஒருநாளும் தோல்வி கிடையாது.

*விஸ்வாஸ்*
*வல்வெட்டித்துறை*

### யாழ்.மாநகரசபை கவனம் செலுத்துமா?

குருநகரில் மக்கள் நாளாந்தம் பயன்படுத்தும் பல வீதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன. குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் கிழக்கு மேற்கு வீதிகள், அடப்பன் வீதியின் முதலாம் இரண்டாம் மூன்றாம் கிளை வீதிகள், குருநகர் ஜஸ்பிளான்ற் வீதி ஆகியவையே பலகாலமாக செப்பனிடப்படாத நிலையில் உள்ளன.

இதனால் இந்த வீதிகளூடாக நாளாந்தம் பயணிக்கும் பொது மக்கள் போக்குவரத்துக் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

எனவே இந்த வீதிகளைப் புனரமைத்துப் பொதுமக்களது பயணச் சிரமங்களைப் போக்க யாழ்.மாநகர சபை உரிய நடவடிக்கை எடுக்குமா?

*திலிப், குருநகர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு முதல் இரண்டு வயது அடையும் பிள்ளையின் விருத்திப்படிமுறையும் அவர்களுக்கான எளிய விளையாட்டுக்களும்

சி.சஸ்ரூபி



ஒரு குழந்தையின் வளர்ச்சிப்படிமுறையைப் பிரதானமாக நான்கு எல்லைகளாகப் பிரிக்கலாம். அவையாவன: குழந்தைப் பருவம், முன்பள்ளிப்பருவம், இடைத்தர சிறுவர் பராயம் மற்றும் இளைஞர் பருவம் ஆகும். சிறுவர் பராயத்தின் முற்பாக விருத்திப் படிமுறையானது பிறந்தது முதல் இருவயது வரை உள்ளபகுதியை உள்ளடக்குகிறது. இந்தக் காலப்பகுதியில் உடல் ரீதியான இயக்கச் செயற்பாடுகள் மற்றும் விவேகம் சார்பான விடயங்கள் எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இவ்வறிவானது சிறுவரொருவரை வளர்த்தெடுக்கும் பொறுப்பிலுள்ள யாவருக்கும் தேவையானதாகும்.

முதலில் 4 மாதகால பிள்ளையின் திறன்களை நோக்குவோம். தினம்தோறும் சராசரியாக 20 கிராம் அளவு உடற்பருமன் அதிகரித்தபடி சென்றபடி 4ஆம் மாத முடிவில் பிறப்பு நிறையானது இரு மடங்கு நிறையைக் காட்டும். தலை அசைவைப் பொறுத்தவரையில் குழந்தை எமது அரவணைப்பில் அமர்ந்திருக்கையில் தலை கீழே விழாமலும் குழந்தை படுத்திருக்கையில் 90 பாகை அளவுக்கு தலையை நிமிர்த்தியும் வைத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், உடலை முதுகுப்புறமிருந்து வயிற்றுப்புறமாக குப்புறப்படுக்க முனைய வேண்டும். சிறிய ஏதுவான பொருளொன்றைப் பிடித்து வைத்திருக்கும் திறனுடையதாக இருக்க வேண்டும். உதாரணமாக: கிலுகிலுப்பை (கிலுக்கட்டி) பிள்ளையின் கைவிரல்களுக்கிடையில் திணித்தால், அதை பிடித்து வைத்திருந்து தன் வாயை நோக்கி கொண்டு செல்ல முயற்சித்தல் எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களின் புலனுணர்வு மற்றும் நுட்பச் செயற்பாடுகளைப் பொறுத்த வரை தமது பெற்றோரை மட்டுமல்லாது ஏனையவர்கள் மீதும் நெருக்கமான கண் தொடர்பை ஏற்படுத்த அதிக முயற்சி செய்வர். இதைவிட கை அசைவையும் கண் அசைவுடன் தொடர்புபடுத்தி தன் உணர்வுகளை வெளிக்காட்டுதல், உரத்த தொனியில் சிரித்தல், பெற்றோரின் குரல் மற்றும் தொடுகையை இனங்காணல் மற்றும் போத்தலை பற்றிப் பிடித்து பால் குடிக்க எத்தனித்தல் என்பவற்றையும் செய்வார்கள். நித்திரையை பொறுத்த வரை ஒரு நாளைக்கு 14 தொடக்கம் 16 மணித்தியாலங்கள் வரை நித்திரை கொள்வர். இவ்வாறான பிள்ளைகளுக்கு எவ்வகையான விளையாட்டுக்கள் நாம் செய்யலாம் எனப்பார்ப்போம். அதாவது பிள்ளைக்கு முன்னால் முகம்பார்க்கும் கண்ணாடியொன்றைப் பிடித்தால் அந்தப்பிள்ளை அந்தக் கண்ணாடியை தொட்டுப்பார்க்க முயற்சிக்கிறதா? சிரிக்கிறதா? எனப் பரீட்சித்துப் பார்க்கலாம். பிள்ளை விளையாடுவதற்கு பிரகாசமான நிறங்களுடைய விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்தல், பிள்ளை தானாகவே எழுப்புகின்ற சத்தத்தை நாமும் எழுப்புவதன் மூலம் பிள்ளையை ஊக்குவித்தல் போன்ற சிறிய செயற்பாடுகளைச் செய்யலாம். இவ்வாறான செயற்பாடுகளைப் பிள்ளையை வயிற்றுப்புறமாக படுக்க வைத்துக் கொண்டு விளையாடலாம்.

அடுத்ததாக 9 மாத குழந்தையின் வளர்ச்சி விருத்தி படிமுறையை நோக்குவோம். இந்த வேளையில் உடல்நிறை கிட்டத்தட்ட 15கிராமினால் தினந்தோறும் அதிகரிக்கையில் உடல் நீளம் 1.5 சென்ரி மீற்றரால் மாதந்தோறும் அதிகரிக்கிறது. பிள்ளை சலம், மலம் கழிக்கும் நேரம் கிரமப்படி ஒழுங்காக அமையும். உடல் இயக்க செயற்பாட்டைப் பொறுத்தவரையில் தலையானது கீழ்நோக்கி விழுமாற்போல் செல்கையில் தன் இரு கைகளையும் முன்நோக்கி நீட்டுவதன் மூலம் தானாக கீழே விழுந்து விடாமல் பாதுகாத்துக் கொள்வர். (பரசூட் இயக்கம்) மேலும் நிலத்தில் தவழ்ந்து செல்லும் தன்மை நீண்ட நேரமாக தரையில் உதவியுடன் அல்லது உதவியின்றி இருத்தல். பெருவிரல் மற்றும் சுட்டு விரலைப் பாவித்துப் பொருளைப் பற்றிப் பிடித்தல், பொருளை வீசுதல் அல்லது குலுக்குதல் தன் கை விரல்களை சூப்புதல் போன்ற செயற்பாடுகளைக் காட்டுவர். அவர்களின் சமூக வெளிப்பாட்டுத் திறனைப் பொறுத்தவரை புதுப்புது வித்தியாசமான சத்தங்களை எழுப்புதல், தன்னை விட்டு பெற்றோர் தூர செல்கையில், ஏக்கம் கொள்ளல், இலகுவான கட்டளைகளைப் புரிந்து கொள்ளல் தன் பெயரைச் சொல்லி அழைப்பவரை திரும்பிப் பார்த்தல். இல்லை எனும் சொல்லைப் புரிந்து கொள்ளல், இலகுவான பேச்சொலியைத் தானும் திரும்பிச் சொல்லுதல், கையால் (bye) சொல்லுமாற்போல் அலை வடிவில் கை அசைத்தல் போன்ற சிலவற்றை அவதானிக்கலாம். இவ்வாறான செயற்பாடுகளைக் காட்டும் குழந்தைக்கு இலகுவான படங்களை (கார், புத்தகம், நாய், பந்து, கரண்டி, அப்பிள்) காட்டலாம். மனிதர்கள் அல்லது விலங்குகள் உள்ள இடங்களுக்குக் கொண்டு சென்று அங்கு கேட்கும் பலபல வித்தியாசமான சத்தங்களை வேறுபடுத்தி அறிய வைக்கலாம். உடம்பில் சூடு மற்றும் குளிர் தன்மையான பொருள்களை தொடப்பண்ணுவதன் மூலம் இருவேறு தன்மைகளையும் உணரச் செய்யலாம். அளவில் பெரிய விளை யாட்டுப் பொருள்களைக் கையில் கொடுப்பதன் மூலம் நடை பயில ஊக்குவிக்கலாம். எம்முடன் சேர்ந்து பாட்டுப்பாட சொல்லலாம். தனிமையில் இருக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் ஏதேனும் ஒரு பொருளை விருப்பத்துடன் பாவிக்கும்படி செய்யலாம்.

அடுத்து ஒரு வயது பூர்த்தியாகும் தறுவாயில் உள்ள பிள்ளையை நோக்குவோம். இந்தப்பிள்ளையின் உடல் நிறையானது பிறப்பு நிறையின் 3 மடங்காகவும், உடலின் நீளம் பிறப்பு நீளத்தின் அரைமடங்கால் அதிகரிப்பதாகவும் நெஞ்சு மற்றும் தலையின் சுற்றளவு சமமாகவும் காணப்படும். இந்தப் பிள்ளையில் ஒன்று தொடக்கம் 8 பற்கள் காணப்படலாம். உடலியக்கச் செயற்பாட்டைப் பொறுத்தவரை உதவியின்றி தானாகவே எழுந்து நிற்றல், தானாகவே நடக்க எத்தனித்தல், உதவியின்றித் தரையில் அமர்தல், புத்தகங்களின் பல பக்கங்களை ஒரு தடவையில் திருப்புதல், சிறிய பொருளை தன் பெருவிரல் மற்றும் சுட்டு விரலால் தன் முயற்சியால் எடுத்தல் (நாணயக் குற்றியை உண்டியலினுள் போடுதல்) ஒரு நாளைக்கு 8 தொடக்கம் 10 மணி நேர இரவு நித்திரை கொள்பவராக இருப்பர். இவர்களின் விவேகத் திறனைப் பொறுத்தவரை நடித்துக்காட்டும் செயற்றிறன் உடையவர் (உதாரணமாக கோப்பையிலிருந்து தண்ணீர் குடிப்பது போல்) வேகமாக அசையும் பொருளைக் கண்களால் பின் தொடர்வர். தம் பெயருக்கு மறுமொழி கூறுவர்.

அம்மா" அப்பா" சொற்களைக் கூறுதல், விலங்குகளின் சத்தத்தைப் போல் தானும் ஒலிகளை எழுப்ப முயற்சித்தல், தன் உடையை அணிவிக்கும்போது தானாகவே தன் இரு கைகளையும் உயர்த்தி தன் முயற்சியை வெளிக்காட்டல், பொருளொன்றைச் சுட்டுவிரலால் குறித்துக் காட்டுதல், குறிப்பிட்ட ஒரு சாதாரண பொருளை அல்லது விளையாட்டுப் பொருளை எப்போதும் தம்முடன் வைத்திருத்தல். தனக்கு பழக்கமான சூழலாயின் தன் பெற்றோரை விட்டு சிறிதளவில் விலகியிருத்தல் போன்ற குணங்களைக் காட்டுவர். இவ்வாறான பிள்ளைகளுக்கு ஏற்கனவே குறிப்பிட்டது போன்று படங்கள் உள்ள புத்தகங்களைக் காட்டுதல், மிருகக் காட்சிச்சாலைக்கு கூட்டிச் செல்லல், பந்து விளையாடல், சூழலிலுள்ள பொருள்களைப் பெயர் சொல்லிக் காட்டுதல், ஒத்தவயது குழந்தைகளுடன் விளையாடச் செய்தல் போன்ற விளையாட்டுக்களைச் செய்யலாம்.

அடுத்ததாக 18 மாதங்கள் முழுமையாகும் கட்டத்திலுள்ள பிள்ளைகளிடம் எவ்வாறான செயற்பாடுகளை எதிர் பார்க்கலாம் எனப் பார்க்கலாம். வளர்ச்சி வீதம் குறைவான வேகத்தில் நடக்க பசிக்கும் தன்மையும் முன்னைய வயதை விட குறைவாகவே காணப்படும். சலம், மலம் கழிக்கும் தன்மையை அவர்கள் கட்டுப் படுத்தமுனைவர். நிலத்தில் வீழ்ந்து எழும்பி ஓட முயற்சித்தல், சிறிய கதிரையின் மீது உதவியின்றி ஏறி இருத்தல், அருகிலுள்ள சட்டத்தை ஒரு கையால் பிடித்தபடி படிகளின் மேல் ஏறுவர். இரண்டு தொடக்கம் நான்கு கட்டங்களைப் பாவித்து கோபுரம் கட்டுதல், கரண்டி மற்றும் கோப்பையை பாவித்து தனக்குத்தானே ஊட்டுதல், புத்தகத்திலுள்ள இரண்டு அல்லது மூன்று பக்கங்களை திருப்புதல் போன்ற செயற்பாடுகளை காட்டுவர். இவ்வாறான பிள்ளைகள் புத்தகத்தைப் பார்த்தபடியே நாம் சொல்லும் கதைகளை செவிமடுப்பர். பத்துச் சொற்களாயினும் சொல்லக்கூடியதாக இருப்பர். உடலின் பாகங்களாகிய கண், மூக்கு, காது என ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாகங்களை அடையாளம் காட்டக் கூடியதாக இருப்பர். தாம் அணிந்திருக்கும் தொப்பி, சப்பாத்தை கழற்றுவர். சில பொருள்களை மற்றும் தன்னுடன் இருப்பவர்களுடன் அதிக சொந்தம் கொண்டாட எத்தனிப்பர். தம் உதடுகளை குவித்து பெற்றோருக்கும், விருப்பமானவர்களுக்கும் முத்தம் கொடுப்பர். இவ்வாறான பிள்ளைகளுக்கு பாதுகாப்பான விளையாட்டுப் பொருள்கள், உபகரணங்களை மற்றும் பரந்த இடப்பரப்பை வழங்குவதன் மூலம் விளையாட்டு செயல் முறையில் ஈடுபட ஊக்கமளிக்கலாம். இதே நேரத்தில் வீட்டில், கிரமமாக நிகழும் செயற்பாடுகளிலும் தம் பங்கை செய்ய அனுமதிக்கலாம். (வீடு கூட்டுதல், பூமரங்களுக்கு தண்ணீர் ஊற்றுதலை அவதானித்தல்)

இறுதியாக இரு வருடங்களைப் பூர்த்தி செய்யும் குழந்தையைப் பற்றி நோக்குவோம். தானாக கதவை திறப்பதற்குரிய Knob ஐ திருப்புதல், புத்தகத்தின் ஒரு பக்கத்தை ஒரு தடவையில் திருப்பி புத்தகம் முழுவதும் ஒரு கண்ணோட்டம் விடல், ஆறு தொடக்கம் ஏழு கட்டங்களைப் பாவித்து கோபுரம் கட்டுதல், பந்தை தன் உடல் சமநிலை குழப்பாமல் உதைத்துவிடல், தாமாகவே மலம் கழிப்பதற்கு ஆயத்தமாகுதல், கிட்டத்தட்ட முதல் 16 பற்களும், முளைத்துக் காணப்படல் என்பன இருக்கும். இந்தக் காலப் பகுதியில் உடலின் உயரமானது இளம் பருவத்தினரின் உயரத்தின் அரை மடங்காக வந்துவிடுகிறது. இவர்களின் சமூக வெளிப்பாட்டுத்திறனை தாமாகவே சிறிய உடுப்புக்களை அணிவதிலும், உடுப்பைக் கழற்றுவதிலும் வெளிக்காட்டுவர். இந்தக் கால கட்டத்தில் இவர்கள் தமக்குரிய தேவைகளை ("பசிக்குது", "தாகமாக இருக்குது", "சலம், மலம் கழிக்க வேணும்") என எமக்குத் தெரியப்படுத்துவர். இதேபோல இரண்டு அல்லது மற்றும் மூன்று சொற்களைப்பாவித்து வசனம் அமைத்துக் கொள்வர். அதேபோன்று தொடர்ச்சியான இரு கட்டளைகளை செவிமடுத்து அதன்படி செயற்படுவர். (உ+ம் "பந்தை என்னிடம் தந்துவிட்டு சப்பாத்தைப் போடுங்கோ") 50 தொடக்கம் 300 வரையான சொற்களை அறிந்து வைத்திருப்பர். சூழலில் உள்ள பொருள்களை அவற்றின் தூரம், நிறம், தரம் மாறாது கண்களால் பார்த்துணரும் தன்மையைக் காட்டுவர். இவ்வாறான பிள்ளைகளுக்கு முன்னர் குறிப்பிட்ட விளையாட்டுக்களுக்கு மேலதிகமாக வீடு முழுவதும் சுற்றித் திரிய வைத்து வீட்டுப் பொருள்களை அவர்களைக் கொண்டு பாவித்து, அந்தப் பொருளை இணங்காட்ட அனுமதிக்கலாம். (வாளியினுள் தண்ணீர் ஊற்றி செய்வதன் மூலம் வாளியின் பயன்பாட்டை உணரச் செய்தல்) இதே போல நாளாந்த வீட்டு வேலைகளைச் செய்ய ஏதுவான சந்தர்ப்பம் அளிக்கலாம். (வீட்டுத்தரை கூட்டுதல், புல்பிடுங்குதல்) இவ்வாறான எளிய விளையாட்டு முறைகளை எமது சிறிய பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், அவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
19.02.2017



முல்லைத்தீவு: போராட்டக் களம்

பக். 23



யாதுமாகி

அளவுக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த அரச தலைவியான மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சாவு அவரைத் தண்டனையி லிருந்து விடுவித்துவிட்டாலும், சட்டத்தின் முன்னால் அவர் ஒரு குற்றவாளியே. இதுவரை ஒரு குற்றவாளியாலேயே தமிழகம் ஆளப்பட்டு வந்துள்ளது. இந்த நிலையில் மேற்படி அரச தலைவியைச் சார்ந்திருந்து சொத்துச் சேர்த்திருந்த அவருடைய தோழி சசிகலா, அவருடைய உறவினர்கள் சுதாகரன், இளவரசி ஆகியோரே இன்று நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தீர்ப்பு அரசியல்வாதிகளுக்கு ஒரு சிவப்பு எச்சரிக்கை.

# அம்மாவும் போய், சின்னம்மாவும் போயாச்சு...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**ஜெ. ஓர் ஊழல் முதலமைச்சர்**

அது ரூ 66.6 கோடி சொத்துக்குவிப்பு வழக்கு. இது பலருக்கு ஆச்சரியமாகவும், சிலருக்கு அதீதமாகவும்கூடத் தோன்றலாம். 1991களில் இந்த வழக்கு ஆரம்பிக்கப்பட்டது என்றால், அதன் இன்றைய பெறுமதியைக் கணித்துப் பாருங்கள்! நீதிபதிகள் வெளிப்படையாகவே நொந்துகொள்ளும் அளவுக்கு நீண்டநெடுங்காலமாக இந்த வழக்கு ஜெயலலிதாவால் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. ஆனால் 2014இல் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோன் மைக்கல் குன்ஹா இந்த வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி நால்வரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்து நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையையும் விதித்தார். அப்போதும் ஜெயலலிதா தமிழக முதல்வராகவே இருந்தார். நாட்டிலேயே பதவியிலிருக்கும்போது ஊழல் வழக்கில் தண்டனைக்குள்ளாகிச் சிறை சென்ற முதலாவது முதலமைச்சர் என்ற அவப்பெயர் அப்போதே ஜெயலலிதாவுக்குக் கிடைத்திருந்தது. ஆனாலும் குறிப்பிட்ட சில மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்தவர். குறித்த வழக்கின் தீர்ப்பை மேன்முறையீடு செய்யக் கோரிக்கை விடுத்துப் பிணையில் வெளியே வந்தார். அதன் பின்னரும் அடுத்தடுத்து மக்கள் அவரையே முதலமைச்சராக்கினர். அதன் பின்னர் நீதிபதி குமாரசுவாமியால் வழங்கப்பட்ட மேன்முறையீட்டுத் தீர்ப்பின்படி ஜெயலலிதா குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டார். ஆனாலும் வழக்குத் தொடுநர்களின் கோரிக்கையின் பேரில் மேற்படி வழக்கு உச்சநீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதால் ஜெயலிலதா, சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசி ஆகியோர் குற்றவாளிகள் தான் என்பது கடந்த வாரம் உறுதி செய்யப்பட்டது.

**தமிழக அரசியலில் அ.தி.மு.க**

தமிழகம் இந்தியாவின் 29 மாநிலங்களில் ஒன்றாகும். தமிழகத்தை ஆளும் முதன்மையான அரசியல் கட்சிகளாக அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்(அ.இ.அ.தி.மு.க) மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) ஆகியவை விளங்குகின்றன. காங்கிரஸ் கட்சி, இந்தியக் குடியரசுக் கட்சி, இந்திய பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்), பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் தேசிய முற்போக்குத் திராவிடக் கழகம், பாரதிய ஜனதாக் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், முஸ்லிம் லீக், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி மற்றும் நாம் தமிழர் கட்சி ஆக்யவையும் தமிழகத்தின் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த கட்சிகளாக உள்ளன. ஈ.வெ.இராமசாமி நாயக்கர் 1916இல் தோற்றுவித்த திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து, 1949இல் தி.மு.க. வை சி.என். அண்ணாத்துரை தோற்றுவித்தார். 1947இல் இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு 1967வரை தமிழ்நாட்டை இந்திய தேசிய காங்கிரஸ் ஆண்டது. 1967இல் தி.மு.க. ஆட்சி அமைத்தது. 1972இல் தி.மு.கவிலிருந்து பிரிந்து, அ.இ.அ.தி.மு.க. வை ம.கோ.இராமச்சந்திரன்(எம்.ஜி.ஆர்.) தோற்றுவித்தார். 1977இல் அ.இ.அ.தி.மு.க முதன் முதலில் ஆட்சியைப் பிடித்தது. அன்றிலிருந்து தி.மு.க. அல்லது அ.இ.அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளில் ஒன்றே தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றி வருகின்றன. இறுதியாக, தி.மு.க 2006இல் ஆட்சிபீடமேறி 2011 வரை ஆட்சி நடத்தியது. தி.மு.க.வின் இந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழி வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு, தாழ்த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மைச் சமூகத்தின் நலன், இட ஒதுக்கீடு, காவேரி நீர்ப் பிரச்சினை, விவசாயிகள், பாமரர் மற்றும் நலிவடைந்த பிரிவினர் நலன் போன்றவையுடன் ஊழல், கையூட்டு, நிதிமோசடி, சாதி அரசியல் ஆகியவையும் பிரதானமாகின. பின்னர் குடும்ப அரசியலும் முக்கியத்துவம் பெற்றது. இதனால் 2011இல் நடந்த தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. அமோக வெற்றிபெற்றது. அப்போது இரண்டாவது முறையாக ஜெயலலிதா தமிழக முதல்வராகியிருந்தார். அ.இ.அ.தி.மு.க வின் அந்த மாபெரும் வெற்றி, தி.மு.க. ஆட்சிமீது மக்கள் அடைந்த அதிருப்தியின் விளைவெனக் கொள்ளப்பட்டது.

**மக்கள் கைகளில்...**

1991ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக அ.தி.மு.க வின் சார்பில் ஜெயலலிதா தமிழக முதலமைச்சரானார். 1996, மே மாதத்துடன் அவருடைய பதவிக்காலம் முடிவடைந்து சரியாக ஒரு மாதத்தில் அப்போது ஜனதாக் கட்சித் தலைவராக இருந்த சுப்ரமணியன் சுவாமி ஜெயலலிதா மீது சொத்துக் குவிப்பு வழக்கைத் தொடர்ந்தார். அதன் தீர்ப்பு பெப்ரவரி 14ஆம் திகதியன்று உச்சநீதிமன்றத்தால் வெளியிடப்பட்டது. அது ஜெயலலிதாவையும் அவரைச் சார்ந்திருந்து அளவுக்குமதிகமாகச் சொத்துச்சேர்த்த சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரையும் ஊழல் வாதிகள் என்று புடம்போட்டுள்ளது. ஆக இதுவரை தமிழகத்தை ஆண்ட அ.இ.அ.தி.மு.க மற்றும் தி.மு.க போன்றவை ஊழலில் மிதப்பவை. தமிழக அரசியல் வரலாறே ஊழல் ஆட்சிகளால் கட்டமைக்கப்பட்டதுதான் என்பதே மேற்படி தீர்ப்பு உணர்த்தும் சாராம்சம். ஆனால் தமிழக மக்களின் அரசியல் ஈடுபாடு, எழுச்சி என்பவை அவர்கள் எந்தவொரு எதிர் விளைவுகளையும் பொருட்படுத்தாது மேற்படி ஊழல்வாதிகளோடு தம்மை ஈடுபடுத்திவருவதாகவே இன்றுவரை பதிவாகிவருகின்றது. இறுதியாக 2006இல் தி.மு.க வின் சார்பில் தமிழக முதலமைச்சர் ஆகியிருந்த கருணாநிதியின் ஆட்சி ஊழல், நிதிமோசடிகளால் மக்களால் புறக்கணிக்கப்பட்டது எனக் கொண்டால், மக்கள் புதிய ஆட்சிவேண்டி எப்படி 1991களிலேயே மேற்படி ஊழலில் தீவிரம் காட்டிச் செயற்பட்ட அ.தி.மு.க வைத் தெரிவுசெய்ய முடியும்? என்ற கேள்வி எழுகின்றது.

இது ஒருபுறமிருக்க இப்போதும் சசிகலா பன்னீர்செல்வம் என இருதரப்பாகியுள்ள அணிகளுடன் மக்கள் இழுபறிப்படுவதில் என்ன நியாயமிருக்கின்றது? ஜெயலலிதாவால் தனக்குப்பதிலாக நியமிக்கப்பட்டவர் எனும் புகழுடன் ஓர் ஊழல்வாதிக்கான இடத்தைப்பிடித்த பதில் ஊழல்வாதியாகப் பன்னீர்செல்வம் இருக்கின்றார். மறுபுறம் சசிகலா நேரடியாகவே நீதி மன்றம் சாடும் ஒரு குற்றவாளி. இன்னொரு புறம் தி.மு.கவும் ஊழலால் மக்கள் செல்வாக்கை இழந்துள்ள ஒரு கட்சி. இந்த நிலையில் தம்மை ஆளுபவர்கள் பற்றிய தெளிவான சிந்தனையுடன் இருக்கவேண்டிய கடப்பாடு இன்று தமிழக மக்களுக்கு உண்டு.

**வரலாற்றில் மறுபடியும்...**

முதலமைச்சர் இல்லாத பட்சத்தில், கட்சி இரண்டாகப் பிளவுபடுவது, கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களின் கட்சித் தாவல்கள், ஆட்சி அமைப்பது யார்? என்ற குழப்பம், இந்நிலையில் ஆளுநரின் முடிவுகள், மத்திய அரசின் மீது சந்தேகம், எதிர்க் கட்சியான தி.மு.க மீது குற்றச்சாட்டு என இப்போது நடந்தேறியவை எல்லாமே, அ.தி.மு.க வில் முன்பும் ஒரு முறை நடந்தவற்றின் மறு பதிப்புத்தான். 1987இல் எம்.ஜி.ஆர் சாவடைந்தபோதான நேரத்து அரசியல் நிலவரமே தற்போது ஜெய லலிதா சாவடைந்தபோதும் நிலவு கின்றது. எம்.ஜி.ஆர் மறைந்த போது அதுவரை கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராகவிருந்த ஜெயலலிதா தலைமைப்பதவிக்குக் கடும் போட்டியாளராக மாறினார்.

(46 ஆம் பக்கம் பார்க்க)

> ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி நால்வரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்து நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையையும் விதித்தார். அப்போதும் ஜெயலலிதா தமிழக முதல்வராகவே இருந்தார். நாட்டிலேயே பதவியிலிருக்கும்போது ஊழல் வழக்கில் தண்டனைக்குள்ளாகிச் சிறை சென்ற முதலாவது முதலமைச்சர் என்ற அவப்பெயர் அப்போதே ஜெயலலிதாவுக்குக் கிடைத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முல்லைத்தீவு: போராட்டக் களம்

காா.கணேசதாசன்

“நாங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த, எங்கள்பூர்வீகமண்ணைவிடுவிக்காது இந்த இடத்தை விட்டு அகலமாட்டோம்” என்ற நிலைப்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவம் கையகப்படுத்தி யுள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி மக்கள் உறுதியுடன் தொடர்ந்தும் போராடிவருகின்றனர். பிலக்குடியிருப்பில் வான்படை முகாமுக்கு முன்பாகவும் புதுக்குடியிருப்பில் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவும் தமது அறவழிப்போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர் இவர்கள். இப்போது அந்தப் போராட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பாகவும் அதனை மாற்றியிருக்கிறார்கள் அந்த மக்கள்.

**வான் படை, பிரதமரின் வில்லங்கம்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவேறு இடங்களில் மக்கள் முன்னெடுத்து வரும் மண்ணை மீட்கும் போராட்டங்களில் ஒன்றான பிலக்குடியிருப்பு வான்படை முகாமுக்கு முன்பான போராட்டம், இந்த மாதம் முதலாம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. ஜனவரி மாதம் 31ஆம் திகதி அன்று தமது காணியை விடுவிப்பதாக மேற்படி இடத்துக்கு வருமாறு வன வளத்திணைக்கத்தினர் அழைத்திருந்தனர். ஆனால் அங்கு திணைக்களத்தினர் வருகை தரவில்லை. அதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறு ஏமாற்றப்பட்ட மக்கள் அன்று இரவோடு இரவாகவே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க உறுதி கொண்டனர். ஆரம்ப நாளன்று மக்கள் ஒன்று கூடி அங்கு தகரக் கொட்டகை ஒன்றை அமைத்துத் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

“நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்த அண்டைக்கு இரவு விமானப்படையினர் வீதியில் போடப்பட்டிருந்த மின்விளக்குகளை அணைத்து, குடிநீரையும் தடைசெய்து எங்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்திச்சினம். எங்கட கொட்டகைக்கு அருகில் வந்து, எங்களைக் கொல்லாதைங்கோ, எங்களை அடிக்காதைங்கோ எனக் கூக்குரலிட்டும் சென்றனர்” என்கின்றார் அங்குள்ள போராட்டக்காரர்களில் ஒருவர்.

“ஆரம்பத்தில எங்கட போராட்டக் கொட்டகை விமானப்படை அதிகாரியின் விடுதிக்குச் செல்லும் வழியில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் கொட்டகையை அகற்றி தங்கள் போக்குவரத்துக்குத் தடைசெய்யாமல் வழி தரும்படி பொலிஸாரையும் கூட்டிக் கொண்டுவந்து எங்களிட்டக் கேட்டிச்சினம். அதனால் வழிக்குக் குறுக்காக இருந்த கொட்டகையைக் கழற்றி, வீதியை விட்டு அருகில் அவர்களுக்கு இடையூறு இல்லாமல் கொட்டகை அமைத்துப் போராடி வருகின்றோம்” என அருகிலிருக்கும் இன்னொருவரும் கூறிக்கொள்கின்றார்.

இந்த மக்களின் அறவழிப்போராட்டத்தைக் குழப்பியடிக்கும் வான்படையினரின் மேற்படி செயல்கள் அனைத்தையும் தாண்டி, மக்கள் அமைதியான முறையில் தங்களுடைய போராட்டத்தை முன்னெடுத்து வந்து அதனை இன்று சுழற்சி முறையில் உணவு தவிர்ப்பு அறவழிப் போராட்டமாகவும் மாற்றியிருக்கிறார்கள் என்பதே உண்மை. ஆனால் மக்களின் இந்தப் போராட்டத்துக்கு ஜனாதிபதியோ பிரதமரோ தீர்வு வழங்கத் தயங்கும் நிலையில் போராட்டக்களத்தில் மக்களை அச்சுறுத்தும் வகையில் வான் படையினர் செயற்பட ஆரம்பித்திருக்கின்றனர். போராட்டத்தில் பங்குகொள்ளும் மக்களை வெளிப்படையாக ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தி வருகின்றனர் படையினர். இங்கு இப்படி நடக்க ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருக்கின்ற அகதிகளை நாட்டில் நல்ல பாதுகாப்பு நிலவுவதாகவும் அவர்களைத் திரும்பி நாட்டுக்கு வரும்படியும் கூறியிருக்கிறார் அங்கு சென்றிருக்கும் பிரதமர்.

**கடந்து வந்த பாதை**

2009ஆம் ஆண்டு வள்ளிபுனம் பாதுகாப்பு வலயம் அறிவிச்சாங்கள். அங்க போனம், அங்கிருந்து மாத்தளன் பிறகு வெள்ளாம் முள்ளிவாய்க்கால், கரையாம் முள்ளிவாய்க்கால் கடைசியா வட்டுவாகல் பாலத்தால் ஆமியின்ர கட்டுப்பாட்டுக்க வந்தம். பிறகு மெனிக்பாமில் உள்ள ஆணந்தகுமாரசாமி முகாமில கொண்டு போய் விட்டாங்கள். பிறகு 2012ஆம் ஆண்டு உங்கட ஊரில உங்கள மீள்குடியமர்த்தப் போறம் எண்டு சொல்லி ஏத்திக்கொண்டு வந்து கைவேலி கணேசா வித்தியாலயத்தில விட்டாங் கள், உங்கட இடத்தில இராணுவம் இருக்குது அவங்கள் எழும்பினாப் பிறகு நீங் கள் உங்கட இடத்துக்குப் போகலாம் என்று சொன்னாங்கள். இண்டைக் குப் போகலாம், நாளைக் குப் போகலாம் , இண் டைக்கு விடுறம், நாளைக்கு விடுறம் எண்டு இண்டுவரைக் கும் இழுத்தடிச்சுக் கொண்டே இருக்கிறாங்கள். எங்கட காணிக்க போய் நாங்கள் இருக்கக் கேட்கிறது அவ்வளவு பெரிய குற்றமா?' இவ்வாறு ஆதங்கப்பட்டுக் கொள்கிறார் கமலராணி. வான்படையால் கையகப்படுத்தப்பட்டுள்ள இவருடைய ஒரு ஏக்கர் காணிக்கும் வியர்வை சிந்தி, மாரடித்துக் கட்டிய கல்வீட்டுக்கும் என்ன நிலமையோ என்றும் ஆதங்கப்பட்டுக் கொள்கிறார் அவர்.

**புதுக்குடியிருப்பு அறவழிப் போராட்டத்தில்...**

விடுதலைப்புலிகளின் ஆட்சியின்போது முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலை இயங்கி வந்தது. அது இறுதிப்போர் நடைபெற்ற வேளையில் தரைமட்டமானது. இராணு வம் புதுக்குடியிருப்பைக்கைப்பற்றியதும் குறித்த வைத்தியசாலை அமைந்துள்ள இடத்தை மையமாகக் கொண்டு சூழ்ந்திருந்த 49 குடும்பங்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணிக்ளையும் உள்ளடக்கிப் படை முகாமை உருவாக்கி விட்டது. ஆகையால் அதை விடுவிக்கும் அறவழிப் போரும் புதுக்குடியிருப்பில் தொடர்கின்றது.



“என்ர மனுசன் காணியைப் பார்க்க ஆசையாக இருக்கு எண்டு கெஞ்சிக் கூத்தாடிப் பல தடவைகள் கேட்டதற்குப் பிறகு ஆமிக்கொமாண்டர் ஒரு மாதிரி அனுமதிச்சார். அவர் தான் கட்டிய வீட்டையும் காணியையும் பார்த்திட்டு வந்து மூன்று நாளா ஒரே யோசி னையா இருந்தார். கொஞ்ச நாளால மனுசன்ர சீவனும் போச்சுது. தான் செத்தால் தன்ர வீட்டில தன்ர உடலை வைச்சு எடுக்க வேண்டும் என அடிக்கடிச் சொல்லுவார். கஸ்டப்பட்டு உழைச்சு வீட்டக்கட்டின என்ர மனுசன்ர கடைசி ஆசை கூட நிறைவேறாமல் போயிற்று” காணியைக் காணக் காத்திருக்கும் செல்லம்மா தனது கண்களில் கண்ணீர் கசிந்ததும் வாயை மூடிக் கொள்கிறார்.

**அதிகாரிகளின் நயவஞ்சகம்**

காணி விடுவிக்கப்படும் எனப் போர் முடிந்த காலத்திலிருந்து தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்த மக்கள் தங்கள் காணியை அரச அதிகாரிகள் பெற்றுத்தாருவர்கள் என்ற கரிசனையில் இருந்தனர். ஆனால் அதிகாரிகளின் செயற்பாடுகளோ அவ்வாறு அமையவில்லை. மாறாக காணியைத் தம்மிடம் இருந்து பிடுங்கி எடுப்பதற்கே அவர்களும் தயாராக இருக்கின்றார்கள் என்பதே போராட்டக்காரர்களின் கருத்துக்களாயுள்ளன. இதனாலேயே தம்முடைய தேவைக்காகத் தாமே போராடவேண்டும் என்ற மனநிலைக்கு வந்துள்ளனர்.

“முகாமில் இருந்து மீள்குடியேறி இங்கு வந்தபோது ஒருக்கா உள்ளுக்குச் சென்று பார்க்க விட்டவங்கள், உங்களுடய காணிகளைப் பிறகு தரலாம் எண்டும் சொன்னாங்கள். பிறகு எங்கட காணியை இராணுவத்துக்குக் குடுக்க நிள அளவை செய்ய அதிகாரிகள் இஞ்ச வந்திட்டாங்கள். அண்டைக்கு எங்கட தலையில இடிவிழுந்திச்சுது. எங்கட எதிர்ப்பைத் தெரிவிச்சு ஒருமாதிரி அவங்களை அளக்க விடாமல் திருப்பி அனுப்பீட்டம், திரும்பவும் ஒருக்கா அளக்க வந்தாங்கள். அதையும் தடுத்து நிறுத்தீட்டம். இனி எங்கட காணி கிடைக்காமல் நாங்கள் இங்கிருந்து போகமாட்டம்” என தொடர் அறவழிப்போராட்டத்தை



> போராட்டத்தில் பங்குகொள்ளும் மக்களை வெளிப்படையாக ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தி வருகின்றனர் படையினர். இங்கு இப்படி நடக்க ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருக்கின்ற அகதிகளை நாட்டில் நல்ல பாதுகாப்பு நிலவுவதாகவும் அவர்களைத் திரும்பி நாட்டுக்கு வரும்படியும் கூறியிருக்கிறார் அங்கு சென்றிருக்கும் பிரதமர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சினிமா

# காபூலிவூட்

## குருதித் தேசத்தில் கலை

ஆப்கானிஸ்தான் என்றவுடன் தாலிபான்களும், தீவிரவாதமுமே எங்களுக்கு ஞாபகம் வரும். அதைத் தவிர்க்க இயலாதுதான். ஏனென்றால், நாம் இதுவரையில் ஆப்கானிஸ்தான் என்பதைப் பொதுப் புத்தியில் அப்படித்தான் உருவகித்து வைத்திருக்கிறோம். பார்த்த படங்கள், அறிந்த செய்திகள் அனைத்துமே அதனைத்தான் நம்மில் இன்னும் அதிகரிக்கச் செய்திருக்கின்றன. ஆனால், காபூலிவூட்டைப் பார்க்க நேர்ந்தால் நாம் ஆப்கானிஸ்தானை, அதன் உள்ளிருக்கும் இயல்பு வாழ்க்கையைப் புரிந்துகொள்ள முடியும். அரச பயங்கரவாதமாக இருந்தாலும் சரி, தீவிரவாதத்தின் கோர முகமாக இருந்தாலும் சரி, அதனைப் பிரதிபலிப்பதும் எதிர் கொள்வதும் கலையே. கலையே அதற்கான வேலைகளைச் செய்கிறது. அந்தக் கலையின் வடிவம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், அவை மக்களுக்கானதாகக் கலைஞர்களுக்கானதாக இருக்க வேண்டும்.

சிக்கெந்தரும், ஷாப்பும் ஆப்கானிஸ்தானின் காபூல் பல்கலைக்கழகத்தில் படித்து வருகின்றனர். அங்கு நிலவி வரும்நெருக்கடிநிலை காரணமாகத்திரையரங்குகளும் இசை நிகழ்ச்சி நடக்கும் அரங்குகளும் மூடப்பட்டிருக்கின்றன. இவை மட்டுமல்லாமல் கலை சார்ந்த அனைத்துச் செயற்பாடுகளும் கைவிடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. இந்தநிலையில், சிக்கெந்தரும், ஷாப்பும் அவர்களது நண்பர்களும் இசைவிழாவை நடத்தவும் புதியதாக ஒரு கலாசார மையத்தை ஆரம்பிக்கவும் ஆசைப்படுகின்றனர். சிக்கெந்தரும் ஷாப்பும் அவர்களது நண்பர்களும் அதனை நிறைவேற்றினார்களா? அவர்களின் முயற்சி என்ன வாயிற்று என்பதுதான் 'காபூலிவூட்' திரைப்படத்தின் ஆரம்பக்காட்சியிலேயே தூரத்தில் தாக்குதல் நடைபெற, வீட்டினுள் இருக்கும் சிக்கெந்தரும் அவனது குடும்பமும் அதனைப் பற்றிய எவ்வித கரிசனையும் இல்லாமல் இருக்கின்றனர். அந்தச் சத்தங்கள் அவர்களுக்குப் பழகிப்போய் விட்டன. அவர்கள் அவற்றை அலட்டிக் கொள்வதில்லை என்பதை அந்தக் காட்சியிலிருந்து உணரலாம். நாட்டின் பல்வேறு பகுதிகளும் சிதைந்த நிலையில் இருந்தாலும் மக்களது அன்றாட வாழ்க்கையானது எல்லாவற்றுக்கும் பழகிய விதமாக நகர்வது யதார்த்தமானது.

சிக்கெந்தரும் அவனது நண்பர்களும் தங்களது நாட்டைப் பற்றியும், நாட்டின் கலைஞர்களைப் பற்றியும் பேசிக்கொள்ளும் காட்சிகளில் அந்தநாட்டின் கலை எவ்வளவு அழுத்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றது என்பது புலப்படுகின்றது. இசை நிகழ்ச்சி நடத்த அரங்குகள் தேடி ஒவ்வொரு இடமாக அவர்கள் அலையும்போது எதிர்கொள்ளும் ஒவ்வொரு அரங்குகளும் தாக்குதலுக்கு உள்ளாகிச் சிதைந்த நிலையில் இருக்கின்றன. எப்படியோ ஒருவாறு அரங்கு கிடைத்தாலும், இசை நிகழ்ச்சியை நடத்த அனுமதி கிடைப்பது குதிரைக்கொம்பே. பிற்பாடு அதற்கான பாதுகாப்புக்கு என்ன செய்வது? எல்லாமே கடினமான விடயமாக அடுத்தடுத்து அடுக்கப்படுகின்றது.

சிக்கெந்தரின் அப்பா இராணுவத்தில் ஜெனரல் பதவியிலிருப்பது கலாசார மையத்தை ஏற்படுத்த உதவியாக இருக்கிறது. ஒரு கட்டத்தில் எந்தவித உதவியும் இல்லாமல் சிக்கெந்தரால் தனியே கலாசார மையத்தை ஏற்படுத்த வேண்டிய நிலமை ஏற்படுகின்றது. ஆனால் அதனை எதிர்கொண்டு அவன் செய்து முடிக்கும் விதம் சிறப்பு.

சிக்கெந்தர் மற்றும் அவர்களது நண்பர்கள் குழுவில் ஷாப் மட்டுமே பெண்ணாக இருக்கிறாள். அதனாலேயே அவளுக்கான கட்டுப்பாடுகள் அதிகம். அவளது அண்ணனுக்கு ஷாப்பின் செயற்பாடுகள் மீது விருப்பம் இல்லை. கலாசார மையம் ஆரம்பிப்பது இஸ்லாம் சமயத்துக்கு எதிரானது என்று அவன் நினைக்கிறான். ஒருவேளை ஷாப்பின் அண்ணன் அடிப்படைவாதியாகஇருக்கலாம்.



ஆனால் அவனை ஒரு தீவிரவாதியாகச் சித்திரிக்கவில்லை. அதேநேரத்தில் அவன் சிக்கெந்தரையும்அவனதுநண்பர்களின் முயற்சிகளையும் எதிர்க்கிறான். அந்த முயற்சிகளை ஒன்றுமில்லாமல்செய்ய முயல்கிறான். உண்மையில் இதுபோன்ற அடிப்படைவாதிகளே ஆப்கானிஸ்தானின் இந்த நிலமைக்கு காரணமாக இருக்கிறார்கள் என்பதுவும் படம் சொல்லும் செய்தி.

சிக்கெந்தரும் அவனது நண்பர்களும் ஒரு சினிமா அரங்கத்தை புதுப்பிக்கும் போது அங்கு தங்கியிருக்கும் குழந்தைகளின் நிலையைக் காட்டும் ஒரு காட்சியே காபூலை, ஆப்கானிஸ்தானின் உள்ளார்ந்த வாழ்க்கையை நமக்குப் புரியவைக்கிறது. கல்வியும் வாழ்க்கைத் தரமும் வீழ்ந்து போய் இருக்கின்றன. காபூல் போன்ற நகரங்களில் இந்த நிலமை எனில், மற்றைய கிராமங்களின் நிலை எப்படியிருக்கும்!

இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பின் போதே பல்வேறு தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இந்தப்படம் வெளியானதன் பின்னர் இதில் நடித்த நடிகர்கள் பலருக்கும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்கள் தொடர்ந்திருக்கின்றன. இப்போது பல் நடிகர்களும் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறி விட்டனர். இதையெல்லாம் தாண்டிப் படத்தின் இறுதியில் சிக்கெந்தர் சொல்லும் வார்த்தைகள்தான் காபூலிவூட்டைப் பார்ப்பதற்கு கலைஞர்களைக் குவிக்கின்றன. "நாங்கள் இப்போது வென்றிருக்கிறோம், தொடர்ந்தும் இந்த நிலை நீடிக்குமா என்பது தெரியாது. ஆனால், கலையைக் கலைஞர்கள் கையாளத் தொடங்கி விட்டார்கள். கலைஞர்கள் இனிப் பேசவும் தொடங்குவார்கள். அதுவே போதும்.

> காபூலிவூட்டைப் பார்க்க நேர்ந்தால் நாம் ஆப்கானிஸ்தானை. அதன் உள்ளிருக்கும் இயல்பு வாழ்க்கையைப் புரிந்துகொள்ள முடியும்.



# மரங்கள் பேசும்

மரங்கள்
உயிரற்றவை
என்று யார்
சொன்னது?

மரங்கள்
பேசுவதில்லை
என்று யார்
சொன்னது?

அவற்றுக்கும்
உண்டு
உயிர்
பாருங்கள்

அவற்றுக்கும்
உண்டு
மொழி
பேசுங்கள்

கார்த்திகையில்
பிரியமுடன்
பேசிடுமே
மரங்கள்

நேர்த்திசையில்
வேர்களுடன்
நடந்திடுமே
மரங்கள்

அள்ளி அள்ளி
பயன்களை
தந்திடுமே
மரங்கள்

மரணித்த
வேளையிலும்
ஆகிடுமே
உரங்கள்

ஆளுக்கொரு
மரம்
வீட்டினில்
நாட்டுங்கள்

நாளுக்கொரு
வளம்
நாட்டினில்
ஈட்டுங்கள்

- நிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமகாலத்தில் பெண்ணியக் கவிதைகள்

அனார்

1990 களில் இடம்பெற்ற முக்கிய அரசியல் சமூகத்தள மாற்றம், புலம்பெயர்தல், தமிழர்களின் போராட்டத்துக்கான ஆதரவுகளாகவும் கவிதைகள் தோன்றின. புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்தும் கிழக்கிலங்கையை மையப்படுத்தியும் சில பெண் கவிஞர்களும் மலையகப் பெண்ணெழுத்துக்கள் என்ற தளத்திலும் வடக்கிலிருந்த போராளிப் பெண்கள் எழுதிய கவிதைகள் என இன்னொரு வகையும் பல பிரிவுகளில் கவனிக்கத்தக்கனவாகப் பெண்கள் தம் கவிதைகளைப் பதிவு செய்தனர். உணர்வுத் தளத்தில் பெண் எனும் இருப்பு மேலோங்கியும் அவரவருக்கான வாழ்வு நிலைகள், கவிதைகளைத் தீர்மானிக்கின்ற வையாகவும் 90களின் பெண் கவிதைகள் அமைந்திருந்தன. சுமார் நூறுபேர்களைத் தாண்டிய பெண் கவிஞர்களின் அனைத்துக் கவிதைகள் பற்றியும் ஒரு கட்டுரையில் எழுதிவிட முடியாது. இங்கு எனது கட்டுரையானது ஆய்வாளரின் பார்வையில் அல்லாமல் சகபெண் படைப்பாளிகள் என்ற அடிப்படையில் சில எல்லைகளுக்குட்பட்டு எழுதப்பட்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். இந்தவகையில் 90களில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க பெண் கவிஞர்கள் சிலருடைய கவிதைகளையும் அவதானிக்கலாம். புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் ஆழியாளின் 'உரத்துப் பேச' எனும் தொகுப்புக் காத்திரமான பெண் மொழியுடன் வெளிவந்தது. அந்தத் தொகுப்பிலிருந்த 'தேவைகள்' என்ற கவிதையில் ஒரு பகுதி,

'ஒற்றைக்கவள உணவுக்காய்
ஒரு பிஞ்சு உயிர் நான்கு ஐந்தாய்ப் பிரிந்து
பேயாய்த் திரியும் அவலம்
தெரியுமா உனக்கு?

கோணிப்பையால் உடல்மூடி
வீதிக் குளிரில் முடங்கி நடுங்கும்
எம் குட்டி இளவரசிகளின் சின்னக்கைகளை
அம்மா நீ அறிவாயா?

தளிர்த்துக் கனியுமுன் வாடிக்கை ஆள் தேடி
தெருவெங்கும் அலையும்
என் பத்துவயதுத் தங்கைகளின்
வெம்பிய உடலங்கள் பற்றி
உனக்கேதும் தெரியுமா?

(தேவைகள் ஆழியாள்)

ஆழியாளின் மற்றொரு கவிதை 'மன்னம்பேரி கள்'. பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களைக் குறித்து எழுதப்பட்ட கவிதை இது. இலங்கைக் கவிதை வரலாற்றில் குறிப்பாகப் பெண்ணிய அடையாளத்துடன் வெளிவந்த கவிதைகளுள் தனித்துவமானது. கோணேஸ்வரிகளுக்கும் மன்னம்பேரிகளுக்கும் நிகழ்ந்த கொடூரம் ஒவ்வொரு பெண்ணுடலின் மீதும் ஆழத் திணிக்கப்படும் அன்றாட நிகழ்வாக உருப்பெற்றுள்ளதை இந்தக் கவிதை குறிப்பிடுகின்றது.

அதன் கண்கள்
நான் அறியாததோர்
மிருகத்தின் கண்களைப்
பறைசாற்றிற்று.
அவற்றின் பாலைத் தாகம்
அறியாப் பாயையும்
எனக்குள் உணர்த்திற்று

அழகி மன்னம்பேரிக்கும்
அவள் கோணேஸ்வரிக்கும்
புரிந்த வன்மொழியாகத்தான்
இது இருக்கும் என.
அவதியாய் எட்டிக் கடந்து போனேன்.
அன்றைய அலைச்சலும்
மனக்குமைச்சலும் கூடிய
தூக்கத்தின் இடையில்
நானும் அவர்களுக்குப் புரிந்த
அதே ஆழத்திணிக்கப்பட்ட
பாயைப் புரிந்துகொண்டேன்
அருகே கணவன்
மூச்சு ஆறிக்கிடக்கிறான்

இது அப்பாவிப் பெண்களின் அவலத்தைப் புடம் போட்ட சிறந்த கவிதை. இதனைப் போன்றதே வினோதினியின் 'முகமூடி செய்பவள்' எனும் கவிதைத்தொகுப்பு. இவர் தன்னுடைய காலத் தில், பெண்வாழ்வின் யதார்த்தத்தையும் மூடு பனியற்று துலங்கும் மொழியால் எழுதிவந்தவர். அவருடைய முகமூடி செய்பவள் கவிதையில்,

அவளது வீட்டின் சுவர்களெங்கும்
அவள் செய்யும் முகங்கள்.
தனது குருதியிலொரு துளி.
மூச்சின் ஒற்றைத் துணுக்கு.
மூப்புறுந் தசைத்திரள் சிறிதும் சேர்த்து முகங்கள்
செய்கிறாள்.
நடு நிசியில். பகலின் வெளிச்சத்தில்.
எனது ஊரில்.
எங்கோ ஓர் உயிர் இறக்கையிலும்
மற்றொன்று பிறக்கையிலும்
யாரோ ஒருவர் கொல்லப்படுகையில்
கேள்வி கேட்கும் உரிமை தொலைத்து
அவர்கள் தலைகள் தாழ்கையில்
அவள் முகங்கள் செய்கிறாள்.

ஒரு பெண்ணின் காதல்
மறுக்கப்படுகையில்
அவள் பலவந்தமாக இச்சிக்கப்படும்
பொழுதுகளில்
குழந்தைகள் பயந்து அழ மறக்கையில்
வெடிச்சத்தங்கள் பறவைகளின் கூடுகளை
உலுப்புகையில்
காரணமேதுமற்றுக் கடத்தப்பட்டவன்
தன் வாழ்வு பற்றி அச்சமுறுகையில்
வீடொன்று ஆளற்றுத் தனிக்கையில்
கிராமமொன்று கைவிடப்படுகையில்
அங்கே நாயொன்று
உணவின்றி அலைந்து உயிர்விடுங் கணத்தில்
பாலுந் தேனுங் குடிக்கும் எமது கடவுளர்
இல்லை எனத் திட்டப்படுகையில்
அவள் முகங்கள் செய்கிறாள்.
முகங்களின் மூச்சும்
மூடாத கண்களின் பார்வையும்
குழந்தைகளது என ஏமாந்து
அவள் உயிரூட்டும் முகங்கள் எப்படியோ
அவளது கனவுகளைக் களவாடி
விடுகின்றன அவ்வப்போது.

(தொடரும்)



## உலகம்...

பணக்காரனும் ஏழையும்

பணக்காரன்
பால் குடிக்கின்றான்
தண்ணீர்ப் போத்தலில்!

ஏழை
தண்ணீர் குடிக்கின்றான்
பால்ப் போத்தலில்!

-ஏதுர்நீவு, சபேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# குரல்

## சொற்களால் தீ மூட்டுதல்

வேலணையூர் தாஸ்

"இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம் ஏழை யராகி இனிமண்ணில் துஞ்சோம்..." இது பாரதியின் கவிதையொன்றின் இடைவரிகள்.

ஜனநாயக ரீதியான போராட்டங்கள் எமது மண்ணில் எப்போதும் ஓயாதவைகளாகிவிட்டன. இன்று வரைத் தமது உரிமைகளுக்காகவும், சமூக அநீதிகளுக்காகவும், மக்கள் வெளியில் இறங்கிப் போராடியவண்ணமே இருக்கின்றனர்.

இந்தியாவின் மெரீனாவில் ஏறுதழுவுதலுக்கு விதிக்கப்பட்ட நீதிமன்றத்தடையை நீக்கக் கோரி மக்கள் நடத்தியிருந்த போராட்டம் உலகையே வியந்து பார்க்க வைத்தது. ஆனால் அதைவிடவும் அவசியமான, இங்கே நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம், பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், கேப்பாபிலவு-பிலக்குடியிருப்புப் போராட்டம் போன்றவை ஏறுதழுவுதல் போராட்டத்தைப் போன்று பெருமளவுக்கு வெகுஜன ஆதரவைப் பெறவில்லை.

அரசியல் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகள், இத்தகைய போராட்டங்கள் அரச இயந்திரங்களால் நசுக்கப்படும்போது தமக்கென்ன ஆகுமோ என்ற அச்சம், கடந்தகால அனுபவங்களைக் கொண்டு இத்தகைய போராட்டங்கள் மீது ஏற்படுகின்ற நம்பிக்கையீனம் சார்ந்த மக்களது மனோநிலை என ஆதரவுகள் அதிகாரிக்காததற்குச் சில காரணங்கள் இருக்கலாம். மாணவர்கள், சமூக நல அமைப்புக்கள், தமிழ்ப் பற்றாளர்கள் எனப் பல துறை சார்ந்தோர் இதில் ஓரளவு பங்களிப்பைச் செய்து வருகிறார்கள். ஆனாலும் இலக்கியகாரர்களது பங்களிப்பு இத்தகைய போராட்டங்களில் அரிதாகவே காணப்படுகின்றது. போராட்டம் தொடர்பான கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்வதில் இலக்கியக்காரர்கள் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டியது வரலாற்றுக் கடமையல்லவா...?

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பாரதி, பாரதிதாசன் போன்றோரது கவிதைகள் ஏற்படுத்திய எழுச்சியையும், பாலஸ்தீனப் போராட்டத்தில் கவிஞர் மஹ்முத் தர்வீஸனுடைய கவிதைகளின் பங்களிப்பையும் குறைத்து மதிப்பிட முடியாது. அதேபோல் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்திருந்த ஈழப்போராட்டத்தின் வலுவுக்குப் புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன் போன்றோரின் கவிதைகள் பெரும் பங்களிப்புச் செய்தமையும் யாவரும் அறிந்ததே.

'இந்த மண் எங்களின் சொந்த மண்...' என்று ஆரம்பிக்கும் புதுவையின் வரிகளுக்கு எத்தனை சக்தி இருந்தது என்பதை எமது அனுபவத்தில் உணர்ந்தவர்கள் நாம். எனவே இல்க்கியக்காரர்கள் நேரடியாகப் போராட்டத்தில் பங்குபற்ற முடியாது விட்டாலும், தங்களது எழுத்துக்களாலான பங்களிப்பையாவது வழங்கவேண்டும். முகநூலிலும் பத்திரிகைகளிலும் சில நண்பர்கள் எழுதுகிறார்கள்தான். ஆனால், கவிஞர்கள் எழுத்தாளர்கள் மற்றும் இசைக்கலைஞர்களுடைய படைப்பு ரீதியான பங்களிப்பு என்பது குறிப்பிடப்படக் கூடிய அளவுக்கு இல்லாமல் அரிதாகவே உள்ளது. அண்மைய கேப்பாப்பிலவு போராட்டத்தின் வீரியத்தை முகநூலில் எழுத விரும்பிய நண்பர் ஒருவர், ஆனி 1996இல் பா. அகிலன் எழுதிய கவிதை ஒன்றைப் பதிவிட்டார். அதுவும் சிறந்த எடுத்துக்காட்டுடன் கூடிய அவருடைய பங்களிப்பே.

தாம் பங்களிப்பு நல்காதநிலையிலும், சில இலக்கியக்காரர்கள் நடைமுறை விடயங்களை உடனுக்குடன் எழுதித் தங்களின் பங்களிப்பை வழங்க முற்படும்வேளையிலும், அவர்களுக்கு முட்டுக்கட்டை இடக்கூடியவாறு செயற்படும் சக எழுத்தாளர்களும் இந்தச் சர்ந்தர்ப்பத்தில் முளைத்து விடுகின்றனர். 'அறைக்குள் பதுங்கியிருந்து எதையும் எழுதுவார்கள். என்றும், இவர்கள் எல்லாம் 'பருவகால' எழுத்தாளர்கள் என்றும், இவர்களுடைய கவிதைகள் பரப்புரைத்தன்மை பெற்றிருப்பதால் கவிதைகளே அல்ல' என்றும் 'மெத்தப் படித்த' சிலர் சொல்வார்கள். இது தான் இன்று இலக்கியகாரர்களுள் இருக்கும் நடைமுறைச் சிக்கல். இருந் தாலும், நண்பர்கள் சொல்வதைச் சொல்லட்டும் நீங்கள் எழுதுங்கள்! உங்கள் எழுத்துகளுக்குக் காலக் கடமையொன்றிருக்கின்றதல்லவா! சில சொற்கள் தீ போன்றவை; சிறுபொறி போதும் பெரும் நெருப்புக்கு.

# மருவிய காதல்...





காதல் தூதுக்களும்
காதல் கடிதங்களும்
இரவுச் சந்திப்புக்களும்
மருவிவிட்ட யுகம் இது,

இணையக் காதல்கள்
மலர்ந்து தளைத்திட
நோக்கிச் செல்லும் தலைமுறை இன்று
தொலைத்தொடர்புடன்
தொலைந்த இதயங்கள்
இணைய வலையில்
சிக்கிச் சின்னாபின்னமாகி
சின்னஞ்சிறுசுகள் மனம்
சிதறிவிட்ட காலமிது

- அபி



# "சிவ சிவா..."

பொன். நகுலன்

'அந்த'வயதுப் புதினங்களில் ஒன்று அது. ஆச்சரியப்படாதீர்கள்! அது எனது சுட்டிப்பருவம். அல்லோலகல்லோலப்பட்டு அவசர அவசரமாக வெளிக்கிடுவது அப்போது எனது இயல்புங்கூட. அதுவும் கோயில் குளங்களுக்குப் போவதென்றால் அன்று இன்னும் கொஞ்சம் குதூகலிப்புடன் இருப்பேன். இன்றும் அப்படித்தான். எல்லோரும் எப்போதடா விடியும் என்று காத்திருக்கிறார்கள். ஆனால் நானே இன்று எப்போது இருளும் என்றேங்கிக் காத்திருக்கிறேன். மறுபடியும் ஆச்சரியம் உங்களை ஆட்கொண்டிருக்குமே? பின்னேரம் ஐந்து மணி. சிங்கர் வீட்டுப்படலைக்க ஆமைக்கார் ஒன்று ஸ்பீக்கர் கட்டி ஆயத்தமாக நிற்கின்றது.

'இண்டைக்குச் சிவராத்திரியை முன்னிட்டு முருகன் கோயிலில இரவு ஆறு நேரப் பூசையும் முன்றிலில நாடகமும்' ஊரேல்லாம் ஊர்ந்து சென்று அறிவித்து ஓய்கின்றது அந்தக் கார்.

ஆனாலும் ஊருக்கு வருடம்தோறும் இது வழமையான ஒன்று தான், யாவரும் அறிந்தது தான். சிவராத்திரி என்றால், முருகன் கோயில் முன்றிலில் பிச்சையப்பாவின்ர மேளக்கச்சேரியும் அத்துடன் சின்னமணியின்ர வில்லுப்பாட்டும் அண்டைக்குப் பெரும் எழுச்சி கொள்ளும். அங்கு மேடையில் அரங்கேறும் மேளக் கச்சேரியைத் தொடர்ந்து, வில்லுப்பாட்டு நிகழும். இண்டைக்கு இவையோட பட்டிமன்றமும், அதைத் தொடர்ந்து உள்ளூர் நாடகக் காரரின்ர நாடகங்களும் களை கட்டப்போகுது. ஆமைக் காரில் விவரமாய் அறிவிச்சது. ஊர்ச்சனத்தை இன்னும் கொஞ்சம் உற்சாகமாய் ஒன்றுகூடச் செய்தது. மின் விளக்கு ஒன்று மேடையை ஒட்டி வெளிச்சம் தரச் சுற்றிலும் பெற்றோல் மாக்ஸ் அரிக்கேன் விளக்குகளுமாய் ஒன்று திரண்டனர்; ஊரவர்கள். நான் எனது தரப்பினரோடு மேடைக்கு முன் வரிசையில். மேடைக்கு மட்டும் ஒரு மின் விளக்கு. இப்போது மேளக் கச்சேரி, இரு மேளகாரர்களின் ஒப்புக்குச் சப்புடன் நிறைவுக்கு வந்தது. அது ஓய்ந்ததும் அடுத்து, அங்கே கம்பீரமாய்த் தம்மைப் புடம்போட்டுக் காட்டி நிற்கக் களை கட்டிற்றுச் சின்னமணிக்குழுவினரின் வில்லுப்பாட்டு.

'தந்தணத் தோம் என்று சொல்லியே... வில்லிசை பாட, வந்தருள்வாய் கணபதியே...' சத்தமும் சந்தமும் சரிவரப் பொருந்தி காதுக்கு ஒருவித இனிமை!

ஆஹா...! என்ன ஒரு எள்ளல் நடை! பாட்டும் கூத்தும் இனிமை தரவே மனம் லயித்துக் கொள்கின்றது. உறக்கம் விழிகளை அணைக்கின்றது. இடையிடையே சாமப்பூசைகளுக்கு ஓடிச்சென்று புக்கை, பஞ்சாமிர்தத்தை வாங்கவேண்டும் அதற்காக விழியை மூட விடாமல் தடுத்துக் கொள்கின்றது மனம். பூசை நிறைவில் வழங்கும் பலவற்றையும் உண்டு; பின்னர் அமளிதுமளியாக ஓடி வந்து மேடைக்கு முன்பாக அந்த மணல் பரப்பில் குந்திக் கொள்வதுதான் என் தரவளிச் சிறுசுகளின் வேலை. வில்லிசைப்பாட்டும் இரண்டு சாமப் பூசைகளும் இப்போது நிறைவு. வயிறும் சர்க்கரை மோதகத்தையும் பிரசாதங்களையும் உண்டு நிரம்பி விட்டது.

இனிமை ததும்பத் தூக்கம் அழைக்கின்றது. அயர்ந்து, விழித்து, அயர்ந்து, விழித்துத் தூக்கத்துடன் போராடித் தோற்று விடுகிறேன். இப்போது மேடையில் பட்டிமன்றமும், நாடகமும் எனக்கோ அரைச் சாமம்...! எல்லாம் முடிவுறவும், கச்சான் கோதுகளுக்கும் கடதாசிப் பைகளுக்கும் நடுவில் நான் மட்டும் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருக்கின்றேன். முருகன் கோயில் முன்றிலில். சிவ சிவா... இண்டைக்குப் பள்ளிக்கூடம் வேறு போகவேணும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைச்சுவைத் தொடர்

# ஓவசி...!

மிருசுவில்
தமிழ்தாசன்

3



**சே!** இத்தனை நேரமும் சுழன்றோடிச் சுழன்றோடி....! எல்லாமே பண்டார வெடிகள் போலாகி விட்டமையால் வாத்திக்கு ஏராளமான மனவருத்தம். அவருக்கு மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கியது. அத்தனை களை! பின்னே இருக்காதா! சுமார் பத்து நிமிடங்களாக இந்தப் பலவீனப்பட்ட கிழட்டுத்தேகத்தை வைத்துக் கொண்டு இந்த ஓட்டம் ஓடினால் யாருக்குத் தான் களைப்பு வராது. அளவுக் கதிகமாகக் களைத்து இருதயம் நின்று தொலைத்துக் கிலைத்து விட்டால்...! கடவுளே! சொல்ல முடி யாது. உண்மையைச் சொன் னால் என்ன வாத்தியாருக்கு இப்போது ஒரு ஓய்வு தேவைப் பட்டது. அப்படியென்றால்... ஒருஇடைவேளை...

அதாவது ஒருபோர் நிறுத்தம் செய்ய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. இப்போது ஐ.எஸ்.சிரியப்படைகளின் போர்நிறுத்தம் போன்று ஒரு புரிந்துணர்வைக் கொண்ட தாக்குதல் நிறுத்தம் நடைமுறைப்படுத் தப்பட்டிருந்தது. இருதரப்பினருக்கும் மகிழ்ச்சிதான். பொய்சொல்லக் கூடாது. சிங்கார வேலனுக்கும் எல்லாம் அலுத்துப் போய்விட்டது. எத்தனைநேரமாகத்தான் சும்மா சுழன்றோடிக் கொண்டிருப்பது. சுழன்று சுழன்று சூடுமிதிக்கும் நடையன் மாடாகச் சுற்றியதால் அவனுக்கும் தலைசுற்றியது. ஆனால் ஒன்று. இந்தப்போர் நிறுத்தத்தை முழுமையாக நம்பவும் முடியாது. இது தந்திர நடவடிக்கையாகவுமிருக்கலாம். சிங்காரவேலன் அசந்து போயிருக்கும் வேளை பார்த்துத் திடீரென்று தாக்குதல் முயற்சியை மீண்டும் ஆரம்பித்து எதிரியை முறியடிக்கும் வாத்தி யாரின் திட்டமாகவுமிருக்கலாம். இங்கேயென்ன மரபுப்போரா நடக்கின்றது. எதற்கும் சிங்கார வேலன் 'அலேட்டாக' வேயிருந்தான். இப்போது வாத்தியார் சிங்காரவேலன் மீது ஒரு மிறாள் பார்வையைப் பதியவிட்டார். இது நல்ல அறிகுறியல்ல. சிங்கார வேலன் நினைத்தது ஓரளவுக்குச் சரியாகவேயிருந்தது. இரண்டாம் கட்டத் தாக்குதலுக்கு வாத்தியார் போர் முரசு முழங்கத் தொடங்கிவிட்டார் போன்றதொரு பிரமை அவனுக்கு. ஆம்! நினைத்து முடிப்பதற்குள் வாத்தியார் என்ன நினைத்தாரோ மீண்டும் இரண்டாம் சுற்றோட்ட நிகழ்வு ஆரம்பமாகிவிட்டது. வாத்தியார் போதுமானளவுக்கு ஓய்வெடுத்து விட்டார் போலும் இத்தனை நேரமும் அடித்த அடிகள் எல்லாமே அவுட் என்பதை நினைத்த வருக்கு ஆக்ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. அட! என்ன அதிசயம். சிங்கார வேலன் வாத்தியாரின் மேசை மீது முகம் குப்புறவிழுந்து விட்டான். இது ஒன்றும் பொய்யல்ல. சுத்தமான உண்மையே! வாத்தியார் பதுங்கிப்பாய்ந்து வேலையைக் காட்டி விட்டாரோ என்னவோ அவருடைய இத்தனை அவுட்களும் மறக்கும் படியாக ஒரு அருமையான சிக்சர் வாத்தி யாருக்கு. சுமார் இருபது நிமிடத் தாக்குதல் முயற்சி யின் பின்னர் வாத்தியாருக்குப் பெரிய வெற்றி. முயற்சி திருவினையாக்கும் என வள்ளு வர் என்ன சும்மாவா சொல்லியிருப்பார்! மான சீகமாக வள்ளுவருக்கு ஒரு நன்றி சொன்னார் வாத்தியார். பார்வையாளப்பெருமக்களின் கூக்குரல் களும் கரகோசங்களும் வகுப்பறை முகட்டின் மீது முட்டி மோதின.

"ஐயையோ! இதென்ன இது! சிங்கார வேலனின் மூக்கு உடைந்து, சிதைந்து, சின்னாபின்னப்பட்டுச் சிரித்துக் கொண்டிருந்தது. பொய்மூக்குடைந்து.... இல்லையில்லை.... உடைத்து நொறுக்கப்பட்டு விட்டது. அதிலிருந்து சிவப்புச் சமாச்சாரம் வழிந்தோடி வந்து அவனின் சேர்ட்டையும் நனைத் துக் கொண்டிருந்தது. ஆனால் ஒன்று வாத்தியார் நினைக்கக் கூடும். சிங்கார வேலுவின் மூக்கை, தான் உடைத்து விட்டதாக ஆனால் கால் தடக்கிச் சிங்காரவேலன் மேசைமீது வீழ்ந்ததையும் மூக்குடைந் ததையும் யாரறிவர். நடந்தது அதுதான்.வாத்தி யார் ஒரு கதாநாயகனின் வெற்றிப் பெருமிதத்துடன் கம்பீர மாகப் போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"எல்லாம் போதும். இப்பிடி யொரு வாத்தியாரும் கண்டறியாத படிப்பும் இனிமேல் எனக்குத் தேவையில்லை. கிடக்கிற கொப்பி புத்தங்களைப் பழைய பேப்பர் கடை யிலை குடுத்திட்டு ஏதேன் கூலி வேலையைச் செய்து பிழைக்க வேண்டி யதுதான்." படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டு' ரூட்டை' மாற்றி றோட்டுக்குப் போகின் றான் சிங்கார வேலன்.

*(தொடரும்)*

## உறவுகள்

மனித வாழ்வு ஒன்றும்
மழைக்கால மேகம் அல்ல
பல உறவுகள் இணைந்தது
கனவுகள் நிறைந்தது

விட்டு விட்டு உறவாடும்
மனித மனங்கள்
தொட்டு தொட்டு நனைந்திடும்
நீண்ட நினைவுகள்
விடுகதையாய் நம் வாழ்வு
விடை தேடி அலைகிறது

துன்பத்தில் துவழ்கிறது
இன்பத்தில் திளைக்கிறது
இருவரிக் கவிதையாய்
இறக்கும் மட்டும் வாழ்கிறது

புரிந்திட முடியா உறவுகள்
புது இன்பம் தந்திடும்
புன்னகை ஒன்றைப் பரிசாக
இறுதி வரை வழங்கிடும்
முடிந்திடும் வேளையிலும்
முத்தாய்ப்பு வைத்திடும்

தாய் தந்தை ஓர் உறவு
தம் நட்பாய் வருவது
இன்னோர் உறவு
நூல் வேலிப் பிணைப்புகளாய்
இவை நீண்டபடி போகின்றன
புரியவில்லை யாயினும்
பிணைத்திட வைக்கின்றன

இணையங்கள் கண்ட பின்னும்
இன்று மட்டும் தொடர்கிறது
பக்கமென்ன தொலைவென்ன
பார்க்காத தூரமென்ன
பார்த்திடச் செய்கிறது
பேசிட வைக்கின்றது

ஓர் இரத்த உறவும்
ஓர்மம் செய்கிறது
நயவஞ்சக பேச்சுக்களால்
நாகரிகம் சொல்கிறது

உறவுகள் வேண்டுமெனில்
ஓர்மத்தை துறந்திடுங்கள்
இல்லையேல்
வாழ்வதையே மறந்திடுங்கள்

செல்வி பாலாஜினி



**காதலன் :** நம்ம காதலை மெதுவா எங்க வீட்டில் சொல்லிட்டேன்.

**காதலி :** அவங்க என்ன சொன்னாங்க, ஏற்றுக் கொண் டார்களா?

**காதலன் :** மெதுவா சொன்னதால அவங்களுக்கு கேட்கலை...

**காதலி :** !!!!



**நோயாளி :** டாக்டர், வயித்து வலி என்னால பொறுக்க முடியல...

**டாக்டர் :** வயிறு வலிக்கும்போது, நீங்க ஏன் பொறுக்கப் போறீங்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயலாமையே இல்லை முயலாமையே உண்மை

எதுவும் சாத்தியம், எதுவும் என்னால் முடியும். இப்படி எண்ணுபவர்களுக்கே இவ்வுலகம் சொந்தம். இப்படி எண்ணுபவர்களுக்கே இன்பம் நிலைக்கும். இப்படி எண்ணுபவர்களுக்கே வாழ்க்கையில் வெற்றி சாத்தியம். இந்த உலகத்தைச் சொந்தமாக்கி, இன்பத்தை நிரந்தரமாக்கி, வெற்றியைச் சாத்தியமாக்கி– பிறந்த பயனை அடைந்திட ஒவ்வொரு பெண்ணும் துணிய வேண்டும்.

பெண்களாகப் பிறந்துவிட்டோமே என வாழ்நாள் முழுதும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் பெண்கள்தான் எம்மத்தியில் அதிகம். எம்மாலும் சாதிக்க முடியும், எதையும் சாத்தியமாக்க முடியும் என்று சிந்திப்போர் அரிது. நாங்கள் பெண்கள், உடலால் வலிமை அற்றவர்கள் என சதா மனக் குளத்தைக் கலக்கிய வண்ணம் இருக்கும் இவர்கள், தமக்குப் பிறக்கும் பெண் பிள்ளைகளையும் அவ்வாறே சிந்திக்கவும் செயற்படவும் வைக்கின்றனர்.

இந்த அச்சத்தை முதலில் தூக்கி எறியுங்கள். புதிய எண்ணங்கள் மனதில் குடிகொள்ள, வழி விடுங்கள்.

அடிமைப்பட்ட காலம் போதும். உங்கள் விதியை மாற்றுங்கள். வாழ்வில் தீபம் ஏற்றுங்கள். ஆண்களுக்குள்ள அத்தனை உரிமைகளும் உங்களுக்கும் உண்டென வாதிடுங்கள். தடைகள் ஆயிரம் குறுக்கிடினும் எதிர்த்து நின்று மோதிடுங்கள். இந்த உலகில், இயலாமை என்பதே இல்லை.

நாம் நினைத்தது கிடைக்காமைக்கு, முயலாமை என்பதே உண்மை. நீ என்னவாக வாழ்க்கையில் வரவேண்டும் என்று ஆசைப்படுகின்றாயோ– கனவு காண்கின்றாயோ– அவ்வாறே ஆகுவதற்கு இன்றே தயாராகு. மனதளவில் உஷாராகு. உன் விதியை, உன் விரல் கொண்டு எழுது.

அடுக்களை மந்திரம் பெண்ணுக்குப் பழகிப் போன ஒன்று. அதுவே போதுமென்று நினைப்பதுதான் தவறு. அவனியெங்கும் பயணியுங்கள். அனுபவங்களை ஆராதியுங்கள்.

அண்டவெளிக்கும் செல்லுங்கள். அங்கேயும் ஆராயுங்கள். ஆண்களுக் குச் சமமாகத் தடம் பதித்த விண்வெளி நங்கையரைப் பின்பற்றுங்கள். அவர்களுடன் இணைந்து செயலாற்றுங்கள். பெண் என்றால், வல்லமை. பெண் என்றால், மாசக்தி என்பதை அகிலத்துக்கு உணர்த் துங்கள்.

அதற்கு–

*நீ மாற வேண்டும்*
*நீ மாறத்தான் வேண்டும்*
*அசாத்தியங்களை*
*சாத்தியமாக்கும் வரை*
*நீ மாறியே ஆகவேண்டும்.*



உன்னால் முடியும் பெண்ணே...



# ஆண்களிடம் பெண்களுக்கு பிடித்தவை...

1.பெண்கள் ஆண்களிடம் முதலில் எதிர்பார்ப்பது, மரியாதையைத்தான். தம்மை மரியாதையாக நடத்தும் ஆண்களை அவர்கள் அதிகம் நேசிக்கின்றனர்.

2.சமயத்திற்கு ஏற்றபடி சாமர்த்தியமாக நடந்துகொள்ளும் ஆண்களைப் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும்.

3.பெண்ணுக்கான உரிமையைப் பெற்றுத் தருபவராக இல்லாவிட்டாலும் பெண்ணைப் பெண்ணாக நடத்தும் பெருந்தன்மை கொண்டவராக ஆண் இருக்க வேண்டும் என்று பெண்கள் விரும்புகிறார்கள்.

4.ஆண்கள் செய்யும் எந்த வேலையையும் செய்யும் அளவுக்குப் பெண்களுக்கும் உடல்பலம் மனோபலம் இருக்கிறது என்பதைப் புரிந்து நடந்து கொள்பவராக இருக்க வேண்டும் என்று பெண்கள் எதிர்பார்க்கிறார்கள்.

5.தம்மீது நம்பிக்கைத் தன்மை கொண்டவராக ஆண் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

6.மதுபானம் அருந்தாத ஆண்களைப் பெண்கள் அதிகம் விரும்புகின்றனர்.

7. கலகலப்பாக இருக்கும் ஆண்களையும், பெண்களின் கலகலப்பான- இயல்பான உணர்வை ஏற்றுக்கொள்ளும் ஆண்களையும் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும்.

# தனிமையைத் தவிர்க்க...



- எதிர்மறையான எண்ணங்கள் தோன்றும்போது உடனடியாக அவற்றைத் தவிர்த்துவிட்டு, நேர்மறையான எண்ணங்களைக் கொண்டு வருவதன் மூலம் தாழ்வு மனப்பான்மையைத் தவிடு பொடியாக்கலாம்.
- பேசும்போது பிறரின் கண்களைப் பார்த்துப் பேசுவதன் (Eye Contact) மூலம் தயக்கங்களைத் தவிர்த்து, உறவுகளை மேம்படுத்தி, தனிமையைத் துரத்த முடியும்.
- மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்ப்பதைத் தவிர்த்து விடுங்கள், அவர்களின் குறைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனப் பான்மையை வளர்த்துக்கொள்ளுங்கள்.
- தனிமை துரத்தும்போது, சில மனப்பயிற்சிகளில் ஈடுபடலாம். நீங்கள் எதிர்பார்ப்பவற்றை மனக் காட்சியாக (கற்பனை) உருவாக்கிப் பாருங்கள். நல்ல பயன் தரும்.
- நாமெல்லாம் சமூக விலங்குகள். எனவே, சமூகத்துடனான தொடர்பை மேம்படுத்திக்கொள்ள சமூக சேவை, சமூகக் காரியங்கள் மற்றும் சமூகக் குழுக்களுடன் இணைந்து செயற்படுவது ஆகியவற்றில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.
- தினமும் உங்களுக்காக சில மணி நேரங்களை ஒதுக்குங்கள். அது உங்களுக்கு நெருக்கமானவர்களுடன் இருப்பதாக இருக்கட்டும். வீட்டில் உள்ளவர்களுடன் பயனுள்ள வழியில் அந்த நேரத்தைச் செலவழியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலையில் எழுந்தால் அழகு பெருகும்



பெண்கள் அதிகாலையில் தூக்கத்தை விட்டு எழுந்தால், அழகு பெருகும் என்று ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

லண்டன் ரோஹம்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் பெண்களின் உடல்நிலை மற்றும் தூங்கும் பழக்கவழக்கங்கள் குறித்த ஆய்வொன்றை அண்மையில் மேற்கொண்டனர். தூக்கத்திலிருந்து அதிகாலையில் எழுந்திருப்பவர்கள், உடல் எடை குறைந்து ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று அந்த ஆய்வின் முடிவில் தெரியவந்துள்ளது.

தூக்கத்தில் இருந்து சராசரியாக காலை 5.58 மணிக்கு எழுந்திருக்கும் பெண்கள் மற்றும் காலை 8.54 மணி வரை தூங்கிய பிறகு எழுந்திருப்பவர்களின் நடவடிக்கை, உடல்நிலை பற்றி ஆராயப்பட்டது. அதில், காலையில் நேரம் கழித்து எழுந்திருக்கும் பெண்களை விட, விடியற்காலை கண் விழித்து எழுபவர்கள் உற்சாகமாகக் காணப்படுவது தெரியவந்தது. அத்துடன், அவர்களது உடல் எடை குன்றந்து ஆரோக்கியமாக இருந்தனர். தோல் சுருக்கமின்றி இளமையாகக் காணப்பட்டனர். உடல்வாகும் அழகாகத் தோற்றமளித்தது.

# மன அழுத்தத்தைக் குறைக்கும் வழி முறைகள்...



மாதுளம்பழச் சாற்றை வெள்ளைச் சர்க்கரை, ஐஸ் துண்டுகள் சேர்க்காமல் தினசரி அருந்தலாம். இதில் இருக்கும் நிறமிச் சத்து மன இறுக்கத்தைக் குறைக்க உதவும்.

மூளையில் சுரக்கும் செரட்டோனின் சத்தைச் சீராக்கும் தன்மை கொண்டது வாழைப்பழம். இந்தச் சத்து குறைவினாலும், சீரற்ற நிலையிலும்தான் பல்வேறு உளவியல் நோய்கள் வருகின்றன. வாழைப்பழம் மன அழுத்தத்துக்கு நல்லது.


பதற்றமும் கற்பனைகளும் நிறைந்த இரவுத் தூக்கத்தில் உழல்பவர்கள், ஒரு சிட்டிகை ஜாதிக்காய்த் தூளை பாலில் சேர்த்து அருந்திவிட்டு உறங்கச் செல்லலாம். நல்ல பயன் கிடைக்கும்.

மனஅழுத்தம் உள்ளவர்கள் தினமும் சீரகத் தண்ணீர் அல்லது வெட்டிவேர் போட்ட மண்பானைத் தண்ணீரை அருந்துவது நல்லது.

தினசரி இருமுறை குளிப்பது அன்றாட அழுக்கோடு மன அழுத்தத்தையும் நீக்கும்.



# நரை முடியைத் தடுக்க...



- பாலில் புரதம், இரும்புச்சத்து, கல்சியம், பயோட்டின் (Biotin), விற்றமின் டி நிறைந்திருக்கின்றன. எனவே, தினமும் இருவேளை பாலை தவறாமல் குடிக்கலாம்.
- ஒரு நாளைக்கு இரு முட்டைகளைச் சாப்பிடுவதன் மூலம் பயோட்டின் (Biotin) மற்றும் இரும்புச்சத்து போன்ற கேச வளர்ச்சியைத் தூண்டும் சத்துக்களை எளிதில் பெறலாம்.
- வஞ்சரம் மீனில் உள்ள ஒமேகா-3 (Omegad3 Fatty Acid) முடியின் கருமை நிறத்தைப் பராமரிக்க உதவும்.
- உயிர்ச் சத்துக்கள் நிரம்பிய பசளிக்கீரை, பொன்னாங்கண்ணிக்கீரை, கரிசலாங்கண்ணிக்கீரை போன்ற கீரை வகைகளும் கூந்தல் பராமரிப்புக்குச் சிறந்தவை.

# பூசணி அடை

## தேவையான பொருள்கள்:

பூசணிக்காய் - 2 துண்டு
கடலைப்பருப்பு - 200 கிராம்
பச்சரிசி - 200 கிராம்
தேங்காய் - 1
மிளகு, சீரகம்- 1 தேக்கரண்டி
செத்தல் மிளகாய் - 6
எண்ணெய்- 50 மி.லி உப்பு
சுவைக்கேற்ப மல்லி,
கறிவேப்பிலை - சிறிதளவு

## செய்முறை:

பூசணிக்காயை சுத்தம் செய்து சின்ன துண்டுகளாக்கிக் கொள்ளவும். அரிசி, கடலைப்பருப்பை ஒருமணி நேரம் ஊறவைத்து கழுவிக் கொள்ளவும். தேங்காயை துருவி வைக்கவும். இரும்புச் சட்டியை அடுப்பில் வைத்து சூடேற்றி, அதில் பூசணி துண்டுகளை போட்டு வதக்கவும். (எண்ணெய் விடக்கூடாது. வெறும் இரும்புச் சட்டியில் வதக்கவும்) நன்கு நீர் வற்றியதும் எடுத்து ஆறவிடவும். பின்பு ஊறிய கடலைப்பருப்பு, பூசணித் துண்டுகள், தேங்காய்பூ, செத்தல் மிளகாய், மிளகு சீரகம் அனைத்தையும் ஒன்றாய் பசுந்தாய் கெட்டியாய் அரைக்கவும். பின்பு தேவையான உப்பு, மல்லி கறிவேப்பிலை சேர்த்து கலந்துவிடவும். அடைமாவு பக்குவத்தில் இல்லையென்றால் சிறிது தண்ணீர் சேர்த்துக் கொள்ளலாம். பின்பு தோசை கல்லில் எண்ணெய் தடவி அடைகளாக வார்க்கவும். சுற்றிலும் எண்ணெய் விட்டு மொரமொர வென எடுக்கவும். புதினா சட்னியுடன் மிக நன்றாக இருக்கும். பூசணிக்காயை நீர் வற்றி வதக்கியதாலும், மிளகு சேர்த்திருப்பதாலும் அனைவரும் சாப்பிடலாம், சளி பிடிக்காது.



# நம் ஆரோக்கியத்துக்கு நாமே செய்யும் தவறுகள்



1. புகைபிடித்தல் மது அருந்துதல்
2. பல் துலக்காமல் தூங்குதல்
3. வேகமாக உண்ணுதல்
4. காலை உணவைத் தவிர்ப்பது
5. உடற்பயிற்சியைத் தவிர்ப்பது
6. நேரம்கெட்ட நேரத்தில் தூங்குவது
7. தொலைக்காட்சியில் மூழ்குவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிங்கம் III

## S3

இந்தியா - விசாகப்பட்டினத்தின் பொலிஸ் ஆணையாளராக இருந்த ஜெயப் பிரகாஷ் கொடூரமாகக் கொல்லப்படுகிறார். கொலையாளிகளைப் பிடிக்க முடியாததால் அரசுக்கு நெருக்கடி உருவாகிறது. இதனால் ஆந்திர உள்துறை அமைச்சரின் அழைப்பை ஏற்று விசாகப்பட்டினம் செல்லும் துரைசிங்கம் (சூரியா), அங்கு சி.பி.ஐ. விசாரணை அதிகாரியாகப் பொறுப் பேற்கிறார். பொலிஸ் ஆணையாளர் கொலைச் சம்பவத்தில், உள்ளூர்க் கொலையாளிகளைப் பிடிக்கச் சென்றவருக்குப் பன்னாட்டு அளவில் இயங்கும் பெரிய கொலையாளி ஒருவன் சிக்குகின்றான். அந்தக் கொலையாளி யார்? சிங்கம் அவனை வேட்டையாடியதா? இல்லையா? என்பது தான் 'சிங்கம் 3'.

இயக்குநர் ஹரி - சூரியா கூட்டணியின் தயாரிப்பாக மாறியிருக்கும் சிங்கம் வரிசைப் படங்களில் இது மூன்றாவது. கடந்த 2படங்களினதும் தொடர்ச்சியாகவே இதன் திரைக் கதையும் அமைக்கப்பட்டிருக்கிறது. அனைத்து வணிக அம்சங்களுக்கும் இடமளித்து, விறுவிறுப்பாக நகர்ந்து செல்ல வேண்டும் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளும் ஹரி பாணி திரைக்கதையின் இயல்புகள் படம் முழுக்கப் பரவியிருக்கின்றன. யோசிக்கக்கூட இடைவெளி தராமல் அடுத்தடுத்து விறு விறுப்பாகச் சம்பவங்களை அமைத்து மிகவேகமாகக் கதையை நகர்த்திக்கொண்டு போகிறார் ஹரி.

ஸ்ருதி ஹாஸன், அனுஷ்கா, சூரி தொடர்பான காட்சிகள் சுவாரஸ்ய மின்றிப்போனாலும், அவற்றை ஈடுகட்டும் அளவுக்குத் திரைக்கதையில் திருப்பங்களும், சுவாரஸ்யங்களும் உள்ளன.

சூரியா, ஒரு கட்டத்தில் சி.பி.ஐ. பொறுப்பில் இருந்து வெளியேறி ஆந்திராப் பொலிஸாகப் பொறுப்பேற்றுத் தனது வேட்டையைத் தொடர்வது, விசாகப்பட்டினத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வில்லனைப் பிடிக்கச் சரியான தருணத்துக்காகப் பதுங்கிப் பாய்வது, கடல் கடந்து, வில்லனைத் தேடிச் சென்று, சூசகமாக மிரட்டிவிட்டு மின்னலென மறைவது, நிர்ப்பந்தங்களில் சிக்கும் போதெல்லாம் புத்திசாலித்தனமாகக் காய் நகர்த்துவது என நாயகனின் திறமையைச் சித்திரிப்பதில் இயக்குநர் வெற்றி கண்டிருக்கிறார். ஆனால், அதில் சிறிதளவைக்கூட நாயகிகளின் பாத்திரங்களுக்குக் காட்டவில்லை.

பத்திரிகையாளர் திவ்யா (ஸ்ருதி ஹாசன்) கதாபாத்திரத்தின் அறிமுகம், அதன் அணுகுமுறை, முடிவு ஆகியவை நாயகத் தன்மையைத் தாங்கிக் கொள்ளவும், வெறும் கவர்ச்சிக்கும்தான் பயன்பட்டிருக்கின்றது. முக்கிய கதைக்குள் வரும் ஸ்ருதியால் எந்தத் தாக்கமும் ஏற்படவில்லை. அனுஷ்கா கதாபாத்திரமும் வீணடிக்கப்பட்டிருக்கிறது. வில்லனைக் கொடூரமானவனாகக் காட்டி, அதன் அடிப்படையில் பொலிஸ் செய்யும் எந்த அத்துமீறலையும் சகஜப் படுத்திவிடும் தனது வழக்கத்தை இதிலும் கடைப் பிடித்திருக்கிறார் ஹரி. பெண்களுக்குக் கலாசார வகுப்பெடுக்கும் பழக்கத்தையும் தொடர்கிறார். 'கலாசாரம்' என்ற பெயரில் பெண்களுக்குக் கோடு போடும் இயக்குநர், சூரி சம்பந்தப்பட்ட நகைச்சுவைக் காட்சிகளில் அந்தக்கப்பாடுகளைக் கொண்டிருக்காமை கவலை தான். விசாகப்பட்டினத் தொடருந்து நிலையத்தில் இறங்கும்போதே ரவுடிகளைச் சாய்க்கும் சூரியாவின் கம்பீர உடல்மொழி, படத்தின் அனைத்துச் சண்டைகளிலும் கச்சிதமாகத் தொடர்கிறது. படம் முழுவதையும் அவரே தூக்கிச் சுமக்கிறார் என்பதோடு, கடைசிவரைத் தனது கதாபாத்திரத்துக்கு எந்த இடத்திலும் தொய்வு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற முனைப்புடன் உழைத்திருக்கிறார் என்பதும் புரிகிறது. சுறுசுறுப்பான உடல்மொழியோடு காட்சிக்குத் தேவையான அழுத்தங்களுடன் கூடிய தேர்ந்த வசன உச்சரிப்பும் அவரது பலம். இந்தப் படத்தில் வசன உச்சரிப்பில் இன்னும் கவர்ந்துவிடுகிறார்.


ஹரி படங்களில் கதைக்கு வெளியே நகைச்சுவை துருத்திக் கொண்டு நின்றாலும், ரசிக்கும்படியாக இருக்கும். இந்தப் படத்தில் சூரி, ரோபோ சங்கர் என இரு நகைச்சுவை நடிகர்கள் இருந்தும் அது எடுபடவில்லை.

விசாகப்பட்டினம், ஆஸ்திரேலியா, தூத்துக்குடி எனப் பயணித்திருக்கும் ப்ரியனின் கமரா அகலக் கோணங்களால் பிரம்மாண்டம் காட்டி விடுகிறது. ஒளிப்பதிவிலும், படத் தொகுப்பிலும் இருக்கும் விறுவிறுப்பு, ஹாரிஸ் ஜெயராஜின் இசையமைப்பில் இல்லை. பின்னணி இசை பல இடங்களில் தொடர்பற்று ஒலிக்கிறது. விசாகப்பட்டினம் பாரவூர்திகளின் சித்திரிப்புக்கள் , கடற்கரையில் ஆணையாளர் அலுவலகம், ஆஸ்திரேலிய கார்ப் பரேட் அலுவலகம் எனப் படம் முழுவதும் கலை இயக்குநர் கே.கதிரின் ராஜ்ஜியம் தொடர்கிறது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு கனல் கண்ணனின் சண்டை, துரத்தல் காட்சிகள் சூரியா ரசிகர்களுக்கு முழுமையான அக்ஷன்விருந்தை அளிக்கின்றன. பார்த்த சிங்கத்தையே சலிப்பு இல்லாமல்பார்க்கவைத்த வகையில், இயக்குநருக்கு வெற்றி!



சினிமா



# புத்தருக்கு அவமானம்

போரினைத் தொடுத்தாய்
தனி நாட்டைத் தடுத்தாய்.
அரசியல் கைதியென
அப்பாவிகளைச்
சிறையிலே அடைத்தாய்.

பௌத்தத்தை இழிவாக்கும்
பிக்குகளைத் தருவித்தாய்.
ஆள்களைக் கடத்தியே - நாம்
ஆளப்படும் இனம்
என்றுணர்த்தினாய்.
நீயாய்க் கடத்தினாய்; தமிழர் நாம்
நாயாய் அலைந்தனர்.
எமது நிலத்தில் நீ வசித்து
அது எமக்கில்லை என்கிறாய்.

எமது நிலத்தில்
நீயிருந்து எங்களை
எங்கிருந்தோ வந்தோர் என்கிறாய்
உரிமை கேட்டுப் போராடினும்
பயங்கரவாதிகள் பட்டம்
தந்தாய்.
காவு கொண்டு உறவுகளைக்
காணாமல் ஆக்கினாய்
தட்டிக் கேட்டவனை - நீ
சுட்டுத் தள்ளினாய்.
வெறி பிடித்த உன்னினத்தில்
என்னினம் காணாமற் போனது.
இப்போது பதில் சொல்லு!
உன் போதனைகள் இப்போது
யாருக்குத் தேவை?

*- நாவண்ணா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னபூரணி அம்மாவுக்கு ஆறு பிள்ளைகள் மூன்று ஆண்கள் மூன்று பெண்கள். இரண்டு பேர் கனடாவில், ஒருவர் நோர்வே, மற்றவர் சுவிஸ், கடைசியாய்ப் போன இரண்டு பேரும் ஆஸ்திரேலியா. ஆறுபிள்ளைகளும் அவர்களது வழித்தேடியவர்களும் வெளிநாடாக இருந்த படியால் அன்னபூரணி அம்மாவீடு செழிப்பைக்காட்டி நின்றது.

# எல்லாம் வல்ல பரம்பொருளே!

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

திருமதி. அன்னபூரணி அருணாச்சலம் அன்று தான் அதனை உணர்ந்தார். அப்போது மூசிப் பெய்யும் பின்னேரப் பனியின் குளிர் அவருக்கு உவப்பாக இருக்கவில்லை.

பிழைத்துப்போன எல்லாவற்றுடன் காலநிலையும் பொய்த்து மாலை ஐந்து மணிக்கே ஒருவகைக் குளிர் வந்து உடலைக் கௌவிக் கொள்கிறது.

உள்ளூருக்கு இம்முறை வருடாந்த விசிட் அடித்த மூத்த மகள் சந்திரவதனாதான் முத்துமாரி அம்மன் கோயிலுக்குப்போய் வர அழைத்தாள். ஐந்து மணிப் பூசைக்குப் போக அவள் நாலு மணிக்கே ஆயத்தமாகுமாறும் கேட்டு இருந்தாள்.

ஐந்து மணிப் பூசைக்கு என்று போனாலும் பூசைமுடிய கோயிலுக்கு வரும் இனசனத்தோடு கதைச்சு வெளிக்கிட ஆறு ஆறரை மணியாகி விடும். பிறகு சில வேளை சொந்தக்காரர்களிடமாவது போவம் என்று சந்திரவதனா வெளிக்கிட்டால் வீட்டை வர ஏழுமணியோ எட்டு மணியோ நிச்சயமில்லை.

ஆறரை - ஏழு - ஏழரைக்குப் பார்க்கும் சீரியலுக்கு இடர்பாடு வந்துவிடும் என்பது அன்னபூரணிக்குக் குழப்பத்தைக் கொடுத்தாலும் மகளுக்கு முன்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. புறப்பட வேண்டியதுதான். நாலே முக்காலுக்கு ஓட்டோவும் வந்தது.

தாயையும் மகளையும் பக்குவமாக ஏற்றிவிட்டாள் வீட்டில் வேலைக்கு இருக்கும் கமலா. ஓட்டோ கோயிலை நோக்கிப் புறப்பட்டது.

அன்னபூரணி அம்மாவுக்கு ஆறு பிள்ளைகள் மூன்று ஆண்கள் மூன்று பெண்கள்.

இரண்டு பேர் கனடாவில், ஒருவர் நோர்வே, மற்றவர் சுவிஸ், கடைசியாய்ப் போன இரண்டு பேரும் ஆஸ்திரேலியா.

ஆறுபிள்ளைகளும் அவர்களது வழித்தேடியவர்களும் வெளிநாடாக இருந்தபடியால் அன்னபூரணி அம்மாவீடு செழிப்பைக்காட்டி நின்றது.

மாபிள் தரை, வோசிங் மிசின், நெட் தொடர்பு என்னென்ன வேண்டும் எல்லாமே இருந்து. சீசனுக்கு சீசன் வந்து போகும் பிள்ளைகள் இந்த வசதிகளை பிளேன்களில் கொண்டு வந்தார்கள். இல்லை என்றால் இங்கே வாங்கிச் சேர்த்தார்கள்.

துள்ளித் திரியும் வயதைக் கடந்த அன்னபூரணியையும் அருணாச்சலத்தையும் பராமரிக்கப் பெரும்பாடு பட்டுக் கமலா அவளது புருசன் கந்தசாமி, ஆண்பிள்ளை என ஒரு குடும்பத்தையே அவர்கள் வீட்டில் குடியேற்றி விட்டார் கள்.

மூத்தமகன் சிவகணேசன் கனடாவில் இருந்து வந்து நின்றபோது மூன்று வருடங்களுக்கு முன்னர் புதுமனைப் பெண்ணான கமலாவையும் அவளது புதுப் புருசன் சிவகணேசனையும் கண்டு பிடித்து மாதம் ஐம்பதாயிரம் ரூபா சம்பளத்துடன் குடியமர்த்தினார்கள்.

செல்வச் செழிப்பின் உச்சத்தில் இருந்த அன்னபூரணி அம்மாவின் குடும்பத்துடன் இணைவ்து தொடர்பில் கமலாவுக்கு ஆரம்பத்தில் பிடிமானம் இருக்கவில்லை. எனினும் குடும்பச்செழிப்பின் பக்க விளைவுகள் தாரளமாகக் கிடைக்கத் தொடங்கியதால் கமலா மனம் மாறி னாள். இப்போது கமலா குடும்பத்துக் குச் சம்பளம் மாதம் எழுபத்தையாயிரம்.

வயது போய் எந்தப் பிள்ளையும் பக்கத்தில் இல்லாத குறையுடன் இருந்த அன்னபூரணிக்குப் பிள்ளைகள் அனுப்பும் வசதிகளையும் வளங்களையும் சரியாகப் பயன்படுத்தி உண்டு பசியாறி அனுபவித்து அகமகிழக் கமலாவும் கந்தசாமியும் துணையாக இருந்தார்கள்.

முன்னதாக அருணாசலத்தார், கந்தசாமி கோயிலுக்குப் போய்விட்டார். பிற்பகல் மூன்று மணியளவில் அவரைக் கந்தசாமி கோயிலுக்குக் கமலாவின் கணவன் கொண்டு போய் விடுவான். பிறகு மாலை ஆறு மணிக்குப் போய்க் கூட்டிக் கொண்டு வருவான்.

கோயில் முன்புற மண்டபத்தில் சேர்ந்து கொள்ளும் தனது வயதையொத்த நண்பர்களுடன் அரசியலும் அதைவிட வேறு சங்கதிகளும் கதைத்துத் திரும்புவார் அருணாச்சலம்.

முத்துமாரி அம்மன் கோயில் அன்று வழக்கம்போல வறண்டு போய் இருந்தது. வெளி மண்டபத்தில் எப்போதும் சேர்ந்து கதைத்துப் பிரியும் நாலைந்து வயோதிபர்களும் இரண்டொரு நடுத்தர வயதினரும் மாத்திரமே இப்போது. கோயிலின் உள்ளே சாதாரண நூல் சேலை அணிந்த மல்லிகையின் மணம் பரப்பும் நான்கு ஐந்து பெண்கள்.

எக்ஸ்பிரஸ் ரயிலில் சாமியை ஓட ஓட ஏத்தும் அவசரம் கொண்ட குருக்கள் ஐயா அதே வேகத்தில் பூசை செய்து முடித்தார். அன்னபூரணியையும் சந்திரவதனாவையும் கண்ட மாத்திரத்தில் அவரது வேகத்தைத் தணித்துக் கொண்ட குருக்கள் புன்முறுவல் முகிழ சந்திரவதனாவைப் பார்த்துப் 'பிள்ளைகள் வரவில்லையோ?' என்று கேட்க 'அவை தனித்தனிக் குடும்பங்களாகப் போய்ச்சினம் அப்ப வாறது கஸ்டம் தானே' என்றபடி ஒரு மயில் நோட்டை எடுத்துக் குருக்கள் ஐயா தட்டில் போட்டாள் சந்திரவதனா.

'கோயில் திருப்பணி வேலை தொடங்கியாச்சு'

'ஓமோம் அம்மா சொன்னவா. 'நாங்கள் செய்வம் நான் இன்னும் கொஞ்ச நாளைக்கு நிக்கத்தான் போறன்' என்றாள் சந்திரவதனா.

கோயில் பூசை முடிந்து வெளியே வரும்போது அன்னபூரணியையோ சந்திரவதனாவையோ மறித்துப் புதினம் கேட்கக்கூடிய ஆள்கள் யாரும் காணப்படவில்லை.

'அம்மா ஒருக்கா எங்கட பொன்னம்பலம் மாமா வீட்டை போட்டுப் போவமோ' என சந்திரவதனா கேட்டாள்.

அன்னபூரணிக்கு அதில் உடன்பாடாக இருக்கவில்லை.

'அங்க போனா அவர், கெப்பற்ர கதைதான் கதைப்பார். வெக்கையாக் கிடந்தாலும் பான் போட மாட்டார் வீட்ட போவம்' என்றாள் உறுதியாக அன்னபூரணி.

மணி ஐந்து ஐம்பதுக்கு ஓட்டோ வீட்டை அடைந்தது முதலில் சந்திரவதனா இறங்கினாள் பிறகு அன்னபூரணி.

அப்படி இறங்கும்போது தான் அது நடந்தது. கழுத்தில் பிடரிப்பக்கம் சுளீர் என்ற வலி. ஒரு காலமும் அனுபவிக்காத ஒரு விதமான வலி. அது என்ன வலி?

மூத்த மகள் இந்தமுறை புதிய இரட்டை வடம் தங்கச்சங்கிலி கொண்டு வந்திருந்தாள். வெள்ளை முத்துக்கள் வைத்துப் பளபளவென கனமானதாகவும் பெறுமதியாய். பார்த்தவுடன் அன்னபூரணி மகிழ்ச்சியால் நிலை குலைந்து மலர்ந்து பூத்தாள். அதன் காரணமாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் கடைசி மகள் அணிவித்து விட்டுச் சென்ற சங்கிலியைக் கழற்றி வைத்துவிட்டு, சந்திரவதனா தந்த அந்த புதிய சங்கிலியைப் போட்டுக் கொண்டாள். அது போட்டு அதிக நாள்கள் ஆக வில்லை. கழுத்தில் வலி எழுந்தவு டன் பார்த்தால், அந்தச்



43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை அறிவோம்

01.Whats App - புலனம்
02.Facebook - முகநூல்
03.Youtube - வலையொளி
04.Instagram - படவரி
05.WeChat - அளாவி
06.Messanger - பற்றியம்
07.Twitter - கீச்சகம்
08.Telegram - தொலைவரி
09.Skype - காயலை
10.Bluetooth - ஊடலை
11.WiFi - அருகலை
12.Hotspot - பகிரலை
13.Broadband - ஆலலை
14.Online - இயங்கலை
15.Offline - முடக்கலை
16.Thumbdrive - விரலி
17.Hard disk - வன்தட்டு
18.Battery - மின்கலம்
19.GPS - தடங்காட்டி
20.CCTV - மறைகாணி
21.OCR - எழுத்துணரி
22.LED - ஒளிர்விமுனை
23.3D - முத்திரட்சி
24.2D - இருதிரட்சி
25.Projector - ஒளிவீச்சி
26.Printer - அச்சுப்பொறி
27.Scanner - வருடி
28.Smartphone - திறன்பேசி
29.Sim Card - செறிவட்டை
30.Charger - மின்னூக்கி
31.Digital - எண்மின்/எண்மானம்
32.Cyber - மின்வெளி
33.Router - திசைவி
34.Selfie - தம்படம்
35.Thumbnail - சிறுபடம்
36.Meme - போன்மி
37.Print Screen - திரைப்பிடிப்பு
38.Inkjet - மைவீச்சு
39.Laser - சீரொளி
40. Pen drive - பேனா செலுத்தி

என்.கவிப்பிரியா


# அவமதிப்பு!



ஓர் எறும்பு தனது சுறுசுறுப்பான நடையை நினைத்து நினைத்து எப்போதும் கர்வத்துடன் சுற்றி வந்தது. ஒருமுறை அது உணவைத் தேடிச் செல்லும் வழியில், ஒரு புழு நகரமுடியாமல் சுருண்டு கிடந்தது. அந்தப் புழுவைப் பார்த்து எறும்பு, "இதோ பார் புழுவே! நான் எவ்வளவு சுறுசுறுப்பாக நடக்கிறேன். நீ இப்படிச் சுருண்டு கிடக்கின்றாயே? எல்லாம் நேரம்தான்'' என்று கேலி செய்தது.

சில நாள்கள் சென்றன. அதே வழியாகத் திரும்பவும் அந்த எறும்பு வந்தது. அப்போது பழைய புழுவைப் பார்த்துக் கேலி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அதைத் தேடியது. அங்கே ஓர் அழகிய பட்டாம்பூச்சி அங்குமிங்கும் படபடவென்று சிறகை அடித் துக்கொண்டு பறந்துகொண்டிருந்தது.

ஒன்றும் புரியாமல் விழித்த எறும்பைப் பார்த்த பட்டாம்பூச்சி, "எறும்பே! எப்போதும் நீ தரையில் ஊர்ந்து கொண்டிருக்கிறாய். நான் ஒருசமயத்தில் புழுவாகச் சுருண்டு கிடந்தாலும், இப்போது முழு வளர்ச்சி பெற்ற பட்டாம்பூச்சியாகி அழகாகப் பறந்து கொண்டிருக்கிறேன். எல்லாம் நேரம்தான்" என்று சொல்லிவிட்டுப் பறந்தது. எறும்பு வெட்கித்து நின்றது.



நீதி-இன்று ஒருவரை அவமதித்தால், நாளை அவர் மூலமாகவே நாம் அவமதிக்கப்படுவோம்.

# உங்களுக்குத் தெரியுமா?

01. வீமனிடம் திரௌபதி கேட்ட பூ என்ன?
சௌகந்திக மலர்
02.பிள்ளையார் சதுர்த்தி அன்று சாத்தும் பூ என்ன?
எருக்கம் பூ
03.சரஸ்வதியும், மகாலட்சுமியும் அமர்ந்திருக்கும் மலர்கள் எவை?
சரஸ்வதி- வெண்டாமரை
மகாலட்சுமி- செந்தாமரை
04.எந்தப் பூவை பானையில் போட்டால், தண்ணீர் வாசனை பெறும் என்று நாலடியார் சொல்கிறது?
பாதிரிப் பூ
05.திருவள்ளுவர் நான்கு குறள் பாக்களில் பயன்படுத்தும் பூ எது?
அனிச்சம் பூ
06.கடலைக் கடைந்த போது வெளியான மலர் (மரம்) எது?
பாரிஜாத மரம்/மலர்
07.சிவன் அணியும் மலர் எது?
கொன்றை
08.சந்திரனைக் கண்டால் மலரும் பூ எது?
குமுதம், அல்லி -
09.சத்யபாமா கேட்ட மலர் எது?
பாரிஜாத மலர்
10. கைலாய மானசரோவர் ஏரியில் பூக்கும் தெய்வீக மலரின் பெயர் என்ன?
பிரம்ம கமலம்


டி.ஆஷா



*சிந்தனைக்கு*
இந்த உலகத்தில், மாற்றம் ஒன்றுதான் மாறாமல் இருப்பது.
-கால் மாக்ஸ்



ந.யோகப்பிரியா,
தரம் 6 ஏ
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



சு.நிலானி
தரம் 5,
சைவ சன்மார்க்க வித்தியாசாலை

# பறக்கும் யானை



ஜுஜு ஒரு பறக்கும் யானை. அடர்ந்த காட்டுக்குள் இருந்தாலும் அவ்வப்போது நினைத்தவுடன் சிறகுகள் முளைக்கும். உடனே மேலே எழும்பிப் பறக்கும். யானை யாவது பறப்பதாவது? அதுவும் அவ்வளவு குண்டான உடம்பைத் தூக்கிக் கொண்டு யானையால் குதிக்கக்கூட முடியாதே?

இப்படித்தான் காட்டிலிருந்த புலி, கரடி, குள்ளநரி, ஓநாய், மயில், அணில், முயல், வாற் குருவி, நாகணவாய், பருந்து, புறா, கிளி, எல்லாமும் முதலில் கேலி செய்தன. பின்னர், அப்படியும் இருக்குமோ என்று சந்தேகப்பட்டன.

பகல் முழுவதும் தூங்கி இரவில் எலிகளை வேட்டையாடும் ஆந்தையார், ஓர் எலியைப் பிடித்தார். அந்த எலி உடனே "அங்கே பார், யானை பறக்குது.. கீச்... கீச்... ஜுஜு பறக்குது. கீச்...கீச்" என்று காது-கிழியக் கத்தியது. அதைக் கேட்ட ஆந்தையார் உடனே, ஆ என்று வாயைப் பிளந்தபடி நின்றது. அதுதான் சமயம் என்று எலி ஆந் தையின் பிடியில் இருந்து தப்பித்துவிட்டது. உண்மையில் ஆந்தையார் வானத்தைப் பார்த்தபோது ஜுஜு யானை வானத்தில் பறந்துகொண்டிருந்தது. அதன் பெரிய சிறகுகள் அசையும் வேகத்தில் கீழே இருந்த செடி, கொடிகள் எல்லாம் ஆடின.

ஆந்தையாருக்கு ஒரு பெரிய சந்தேகம். ஆந்தையாருக்கு மட்டுமல்ல காட்டிலுள்ள எல்லா விலங்குகளுக்கும் ஏகப்பட்ட சந்தேகங்கள். ஜுஜு யானைக்குட்டி எப்படிப் பறக்கிறது? எப்போது சிறகுகள் முளைத்தன? இனிப் பிறக்கும் எல்லா யானைகளும் பறக்குமா? அதைவிட ஜுஜுவை இப்போது எந்த அணியில் சேர்ப்பது? ஜுஜு பறவையா? விலங்கா? குட்டி போடுமா? முட்டை போடுமா? காடு முழுவதும் இதுதான் பேச்சு.

இந்தச் சங்கதியால் வௌவால்தான் அதிகம் கவலைப்பட்டார். பறவை போலவும் பாலூட்டியாகவும் நானே ராஜா, நானே மந்திரி என்று இருக்கிற தன்னுடைய இராச்சியத்துக்குப் பாதிப்பு வந்து விடக்கூடாதே என்ற கவலை வௌவாலுக்கு. ஜுஜு யானைக் குட்டி, வௌவால் இனத்தில் சேர்ந்துவிட்டால், ஜுஜு தான் ராஜா தான் மந்திரியாக வேண்டுமானால் இருக்கலாம்.

வௌவால் இந்தக் கவலையோடு ஒரு நாள் இரவில் பறந்து கொண்டிருந்தபோது, திடீரென எதிரே பறந்து வந்துகொண்டிருந்த ஜுஜு யானைக்குட்டியின் மீது மோதப் பார்த்தது. நல்ல வேளை ஜுஜு தன் வாலை அசைத்துத் திசை திரும்பிவிட்டது. அப்படிப் போகும் போது தலையைத் திருப்பி, பார்த்துப் போ, தம்பி என்று சொல்லியது. வௌவால் சோகமாகிவிட்டார். மறுநாள் காலை இந்த நிகழ்ச்சியைக் கொஞ்சம் உப்பு, உறைப்பு சேர்த்து எல்லோரிடமும் சொல்லிவிட்டார். எல்லோரும் எப்போதும் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே போய் வந்தனர். எந்தத் திசையிலிருந்து ஜுஜு பறந்து வரும் என்று எவருக்குத் தெரியும்? ஜுஜுவுக்கு எப்படிச் சிறகுகள் முளைத்தன? அது ஒரு பெரிய கதை என்று ஜுஜுவின் அம்மா சொல்லிக்கொண்டிருந்தது. ஜுஜுவின் அம்மாவைச் சுற்றி அணில், முயல், மயில் வெட்டுக்கிளி, நாகணவாய், புறா, கிளி, வண்டுகள், வண்ணத்துப்பூச்சிகள் என்று பெரிய கூட்டமே இருந்தது.

(தொடரும்)

# அறிந்துகொள்வோம்

01. மலைப்பாம்பு இறகு, முடி தவிர மற்ற அனைத்தையும் ஜீரணித்து விடும்.
02. 200 கோடி பேருக்கு ஒருவர்தான் 116 வயதைக் கடந்து வாழ்கிறார்கள்.
03. நத்தைகள் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வரை தூங்கக்கூடியன.
04. மானின் கொம்புகள் ஆண்டுக்கு ஒருமுறை விழுந்து முளைக்கின்றன.
05. நாய் மகிழ்ச்சியில் வால் ஆட்டும். பூனையோ கோபத்தில்தான் வாலை ஆட்டும்.
06. நீர் யானைக்குக் கோபம் வந்தால், கொட்டாவி விடும்.
07. ஆமையின் மூளையை எடுத்துவிட்டாலும், அது உயிருடன் இருக்கும்.
08. வண்ணத்துப்பூச்சிகள் தமது பின்னங்கால்களால்தான் சுவையை அறிகின்றன.
09. மனிதனுக்கு இணையான அறிவாற்றல் டொல்பினுக்கு உண்டு.
10. கோழி முட்டையின் ஓட்டில் சுவாசிப்பதற்கு, 8000 நுண்துளைகள் இருக்கின்றன.

ந.தனுசியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னவள் கூந்தல்

பெண்களுக்கு அழகளிக்கும் அம்சங்களில், நீண்ட கருங்கூந்தலும் ஒன்று. மங்கலப் பொருள்களான தாலி, வளையல், மஞ்சள், குங்குமம்,
பூ, சிலம்பு, மெட்டி முதலியவற்றைப் போன்று கூந்தலும் புனிதமானது.

பெண் பிறக்கும்போதே அவளுடன் சேர்ந்தே பிறந்து, அவள் வளரும்போது தழைத்து நீண்டு அவளுடனே சேர்ந்து வளர்ந்து, அவள் முதுமை அடையும் காலத்துத் தானும் நரைத்து அவளுடனே சேர்ந்து மறையும் தனிச் சிறப்புடையது இந்தக் கூந்தல்.

பெண்களின் தலைமுடி- குதிரைவாற் சாமை போன்றும், கமுகோலை போன்றும் மயில் தோகை போன்றும் அடர்ந்தும் தழைத்தும் நீண்டும் இருப்பதால்- ஓதி, குழல்,கூந்தல், கூழை, என்றும் கூறினர். இத்தகு சிறப்பு வாய்ந்த பெண்களின் கூந்தல், ஆண்களுக்கு மிகவும் பிடித்த ஒன்று என்கின்றன உளவியல் ஆய்வுகள்.

இங்கே தன் தலைவியின் கூந்தல் அழகைப் புகழும் தலைவனின் மனோ நிலையைச் சொற்சித்திரம் ஆக்கி யுள்ளது குறுந்தொகை.

யான்நயந்து உறைவோன் தேம்பாய் கூந்தல்
வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை
நுண்மணல் அறல்வார்ந் தன்ன
நன்னெறி யவ்வே நறுந்தண் ணியவே.
(குறுந்தொகை:116)

யான் விரும்பிக் கூடிக்களித்து உடன் உறையும் என் காதலியின் இனிமையான அழகு தவழும் கூந்தல், சோழரது உறையூரில் உள்ள காவிரியின் வளம் மிக்க பெரிய நீர்த்துறையில் காணப்படும் நுண்ணிய கருமணல், நெளி நெளியாகச் சுருண்டுக் காணப்படுவதைப் போல சுருள் சுருளாய் அமைந்துள்ளது. அது நறுமணமிக்கக் குளிர்ச்சியுடையதாயும் உள்ளது- என்றான்.

தமது காதல் மனதைக் கட்டிப்போடும் பெண்களின் கூந்தல் கயிற்றில், ஆண்கள் விரும்பி வந்து மாட்டிக்கொள்கின்றனர். இதுவும் ஒரு காதல் தானே?

அராலியூர் நிலா

# நூல் அறிமுகம்




நூல்- ரசனாவளி- சம்ஸ்கிருத ஆக்க முயற்சிகள்
ஆசிரியர்- பி. சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்)
வெளியீடு- சர்வானந்தமய பீடம்
விலை- 150 ரூபா

## தமிழில் இன்னொரு புத்தாக்கம்

கடவுளின் பாசை எனப்படும் சமஸ்கிருதமும், பக்தியின் மொழி எனப்படும் தமிழும் ஒருங்கே சந்தித்து நிற்கும் இன்னொரு புத்தாக்கமாக அமைந்துள்ளது ரசனாவளி- சம்ஸ்கிருத ஆக்க முயற்சிகள் எனும் நூல்.

யாழ்ப்பாணப் பண்பாட்டு மரபில், சமஸ்கிருத மொழியும் தமிழ் மொழியும் இரு கண்களாகத் திகழ்கின்றன. இந்த இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருக்கும் கோப்பாய் சிவம், சமஸ்கிருத மொழிப் புலமையின் தளத்திலிருந்து தமிழ் மொழிக்குப் புதுமை சேர்ப்பவர். அதில் ஒன்றுதான்- ரசனாவளி- சமஸ்கிருத ஆக்க முயற்சிகள் எனும் நூல்.

ஈழத்து இலக்கியப் புலத்தில் நன்கு அறியப்படும் கோப்பாய் சிவம், புனைகதைகள் மட்டுமன்றிக் கவிதைகளும் சமைப்பவர். அத்துடன், இந்து சமய நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதுபவர். படைப்புக்களுக்காக எண்ணற்ற விருதுகளும் பட்டங்களும் பெற்றுள்ள இவர், எழுத்துலகில் மேன்மேலும் சாதிக்க வாழ்த்துக்கள்.

**02.நூல்- மனமெனும் கூடு (கவிதைத் தொகுப்பு)**
**ஆசிரியர்- கந்தர்மடம் அ. அஜந்தன்**
**விலை- 300 ரூபா**



## மௌனங்களைக் கலைக்கும் ஏடு

தமிழ் மக்களின் மனங்களுள் குடிகொண்டிருக்கும் மௌனங்களைக் கலைக்கும் ஒரு ஏடு- மனமெனும் கூடு. கவிஞர் நேரில் சந்தித்த சம்பவங்களைக் கவியாக்கி, அதனூடு சமுதாயத்தைத் தரிசிக்க வைக்கின்றார்.

முதுமை முதல் கைம்பெண் வரை 82 கவிதைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. போர் தந்த வலிகள், சமூக அவலங்கள், மனித எதிர்பார்ப்புக்கள் என்பன கவிப்பொருள்களாகி, நூலுக்குக் கனதி சேர்க்கின்றன. வாசகரைப் படிக்குமாறு ஈர்க்கின்றன.

ஈழத்தின் வளர்முகக் கவிஞர்களுள் ஒருவரான அ.அஜந்தன், எழுத்தார்வமும் தேடலும் மிக்க ஓர் இளம் படைப்பாளி. இந்நூல் அவரது முதலாவது வெளியீடு. எழுத்துலகில் அவர் மேன்மேலும் வளர, வாழ்த்துக்கள்.

**03.நூல்- அழகு (கவிதைத் தொகுப்பு)**
**ஆசிரியர்- சூரியநிலா (ஆ.ஜென்சன் றொனால்ட்)**
**வெளியீடு- அன்சன் கலையகம், உசன், மிருசுவில்.**
**விலை- 200 ரூபா**

## இயற்கையில் ஒளிர்கின்ற பேரழகு

இயற்கையின் அத்தனை அழகுகளையும் தன்னுள் கட்டிப்போட்டுள்ள பேரழகாக ஒளிர்கின்றது- அழகு (கவிதைத் தொகுப்பு) நூல்.

அழகை ஆராதிக்காத கவிஞர்களே கிடையாது. அவர்களுள் ஒரு கவியான சூரியநிலா, இயற்கையின் அத்தனை அழகுகளையும் இரசித்து, அவற்றைக் கவியாகச் சமைத்துத் தந்துள்ளார். அணி கவி முதல் தொலைந்தேன் வரை 78 கவிதைகள் மணியாய்ச் சிரிக்கின்றன நூலுள். அட்டைப் படமும் கவிதை போலவே அழகாய் உள்ளது. கவிநடையும் அழகாய் உள்ளது.

ஈழத்துக் கவிப்புலத்தில் தனக்கென்று ஒரு தடம் பதித்துள்ள கவிஞர் சூரியநிலா, எழுத்தை உயிராய் நேசிப்பவர். அதில், கவியை மூச்சாய் சுவாசிப்பவர். அவரது கவியுலகம் மலர்ந்து மணம் பரப்ப, வாழ்த்துக்கள்.






தொகுப்பு: மல்லிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆயிரம் சீதைக்கு நிகரான ஒருத்தி...!

> இராமன் இருக் குமிடம் தான் அயோத்தி என்று கணவன் திருவடி களைப் பின்பற்றிக் கானகம் சென்ற சீதையைக் காட்டிலும் கணவனைப் பிரிந்த துயரத் தைத் தன்னுள்ளே புதைத்துக் கொண்டு பதினான்கு ஆண்டுகள் தனித்திருந்து வாழ்ந்த ஊர்மிளை ஆயிரம் சீதைக்கு நிகரானவள்.

சந்திரவதனா

இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கன், அனுமன் ஆகியோர் இராமாயணத்தில் வரும் பாத்திரங்களில் சிலர். இவற்றுள் முக்கியத்துவம் பெற்ற பெண் பாத்திரங்கள், சீதை, கைகேயி, மண்டோதரி, இன்னும் பல. ஆனால் பிரதான ஆண்பாத்திரத்தைச் சுற்றி வரும் இலட்சுமணனின் மனைவி எனும் பெண் பாத்திரம் பற்றி அதிகம் யாரும் அலட்டிக் கொள்வதில்லை. ஆம் அவள் பெயர் ஊர்மிளை. இராமன் வனவாசம் போக வேண்டும் என்று முடிவானது. தந்தை சொல் தட்டாது இராமன் கானகம் புறப்பட்டான். அப்போது சீதை தானும் காட்டுக்கு உடன் வருவதாகப் பிடிவாதம் செய்தாள். இராமனோடு வாதிட்டாள். ஈற்றில் ஒருவாறு இராமனோடு இணைந்து அவனுடன் வனவாசம் செல்லத் தயாரானாள் சீதை.

இதையறிந்த இலட்சுசுமணனுக்குப் பெரும் கலக்கம், அண்ணனுக்குச் சேவை செய்யக் கானகம் செல்லும் தன்னோடு தனது மனைவி ஊர்மிளையும் வருவதாகப் பிடிவாதம் செய்தால் எப்படித் தடுப்பது? எப்படிச் சமாதானம் சொல்வது? என்பதே இலட்சுமணனின் பிரச்சினை. இந்தக் கலக்கத்துடன் மனைவியைக் காணச் சென்ற லட்சுமணனுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது.

ஊர்மிளையின் அந்தப்புரத்துக்கு இலட்சுமணன் சென்ற போது அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. அரண்மனையும் நாடும் நகரும் மக்களும் இராமனின் வனவாசச் செய்தி கேட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக இருந்த அந்த நேரத்தில் ஊர்மிளை மட்டும் அழகாக அலங்கரித்துக் கொண்டு ஆபரணங்கள் அணிந்து மலர்கள் சூடி மஞ்சத்தில் ஓய்யாரமாக வீற்றிருந்தாள். "இது என்ன கோலம் ஊர்மிளை?" என்று கேட்ட இலட்சுமணனிடம் அதே கேள்வியைத் திருப்பிக் கேட்டாள் ஊர்மிளை. "இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும் என்பது தானே கட்டளை. நீங்கள் ஏன் இப்படி...! மரவுரி தரித்தவாறு...? அவருடன் நீங்கள் எதற்குச் செல்ல வேண்டும்? இதனால் நமக்கு என்ன பயன்? அரச போகங்களைத் துறந்து செல்வது அவர் விதி என்றால் அதில் நீங்கள் ஏன் பங்கு கொள்ள வேண்டும்? என்றாள் ஊர்மிளை.

இலட்சுமணனின் குருதி கொதித்தது. தாடகையிலும் கொடிய அரக்கி போல் அவனது கண்களுக்குத் தெரிந்தாள் ஊர்மிளை. பெண்ணினத்துக்கே அவளால் அவமானம் என்று கருதியவன் அவளை மனைவியாகத் தந்த விதியை நொந்து கெண்டான். ஊர்மிளை அவ்வாறு நடந்து கொண்டதன் உண்மைத் தன்மை உணராது கோபாவேசத்துடன் அவளிடமிருந்து விடை பெற்றான் இரட்சுமணன்.

அவன் சென்று மறைந்ததும் கண்ணீர் ஆறாய்ப் பெருக்கினாள், கதறி அழுதாள் ஊர்மிளை. இராமனுக்குப் பணிவிடை செய்யப்போகும் இலட்சுமணனுக்கு தன்னைப் பற்றிய ஆசாபாசங்கள், காதல் நினைவுகள் ஏற்பட்டு அதனால் செய்கின்ற பணிக்கு இடையூறு வராமல் இருக்க வேண்டுமென்பதற்காகத் தன்னுடைய சுகத்தை அர்ப்பணித்துக் கொண்ட ஊர்மிளை. வனவர்சத்தின்போது தன் சிந்தனை கணவனுக்கு இடையூறாக இருக்கக்கூடாதுஎன்பதற்காகத் தன்மீது அவனுக்கு முழு வெறுப்பேற்படும்படி செய்தாள் என்பது அப்போது இலட்சுமணனுக்குத் தெரிய வில்லை . ஊர்மிளை செய்த இந்தத் தியாகம் வனவாசம் முடிந்து இராமன் பட்டாபிகேம் செய்து கொண்ட பின்பு தான் சீதை மூலம் இலட்சுமணனுக்குத் தெரிகிறது.

இராமன் இருக்குமிடம் தான் அயோத்தி என்று கணவன் திருவடிகளைப் பின்பற்றிக் கானகம் சென்ற சீதையைக் காட்டிலும் கணவனைப் பிரிந்த துயரத்தைத் தன்னுள்ளே புதைத்துக் கொண்டு பதினான்கு ஆண்டுகள் தனித்திருந்து வாழ்ந்த ஊர்மிளை ஆயிரம் சீதைக்கு நிகரானவள் என்பதில் என்ன ஐயம்...?





# உடனடித் தீர்ப்பு...?!

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் மிகவும் சுவரஸ்யமானது. அது அனைத்து உயிர்களுக்கும் சட்டம் ஒன்றே என்று உணர்த்தியுள்ளது.

79 வயதுடைய, ஓய்வுபெற்ற விமானப்படை வீரரான கென்னத் ஜோப் என்பவர், பெல்ஜியன் மாலி னோய்ஸ் இனத்தைச் சேர்ந்த நாய் ஒன்றை வளர்த்து வருகிறார்: அந்த நாயின் பெயர் 'ஜெப்'. கடந்த ஆண்டு ஓகஸ்ற் 24ஆம் திகதி அவருடைய பக்கத்து வீட்டில் வளர்க்கப்பட்ட பொமேரியன் இனத்தைச் சேர்ந்த 'விளாட்' என்ற நாய் தோட்டத்தில் இறந்து கிடக்க அதன் அருகில் ஜெப் நின்று கொண்டிருந்தது.

இதனால் 'ஜெப்' தான் 'விளாட்' ஐக் கொன்றது எனும் சந்தேகத்தில் 'விளாட்' ஐ வளர்த்தவர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார். வழக்கும் நடைபெற்றது. இதனை விசாரித்த நீதிபதி, ஜெப்பை விலங்குகள் காப்பகத்தில் சிறைப்படுத்தினார்.

விளாட்டின் உடலில் காணப்பட்ட காயங்களில் இருந்து அதனைக் கடித்த நாயின் மரபணுவைச் சேகரித்துச் சோதனை நடத்த உத்தரவிட்டார். அதுவரை ஜெப் விலங்குகள் காப்பகத்தில் சிறையில் இருந்தது.

மரபணுச் சோதனை முடிவுகள் சில நாள்கள் கழித்து வெளியிடப்பட்டன.

இறந்த நாயாயிருந்த மரபணுக்கள் ஜெப்பின் மரபணுவுடன் பொருந்தவில்லை. எனவே இப்போது ஜெப்பை விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். நாய்க்கும் சட்டம் ஒன்றே என்பது இந்த வழக்கு உணர்த்தும் செய்தி. ஆனால் நமது நாட்டில் மனிதக் கொலையாளிகளின் வழக்குகள் பலவும் முடிவற்று நீள்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வேண்டாமே மணமுறிவு

எஸ்.மல்லிகா

மதுவனுக்கும் ஜான்சிக்கும் திருமணமாகி ஆறு மாதங்கள் உருண்டு விட்டன. பிறந்த வீட்டை விட்டுப் புகுந்த வீட்டுக்கு வந்த நொடி முதல் ஜான்சி மனதால் புழுங்கிக்கொண்டிருந்தாள். தொட்டதற்கெல்லாம் மாமியாரிடம், குறை - குற்றம் கண்டுகொண்டிருந்தாள். அவளுடைய மாமியார் எவ்வளவோ எடுத்துரைத்தும், அவள் கேட்கவில்லை. தனிக்குடித் தனம் போகவருமாறு கணவனைத் தொல்லை செய்துகொண்டிருந்தாள். அதற்கு அவன் உடன்படாதுவிட்டால், விவாகரத்து எடுக்கப் போவதாகவும் மிரட்டினாள். இருவருக்கிடையேயும் வாக்குவாதம் முற்றியது.

இவ்வாறு அவனை அவள் தினமும் நச்சரித்துக்கொண்டிருந்தாள். ஜான்சி போன்ற பெண்களின் நச்சரிப்புக்குக் காரணமாக இருப்பது, தங்களை மற்றவர்கள் முழுவதுமாகக் கவனிக்கவில்லை என்ற எண்ணத்தினாலேயாகும். சில சமயங்களில் இது மற்றவர்களிடம் பாசத்துக்கும் அன்புக்கும் ஏங்கும் நிலை என்றும் கொள்ளலாம்.இதற்குக் கணவன், மனைவி மீது கவனத்தைச் செலுத்தி அன்பு பாராட்டுவதே சிறந்த தீர்வு. இதுதான் மன இறுக்கத்திலிருந்து அவளை விடுவிக்கும். இதுவே குடும்ப உறவு ஆரோக்கியமாக அமைவதற்கான சிறந்த வழியும்கூட. ஆனால், கணவன் மதுவன் இதனைச் செய்யவில்லை.

கணவன் - மனைவியர், ஒருவர் மற்றவரின் சின்னச் சின்னத் தவறுகளை எப்போதும் துப்புரவு செய்பவர்கள் போலப் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. ஒவ்வொருவரின் நல்ல தன்மையையும் வியக்கத்தக்க குணங்களையும் கவனித் துப் பாராட்ட வேண்டும், புகழ வேண்டும். மதுவன் அவ்வாறு நடந்துகொள்ள வில்லை. அவள் செயலைக் கண்டு அருவருப்புற்றான். ஏனென் றால், பெற்றோருக்கு அவன் ஒரே பிள்ளை.

பெற்றவர்களையும் பார்க்க வேண்டும் என்பது அவன் பெருவிருப்பு. அதில், அவள் மண் தூவுவதை அவன் விரும்பவில்லை. "இதோ பார் ஜான்சி, அம்மா- அப்பாதான் எங்கள் கண் கண்ட தெய்வங்கள். அவர்களைக் கண்கலங்காது பார்க்க வேண்டியது நம் கடமை இல்லையா?" என்று அவளிடம் பவ்வியமாக எடுத்துரைத்தும், அவள் கேட்கவில்லை. அவளை அவனால் வெல்ல முடியவில்லை. அவன் கடும் கோபமுற்றான். இப்படியும் ஒரு பெண்ணா? என்று சலித்துக்கொண்டான். ஒருவர் கருத்தை மற்றவர் கேட்கத் தயாராக இல்லை என்ற நிலை உருவானது. இப்போது விவாகரத்து விடயத்தில் ஜான்சி உறுதியாக இருக்கின்றாள்.

விவாகரத்து முதலில் ஏற்படுவது மனதில். சட்டரீதியான நடவடிக்கைகள் பின்னால் தொடர்பவையே. இந்த இரண்டு இணைகளும் ஆத்திரம், அச்சம், சந்தேகம் மற்றும் கோபம் நிறைந்தவர்கள்.

இந்த மாதிரியான மனப்பாங்குகள் ஒருவரைப் பலவீனமடையச் செய்யும். களைப்படை யச் செய்யும். நலனையும் குன்றச் செய்யும். ஈற்றில் ஜான்சி தன் தாய்வீட்டுக்குச் சென்றாள். அங்கிருந்து விவாகரத்துப் பத்திரம் அவனுக்கு அனுப்பி வைத்தாள். அதனைப் பார்த்ததும் அவன் இடிந்து போனான்.

காரணம், அவள் அவனுடைய வாரிசை இப்போது வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறாள். அதேநேரம், அவள் மீது அவனுக்கு ஆயிரம் கோபம் இருப்பினும், அவளை உயிராய்க் காதலித்தவன்- காதலிக்கின்றான்.

உரிமையுடன் போடப்படுகின்ற சண்டைகள்கூட, சில நேரங்களில் உறவே வேண்டாம் என்ற அளவுக்கு முடிந்து விடுகின்றன. கணவன் மட்டுமே தன்னுடைய உலகம். அவனுடைய முழு அன்பும் தனக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்ற உரிமையுடன்தான் அவள் சண்டை செய்தாள். அதனை அவனும் புரிந்துகொள்ளவில்லை. அவள் வழியில் சென்று, அவளைச் சரிசெய்திருக்க[illegible] ணத்தை இப்போதுதான் அவன் உணர்ந்தான். [illegible] எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்.



## ஏன் பிறந்தேனோ

தந்தையும் தாயும் ஆவல்
தான் கொண்டனரோ
இல்லைக்காதல் தான் கொண்டனரோ
பிறந்தேனே கடைக்குட்டியாத்தானே
நான் நாயிலுங்கடையராய்ப்பிறந்தேனோ

வளர்ந்தேன் வளர்ந்தேன் உண்டு வளர்ந்தேன்
பசிபசியென்றே உண்டு வளர்ந்தேன்
வண்ணத்துப்பூச்சி போல்தான் பறந்தேன்
இயற்கையை ரசித்தேன் ஆனந்தமேதான்

அழகு அழகு பூமியின் அழகே
எத்தனை மலர்கள் அழகே தானே
விதவிதமான அழகுப்பட்சிகளே
பறந்து செல்லும் அழகு அழகே

எத்தனை விலங்குகள்
இங்கே விதவிதமாகத் தானிங்கே
ஓடுது ஆடுது உறுமுதே
இரண்டு கால் விலங்குமே

ஆனா ஆவன்னா உடன் கூட்டி
ஏ.பி.சி.டியும் என்று
படித்தேன் படித்தேனே
ஆகா ஆகா என்ன சுகம்
அந்தப்பள்ளிப்பருவமே
கிடைக்குமா இனி.

என் ஆசையே ஆசிரியையாய் வரவே
மாதா, பிதா, குரு தெய்வம்மென்ற
குருவின் சிறப்பு சிறப்புத்தானே
அறிவைத்திறப்பது ஆசானே

ஆனால் அந்தோ ஆசைபோனதே
கலியாண விலங்கு போட்டனரே
கணவன் கயவனாய் வந்தானே
தலை எழுத்தே மாறியதே
சீர்குலைந்த வாழ்வையா
ஏழு தலைமுறை தொடருமையா
என்றே பயமுறுத்துகிறார்
பயம் பயமாய் வருகுதையா

போதும் போதும் ஒரு முறையே
ஐயோ வேண்டாம் ஏழு முறை
யான் செய்த பாவம் தெரியாதே
முற்பிறப்பில் யான் ஏது செய்ததேனே

ஓ! ஆண்டவா உன்செயல்
இல்லை அது என்செயலோ
விளங்கவில்லை யார் செயலோ
இது எம் ஆண்டவர் செயலா

ஏன் தான் பிறந்தேன் நான்
உலகில் பிறந்தேன் நான்
பிரமனுக்கும் வேலையில்லை
சிவனுக்கும் வேலையில்லை.

ஞானாம்பிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையிலிருந்து...



அனார்கலி

நடந்து முடிந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27ஆவது பேராளர்மாநாடு கிழக்கில், குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய தளம் எனக் கருதப்படும் அம்பாறை மாவட்டத்தில், பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இத்தனை காலமும் கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்து வந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரி.ஹஸனலிக்கு ஏன் இந்த நிலை? துரோகத்தனம் என்று பரவலான விசமர்சனங்கள் மேலோங்கியிருக்கின்றன. ஹஸனலி மீதான அனுதாப அலைகள் மக்கள் மத்தியில் மட்டுமன்றி கட்சி உறுப்பினர்கள், ஈடுபாடுள்ளவர்கள் மத்தியிலும் அதிகரித்துள்ளது.

**உம்றா யாத்திரை**

முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாட்டுக்கு முதல் நாள் நடைபெற்ற கட்டாய உச்சபீடக் கூட்டத்திலிருந்து பெரியதொரு மன உடைவுடனும், துயருடனும் வெளியேறிச் சென்ற செயலாளர் நாயகம் ஹஸனலி, உம்றா எனும் மார்க்கக் கடமையை நிறைவேற்றுவதற்குச் சவூதி அரேபியாவுக்குப் பயணமாகியுள்ளார். "தலைமைத்துவத்தின் அநியாயத்தை ஊர் ஊராகச் சென்று விளக்குவேன்" எனச் சூளுரைத்துள்ள ஹஸனலி, திரும்பி வந்ததும் தனது சொந்தவூரான அம்பாறை-நிந்தவூரிலிருந்து அதனை ஆரம்பிக்கவுள்ளார், இனி பொறிபறக்குமோ?

**இலக்கு இது தான்**

முஸ்லிம்காங்கிரஸின் அதிகாரமையத்தை முழுமையாகத் தனதாக்கியுள்ள தலைவர் ஹக்கீம் தனக்களித்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டுள்ளாரென விசனப்படும் முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலி "முஸ்லிம் காங்கிரஸைக் ஹக்கீமின் சர்வாதிகாரப் பிடியிலிருந்து மீட்பது தான் இனி எனது இலக்கு" எனக் கூறி வருகிறாராம்!

**வாக்குறுதி! வாக்குறுதி!**

"என்னைப் பொறுத்தவரை நான் அளிக்கும் வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டுமென்பதில் உறுதியாக இருப்பவன். தலைமையான எனது நேர்மையிலிருந்து தவறவோ, என் மீதான நம்பகத்தன்மை பாதிக்கப்படவோ இடமளிக்க முடியாது" இப்படி நிந்தவூரில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் பேராளர் மாநாட்டில் பறிக்கப்பட்ட அதிகாரங்களுடன் கூடிய கட்சியின் செயலாளர் நாயகம் பதவி தரப்படும், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் தரப்படுமென ஹஸனலிக்கு தலைமை அளித்தவாக்குறுதிகளுக்கு என்ன தான் நடந்ததோ? என இப்போது கேட்கிறார்கள் பொதுமக்கள்! கிடப்பில் போடப்பட்டுள்ள வாக்குறுதிகள் தான் எத்தனையோ?

**கண்டனம்! கண்டனம்!**

"தனது அதிகாரத்தின் கீழ் முஸ்லிம் காங்கிரஸைக் கொண்டு வந்து அமைச்சர் ஹக்கீம் அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்" இப்படி முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் பஸீர் சேகுதாவூத் விடுத்துள்ள கண்டன அறிக்கையொன்றும் வெளியாகியுள்ளது.



**அது எங்கே?**

"முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கிழக்குக்கு வேண்டும்" என்ற கோசத்துடன் கிழக்கில் முளைத்த கிழக்கின் எழுச்சி அமைப்பு பல மாதகாலமாக ஜனரஞ்சகச் செயற்பாடுகள் எதுவுமின்றி மௌனம் காப்பது ஏன் என்று கேள்விகள் எழுப்பப்படுகின்றன. எடுத்த எடுப்பிலேயே முஸ்லிம் மக்களிடையே வரவேற்பு பெற்றிருந்த இந்த அமைப்பு எங்கே? என இப்போது மக்கள் தேடுகின்றனர்.

**ஐயோ வேண்டாம்...**

"ஹஸனலியைப் பிடிக்கவில்லை என்றால், கட்சியின் நீண்டகால முக்கியஸ்தர் பிரபல சட்டத்தரணி நிஸாம் காரியப்பருக்காவது அதிகாரம் கொண்ட செயலாளர் நாயகம் பதவியை வழங்கியிருக்கலாமே" என ஊடகவியலாளர் ஒருவர் முஸ்லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பினர் ஒருவரிடம் கேட்டார் "ஐயோ, அது இன்னும் சிக்கலைத் தந்து விடும். நிஸாம் காரியப்பர் கல்முனையில் தனது அரசியலை இதன்மூலம் வளர்த்துக் கொள்வார். பிரதி அமைச்சரான ஹரீஸ் கல்முனையை பிரதிநிதித்துவப்படுத்துபவர், கட்சிக்குள் குழம்பி விடுவாரே" என்று நறுக்கெனப் பதிலளித்தார். அந்த சிரேஷ்டம் எங்கு செல்கிறது முஸ்லிம்களின் அரசியல்?

> "முஸ்லிம்காங்கிரஸின் தலைமை கிழக்குக்கு வேண்டும்" என்ற கோசத்துடன் கிழக்கில் முளைத்த கிழக்கின் எழுச்சி அமைப்பு பல மாதகாலமாக ஜனரஞ்சக செயற்பாடுகள் எதுவுமின்றி மௌனம் காப்பது ஏன் என்று கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

**பலாப்பழம், யாழ். பலாப்பழம்**

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பிரதான வீதிகளில் சிலர் பலாப்பழ வியாபாரம் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாணப் பலாப்பழம் எனக்கூறி இவர்கள் கொள்ளை விலையில் இந்தப் பலாப்பழங்களை விற்பனை செய்கின்றனர். யாழ்ப்பாணத்தில் 300ரூபாவுக்குப் பெறக்கூடிய பலாப்பழத்தை நான்கு துண்டுகளாக வெட்டி, ஒரு துண்டை 300 ரூபா விலையில் விற்று இந்த வியாபாரிகள் கொள்ளை இலாபமீட்டுகின்றனர். "என்ன செய்வது யாழ்ப்பாணப் பலாப்பழமென்றால் விட்டுச் செல்ல மனமில்லையே" என்கிறார்கள் பொதுமக்கள். யாழ்ப்பாணப் பலாப்பழமென்றால் கிழக்கில் எப்போதும் தனிமவுசுதான்!

**அவசரப் பிரேரணை**

அம்பாறை மாவட்டத்தில் அடாவடித் தனமாகப் புத்தர்சிலை வைக்கப்பட்ட மாயக் கல்லிமலை தொடர்பிலான அவசர பிரேரணை ஒன்றை கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், மூத்த சட்டத்தரணியுமான ஆரிப் சம்சுடீன் கிழக்கு மாகாணசபையின் அமர்வில் கொண்டுவரவுள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாணசபை அமர்வில் இந்தப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த மலையின் அடிவாரத்திலிருக்கும் முஸ்லிம்களின் காணியில் எந்த அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாமென இறக்காமம் பிரதேச செயலர் எழுத்துமூலம் அறிவித்துள்ளார் எனவும், விகாரை அமைப்பதற்கு இந்தக் காணிகளை வழங்க வேண்டுமெனத் தகாத அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார் ஆரிப்சம்சுடீன்.


இதனால் இன முறுகல் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு சபையின் உறுப்பினர்கள் அதனுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டதுமான ஆணைக்குழு ஒன்றை உருவாக்கி உடனடி முடிவுகளை எய்துவதற்கு ஆவன செய்யவேண்டுமெனவும் தனது பிரேரணை முன்னறிவித்தலில் தெரிவித்துள்ளார் இவர்.

**முக்கிய நிகழ்வு**

"போராலும், இனவிரிசல்களாலும் பாதிப்புக்குள்ளான மக்களின் உரிமைக்கான எழுச்சிப் பயணம்" எனும் தொனிப்பொருளில், இன்று அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் முக்கிய நிகழ்வு ஒன்று நடைபெறவிருக்கின்றது.

போரால் பாதிப்புக்குள்ளான, காணி அபகரிப்புக்களால் பாதிக்கப்பட்ட மூவின மக்களும் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் "தேசிய நல்லிணக்கத்தில் நிலைமாறு கால நீதியைத் தேடி" எனும் ஆவண நூலும் வெளியிடப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போராட்டக் களத்தில் ஒரு முழுநாள்

திலீப்

முடிக்கப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்குதல் என்பது இயற்கை நியதி. 'நந்திக் கடல்' மறக்க முடியாத பெயர். தமிழர் வரலாற்றில் தனியான - மகத்துவமான இடத்தைப் பெற்று விட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போருக்கு முற்றுப்புள்ளி வைத்த இடம். அங்கேயிருந்துதான் மற்றொரு போராட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது. அறவழிப்போர் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்து விட்டன.

மண்மீட்புக்கான அறவழிச் சமரில் பிலக் குடியிருப்பு மக்கள் தளராத துணிவுடனும் - உறுதியுடனும் களமாடிக் கொண்டிருக் கின்றனர். போர் கொடுத்த தோல்வி என்னும் வலி, தொடர்ந்து மகிந்த பிரயோகித்த அழுத்தம் என்பவற்றால் துவண்டு - துயருற்று இருந்த தமிழர் தாயகத்தில் 'போராட்டம்' என்னும் பெயரில் இடையிடையே கவனவீர்ப்பு நடந்து வந்தது. ஒரு நாள் போராட்டம் நடத்துவதே பெரும்பாடாக இருக்கையில், மிக நீண்ட காலத்தின் பின்னர், போர் முடிந்த அதேயிடத்தில் நீண்ட - நெடிய போராட்டம் ஒன்று எழுந்துள்ளது. இப்படியிருக்கையில் இரண்டு வாரத்தை - அதுவும் போராட்டக் களத்தில் மக்கள் எப்படிக் கழிக்கின்றார்கள் ? என்ற கேள்வி அந்த மக்கள் ஒரு நாள் போராட்டக்களத்தை எப்படிக் கொண்டு செல்கிறார்கள் என்பதை அறியத் தூண்டியது.

**காலை 9.35**

யாழ்ப்பாணத்திலிருந்து பயணம் ஆரம்பமாகியது. ஏ-9 நெடுஞ்சாலை வழியாகப் பயணம். பரந்தன் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்புச் சந்தி நோக்கிப் பயணம். இதுவரை சுட்டெரித்த வெயில் இன்றைய தினம் காணாமற் போயிருந்தது. அடிக்கடி வந்து சென்ற மப்பும் மந்தாரமும் பயணத்துக்குச் சேதாரம் விளைவிக்கவில்லை. புதுக்குடியிருப்புச் சந்தியால் ஒட்டுசுட்டான் செல்லும் பாதைக்குத் திரும்பியதும் 500மீற்றர் தூரத்தில், கேப்பாபிலவு - பிலக்குடியிருப்புக்குச் செல்லும் வற்றாப்பளை வீதி.

'வான்படை முகாம் 7 கிலோ மீற்றரில்' என்ற வழிகாட்டல் பலகை வீதியில் நிறுவப்பட்டிருக்கின்றது. வற்றாப்பளை வீதி என்ற பெயர்ப் பலகையும் அதன் கீழேயே இருக்கின்றது. இங்கே எத்தகைய நிர்வாகம் நிலவுகின்றது என்பதை இந்தப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறையே காட்டி நின்றது. வற்றாப்பளை வீதிக்கு இப்போதுதான் புதுப்புடைவை கட்டும் வேலை நடந்து கொண்டிருக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர் இந்த வீதியால் சென்றபோது கிளம்பிய கிரவல் புழுதி இப்போது இருக்கவில்லை. போர்த்தப்பட்ட 'கரும் புடைவை' அதை மறைத்து விட்டது. வற்றாப்பளை வீதியில் சில கிலோ மீற்றர்கள் முன்னேறியதும் இருபுறத்திலும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் வயல் வெளிகள். சில வளைவுகளை மாத்திரம் கொண்ட அந்த முதன்மை வீதியில் சுமார் 5கிலோ மீற்றர்கள் சென்றால் பிலக் குடியிருப்புப் போராட்டக் களம் தென்பட்டது.

**பி.ப ஒரு மணி.**

வெயில் சுமாராக இருந்தது. முதன்மை வீதியின் அருகில் மூன்று கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வீதியில் இருந்து மூன்று அடி கீழே அதன் தரை இருந்தது. தகரங்கள் மேல் பக்கத்தை மூடியிருந்தன. தறப்பாள்கள் ஏனைய கரைகளை மறைத்துக் கொண்டிருந்தன. போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியவர்களின் பனர்களும் கூடாரத்துத்தறப்பாள்களுடன் இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. ஆதரவு தெரிவித்து வருபவர்கள் அமர்வதற்கும், போராட்டக்காரர்கள் இருப்பதற்கும் பிளாஸ்ரிக் கதிரைகள் போடப்பட்டிருந்தன. சில முஸ்லிம் பெண்களும் அவர்களுடன் வேறு பெண்களும் தகரக் கொட்டகையினுள் இருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் அந்தக் கூடாரத்தினுள் இருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மக்களுடன்சிவமோகன் கலந்துரையாடல் நடத்திக் கொண்டிருந்தார். பிலக்குடியிருப்பு போராட்டத்துக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த பெண், சிவமோகன் அருகில் இருந்தார். கலந்துரையாடல் நடந்து கொண்டிருந்த இடத்துக்கு 50 - 60 வயதுக்கும் இடைப்பட்ட ஆண் ஒருவர் வந்தார். அவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனை நோக்கிக் கேள்விகளை எழுப்பினார். அதுவரை அமைதியாக இருந்த கூடாரத்தில் இப்போது சிறு சலசலப்பு.

"இவ்வளவு நாளாய்ப் போராட்டம் நடக்குது. நீங்கள் என்ன செய்தனீங்கள்?"

"இந்தப் பிரச்சினை சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் பேசியுள்ளோம்"

"நான் இரண்டு மூன்று நாளாய் எல்லா நியூசும் கேக்கிறன். எங்கையும் வரேல்லயே" சூடாகிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், தனது அலைபேசியில், நாடாளுமன்றத்தில் தான் பேசியதைப் போட்டுக் காண்பித்தார். "சம்பந்தன் ஐயா என்ன செய்தவர்" என்று வந்த இன்னொருவர் தனது அடுத்த கேள்வியைச் செருகினார். "எங்கட போராட்டத்தைக் குழப்ப வேண்டாம். இங்க இருக்கிற எங்களுக்கு என்ன நடக்குது என்று தெரியும். வேறு ஆக்கள் இதை குழப்பவேண்டாம்'என்றுபோராட்டத்துக்குத் தலைமை தாங்கிய பெண்மணி பொதுவாகச் சொன்னதும், கேள்வி கேட்டவர், நாடாளுமன்ற உறுப்பினரைப் பார்த்து "மன்னிக்கவும் சேர். நான் போயிட்டு வாறன்" என்று சொல்லிக் கொண்டு வீதியில் நிறுத்தி வைத்திருந்த சைக்கிளை எடுத்து மிதித்துக் கொண்டு வற்றாப்பளை செல்லும் வீதிப் பக்கம் புறப்பட்டார். அவரது சைக்கிள் கூடாரத்திலிருந்து சுமார் 30 அல்லது 40 மீற்றரில் உள்ள மரத்தின் கீழ் போய் நின்றது. அங்கே ஏற்கனவே 3 சிவில் உடை இளைஞர்கள் நின்றிருந்தார்கள். அந்த இளைஞர்களின் தோற்றம் அவர்கள் தமிழர்கள் இல்லை என்பதை உணர்த்தியது. "போராட்டம் தொடங்கின நாளில இருந்து இவங்கள் அதிலதான் நின்று கொண்டிருக்கிறாங்கள். அவங்கள் புலனாய்வுக்காரர்" என்று பத்திரிகை நண்பன் குறிப்பிட்டான்.

சிறிது நேரமாகியது. நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா அந்த இடத்துக்கு வருகை தந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் அங்கிருந்து புறப்பட்டிருந்தார். போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடனும், ஆதரவு வழங்க வந்திருந்த புத்தளம் முஸ்லிம் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் மன்னார் பெண்கள் அமைப்புக்களுடனும் கலந்துரையாடல் நடத்தினார். வந்திருந்த பெண்கள் அமைப்புக்களும், சாந்தி சிறீஸ்கந்தராசாவுடன் நெருக்கமாக நீண்ட நேரம் பேச்சுக்கள் நடத்தினர்.

கூடாரத்துக்கு அடுத்த காணியில் விரிந்து பரந்திருந்த மரத்தின் கீழ் சமையல். பத்திரிகை நண்பர்களையும், சாப்பிட வருமாறு மக்கள் அழைத்தனர். மரத்தடியில் சமையல் செய்தமைக்கான அடையாளங்கள் எஞ்சியிருந்தன. அந்த வயல் காணியின் வரப்புக் கட்டுக்களில் அமர்ந்த நண்பர்களுக்கு, சாப்பாட்டுக் கோப்பைகளில் சோறும், மீன்ரின் குழம்பும், உருளைக் கிழங்குக்கறியும், கத்தரிக்காய் வெள்ளைக் கறியும் பரிமாறப் பட்டது.

அந்த மரத்தின் மறு கரையிலேயே, சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். சில பெண்கள் வரம்புக் கட்டிலிருந்து பேன் பார்த்துக் கொண்டிருந்தனர். சிறுவர்களின் விளையாட்டுப் புதுமையாக இருந்தது.

(45 ஆம் பக்கம் பார்க்க)



அங்கே ஏற்கனவே 3 சிவில் உடை இளைஞர்கள் நின்றிருந்தார்கள். அந்த இளைஞர்களின் தோற்றம் அவர்கள் தமிழர்கள் இல்லை என்பதை உணர்த்தியது. "போராட்டம் தொடங்கின நாளில இருந்து இவங்கள் அதிலதான் நின்று கொண்டிருக்கிறாங்கள். அவங்கள் புலனாய்வுக்காரர்" என்று பத்திரிகை நண்பன் குறிப்பிட்டான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நட்பு



ச. பிரகாசினி

"அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்" என்பது பழமொழி. நாம் அன்போடு நட்புக் கொண்டு பழகும் ஒவ்வொரு நண்பனின் உண்மை உருவமும் எமக்கு ஆபத்து வரும்போது, எமக்கு உதவி தேவைப்படும் போதுதான் தெரியவரும். இதற்கு நாம் சிறுவயதிலே படித்துக் கொண்ட காட்டுப் பாதையில் சென்றுகொண்டிருந்த இரண்டு நண்பர்கள் கரடியை எதிர் கொண்டதான கதைதான் நினைவுக்குவரும். அத்தகைய தருணங்களிலேயே அந்த நண்பன் இதுவரை எம்முடன் எவ்வகை நட்பைக் கொண்டிருந்தான் என்பது எமக்குத் தெரிய வருகின்றது.
நட்பு என்பது மிகவும் அரிய மனிதப் பண்புகளில் ஒன்றானது. நல்லோர் நட்பு நன்மையே தரும். தீயோர் நட்பு உடனடியாக நன்மை பயக்கக் கூடியதாக இருந்தாலும், அது தரும் உபத்திரவம் காலப் போக்கில் தான் எமக்கு வெளிப்படுகின்றது. இதனால் நட்பை நம்பி ஏமாந்தவர்களும் அதன்மூலம் நன்மை பெற்றவர்களும் மனிதர்கள் மத்தியில் அதிகமாகவே காணப்படுகின்றனர்.
தீயவர்களின் நட்பை காலப்போக்கிலேயே நாம் அறிந்து கொள்கின்றோம். நமது நட்பில் உண்மையும் நேர்மையும் இருக்குமானால் கட்டாயமாக இத்தகைய தீயவர்களின் நட்பை நல்ல நட்பாக மாற்ற முடியும்.

"தீயாரைக் காண்பதும் தீது
தீயாரோடு இணங்கி இருப்பதும் தீது"

என்பதும் ஆன்றோர் வாக்கு. தீயவர்களைப் பார்ப்பதும் அவர்களோடு நட்புக் கொள்வதும் எப்போதும் எமக்குத் தீமையே பயக்கும் என்பதே இக் கூற்றின் பொருளாகும். ஆகையால் அவர்களிடமிருந்து விலகிக் கொள்வதே சிறந்தது என்கின்றது இந்த முதுமொழி. மற்றையவர்களின் நட்பைப் பார்த்துப் பொறாமைப் படுபவர்களின் நட்பும் என்றைக்குமே நிலைப்பதில்லை. மற்றவர் களின் நட்பைக் குறை கூறுபவர்கள் கூடத் தமது நட்பு எவ்வாறானது என்பதை ஒருபோதும் எண்ணிப் பார்த்ததில்லை. காரணம் மற்ற வர்களின் நட்பை ஆராய்வதிலும் குறை, குற்றம் காண்பதிலும் குறி யாக இருக்கும் கீழ்த்தரமான மனிதப் பண்பு அவர்களிடம் காணப் படுவதேயாகும்.
உண்மையிலேயே நட்பு என்பது நண்பனின் துன்ப-துயரங்கள், இன்பங்கள், நண்பனின் மனதைத் தொடும்படியான விடயங்களில் பங்கேற்பதும்-புரிந்துணர்வும்-விட்டுக்கொடுப்புமாய் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ்ந்து கொள்வதுமே. இவை தாம் உண்மை நண்பனின் அடையாளங்கள். இன்றைய காலகட்டங்களில் நட்பு என்னும் போலி முகத்துடன் மற்றவர்களைச் சந்தித்துக் கொள்பவர்களே அதிகம்.
உண்மையில் ஆழமான நட்புடன் தம் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்பவர்கள் இன்றளவில் கண்கூடே காணமுடியாது. தன்னுடைய நண்பனானவன் தவறான பாதையை நாடிச் செல்லும்போதும், செல்ல எத்தனிக்கும்போதும் அதனை அறிந்துகொண்டு அவனை நல்வழிப்படுத்துவதே ஒரு நண்பனின் முதன்மைப் பணியாகும். எமது ஆடை நழுவும் போது, எமது கை எம்மை அறியாமலே சென்று எம்மைப் பாதுகாக்கின் றது. அதுபோலவே எமது நண்பர்களும் இருக்க வேண்டும்.
இது போல் அமைந்த நட்பு, அன்பு, காதல் அனைத்துமே என்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடியதாய் விளங்கும்.

"உடுக்கை இழந்தவன் கைபோல்
ஆங்கே
இடுக்கண்

"எமது ஆடை நழுவும்போது எமது கை எம்மை அறியாமலே சென்று எம்மைப் பாதுகாக்கின்றது. அதுபோலவே எமது நண்பர்களும் இருக்க வேண்டும். இது போல் அமைந்த நட்பு, அன்பு, காதல் அனைத்துமே என்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடியதாய் விளங்கும்.



# ஆணவம் அழிவைத்தரும்...



ஜெயா

பாரதப்போர் முடிவில் அர்ஜூனனுக்குத் தேரோட்டி யாகவிருந்த கிருஷ்ணர் "அர்ஜூனா...! போர் தான் முடிந்து விட்டதே; இனியும் ஏன் தேரில் நின்று கொண்டிருக்கின்றாய். தேரை விட்டு இறங்கு" என்றார். "கிருஷ்ணரே நீங்கள் என்னைப் போரில் வெற்றி பெறச் செய்தீர்கள் மகிழ்ச்சி, ஆனால் வெற்றி பெற்றவனைத் தேரோட்டி வந்து கையைப்பிடித்து இறக்கி விடுவது என் றொரு சம்பிரதாயம் உண்டே! அதைமறந்து விட்டீர்களே! அப் படிச் செய்வது எனக்குப் பெருமைக்குரிய விடயம் அல்லவா! நீங்களோ என்னைக் கீழே இறங்கு என்று ஆணையிடுகிறீர்கள் இது என்ன நியாயம்?" என்றான். அர்ஜூனனின் வார்த்தை களைக் கிருஷ்ணர் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. "தேரை விட்டு இறங்கு" என்பதில் மீண்டும் கண்டிப்புடன் கூறினார் கிருஷ் ணர். வருந்தியபடி அர் ஜூனன் தேரிலிருந்து கீழிறங்கினான்.
அப்பொழுதும் கிருஷ்ணர் "தேரின் பக்கத்தில் நிற்காதே அர்ஜூனா சற்றுத்தள்ளி நில்" என்கிறார். அர்ஜூனனால் கிருஷ்ணரின் வார்த்தைகளைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவனுக்குப் போரில் வெற்றிபெற்ற மகிழ்ச்சியே! ஒன்றும் புரியாதவனாகத் தள்ளி நின்றான். வாடிய முகத்துடன் நின்ற அவனைக்கண்டு புன்னகைத்த கிருஷ்ணர் ஓடிச் சென்று இறுகக் கட்டியணைத்துக் கொண்டார். அந்தக் கணமே அர்ஜூனன் நின்றிருந்த தேர் தீப்பற்றி எரிந்தது. சாதாரணமாகச் சிரித்த கிருஷ்ணர் "பார்த்தாயா அர்ஜூனா தேர் எரிகிறது. அதனால் தான் உன்னை இறங்கச் சொன்னேன்" என்றார் புன்முறுவலுடன். தேர் ஏன் எரிந்தது? உங்களுக்கு மட்டுமல்ல அர்ஜூனனுக்கும் ஏதும் விளங்கவில்லை. அர்ஜூனா போர் புரியும்போது எதிரிகள் உன்மீது பல அஸ் திரங் களை ஏவினர். அவற்றின் சக்தி அளவிட முடியாதது. தேரில் நானும், தேர்க் கொடியினில் அனுமனும் இவ்வளவு நேரம் அதைத் தடுத்துக் கொண்டிருந்தோம். அதனால் அவை வலிமையற்றுக் கிடந்தன. தேரை விட்டு நான் இறங்கியதும், அனுமனும் பறப்பட்டுவிட்டான். அஸ்திரங்களின் சக்தி தலைதூக்கியதால் தேர் பற்றி எரியத் தொடங்கி விட்டது. உண்மை இப்படி இருக்க; போரில் வெற்றி பெற்ற உன்னிடம்; 'நான்' எனும் ஆணவம் ஏற்பட்டு விட்டது. அது எவ்விடம் இருந்தாலும் ஆபத்துத் தான். அது அழிவுக்கு வழிவகுக்கும் என்பதை மறந்து விடாதே" என்றார்-கிருஷ்ணர். தேர்பற்றி எரிந்ததுபோல இப்போது அர்ஜூனனிடம் இருந்த ஆணவமும் பற்றி எரிந்து சாம்பரானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் பயங்கர இடங்கள்

நிவின்

பயங்கரமான இடங்களைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். ஆனாலும் அமானுஷ்யங்கள் நிறைந்த வாசிக்கும் போதே மிரட்டக் கூடிய திகிலான,மர்மங்களுக்கு குறைவில்லாத இடங்களைப் பற்றி உங்களுக்கு தெரியுமா? உங்களுக்குத் தெரிந்த ,தெரியாத உலகின் பயங்கரமான,திகிலான சில இடங்களைப் பற்றிப் பார்ப்போம்.

நீங்கள் பயங்கரமான இடங்களைப் பற்றி அறிவதில்ஆர்வமுள்ளவராயின், உங்களுக்கு இந்தியாவின் ராஜஸ்தானில் உள்ளபங்கார் கோட்டை பற்றி அறிந்திருப்பீர்கள். இந்தியாவின் முக்கிய பயங்கரமான இடமாகக் கருதப்படும் இது 1573 இல் நிர்மாணிக்கப் பட்டதாகஅறியமுடிகின்றது. இங்கு வாழ்ந்தவர்கள் மர்மமானமுறையில்(ஒரு மந்திரவாதியின் சாபத்துக் குட்பட்டு) இறந்ததாகவும் அவர்களின் ஆவிகள் அங்குஅலைந்து திரிவதாகவும்இந்தக்கோட்டை பற்றிய தகவல்களில் அறிய முடிகின்றது. குறிப்பாக இந்தக் கோட்டைக்குள் இரவு நேரங்களில் யாரையும் பார்வையிட்வோ, தங்குவதற்கோ அனுமதிப்பதில்லை!

கனடாவின் ஒன்ராரியோ பகுதியில்கதறல் சுரங்கம் என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த திகிலான இடம் பற்றிய தகவல் சற்று வித்தியாசமானது. பழங்காலத்தில் இந்த சுரங்கத்திற்கு அருகில் ஒரு பண்ணை வீடு இருந்துள்ளது. எதிர்பாராத விதமாக தீ விபத்தில் சிக்கி தீக்கிரையானது. இந்த வீட்டில் வசித்த பெண்ணும் இந்த விபத்தில் சிக்கி உதவி கோரி இறுதியில் அந்தச் சுரங்கப் பகுதிக்குள் இறந்தார்.இந்த விபரீதம் நிகழ்ந்து சில காலப்பகுதிகளில் ஒரு வித்தியாசமான கருத்து பரவி வந்தது. அதாவது இந்தச் சுரங்கத்தினுள்ளே இரவு நேரத்தில் சென்று மரக்குச்சியினால் தீயேற்றுபவர்கள் இறவாநிலையை அடைவார்கள்என்பதே அந்தக் கருத்தாகும்.ஆனால் இவ்வாறு செய்தவர்கள் கதறிக் கொண்டே இந்தச் சுரங்கத்தை விட்டு வெளியே வந்துள்ளனர். இந்தச் சுரங்கத்தினுள்ளே இரவு நேரத்தில் தீயேற்றச் செல்பவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பது மர்மமாகவே உள்ளது.

## ஆஸ்திரேலியாவில் மொன்தோ கிரிஸ்தோ

இந்த இடத்தைப்பற்றிய திகில் தகவலை நீங்கள் வாசிக்கும் போதே இதயத்துடிப்பு அதிகரிப்பதை உணர்வீர்கள்.

1855-1948 வரை கிரவ்லி குடும்பத்திற்கு சொந்தமானதாக இந்த இடம் இருந்தது.அங்கிருக்கும் போதே இந்தக் குடும்பம் பல மர்மமான சாவுகளைக் கண்டுள்ளது.கிரவ்லியின் மர்மமான சாவுக்குப் பின்னர் அவரின் மனைவி வீட்டின் மேல்தளத்திற்குச் சென்று தாழிட்டுக் கொண்டதாகவும் ஒரே ஒரு தடவை மட்டும் வெளியே வந்ததாகவும்,அதற்குப் பின்பு இருபத்து மூன்று ஆண்டுகளாக வெளியே வரவில்லை, .அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்கள் தெரிய வரவில்லை .இருந்தாலும் அவரின் சாவு அந்த வீட்டிலேயே நிகழ்ந்து அவரின் ஆவி அன்றிலிருந்து இன்று வரை அங்கேயே அலைகிறது எனவும்தகவல்கள் வெளியாகின.இதுசம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தச்சென்ற ஆய்வாளர்களின் வீடியோவில் மர்மமான உருவங்கள்,விநோத வெளிச்சங்கள், பெண்ணின்குரல்கள் என்பன அகப்பட்டன.

## இந்தோனேசியாவில் லவாங்சேவுகூடம்..

லவாங்சேவு என்றால் ஆயிரம் கதவுகள் என்று அர்த்தமாம்! இந்தக் கட்டடம் டச்சு கிழக்கு இந்திய கம்பனியால் 1917இல் கட்டப்பட்டதாக அறிய முடிகிறது.இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியர்களால் வதை கூடமாக உபயோகப்படுத்தப்பட்டது. இங்குஏராளமானோர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். இந்த இடத்தில் சாவடைந்த பொந்தியானாக் எனும் இறந்த கர்ப்பிணிப் பெண்ணின் ஆவி இங்கு அலைவதாகவும் கமராவில் பதிவாகின.

## மெக்ஸிக்கோ பொம்மைகளின் தீவு

என்ன பொம்மைகளின் தீவு என்று சொல்றீங்க. பொம்மைக்கெல்லாம் நாங்க பயப்படவே மாட்டோம்,இதெல்லாம் ஏன் இந்த வரிசையிலை சேர்க்கிறீங்க அப்பிடி நீங்க கேட்கிறது புரியுது.


மர்மமான முறையில் இறந்த ஏழைப் பெண்ணுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்தத் தீவுக்கு அருகில் உள்ள கால்வாயில் தான் அந்தப்பெண் மூழ்கி இறந்ததாக நம்பப்படுகிறது. இந்தப் பகுதியில் இந்தப் பெண்ணின் ஆவியால் தாக்கப்பட்ட ஒரு நபர் அந்த ஆவியை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக பழைய பொம்மைகளை வாங்கி வந்து தீவில் தொங்கவிட்டுள்ளார். தன் குடும்பத்தினரிடம் அந்தப் பெண்ணின் ஆவி வாழ்வுக்குப்பின் தன்னோடு வந்துவிடுமாறு கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கூறிய பின்பு 2001 ஆம் ஆண்டில் அந்தப் பெண் இறந்து கிடந்த அதே இடத்திலேயே அவரும் மர்மமாக இறந்து கிடந்தார். இந்தத் தீவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் தங்களது அனுபவங்களைத் தெரிவிக்கையில், அங்குள்ள பொம்மைகளின் கண்கள் தங்களைத் தொடர்வதாகவும், சிரிக்கும் குரல்கள் கேட்பதாகவும் கூறியுள்ளனர். இது மட்டுமல்ல இன்னும் நிறையவே மர்மங்கள் விலகாத பயங்கரமான இடங்கள் இருக்கின்றன.

**லவாங்சேவு என்றால் ஆயிரம் கதவுகள் என்று அர்த்த மாம்! இந்தக் கட்டடம் டச்சு கிழக்கு இந்திய கம்பனியால் 1917இல் கட்டப்பட்ட தாக அறிய முடிகிறது. இரண்டாம் உலகப் போரின் போது ஜப் பானியர்களால் வதை கூடமாக உபயோகப் படுத்தப்பட்டது. இங்குஏராளமானோர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல் லப்பட்டுள்ளனர்.**




**நீதிபதி** : சாமி தலையிலிருந்து கிரீடத்தை திருடினாயா?
**திருடன்** : ஆமா! சாமிக்கு மொட்டை போடுறதா வேண்டிக்கிட்டேன். அதான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 8 | | | 3 | |
| 1 | 6 | | | | 5 | | 7 | 4 |
| | | | 9 | | | | 6 | |
| | 4 | | | 7 | | 1 | | 2 |
| | | | | | | | | |
| 5 | | 1 | | 6 | | | 4 | |
| | 7 | | | | 8 | | 1 | |
| 4 | 1 | | 7 | | | | 2 | 3 |
| | 3 | | | 1 | | | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 9 | 5 | 2 | 4 | 1 | 7 |
| 1 | 2 | 4 | 6 | 8 | 7 | 5 | 9 | 3 |
| 9 | 5 | 7 | 4 | 1 | 3 | 2 | 8 | 6 |
| 5 | 7 | 1 | 8 | 3 | 4 | 9 | 6 | 2 |
| 4 | 8 | 9 | 7 | 2 | 6 | 1 | 3 | 5 |
| 6 | 3 | 2 | 1 | 9 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 1 | 5 | 3 | 6 | 8 | 7 | 4 | 9 |
| 3 | 4 | 8 | 5 | 7 | 9 | 6 | 2 | 1 |
| 7 | 9 | 6 | 2 | 4 | 1 | 3 | 5 | 8 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.











## இயக்குநராக அவதாரம் எடுக்கும் காயத்ரி ரகுராம்

பிரபல நடன இயக்குநர் ரகுராம் மாஸ்டரின் மகளான காயத்ரி ரகுராம் இயக்குநராக அவதாரம் எடுக்க உள்ளார். தமிழ் சினிமாவில் நடிகையாக அறிமுகமான காயத்ரி ரகுராம் பின்னர் நடன இயக்குநராக தனது துறையை மாற்றிக் கொண்டார். எனினும் அவ்வப்போது படங்களிலும் நடித்து வருகிறார். இந்த நிலையில், தற்போது 'யாதுமாகி நின்றால்' என்ற படத்தின் மூலம் இயக்குநராக அவதாரம் எடுக்கிறார்.

ஒரு பெண் தன் அன்றாட வாழ்வில் சந்திக்கும் போராட்டங்களை மையக்கதையாகக் கொண்ட படம் தான் 'யாதுமாகி நின்றால்'. பின்னனி நடனம் ஆடும் பெண்களின் தினசரி வாழ்வில் நடக்கும் உண்மைக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட இந்தப் படத்தை காயத்ரி ரகுராம் இயக்குகிறார்.

இந்தப்படம்சாதாரணபின்னணிநடனமாடும்பெண்களின்மனதினுள் இருக்கும் கனவுகளையும், ஆசைகளையும் முதன் முதலில் தமிழ் சினிமாவில் சொல்லும் படமாகும்.

குடும்ப சூழ்நிலை காரணமாக நடனமாடும் பெண்ணாக தள்ளப்பட்ட பள்ளி செல்லும் சிறுமி, சாதாரண கனவுகளோடும், ஆசைகளோடும் வாழ்க்கையில் பயணிக்கிறாள். ஆனால், முற்றிலும் மாறாக உண்மையில் ஒருவரால் நினைத்துப் பார்க்க முடியாத கொடுமைகளையும், அவலங்களையும் அனுபவிக்கும் அவளது வாழ்க்கையே படத்தின் கதையாகும்.

தாமரை போன்ற நடனப்பெண் இருப தாண்டு காலமாக அவள் வாழ்நாளில் சந்தித்த மற்றும் பயணித்த பல்வேறு நபர்களின் கதையைச் சொல்கிறது இந்தப் படம் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.










## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** புதிய முயற்சியில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் ஆன்மிக நாட்டமுடன் செயல்படுவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**இடபம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தாமதித்த பணி நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். லாபம் உயரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். குடும்ப உறுப்பினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படும். நிலுவைப்பணம் வரும்.

**கடகம்:** உறவினரின் செயல்பாட்டால் பிரச்சினை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் பணம், நகை இரவல் கொடுப்பது கூடாது.

**சிங்கம்:** போட்டி மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழிலில் உள்ள குளறுபடியை, சரிசெய்வதால் ஓரளவு வளர்ச்சி கிடைக்கும். பெண்கள் குடும்பச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



**கன்னி:** ஆன்மிக எண்ணம் மேலோங்கும். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** சொந்த வியம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழிலில் சுமாரான லாபம் காண்பீர்கள். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பிள்ளைகள் வழியில் திடீர் செலவு உண்டாகலாம்.



**விருச்சிகம்:** உங்களின் தனித்திறமையை அனைவரும் பாராட்டுவர். முயற்சிக்கு உரிய பயன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**தனுசு:** முக்கிய பணி நிறைவேற தாமதம் ஆகலாம். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய மாற்றம் செய்வீர்கள். அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாக நேரிடும்.

**மகரம்:** துணிச்சலுடன் செயல்பட்டு வருவீர்கள். எதிரிகளை சாதுர்யமாக வெல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கும்பம்:** இடையூறு விலகி நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். காணாமல் போன பொருள் கைவந்து சேரும். பெண்கள் குடும்பத்தில் ஒற்றுமையை நிலைநாட்டுவர்.

**மீனம்:** பணிகளில் விழிப்புடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் வருமானம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். பெண்கள் குடும்பநலனுக்காகப் பாடுபடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறு பொறிதான் காட்டுத் தீயாம்!

சந்திரசேகர ஆசாத்

"அக்கினிக் குஞ்சொன்று
கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலே
பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும்
மூப்பென்றும் உண்டோ"

மகாகவி பாரதியின் நெருப்பு வரிகளில், ஒரு சிறு பொறி காட்டுத் தீயைமூட்டும் என்ற உண்மை கவிதையாகப் பிறப்பெடுத்துச் சுடர் விடுகிறது. இலங்கைத்தீவின் ஒரு மூலையில் நந்திக்கடலின் ஓரத்தில் பலராலும் அறிந்திராத காட்டுப்பகுதியை அண்மித்த கிராமமான கேப்பாப்பிலவில் வெடித்து இரு வாரங்களாகியும் தொடரும் நில மீட்புக்கான மக்களின் போராட்டம் பாரதி கண்ட அக்கினிக்குஞ்சை நினைவூட்டுவதில் ஆச்சரியமிருக்க முடியாது.

எந்தவிதமான போலி வாக்குறுதிகளுக்கோ, திசைதிருப்பல்களுக்கோ வளைந்து கொடுக்காத இந்தப் போராட்டம் கொளுத்தும் வெயிலையும், கொட்டும் மாசிப் பனியையும் வெட்டவெளிக் காற்றையும் தாங்கித் தங்கள் சொந்தக் காணியில் கால்பதிக்கும் வரை போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்ற உறுதியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித் தும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமெனக் கோரியும், புதுக்குடியிருப்பிலும் மக்கள் போராட்டம் சமாந்தரமாகத் தொடர்கிறது.

**பலரும் ஒன்றிணைந்து பேராதரவு...!**

அரசியல்வாதிகள், மத நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள், பல்கலைக் கழக மாணவர் அமைப்புக்கள், ஆசிரிய சங்கங்கள் எனப் பல தரப்பினரும் ஒன்றிணைந்த ஆதரவை வழங்கி வருவதுடன், பல்வேறு ஆதரவுப் போராட்டங்களையும் நடத்தி மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு வலுச் சேர்த்து வருகின்றனர். அது மட்டுமன்றி இந்தப் போராட்டம் மாகாண எல்லையைக் கடந்தும் தனக்கு ஆதரவைத் திரட்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட ஆதரவுப் பேரணியும் ஜே.வி.பியின் தொழிற் சங்கத் தலைவரான ரின்வின் சில்வா பகிரங்கமாகவே தங்கள் ஆதரவைத் தெரிவித்திருப்பதும் ஓர் ஆரோக்கியமான முன்னெடுப்பாகும். இப்படியாக விட்டுக் கொடுப்புக்களின்றித் தொடரும் இந்தப் போராட்டமும், நாடு பரந்த ரீதியில் அதற்குப் பெருகி வரும் ஆதரவும் நாடு முழுவதும் பெரும் தீயாக மூண்டெழும் என்ற அறிகுறிகளைத் தோற்றுவிக்கின்றது. ஆனாலும் போராட்டம் உறுதியுடனும், வலிமையுடனும் முன்செல்லும் நிலையில் அரச தரப்பிலிருந்தும் எதிர்க்கட்சியினரிடமிருந்தும் வெளிவரும் கருத்துக்கள் குழப்பம் மிக்கவையாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

**தலைமைகளுக்குள் கருத்து வேறுபாடு**

மக்களின் போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், தான் அரச தரப்பினருடனும் இது தொடர்பாக இருமுறை பேசியதாகவும் அவை பயனளிக்கவில்லையெனவும் மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியுடன் பேசவுள்ளதாகவும் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதே வேளை அமைச்சர் டி.எம். சுவாமிநாதனோ இராணுவத்தினர் மேற்படிக் காணிகளை விடுவிக்க ஜனாதிபதியிடம் இணக்கம் தெரிவித்திருப்பதாக மக்களுக்குத் தெரியப்படுத்தும்படி முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்குத் தெரிவித்துள்ளார்.

பேச்சுகளில் பயன் கிட்டவில்லையென்றும் மேலும் பேசப்போவதாகச் சம்பந்தன் கூற, சுவாமிநாதன் இப்படிக் கூற எது சரியானது...? இதனால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

அதேவேளையில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமாகிய எம்.ஏ.சுமந்திரன், இராணுவம் தனியார் காணிகளை விட்டு வெளியேறி அரச காணிகளில் நிலை கொள்ள வேண்டுமென்பதே அரசின் நிலைப்பாடு எனவும், 243 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டதாக அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளாரெனவும் அங்கு நிலை கொண்டிருப்பது இராணுவமேயொழிய விமானப்படையினர் அல்ல எனவும் தெரிவித்துள்ளார். ஆனால், இப்போது நடக்கும் போராட்டம் விடுவிக்கப்பட்ட காணிகளுக்கல்ல. முன்பு இராணுவ முகாம் இருந்த இடத்தில் தற்சமயம் விமானப்படை நிலை கொண்டுள்ள மக்களின் காணிகளுக்கேயாகும்.

இன்னொருபுறம் அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்தின கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் அர்த்தமற்றதெனவும் இந்த விவகாரத்தை ஓர் இரவில் செய்து முடித்து விட முடியாதெனவும் தெரிவித்துள்ளார். 2012ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பல இரவுகள் கடந்து விட்ட நிலையில் அமைச்சரின் இந்த இரவுக் கதையும் மக்களால் அந்த இரவே புறக்கணிக்கப்பட்டு விட்டது. இவ்வாறு பல்வேறு தரப்பினரிடமிருந்தும் ஒரு தரத்தின் வெவ்வேறு நபர்களிடமிருந்தும் முரண்பட்ட, குழப்பகரமான கருத்துக்கள் வெளிப்பட்டு வருவதைத் தவிர, இந்தப் பிரச்சினையின் தீர்வு தொடர்பான நம்பிக்கை எதுவும் திட்டவட்டமாக வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட முகாமுக்குப் பலமான முறையில் வேலிகள் அமைக்கப்பட்டும் பெருந்தொகையான இராணுவம் குவிக்கப்பட்டும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

**யாருக்கும் தெரியாத தொடர்ந்தும் அலைந்து திரியும் மக்களின் நிலை.**

எது நிகழினும் மக்கள் குழப்பகரமான கருத்துக்களாலும் போலிவாக்குறுதிகளாலும் இராணுவக் குவிப்புக்களாலும் தடுமாறிவிடாமல் போராட்ட இலக்கை அடையும்வரை போராடுவது என்ற முடிவுடன் இருக்கிறார்கள். இவர்கள் இவ்வாறு உறுதி கொள்ளக் காரணம் இவர்களின் வரலாறும் வாழ்வும் துன்பங்களாலும் துயரங்களாலும் இருக்குமிடங்களிலிருந்து காலத்துக்குக் காலம் விரட்டப்பட்டதுமான அவலங்களைக் கொண்டதுமாகும்.



1977,1983 காலப்பகுதிகளில் மலையகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட இந்த மக்கள் கே.சி.நித்தியானந்தாவின் தலைமையில் இயங்கிய தமிழ் மக்கள் புனர்வாழ்வுக் கழகத்தால் நெடுங்கேணியிலுள்ள கென்பாம், டொலர் பாம் ஆகிய தமிழர்களுக்குச் சொந்தமான பண்ணைகளில் குடியேற்றப்பட்டனர். 1983 இறுதிப் பகுதியில் அந்த பண்ணைகள் அரச சிறைச்சாலை திணைக்களத்துக்கு வழங்கப்பட்டு அந்த மக்கள் வெளியேற்றப்பட்ட நிலையில், ஒ... யமலை, ஊஞ்சல்கட்டி, பட்டிக்குடியிருப்பு ஆகிய தமிழ்ப் பாரம்பரிய கிராமங்களில் குடியேறினர். 1984இல் அந்தப்பகுதிகள் மகாவலி அபிவிருத்திச்சபையின் கீழ் கொண்டு வரப்பட்டு, 24 மணிநேரத்தில் அந்தப்பகுதி மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். தண்ணீரூற்று, முறிப்பு, குமுழமுனை எனப்பல பகுதிகளிலும் தஞ்சமடைந்த அந்த மக்கள் 1990இல் முஸ்லிம் கிராமமான நீராவிப்பிட்டியில் குடியமர்ந்தனர். 2002இல் முஸ்லிம்கள் திரும்பவும் நீராவிப்பிட்டிக்கு வந்து சேரவே அந்த மக்கள் கேப்பாப்பிலவில் குடியேறினர்.

1987 பிற்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையேயான போர் ஆரம்பித்த காலகட்டத்தில், திருகோணமலை மாவட்டத்தின் திரியாய், நிலாவெளி, குச்சவெளி ஆகிய பகுதிகளிலிருந்து சிங்களக் காடையர்களின் வன்முறைக் கொடுமைகள் காரணமாக அந்தப் பகுதித் தமிழ் மக்கள் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் உதவியுடன் கடல் மார்க்கமாகத் தப்பி வந்து செம்மலை, அலம்பில் பகுதிகளில் இறங்கினர். சில மாதங்களின் பின் அவர்களும் கேப்பாப்பிலவில் குடியேற்றப்பட்டனர்.

இவ்வாறு குடியேறிய மக்களுக்குச் சட்டபூர்வமாக 23.08.2005 அன்று காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதுடன் வீட்டுத்திட்டமும், வழங்கப்பட்டது. இதில் பிலக்குடியிருப்புப் பகுதியில் 84 வீடுகள் கொண்ட வீட்டுத்திட்டம், எட்டுப் பொதுக் கிணறுகள், ஓர் ஆரம்பசுகாதார நிலையம் என்பனவும் அமைக்கப்பட்டன.

போர் காரணமாக இடம்பெயர்ந்து செட்டிகுளத்தில் வைக்கப்பட்டிருந்த 350 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு, ஒரு குடும்பத்துக்குக் கால் ஏக்கர் அளவில் காணிகள் வழங்கப்பட்டுத் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு, மாதிரிக் குடியேற்றம் என்ற பெயரில் காடுகள் அழிக்கப்பட்டுப் புதிய பகுதியில் குடியேற்றப்பட்டனர். இந்த மக்கள் நடத்திய தொடர் போராட்டங்கள் காரணமாக சீனியாமோட்டைக் காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். அதேபோன்றே பிலக்குடியிருப்பு மக்களையும் மீள்குடியேற அனுமதிக்கப் போவதாகக் கூறி காணிகளைச் சென்று பார்வையிட மக்கள் அனுமதிக்கப்பட்டனர். அது மட்டுமன்றி காணிகளை அளந்து ஒப்படைக்க நாளும் அறிவிக்கப்பட்டது.

46

**எந்தவிதமான போலி வாக்குறுதிகளுக்கோ, திசைதிருப்பல்களுக்கோ வளைந்து கொடுக்காத இந்தப் போராட்டம், கொளுத்தும் வெயிலையும், கொட்டும் மாசிப்பனியையும் வெட்டவெளிக் காற்றையும் தாங்கித், தங்கள் சொந்தக் காணியில் கால்பதிக்கும் வரை போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்ற உறுதியுடன் அந்த மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைப்பழத்தினுள் ஊசி!




ஸுடோ ஸ்வாமி

தனியார் மருத்துவக் கல்லூரி விவகாரம் ஊடகங்களையும் நெடுஞ்சாலைகளையும் நிரப்பிக்கொண்டிருக்கையில் இலங்கையின் பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில் குழந்தை பிரசவிக்கச் சென்ற தாய் ஒருவருக்கு நிகழ்ந்த கொடூரம் வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது. பிரபல மருத்துவர் ஒருவரின் அலட்சியப் போக்குக் காரணமாக சிசேரியன் செய்யப்பட்ட குறித்த இளம் தாயின் வயிற்றில் காயங்களுக்குப் பயன்படுத்தப்படும் கட்டுத்துணி ஒன்று அகற்றப்படாமல் விடப்பட்டு வேதனையை உண்டாக்கியதால் பிறிதொரு சத்திரசிகிச்சை மூலம் அதனை அகற்றிய சம்பவம் ஒன்று சட்டத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட நபரால் மருத்துவரின் கவனக்குறைவைச் சுட்டிக்காட்டி 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை மருத்துவத்துறையினுள் தனியாரின் வகிபாகம் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில் குறித்த நிகழ்வு நடந்தேறியிருப்பது கவனிக்கத்தக்கது.

## சைட்டத்துக்குச் சாதகமான சந்திப்புக்கள்

கடந்த 13ஆம் திகதி இலங்கையிலுள்ள அரச மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகளுக்கும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மொகான் லால் கிரேரோ, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டி.எஸ். திஸாநாயக்க, மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருந்தது. இதனையடுத்து, சைட்டம் நிறுவனத்தில் மருத்துவமாணி மற்றும் சத்திரசிகிச்சை மாணி ஆகியனவற்றில் இறுதித்தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சை, மருத்துவம், பெண்மருத்துவம் மற்றும் மகப்பேறு போன்ற பாடப்பரப்புக்களில் சிகிச்சை நிலைப் பயிற்சி அளிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அவர்கள் குறித்த பயிற்சிக்கால முடிவில் இலங்கை மருத்துவ சபையால் நடத்தப்படும் பரீட்சை ஒன்றில் தோற்ற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியார் மருத்துவக் கல்வி முறைமையை இலங்கையில் கையாளுவதற்கான செயற்பாட்டு நடைமுறை ஒன்றைச் செயற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறித்த நடைமுறை, உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை மருத்துவச்சபை மற்றும் ஏனைய பங்குதாரர்களின் பங்களிப்புடன் உருவாக் கப்படவிருக்கிறது.

சைட்டம் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கான குழு ஒன்றை அமைப்பதற்கும் ஜனாதிபதி மைத்திரிபால உறுதியளித்திருக்கிறார். அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைப் பல்மருத்துவ நிபுணர்கள் சங்கப் பிரதிநிதிகளுடனான சைட்டம் தொடர்பான சந்திப்பிலேயே ஜனாதிபதி இந்த ஆலோசனைக்குழு விவகாரத்தை வெளியிட்டிருக்கிறார். சைட்டம் விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் தாம் கலந்தாலோசிக்கப் போகிறார் எனத் தம்மைச் சந்தித்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் லஹிரு வீரசேகரவிடமும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

வாழைப்பழத்தினுள் ஊசியை நுழைப்பதுபோல என்பார்களே அது போன்ற ஒரு பொறிமுறையைத் தான் சைட்டம் மருத்துவக்கல்லூரி தொடர்பான அரசின் நிலைப்பாட்டிலும் காணக்கிடைக்கிறது. நீண்ட காலப் போக்கில் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பதற்கான-அங்கீகரிப்பதற்கான-பொறிமுறையின் நகர்வுகள் மெல்ல மெல்ல நடைமுறைக்கு வந்தவண்ணம் இருக்கின்றன.



சைட்டம் தொடர்பான ஆரம்ப நகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்திருந்த மகிந்த ராஜபக்ஷ, சூழ் நிலைக்குத் தகுந்த வகையில் தமது கோஷத்தை மாற்றியிருக்கிறார். இப்போது அவருடைய கோசம் சைட்டம் நிறுவனத்துக்கு எதிராகத் திரும்பியிருக்கிறது.

## சைட்டம் சம்மதம்!

தாம் பெற்றிருந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி, உயர் கல்வி அமைச்சினது அங்கீகாரம் என்பவற்றுடன், அவை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களையும் தமக்குரிய விளம்பர உத்தியாக அந்த நிறுவனம் பயன்படுத்தி வந்த நிலையில், சிறிது காலத்துக்கு முன்பு அரச சார்பு வைத்தியசாலை மற்றும் வைத்தியப் பணிமனைகளில் பயிற்சி பெறுவதற்கு அதன் மாணவர்களுக்கு அனுமதி கிடைத்திருந்தது. மேற்படி பயிற்சி நகர்வுக்குச் சுகாதார அமைச்சும் ஒப்புதல் வழங்கியிருந்தது. சைட்டம் மருத்துவமாணி மற்றும் சத்திரசிகிச்சை மாணி பட்டதாரிகளை இலங்கை மருத்துவசபையில் பதிவு செய்வதற்கு உத்தரவிட்ட அண்மைய நீதிமன்ற தீர்ப்பையடுத்து சைட்டம் தனது பாதையில் மேலதிக நகர்வுகளைக் கண்டிருக்கிறது.

## மகிந்தவின் திருப்பம்!

சைட்டம் தொடர்பான ஆரம்ப நகர்வுகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்திருந்த மகிந்த ராஜபக்ச, சூழ்நிலைக்குத் தகுந்த வகையில் தமது கோஷத்தை மாற்றியிருக்கிறார். இப்போது அவருடைய கோசம் சைட்டம் நிறுவனத்துக்கு எதிராகத் திரும்பியிருக்கிறது. 2013ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மருத் துவம் பயில அனுமதி கிடைக்காத 10 மாணவர்கள் சைட்டம் நிறுவனத்தில் கல்வி பயில மகிந்த ராஜபக்சவின் வேண்டுகோளின் பேரில் தாம் புலமைப்பரிசில் வழங்கியதாக அதன் தலைவர் வெளிப்படுத்தியிருந்தமையும் இங்கு நினைவுகூர வேண்டியது.

## அமைச்சர்களின் சாத்கமான நிலைப்பாடு!

புதிதாக இரண்டு அரச மருத்துவ பீடங்களை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அறியமுடிகிறது. அவை வடமேல் மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் அமையும் என்றும் எதிர்வு கூறப்படுகிறது. எனினும் முன்னாள், இந்நாள் உயர் கல்வி அமைச்சர்களின் கருத்துக்கள், தனியார் மருத்துவக் கல்லூரிக்கான மறைமுக வரவேற்பை வழங்குபவையாகவே அமைகின்றன. அதிலும் முன்னாள் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா ஒருபடி மேலே சென்று பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் சைட்டம் தலைவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார். பன்னாட்டுப் பாடசாலைகளில் பயிலும் சுமார் 450,000 பிள்ளைகள் அரச பல்கலைக் கழகங்களுக்குள் பிரவேசிக்க முடியாத நிலை இருப்பதனால், அவ்வாறு கற்றுத் தேறும் மாணவர்களுக்கு தனியார் கல்லூரிகள் அவசியமானவை என்றும் அவர் மொழிந்திருக்கிறார்.

வர்த்தமானி அறிவித்தல்களை ஆதாரம் காட்டி சைட்டத்துக்கு ஆதரவான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளபோதிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் பல்வேறு வடிவில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றன. எதிர்ப்பு நடவடிக்கைக்கான திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டும் இருக்கின்றன. பல்வேறு காரணங்களை முன்னிறுத்தி வாழைப்பழத்தினுள் ஊசியை நுழைப்பதைப் போன்று இலங்கை மருத்துவக்கல்வித்துறையில் தனியாருக்குரிய பங்கு அரச ஆசீர்வாதத்துடன் அதிகரித்தாலும், மக்கள் எதிர்பார்ப்பது என்னவோ தமது கடமையைச் செவ்வனே செய்யும், மக்கள் உயிர் காக்கும் அலட்சியப் போக்கற்ற மருத்துவர்களையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாம் வல்ல பரம்பொருளே....

(31 பக்கத் தொடர்ச்சி)

சங்கிலிதான் கழுத்தில் அழுத்தி வலி ஏற்படுகின்றதோ? எனக் குழம்பிப் போனாள்.

சங்கிலியைக் கழற்றிச் சிறுபொழுது காத்திருந்தபோதும் அந்த வலி குறைந்ததாக இல்லை.

'வதனா இதை ஒழுங்காப்பார்' என்று அன்னபூரணி வலியுடன் முனங்கினாள்.

'என்னம்மா செய்யுது?' 'சுள் எண்டு வலிக்குது பிள்ளை' அன்னபூரணி சொன்னாள். 'கமலா சித்தாலேப போத்திலைக் கொண்டு வா?' சந்திரவதனா உரத்த குரலில் கேட்டாள்.

கமலா கொண்டு வந்த சித்தாலேபயை அன்னபூரணி சுட்டிக் காட்டிய இடத்தில் பூசித் தேய்த்தாள் சந்திரவதனா.

அதே நேரம் அருணாச்சலத்தார் கந்தசாமியுடன் வந்து சேர்ந்தார். வேதனை பொங்கும் முகத்துடன் சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த மனைவியைப் பார்த்த அவர் 'பனடோல் போட்டுப் பார்த்தால் என்ன?' எனக் கேட்டார்.

'சுடு தண்ணி ஒத்தடம் கொடுத்தால் நல்லது?' கந்தசாமியும் தன்பாட்டுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

பனடோல், சித்தாலேப போன்றவற்றால் அந்த வலி சற்றே குறைந்தது. நடந்ததை மறந்து அன்னபூரணி தூங்கிப் போனாள். காலையில் மீளவும் வலி எட்டிப் பார்த்தது. அவசரமாகக் காலைச் சாப்பாட்டை முடித்துவிட்டு வழக்கமாகத் தடிமன் காய்ச்சலுக்கு மருந்துக்குப் போகும் டொக்டரிடம் போனார்கள்.

அவர், அன்னபூரணியின் வீட்டுக்குச் சற்று அதிக தூரத்தில் இருந்தார். மிக நீண்ட காலமாகச் சிறு பிணிகளுக்கு அவர்தான் மருந்து வழங்கி வருகிறார்.

ஆயுள்வேத வைத்தியராயினும் தனக்குத் தெரிந்தவர்களுக்கு மாத்திரம் ஆங்கில மருத்துவமும் செய்வார். ஆனால், எந்தக் காரணம் கொண்டும் பக்கவிளைவுகளைத் தரும் கடும் மருந்துகளைக் கொடுக்க மாட்டார். ஒன்றுக்கு இரண்டு தடவை யோசித்து அவர் கொடுக்கும் மருந்து அன்னபூரணி குடும்பத்தைச் சிறு, சிறு வருத்தங்களில் இருந்து பாதுகாத்து வந்தது.

ரெலிபோன் டயல் செய்து, டொக்டர் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, டொக்டரிடம் போய்ச் சேர்ந்தார்கள். அன்னபூரணியுடன் அருணாசலத்தாரும் சந்திரவதனாவும். மனைவிக்கு வருத்தம் என்பதால் சற்றுப் படபடப்புடன் இருந்தார் அருணாசலத்தார்.

எல்லாக் கதைகளையும் கேட்ட அந்த டொக்டர் முடிவாகச் சொன்னார். யாழ்ப்பாணத்திலோ கொழும்பிலோ நரம்பியல் சம்பந்தப்பட்ட விசேட நிபுணத்துவம் பெற்ற டொக்டரிடம் காட்டும்படி. அருணாசலத்தாருக்குப் பயம் ஏற்பட்டது. அன்னபூரணி நடுக்கம் கொண்டாள். சந்திரவதனாதான் அவர்களைச் சமாளித்தாள்.

'பெரிய பிரச்சினையாய் இருக்குமோ டொக்டர்' அன்னபூரணி கேட்க; 'நீங்கள் பயப்பிடாதீங்கோ. இது நரம்பு சம்பந்தப்பட்ட விடயம் அதுதான் அப்படி வலி ஏற்பட்டது. உரிய பிரச்சினையை உரிய டாக்குத்தரிடத்தே தான் காட்டவேணும்'.

அவர்கள் வீடு வந்து சேர்ந்தபோது மு.ப. பத்துமணியாகி விட்டது. அருணாச்சலத்தார் ரெலிபோன் எடுக்கத் தொடங்கினார். அன்று மாலையே யாழ்ப்பாணத்துப் பிரபல தனியார் வைத்தியசாலையில் உரிய வைத்திய நிபுணரிடம் காட்டுவதற்கு மாலை ஆறுமணிக்கு வரச் சொன்னார்கள்.

மாலை ஐந்து மணிக்கே அன்னபூரணி ரெடி. கூடவே மகள் சந்திரவதனாவும் அருணாசலத்தாரும். 'நல்ல காலம் நான் வந்தது. இல்லாட்டி அம்மா கஷ்டப்பட்டிருப்பா' என்று சந்திரவதனா அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்க கமலாவுக்குத்தான் பிடிக்கவில்லை.

'அடுத்த கிழமை இவர் கனடா போய்ச் சேர்ந்த பின்னர், அன்ன பூரணிக்குத் துணை யார்?' என அவள் தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

சூழவும் கண்ணாடி ஜன்னல்கள். படம் காட்ட பளீர் என மின்னும் ஒரு ஹோலில் டொக்டரைச் சந்திக்க வந்தவர்கள் அமர வைக்கப்பட்டார்கள்.

ஆயிரத்து நானூறு ரூபா கட்டி ரிசீட் எடுத்துக் கொண்டு வந்த சந்திரவதனா ஏழாவது நம்பர் என்று சொன்னாள்.

நேரம் ஐந்து ஐம்பது. நோயாளர் எண்ணிக்கைதான் அதிகமாகிக் கொண்டு போனது. டொக்டர் வந்தபாடில்லை.

அன்னபூரணியின் வலது பக்கம் ஆறாம் நம்பர் எடுத்த பெண்மணி அமர்ந்திருந்தாள். நடுத்தரக் குடும்பம்போல நட்போடு அன்னபூரணியைப் பார்த்தாள்.

'உங்களுக்கு என்ன பிரச்சினை?' அன்னபூரணி கேட்க; அந்தப் பெண்மணியின் முகம் சட்டென்று சுருங்கியது. 'எனக்கு இந்தப் பிடரிப் பக்கம் ஒருவலி இரண்டு கிழமைக்கு முன்னர் காட்டினனான்.' அன்னபூரணிக்குப் பளீர் என்றது. இடது புறம் பார்த்தாள். அவர் எட்டாம் நம்பர் ஆள். ஒரு நடுத்தர வயது ஆண். கம்பீரமான தோற்றத்துடன் இருந்தார். நடு மண்டையில் மயிர் இல்லாவிடினும் அடர்த்தியான மீசை இருந்தது.

'அம்மா நீங்களோ ஏழாம் நம்பர்? இப்ப அஞ்சாம் நம்பர் போகுது. ஆயத்தமாக இருங்கோ'

தாதி ஒருவர் மிகப் பவ்வியமாக வார்த்தைகளை வளர்த்தினாள். அந்தப் பேச்சில் இருந்த இனிமையில் கரைந்துபோன அன்னபூரணி 'பாருங்கோவன் இந்தப் பிள்ளையள் என்ன மாதிரிக் கதைக்குதுகள் எண்டு'

எட்டாம் நம்பர் ஆள் முகம் விரியச் சிரித்தார். 'பிறகு இஞ்ச இவ்வளவு இனிமையாய், அன்பாய், நேர்மையாய்க் கதைக்கிறத்துக்கும் அரச ஆஸ்பத்திரியில் தாதிமார் கடிநாய் மாதிரிக் கடிச்சுக் குதறுவதற்கும் ஒரே காரணம்தான்' என்றார்.

திகைத்து நிமிர்ந்த அன்னபூரணி 'என்ன சொல்லுறியள்?'

'வீட்டை போய் இருந்து யோசித்துப் பாருங்கோ எல்லாம் விளங்கும். நாங்கள் என்ன செய்யலாம். நாங்கள் நோயாளர்கள்தானே. சுகம் வாறதுக்காக எல்லாத்தையும் சகித்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் பேசாமல் இருக்க வேண்டியதுதான்' – என்றார் சலிப்புடன் அவர்.

அன்னபூரணி மீண்டும் ஆறாம் நம்பர் பெண்ணிடம் வந்தாள்.

'நீங்கள் என்ன செய்யிறியள்?'

'வீட்டிலதான்' 'அவர் என்ன செய்யிறார்?'

'படிப்பிக்கிறார். இந்த வருசம் பெஞ்சன் எடுக்கப் போறார்'

'பிள்ளையள்?' 'ஆறுபேர்' 'எத்தின பேர் வெளிநாட்டில?'

'ஒருத்தருமில்லை. இப்பதான் மூத்த பெடியன் சங்கக் கடையில வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். மிச்சப் பிள்ளைகள் எல்லாம் படிக்குதுகள்' என்ற பதில் சொன்ன அந்த ஆறாம் நம்பர் பெண்மணி தொடர்ந்து சிரித்தாள். 'ஏன் சிரிக்கிறியள்?'

'இல்லை. இஞ்ச முதல்தரம் நான் வருத்தத்தைக் காட்ட வந்த அண்டு என்ர வருத்தத்தைப் பற்றிக் கேட்டதைவிடப் பிள்ளையள் என்ன செய்யுது? எத்தின பிள்ளையள் வெளிநாட்டில? என்ற கேள்விகள்தான் அதிகமாக இருந்தது'.

'ஏனாம்?' 'என்ர கழுத்தில உள்ள வலியை நிற்பாட்ட ஒரு ஒப்பிரேசன் செய்ய வேணுமாம். அதுக்கு எட்டரை அல்லது ஒன்பது லட்சம் வருமாம்!'

தலை விறைத்துப் போனாள் அன்னபூரணி.

'நான் அதுக்குச் சம்மதிக்கவே இல்லை. மருந்துகள்தான் எடுக்கிறன்'

'எல்லாம் வல்ல பரம்பொருளே! நான் என்ன செய்ய?' புலம்பத் தொடங்கினாள் அன்னபூரணி'.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 459

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | | 5 |
| 6 | | | | | | 7 | |
| 8 | | | | 9 | | | |
| | | | | | | 10 | 11 |
| 12 | | 13 | 14 | | | 15 | |
| 16 | 17 | | | | 18 | | |
| 19 | | | | | | | |
| | 20 | | | | 21 | | |

அனுப்புபவர் பெயர்:........................................................

முழுமையான தபால் விலாசம்: ..........................................

..............................................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. அஞ்சல் அலுவலகத் தலைவர்
6. செயல்
7. விரோதம்
8. நிலை கெடு
10. தோன்று (சூரியன்)
13. திங்கள், மதி என்ற பெயர்களும் இதற்குண்டு
15. பூமிக்கு மேல் ஆகாயத்தில் பயணி
16. கிராம தேவகை
18. ஓடிவு / மடிப்பு
19. திறக்குமாறான ஏவல்
21. சேதம் உண்டு பண்ணும் கடும் காற்று

### மேலிருந்து கீழ்

1. செய்யக் கூடாத
2. உலகம்
3. தோட்டத் தொழிலாளர்கள் வாழும் தொடர் வீடுகள்
4. பூட்டான் நாட்டின் தலைநகரம்
5. ஆபரணம்
9. தினுசு வகை
10. மேலதிகம்
11. திறப்பு
12. சுணாங்கு
13. ஒருவரது தாயின் சகோதரன்
14. உறைந்த பால்
17. பாற் பசு
18. முன்னர்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 457 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) நேசநாடுகள் (6) ரகம் (7) மாது (8) படகு (9) அன் (10) காசம் (11) காசு (12) ஓவியம் (14) முரசு (17) கர்வம் (18) பனி (19) பன்றி

### மேலிருந்து கீழ்

(1) நேரம் (2) சக (3) நாம்பன் (4) கடுகு (5) மது (7) மாமிசம் (9) அசுரர் (10) காயம். (11) காமுகன் (13) வில் (15) சுவர் (16) ஞானி (18)பறி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**

**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**

**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**

**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 457 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

இ.இராஜேஸ்வரி,
இல. 57, இரண்டாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

**2 ஆம் பரிசு**

செல்வன் ச.அகிலேஷ்,
'மீன பவனம்'
நெல்லியடி,
கரவெட்டி.

**3 ஆம் பரிசு**

C.V.றபேக்கா ஜெனிபர்,
இல. 15/24 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**

ஜெ.மயூரிபன்,
150, சிவபுரம்,
பரந்தன், கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**

p.எபினேஸ் மார்க்,
தோமஸ்புரி,
வங்காலை, மன்னார்.

### பாராட்டுப் பெறுவோர்

திருமதி. ஷஞ்யுதா பிரசன்னா,
மில் வீதி, மீசாலை கிழக்கு,
மீசாலை.

ம.பொணிபஸ் றோச்,
பள்ளிமுனை மேற்கு,
மன்னார்.

இராஜேஸ்வரி சக்திவேல்,
குச்சம் வீதி,
வல்வெட்டித்துறை.

சொற்சிலம்பம் போட்டி இல.459 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (01.03.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.459இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 05.03.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 457 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்த வாரம்

**19.02.2017 முதல் 25.02.2017 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

பெரும்பாலான கிரகங்கள் அளப்பரிய நன்மை தருவர். மனதில் நம்பிக்கை வளரும். சிரமமான சூழ்நிலைகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள். பணவரவில் முன்னேற்றம் இருக்கும். உடன்பிறந்தவர்கள் பாசம் கொள்வர். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். புத்திரர் படிப்பு, வேலையில் மேம்படுவர். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். மனைவி வகுத்து தரும் திட்டங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிவர்.

## இடபம்

செவ்வாய், சுக்கிரன், சூரியனால் நன்மை உண்டாகும். உறவினர்கள்மதிப்பு மரியாதை தருவர். குடும்ப செலவுக்கான பணவரவு திருப்திகரமாக இருக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் பிடிவாத குணத்துடன் நடந்து கொள்வர். உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். மனைவி அல்லது கணவர் வழியில் அதிர்ஷ்டகரமான பலன்களை எதிர்பார்க்கலாம். தொழில், வியாபாரத்தில் அரசு சார்ந்த உதவி கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளிலும் சிறந்து விளங்குவர்.

## மிதுனம்

புதன், ராகு, குரு, சனீஸ்வரர் வியத்தகு பலன் தருவர். மனதில் புத்துணர்வு ஏற்படும். தாமதமான பணிகளை எளிதில் நிறைவேற்றுவீர்கள். உங்களிடம், பலரும் நல்ல எண்ணங்களுடன் பழகுவர். சுற்றுலா சென்று வர வாய்ப்பு ஏற்படும். புத்திரர்கள் கேட்ட பரிசுப்பொருள் வாங்கித் தருவீர்கள். பூர்வ புண்ணிய பலன் பலவித நன்மைகளும் தரும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். பெண்கள் குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## கடகம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். பணிகளை நிதானமாக செய்வது பிரச்சினை களைத்தவிர்க்கும். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். ஆனால், செல்வ வளம் சிறப்பாக இருக்கும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற யோசனை சொல்வீர்கள். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். வழக்கு, விவகாரத்தில் தீர்வு வர தாமதமாகலாம். மனைவி விரும்பிக்கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரம் வளர சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்க்கும் சலுகைகள் கிடைத்து விடும்.

## சிங்கம்

புதன், சுக்கிரன் ஓரளவு நன்மை தருவர். எதிர்கால திட்டங்களை நல்லமுறையில் வகுப்பீர்கள். உங்களுக்கு வேண்டாதவர்களிடம் பேசி பிரச்சினையை வரவழைத்துக் கொள்ளாதீர்கள். பணவரவில் ஓரளவே விருத்தி உண்டு. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல்களில் கவனக்குறைவு ஏற்படலாம். சத்து நிறைந்த உணவு உண்டு, மகிழ்வீர்கள். நண்பர்களிடம் கடனாகக் கொடுத்தபணம் கிடைக்கும். மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை தரும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு கூடும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தாலும் சலுகை கிடைக்கும்.

## கன்னி

சூரியன், கேது, சனீஸ்வரர், குரு நற்பலன் தருவர். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். பணவரவு அதிகரிக்க புதிய வாய்ப்பு வரும். உடன் பிறந்தவர்கள் பணஉதவி கேட்பர். புதிய வீடு, வாகனம் வாங்க, யோகம் உண்டு. புத்திரர்கள் உங்கள் சொல்லை மதித்து செயல்படுவர். மனைவியின் உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்துடன் கருத்து மோதல் ஏற்படும். பெண்களுக்கு நகை பாதுகாப்பில் கவனம் வேண்டும். மாணவர்களுக்கு புதியவர் களின் நட்பு, நன்மை தரும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற யோசனை சொல்வீர்கள்.

## துலாம்

செவ்வாய், சந்திரன், புதனால் ஓரளவு நற்பலன் ஏற்படும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக செயல்படுவர். மன அமைதி குறையலாம். புத்திரர்கள் சில விடயங்களில், பிடிவாதமாக நடந்து கொள்வர். கடன் வாங்க நினைத்திருந்தால் இந்த வாரம் வாங்க வேண்டாம். மனைவியின் கருத்தை மதித்தால் பலன் உண்டு. தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பெண்கள் வீட்டுச்செலவுக்கு சற்று திண்டாடலாம். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் இருந்தால் தான், வெற்றி பெற இயலும்.

## விருச்சிகம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். பிரியமானவர்களுக்கு உதவுவீர்கள். தாயின் வாழ்த்து கிடைக்கும். புத்திரர்கள் படிப்பு, செயல்திறனில் மேம்படுவர். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். உடல்நிலை பேணுவதில் உரிய கவனம் வேண்டும். மனைவி விரும்பிக்கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்கள் நீண்டநாளாக எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் உறவினர்களை உபசரிப்பர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து பாராட்டு பெறுவர். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்க, தாராள பணவசதி துணை நிற்கும்.

## தனுசு

குரு, சூரியன், சுக்கிரன், கேது வியத்தகு பலன் வழங்குவர். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பணவரவு அதிகம் பெற வழி பிறக்கும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் தங்கள் செயல்திறனில் பின்தங்கலாம். சொத்து ஆவணங்களை, பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியின் ஆலோசனையால் திட்டங்கள் விரைவில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கடும் போட்டி இருந்தாலும் பொறுமையாக சமாளிப்பீர்கள். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் சிறப்பாக படித்து முன்னேறுவர்.

## மகரம்

செவ்வாய், சுக்கிரன், சனீஸ்வரர் சுப பலன்களை தருவர். ஆன்மிகசுற்றுலா சென்றுவர வாய்ப்புண்டு. உங்கள் செயல்திறன் வளரும். உடன்பிறந்தவர்களுக்கு மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. புதிய வாகனம் திட்டமிட்டபடி வாங்கலாம். புத்திரர்கள் உங்கள் சொல்லை மதித்து செயற்படுவர். உடல்நிலை சுமாராக இருக்கும். கணவன், மனைவி ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி இருந்தாலும், லாபம் நன்றாக இருக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தின் அனுசரணையால் நன்மை நடக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்கு, போதுமான பணம் இருக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரன் நன்மை தருவர். புதியவர்களின் உதவி கிடைக்கும். நீண்டநாளாக வசூலாகாத கடன் ஒன்று வந்து சேரும். வீடு, வாகனம் வாங்க, யோகம் உண்டு. புத்திரர்களால் பிரச்சினை இருந்தாலும் சமாளிக்கும் அளவே இருக்கும். பூர்வீகசொத்தில் பணவரவு கிடைக்கும். உடல்நிலை சுமாராக இருக்கும். கணவன், மனைவி கருத்து ஒற்றுமை ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை வகுப்பீர்கள். பணியாளர்களுக்கு கைநிறைய சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் மேம்படுவர்.

## மீனம்

சுக்கிரன், புதன், ராகு அளப்பரிய பலன் தருவர். திட்டங்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து கூடும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி வளரும். புத்திரர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். நண்பர்களின் அன்பு, மனதை நெகிழ வைக்கும். மனைவி வழிச் சார்ந்த உறவினர்களால், உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து சேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்களுக்கு கணவரின் அன்பும், பணவரவும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக் களத்தில்....


(37 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**நேரம் 2 மணி**
பத்திரிகை நண்பர்கள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கூடாரத்துக்குள் வந்து அமர்ந்தார்கள். ஆதரவு வழங்க வந்திருந்த மன்னார் மற்றும் புத்தளம் மக்களும், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தியும் புறப்பட்டிருந்தார்கள். 60 வயதைத் தாண்டிய 4 பெண்கள் கூடாரத்தினுள் அமர்ந்திருந்தார்கள். ஏனையவர்கள், சமையல் நடக்கும் இடத்திலும், கூடாரத்தின் வெளியேயும் அமர்ந்திருந்தார்கள். அமைதி அந்த இடத்தை ஆட்கொண்டிருந்தது.
மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், அருகிலிருந்த வயலில் இயந்திரம் மூலமான அறுவடை தொடங்கியதும் அதனை வேடிக்கை பார்க்க ஓடிச் சென்று விட்டனர்.

**நேரம் 3 மணி**
உடையார்கட்டு பாடசாலை ஆசிரியர்கள் அங்கு வந்தனர். சிறுவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கை தொடங்கியது. போராட்டம் நடத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள கூடாரத்தின் எதிர்ப்புறத்தில், மர நிழலில், வீதிக் கரையில் பாய் விரித்து அதில் அமர்ந்திருந்து கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. 10 பேர் வரையில் அன்றைய தினம் கல்வி நடவடிக்கைக்காக அங்கே கூடினர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனும் அங்கு வந்து சேர்ந்தார்.

**நேரம் 4 மணி**
வானம் மப்புக் குணமாகியது. மழை எந்த நேரமும் வரலாம் என்பதற்கு அறிகுறி சொல்லியது. இளைஞர்கள் குழு ஒன்று, தாம் சேகரித்த கற்றல் உபகரணங்களை அங்கே கொண்டு வந்தார்கள். சிறிது நேரத்தில் கற்பித்தல் நடவடிக்கை முடிவுக்கு வந்தது. சிறுவர்கள் தமக்காக கொண்டு வரப்பட்ட புதிய கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆர்வமாக இருந்தார்கள். ஒரு புத்தகப்பை, பயிற்சிப் புத்தகங்கள் என்பவற்றைச் சிறுவர்களுக்கு வழங்கினார்கள்.
மழையு இலேசாகத் தூறத் தொடங்கியது. கூடாரத்தினுள் அங்கிருந்த எல்லோரும் ஒதுங்கிக் கொண்டனர். எல்லோரையும் உள்ளீர்ப்பதற்கு கூடாரமும் போதுமானதாக இல்லை. மழை கொஞ்சம் பலத்தது. கூடாரத்தினுள்ளும் மழைத் தூறல்கள் தாராளமாக வந்தன. ஒவ்வொரு கூடாரமும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகப் போடப்பட்டிருந்தாலும், ஒன்றின் கூரை வழியே வழியும் நீர் மற்றையதற்குள் சிந்தியது.
இந்த நேரத்தில் முல்லைத்தீவு மாவட்டவைத்தியசாலை அம்புலன்ஸ் அங்கு வந்து சேர்ந்தது. மருத்துவர், தாதியர்கள் வந்திருந்தனர். "வருத்தக்காரர் போய் டொக்டரைப் பாருங்கோ" என்ற அறிவிப்பு ஒலி பெருக்கி இல்லாமலே அங்கு சத்தமாகக் கேட்டது.
வெயிலில் காய்ந்து, பனிக்குள் கிடப்பதால் பிள்ளைகள் பலருக்கு சளிபிடித்து விட்டதாகக் கூறிக் கொண்டு, மருத்துவரிடம் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு ஐந்தாறு பெண்கள் சென்றனர்.
"இது முள்ளிவாய்க்கால்தான். ஆனாச் செல்லடி மட்டும் இல்லை" என்று 60 வயதை அண்மித்த பெண் ஒருவர் சொன்னார். உண்மைதான். இடப்பெயர்வின் போது அனுபவித்த அதே வேதனையை அந்த மக்கள் மீண்டும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.
மழையால் கூடாரத்துக்குள் ஒதுங்கியவர்கள் தங்களுக்குள் கதைத்துப் பேசிக் கொண்டிருந்தனர். அதே நேரம், போராட்டத்தில் ஈடுபடும் ஆண்கள் இருவர், கூடாரத்தினுள் மழைத் தூவானம் வராமல் இருக்கும் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். மழையின் இரைச்சலும் கூடாரத்தினுள் இருந்தவர்களின் சத்தமும் அமைதியைக் கலைத்திருந்தன.

**நேரம் 5 மணி**
மழை கொஞ்சம் ஓய்வை எடுத்துக் கொண்டது. பழையபடி கூடாரத்திலிருந்து பலர் வெளியேறினர். மக்களுக்கான உதவிப் பொருள்களுடன் சிலர் வந்தார்கள். போராட்டம் ஆரம்பித்ததிலிருந்து பாதுகாப்புத் தரப்பின் மின்வெளிச்சம் நிறுத்தப்பட்டதால், மக்கள் 'சார்ச்சர் லைட்' மற்றும் மின்பிறப்பாக்கிகளைக் கொண்டு வந்தனர். வழங்கப்படும் உதவிகள் அனைத்தையும் போராட்டத்தை வழிநடத்தும் குழுவின் இளைஞன் ஒருவன் கொப்பியில் பதிவு செய்து பெற்றுக் கொண்டான். கொப்பியை எட்டிப் பார்த்ததில் பதிவுகள் நீண்டிருந் ததை அவதானிக்க முடிந்தது.



மழை காரணமாக கூடாரத்துக்குள் ஒதுங்கிய குழந்தைகள் விளையாடுவதற்கு மீண்டும் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதனால் அழுகைச் சத்தம் அதிகமாக இருந்தது.

**நேரம் 6 மணி**
போராட்டம் நடைபெறும் இடத்திலிருந்து கொஞ்சம் தொலைவில், தறித்த பெரும் மரத்தின் காய்ந்த தடிகள் இருந்தன. அவற்றை இளைஞர்களும், பெண்களுமாக தூக்கி வந்தனர்.
அடுப்பு மூட்டுவதற்கு ஒரு பெரும் கட்டையையும், கூடாரத்துக்கு முன்பாக பத்து அடி இடைவெளியில் இரண்டு கட்டைகளையும் வைத்து நெருப்பு மூட்டினர்.
கூடாரத்தில் போடப்பட்டிருந்த கதிரைகள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டன. இரவு நேரப் படுக்கைக்கு கூடாரத்தைத் தயார் செய்யும் நடவடிக்கை தொடங்கியது. மூன்று தறப்பாள்கள் அடுத்தடுத்து நிலத்தில் விரிக்கப்பட்டன. அதன் மீது பாயை விரித்துப் படுத்தனர்.

**நேரம் 7 மணி**
மறுபுறம் இரவுச் சாப்பாட்டுக்கான நடவடிக்கை நடந்து கொண்டிருந்தது. விரிக்கப்பட்ட பாய்களில் வயதானவர்கள் சரிந்திருந்தனர். அவர்கள் உறங்கிவிடவில்லை. அன்றைய தினம் புதிதாகக் கொடுக்கப்பட்ட புத்தகங்களை பிள்ளைகள் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். புதிய புத்தகத்தை எப்படி ஒரு நாள் முழுவதும் நாம் திருப்பித் திருப்பி பார்த்துக் கொண்டிருப்போமோ அதனை அந்தச் சிறுவர்கள் பாயிலிருந்து செய்து கொண்டிருந்தனர். 5 வயதுக்கு உட்பட்ட 6 சிறுவர்கள், கூடாரத்தினுள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

**நேரம் 8 மணி**
பிள்ளைகளும் பாயில் கிடந்தனர். கூடாரத்தினுள் எல்லோரும் அமைதியாகப் படுத்திருந்தனர். இரவுச் சாப்பாடு முடியவில்லை. கூடாரத் துக்கு வெளியே சமையல் தயார்ப்படுத்தலில் ஒரு குழுவினர் ஈடுபட்டிருந்தனர். மூன்று ஆண்கள் மாத்திரம் இரவு கூடாரத்தின் வெளியே – வீதிக் கரையில் போடப் பட்டிருந்த பிளாஸ்ரிக் கதிரைகளில்அமர்ந்திருந்தனர். கிறிஸ்தவ அமைப் பொன்றினால் பெட்சீட் வழங்கப்பட்டது. கொப்பியில் உள்ள பெயர்ப் பதிவைப் பார்த்து ஒவ்வொரு வருக்கும் பெட்சீட் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதன்போது அங்கே சலசலப்பு ஏற்பட்டது. 'அவனுக்குக் குடுக்கேல்ல. இவைக்கு ஏன் கொடுத்தனியள்' என்ற எம்மவர்களின் வழமையான குழப்பம் அங்கேயும் தோன்றியது. பெட்சீட் வழங்கியவர், எல்லோருக்கும் போதிய பெட்சீட் இருக்கின்றது. சகலருக்கும் தரப்படும் என்று அழுத்திச் சொன்ன பின்னர்தான் சலசலப்பு அடங்கியது.

**நேரம் 9 மணி**
இரவுச் சாப்பாடு விநியோகம். மதியச் சோற்றுடன், இரவுக்கென்று ஆக்கப்பட்ட ரின்மின் குழம்புடன் சாப்பாடு வழங்கப்பட்டது. கூடவே உருளைக்கிழங்குக் கறியும் கொடுக்கப்பட்டது. சாப்பாடு முடிந்ததும் நித்திரைக்குத் தயாரானார்கள். வீதியில் இருந்த மூன்று ஆண்கள், ஐந்து பெண்களைத் தவிர ஏனையோர் படுக்கைப் பாயில் சாய்ந்து விட்டார்கள்.

**நேரம் 10 மணி**
முழு நிலவு பல்இளித்துக் கொண்டிருந்தது. மழை வராது என்பது எல்லோரதும் ஏன் எனதும், பத்திரிகை நண்பர்களதும் நம்பிக்கை. பகல் உடுத்திருந்த அதே உடைகளுடன் படுத்தவர்களில் பெரும் பாலானவர்கள் நித்திரையாகிப் போனார்கள். வீதியில் தூக்கத்தை விடுத்து விழித்திருந்த ஐந்து பெண்களும், ஊர்ப் புதினங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னுடனும் ஏனைய பத்திரிகை நண்பர்களுடன் தமது காணிவிடுவிப்புக்காக ஊடகங்கள் செய்யும் பங்களிப்பைப் பற்றியும் பேசினார்கள்.
பத்திரிகை நண்பன் ஒருவன், போராட்டம் தொடர்பில் தொலைக்காட்சியில் வந்த செய்தியை கைபேசியில் அவர்களுக்குக் காண்பித்தான். தமது காட்சிகளை காணொலியில் பார்த்து, அதற்கு ஒவ்வொரு விமர்சனங்களைச் சொல்லிக் கொண்டனர். காணி விடுவிக்கிற அன்றைக்கு எங்களுக்குத் திருவிழாதான் என்று அங்கிருந்த பெண் ஒருவர் சொல்ல மற்றவர்களும் ஆமோதித்துக் கொண்டனர்.

(நாளை மிகுதி தொடரும்)

## அங்கக் குறையொரு தூசு

■ நா.நவராஜ்

மெய்க்குறையால் வாழ்க்கையே பொய்த்ததென எண்ணிநீர்
கையறுநி லையாய்க் கலங்காதீர் – உய்யவழி
இங்கிருக்குன் உள்ளத்தை நன்குரமாக் கின்வெல்வாய்
அங்கக் குறையொரு தூசு.

உடலூனம் கண்டுன்னை எள்ளிநகை யாடும்
திடமில்லா நெஞ்சத்தார் மாறார்– விடமென
இங்குதான் வீற்றிருப்பார் நெஞ்சம்நீ அஞ்சிடாது
பொங்கிவரும் உன்திறமை காட்டு.

காட்டும் திறமையாலே காசினியே உன்னைவாழ்திச்
சூட்டுமே பொன்மாலை பார்த்ததை விட்டிடுவார்
ஊனமென மெய்க்குறையை எள்ளிநகை யாடியவர்
ஊனம்தம் நெஞ்செனக் கண்டு.

வஞ்சகம் சூதுபொய் கொள்ளை கொலையென்ன
அஞ்சிடத் தக்க அநீதிகள் – செஞ்சலையும்
ம(ஜ)க்களிடை கண்ணற்றுக் கேள்வியற்று வாழ்கின்ற
மக்கள்உம் நெஞ்சிலில்லை மாசு.



அங்கக் குறையொரு தூசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறு பொறிதான்...

(39 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட நாளில் அங்கு சென்ற மக்கள் காலை முதல் மாலை வரை காத்திருந்தும் காணி அதிகாரிகளோ அல்லது நில அளவையாளர்களோ அங்கு வரவில்லை.

அது மட்டுமன்றி 1931ஆம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்தக் காணிகள் வனபரிபாலனத் திணைக்களத்துக்கு உரிமையுடையவை எனவும் அதில் 41 ஏக்கர் விமானப் படைக்கு வழங்கப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டது. அந்தக் காணிகள் வனபரிபாலனத் திணைக்களத்துக்குச் சொந்தமானதென்றால் 2005 ஆம் ஆண்டு எவ்வாறு அது இந்த மக்களுக்குச் சொந்தமானது என்று உறுதிப்படுத்திக் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது? எவ்வாறு வீட்டுத்திட்டம் அமைக்கவும், பொதுக் கிணறுகள் அமைக்கவும், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டது?

ஆகையால் சட்டபூர்வமாக அது இந்த மக்களின் காணியே. எனவேதான் தங்;களின் காணிகளை விடுவிக்கும்படி கோரி இன்று அவர்கள் போராடுகிறார்கள். எந்தவித தளம்பலோ தடுமாற்றமோ இன்றி அது உறுதியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அரசியல்வாதிகள் குழப்பமான கருத்துக்களை வெளியிட்டபோதும், ஆட்சியாளர்கள் பாலைவனத்தில் தாகம் தீர்க்கத் தண்ணீர் தேடும் மானுக்கு கானல் நீரைக் காட்டுவது போன்ற மாயைகளைக் காட்சிப்படுத்தினாலும் போராட்டம் உறுதி குலையாமல் தொடர்கிறது. இதற்கான ஆதரவும் மாகாண, இன, மத எல்லைகளைக் கடந்து பெருகி வருகிறது.

**வனவளத்திணைக்களம்: அரச பயங்கரவாதம்**

வனபரிபாலனத் திணைக்களம் தமிழ் - முஸ்லிம் மக்கள் பல ஆண்டுகள் நிரந்தரமாகக் குடியிருந்த மக்களின் காணிகளைச் சொந்தம் கொண்டாடுவது இது தான் முதல் தடவையல்ல. ஏற்கனவே மறிச்சுக்கட்டியில் மக்கள் குடியிருந்த காணிகள் வில்பத்து சரணாலயத்துக்கு உரியதெனக் கூறி அந்தமக்களைக் குடியேற விடாது தடுத்து வருகிறது.

ஆனால் அங்கு மக்கள் வசித்தமைக்கு இன்னமும் இடிபாடடைந்த வீடுகள், கிணறுகள் என்பவற்றையும் பராமரிப்பற்ற பள்ளிவாசலையும் காணமுடியும். 26 வருடங்களுக்கு முன்பு மக்கள் இடம்பெயர்ந்து போன நிலையில் காடுகள் வளர்வது தவிர்க்க முடியாதது. காடு இருக்கும் இடமெல்லாம் தங்களுக்குத் தான் செந்தம் என்று அந்தக் காணிகளுக்கு உரிமைகோரும் மோசடியை வனபரிபாலனத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. அவ்வாறே மக்கள் வெளியேறிய பின் காடுமண்டிய நிலையிலுள்ள ஏனைய குடியிருப்புக் காணிகளுக்கும் வனபரிபாலனத் திணைக்களம் உரிமை கொண்டாடி வருகிறது.

1931ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் இந்தக் காணிகள் வனபரிபாலனத் திணைக்களத்துக்குச் சொந்தமானதென்றால் இலங்கையிலுள்ள அனைத்துக் குடியேற்றத் திட்டங்களுக்கும் அது உரிமை கொண்டாட முடியும். இப்படித் திட்டமிட்ட முறையில் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்படும் நிலையில் மக்களுக்குப் போராடுவதைவிட வேறு வழியில்லை.

நில அபகரிப்புக்கு எதிரான போராட்டங்கள் தமிழ் மக்களால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. அவற்றின் காரணமாகத் தமிழ் மக்களையும் பன்னாட்டையும் ஏமாற்றும் வகையில் சில கண் துடைப்பு விடுவிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அடிக்கடி படிப்படியாக விடுவிக்கப்படும் என்ற மாயமான் எம்முன் உலவ விடப்படுவதுண்டு.

எனவே இன்றைய பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் ஒரு தனிப்பட்ட போராட்டமல்ல. ஏற்கனவே இடம்பெற்ற நிலமீட்புப் போராட்டத்தின் தொடர்ச்சியே. இதன் உறுதியும் இலக்கு எட்டும் வரை தொடரும் உறுதியும் ஏனைய பகுதி மக்களையும் தங்கள் போராட்டங்களைத் தொடர ஊக்கமளிக்கும்.


இது எவ்வாறு முன்னைய போராட்டங்களின் தொடர்ச்சியோ அவ்வாறே இதன் தொடர்ச்சியாக ஏனைய போராட்டங்கள் விரிவடையும்போது இது பாரதி பாடியது போன்று பொந்திடை வைத்த அக்கினிக்குஞ்சு. அது பெரும் காட்டுத் தீயாக மாறி எமது மக்களின் சொந்த நிலங்களை விடுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.



# அம்மா போய் சின்னம்மாவும்......

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகியும் அ.இ.அ.தி.மு.க தலைமைப் பதவிக்கும், முதலமைச்சர் பதவிக்கும் முன்னின்றார். அது ஜானகி - ஜெயலலிதா போட்டியாக மாறியது. உடல் நலம் குன்றியிருந்த எம்.ஜி.ஆரைப் பார்க்கத் தன்னை அனுமதிக்கவில்லை என்று ஏற்கனவே குற்றம் சாட்டியிருந்த ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். இறந்த நிலையில் அவரது உடலருகே வந்து நின்று கொண்டார். இன்று ஜெயலலிதா இறந்ததும் மேற்படி போட்டி சசிகலா - பன்னீர்செல்வமாக மாறியிருந்தது இதுவே இன்றைக்கும் அன்றைக்குமான வேறுபாடு. ஆனால் 1991இலிருந்து நச்சுப் பாம்பாக ஜெயலலிதாவின் காலைச் சுற்றி வந்து தற்போது கழுத்தைப் பிடித்திருக்கின்ற ஊழல் குற்றம் 1987களில் நிலவிய நிலவரத்தைத் திசை திருப்பியிருக்கின்றது. உச்சநீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பு சசிகலாவுக்குச் சாதகமாக வந்திருந்தால், பன்னீர் செல்வத்தின் பதவி விலகல் அறிவிப்புடன், சசிகலாவின் கோரிக்கைக்கு அமைய, ஆளுநரால் சசிகலாவை முதலமைச்சர் பதவியை ஏற்க அழைப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிருக்கும். ஆனால்



தீர்ப்பு சசிகலாவுக்கு எதிராக அமைந்து, அரசியல்நிலவரத்தை முற்று முழுதாகத்திசை திருப்பியிருக்கின்றது. இதனால் தமிழகத்தில் ஓர் அரசியல் ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அது 1988இல் முதல் முறையாக துன்பியல் சம்பவமொன்றாகவும், இப்போது இரண்டாவது முறையாக ஒரு கேலிக்கூத்தாகவும் ஆகியுள்ளது.

**தமிழ் நாட்டுத் தலைமையின் எதிர்காலம்?**

சசிகலா பன்னீர்செல்வம் இழுபறி முடிவுக்கு வந்து ஆளுநரால் எடப்பாடி பழனிச்சாமி தமிழக முதலமைச்சராக்கப்பட்டுள்ளார். ஆனாலும் எதிர்வரும் 15நாள்களுக்குள் அவர் கட்சியில் தனக்குப் பெரும்பான்மையைத் திரட்டிக் கொள்ள வேண்டும். முதலமைச்சரின் பதவிக் காலம், சட்டப்பேரவையின் நம்பிக்கை அவர் மீது உள்ள வரை நீளும். அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு, அது நிறைவேற்றப்படுமாயின் முதல்வராக இருப்பவர் பதவி விலகவேண்டும் அல்லது பதவி நீக்கப்படலாம். மத்திய அரசின் பரிந்துரையைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசைக் கலைக்கும் அதிகாரம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி இந்திய ஜனாதிபதிக்கே உண்டு. 1976இல் தி.மு.க வின் சார்பில் ஆட்சிப்பீடமேறிய மு.கருணாநிதியின் ஆட்சி ஊழலைக் காரணமாகக் காட்டி கலைக்கப்பட்டு ஆளுநர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதும் இவ்வாறே. முதலமைச்சராக உள்ள ஒருவர் இறப்பதாலோ, பதவி விலகுவதாலோ அல்லது பதவி நீக்கம்செய்யப்படுவதாலோ உருவாகும் வெற்றிடத்துக்கு, ஆளுநரால் அந்தக் கட்சியின்பால் அமைச்சரவை அமைப்பதற்கு அழைத்து சட்டப்பேரவையில் நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டு வரும்படியும் கேட்டுக்கொள்ளலாம்.

தற்போது தெரிவாகியுள்ள பழனிச்சாமிக்குப் பெரும்பான்மை இல்லாத நிலை ஏற்படும் பட்சத்தில் அவை கலைக்கப்படும் அல்லது ஆளுநர் ஆட்சி அமைக்கப்படும் அல்லது மீண்டும் தேர்தல் நடைபெறும்வரை இடைக்கால பொறுப்பாட்சி அமையும் நிலையும் எற்படலாம்.

இதில் தமிழகத்தில் எது நிகழ்ந்தாலும், இனியாவது ஊழலற்ற நீதியான நல்லாட்சியை ஏற்படுத்தும் தர்மீகக் கடமை இனி மக்களின் கைகளிலும் ஆட்சிப்பீட மேறும் தலைவர்களின் கைகளிலுமே உள்ளது. எவ்வளவு சொத்துச் சேர்த்தும் என்ன பயன்? ஜெயலலிதாவிடமிருந்து இந்த ஒன்றைக் கற்றுக் கொள்வதே இன்றுள்ள அரசியல் வாதிகளின் தேவையும் கூட. அப்போது ஊழலும் ஒழிந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அஸ்வின், ஜடேயாவிடம் ஆட்டம் காணும் ஆஸி.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில், எதிர்வரும் 23 ஆம் திகதி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய அணியை இந்தியா அடக்கி ஆளும் என்பது வெளிப்படை.

டெஸ்ட் தரப்படுத்தலில் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. ஆஸ்திரேலிய அணியுடன் ஒப்பிடுகையிலும் இந்திய அணி பலமாகவே உள்ளது. இந்தியா கடைசியாக எதிர்கொண்ட 19 ஆட்டங்களில் ஓர் தோல்வியையேனும் சந்திக்கவில்லை. அதாவது கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக இந்திய அணி தோல்வியின் பக்கம் செல்லவில்லை. இத்தகைய அணியை ஆஸ்திரேலியாவால் அசைத்துவிட இயலாது.

இந்தத் தொடரில் இந்தியா மிகப்பெரும் ஆதிக்கம் செலுத்தும் என்பதற்கு பிறிதொரு சாதக விடயமாக தொடர் இந்தியாவில் நடைபெறுகின்றமையைக் குறிப்பிடலாம். இந்தியாவில் வைத்து இந்திய அணியை வீழ்த்துவதென்பது அவ்வளவு இலகுவான விடயம் அல்ல. டெஸ்ட் தொடர் என்று வருகின்றபோது, சுழலுக்குச் சாதகமான ஆடுகளங்களை அமைக்கவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அமைக்க விரும்பும். அத்தகைய ஆடுகளங்களே காலாகாலமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

சுழல் என்று வருகின்றபோது ஆஸ்திரேலியா மிகவும் பலவீனமானதாகவே உள்ளது. ஆசிய ஆடுகளங்களில் அந்த அணி பெரும் தடுமாற்றத்தை வெளிப்படுத்தும். அஸ்வின், ஜடேயா கூட்டணியை எதிர்த்து ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்களால் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட இயலும் என்று எண்ணத் தோன்றவில்லை. துடுப்பாட்டத்தில் கோக்லி, ஆஸ்திரேலியாவின் முன்வரிசைக்கு நிகரானவராக உள்ளார். அவரைத்தவிர ராகுல், முரளிவிஜய், ரகானே என்று நீண்டு செல்கிறது வரிசை.

ஆஸ்திரேலிய அணியைப் பொறுத்த மட்டில், சுழல் வீரர் லையன், சகலதுறை வீரர் மக்ஸ்வெல் இருவரும் ஆஸியின் துருப்புச்சீட்டாக இருப்பார்கள். அவர்களின் செயற்பாட்டிலேயே ஆஸியின் வெற்றியும்-தோல்வியும் தங்கியுள்ளது. ஆஸ்திரேலிய அணியில் ஸ்ராக், லையன் என்ற வேகப் பந்து வீச்சுக் கூட்டணி உள்ளது. இந்திய ஆடுகங்கள் சுழலுக்கு சாதகமானவை என்பதால் அவர்களை எண்ணி இந்தியா அச்சப்படாது.

இவை எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கின்றபோது ஒட்டமொத்த வகையில், இந்தியா, ஆஸ்திரேலியாவை அடக்கி ஆளும் என்பது மட்டும் தெளிவு.



## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

# மிஸ்டர் 360

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவர் வில்லியர்ஸ் நேற்றுமுன்தினம் தனது 33 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். அவருக்கு உலகப் பிரபலங்கள் பலரும் தமது வாழ்த்தைத் தெரிவித்தனர். மைதானத்தின் எந்தப் பக்கத்திலும் பந்தை விரட்டும் வல்லமை வில்லியர்ஸுக்கு உண்டு. இதனால் அவரை மிஸ்டர் 360 என்று அழைப்பார்கள். சச்சினும் அவ்வாறே அழைத்து தனது வாழ்த்தைத் தெரிவித்தார். கிரிக்கெட்டில் சில ஷொட்களை அறிமுகம் செய்தவர் வில்லியர்ஸ். அவரிடம் உள்ளது மிக அரிய திறமை. பிறந்தநாள் வாழ்த்துக்கள் மிஸ்டர் 360 என சச்சின் தனது வாழ்த்துக் குறிப்பில் குறிப்பிட்டார்.

# பொருசியா டொட்மன்ட் ரசிகர்கள் ஆட்டங்களை நேரில் பார்க்கத் தடை



பொருசியா டொட்மன்ட் ரசிகர்கள் 88 பேருக்கு, ஆட்டங்களை நேரில் பார்க்கத் தடை விதித்தது ஜேர்மன் கால்பந்து சம்மேளனம்.

இங்கிலாந்தில் பிரிமீயர் லீக், ஸ்பெயினில் லா லிகா, பிரான்சில் லீக் -1 கால்பந்து தொடர்கள் நடைபெறுவதுபோல், ஜெர்மனியில் பண்டேஸ் லிகா தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை பொருசியா டொட்மன்ட் - டார்ம்ஸ்டாட் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தைக் காண இரண்டு பேருந்துகளில் டொட்மன்ட் ரசிகர்கள் ஆரவார்ரத்துடன் வந்தனர். பொலிஸார் அந்த வாகனங்களை மறித்து சோதனை செய்தனர். எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் பொருள்கள், போரின்போது பயன்படுத்தப்படும் கையுறைகள், வலிநிவாரண மருந்து உள்ளிட்டன வாகனத்தில் வைக்கப்பட்டிருந்தன. இந்தத் தகவல் ஜேர்மன் கால்பந்து சம்மேளனத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

ஜேர்மன் கால்பந்து சம்மேளனம், டொட்மன்ட் நிர்வாகத்துடன் பேச்சு நடத்தி, பேருந்துகளில் இருந்த 88 ரசிகர்களுக்கும் ஆட்டங்களை நேரில் சென்று பார்க்க தடை விதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிவபூமி முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆவது ஆண்டு நினைவாக புதிய இரு கட்டடங்கள் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டன. சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஜெயலட்சுமி சாரட் தம்பதியினர், ஏஞ்சல், தொண்டுநாத சுவாமிகள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (ஐ)



விசுவமடு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கலந்துகொண்டார். (10)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வின் காணொளி இறுவட்டை மாணவர் நாடளுமன்ற பிரதமர் செல்வன் சிவகுமாரன் ராகுலன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனிடம் உதயன் பணிமனையில் கடந்த 11 ஆம் திகதியன்று கையளித்தார்.(ஐ)



சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டி கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானப்பொன்ராஜா தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. இதில் முதலாம் இடத்தைப்பெற்ற யோண்சன் இல்லத்தின் அணித்தலைவருக்கு முதன்மை விருந்தினரின் பாரியார் றொசினி பொன்னையா வெற்றிக் கிண்ணம் வழங்கி வைத்தார். (23)



யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை மாணவிக்குத் துவிச்சக்கரவண்டி ஒன்றை யாழ்ப்பாணம் சுன்னாகம் நொதோன் பிற்னஸ் உரிமையாளர் சிவகுமாரன் சிவசங்கர் அன்பளிப்பு செய்தார். அதனை நிறுவன முகாமையாளர் ஐ.ஞானேந்திரா மாணவிக்கு வழங்கினார். (10)



தமிழ் தேசிய செயற்பாட்டுக்குழு நிறுவனத்தால் வறுமைக்கோட்டுக்குள் வாழும் 100இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு வவுனியா இலங்கைத்திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பாதணிகளை வழங்கி வைத்தார். (10, 402)



சந்நிதியான் ஆச்சிரம தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது மக்கள் வங்கி சார்ந்த உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட அன்பளிப்பால் பெறப்பட்ட தையல் இயந்திரம் தொண்டமானாறு கிராமத்தைச் சேர்ந்த செல்வி மீராவுக்கு வழங்கப்பட்டது. (10)



கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியைச் சேர்ந்த இரு சிறுநீரகமும் பாதிக்கப்பட்ட ஒரு காலினை இழந்த முன்னாள் போராளிக்கு லண்டனில் உள்ள இந்து ஆலயம் ஒரு லட்சத்துக்கு73 ஆயிரத்து 850 ரூபா நிதியை அண்மையில் வழங்கி வைத்தது.
லண்டனில் உள்ள குளோசஸ்ரர் பிள்ளையார் இந்து ஆலயம், பளை மத்திய கல்லூரி ஆசிரியர் ம.மதிதாஸிடம் இந்த நிதியை வழங்கியது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத கருத்துக்களை வெளியிடுகிறார் ஜீ.எல்.பீரிஸ்

## கீர்த்தி தென்னக்கோன் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.19

முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சரும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவருமான ஜீ.எல். பீரிஸ், இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் என்று இலங்கை மனித உரிமை கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராமநாதன் கண்ணன் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேவைக்கு அமையவே என்று ஜீ.எல்.பீரிஸ் வெளியிட்ட கருத்து அடிப்படையற்றது. இந்தக் கருத்தானது இனவாத அடிப்படையிலான கருத்தாகும். தமிழர் பிரதேசங்களில் மட்டுமன்றி, அனைத்துப் பிரதேசங்களிலும் தாமதமாகும் வழக்குகளைத் துரித கதியில் விசாரணை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதற்காகவே அரச தலைவர், இராமநாதன் கண்ணணை நியமித்துள்ளார். ஜீ.எல்.பீரிஸ் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிப்பது குறித்த நடைமுறைகளையும், சட்டங்களையும் அறியாதவரல்லர்.

அரசியல் கட்சியொன்றுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிக்க முடியாது. இவ்வாறான ஒரு நிலையில் பொய்யாக இந்தக் குற்றச்சாட்டை ஜீ.எல்.பீரிஸ் சுமத்தியுள்ளார். இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதானது ஆச்சரியத்தையே ஏற்படுத்துகின்றது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் அமல் ரந்தெனியவால் நீதிச்சேவை சங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேல் நீதிமன்ற நீதிபதியாக கண்ணன் நியமிக்கப்பட்டமை தொடர்பான விவரங்கள் காணப்படுகின்றன- என்றுள்ளது. (ஐ)

# கடற்படையினரிடமிருந்து தப்பிக்க ஆற்றில் பாய்ந்த இளைஞன் சாவு

கொழும்பு,பெப்.19

சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 22 வயதான இளைஞன் ஒருவர், கடற்படையினரிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஆற்றில் பாய்ந்தார். எனினும் அவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் களனி ஆற்றுப்பகுதியில் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில்தெரியவருவதாவது:

சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வைத் தடுக்க, களனி ஆற் றுப்பகுதியில் கடற்படையினர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அன்றையதினம் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த பியகம பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கடற்படையினரைக் கண்டவுடன் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக களனி ஆற்றில் பாய்ந்துள்ளார்.

எனினும் அவரால் நீரில் இருந்து மீள முடியவில்லை. அதனையடுத்து அவரின் சடலத்தைக் கடற்படையினர் மீட்டெடுத்தனர் எனத் தெரியவருகிறது. (ஐ)

# பொலிஸ் அதிகாரிகள் எண்மருக்கு பதவியுயர்வு

கொழும்பு,பெப்.19

பொலிஸ் அதிகாரிகள் 8 பேர் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளனர். குறித்த பதவி உயர்வு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பரிந்துரைக்கமைய, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பதில் பிரதி பொலிஸ் மா அதிபர்களாகக் கடமையாற்றியவர்களுக்கே இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, வன்னி, மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா ஆகிய பிராந்தியங்களுக்கும் அரச புலனாய்வுப் பிரிவுக்கும், இவர்கள் பிரதி பொலிஸ் மா அதிபர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். (ஐ)

# பாடசாலையில் 18 பேருக்கு குளவிக்கொட்டு

கொழும்பு,பெப்.19

ஹாலி - எல ரொசட் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் 18 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஹாலி எல உனுகல மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாடசாலை அதிபர் , 2 ஆசிரியர்கள் மற்றும் 15 மாணவர்கள் என்று 18 பேர் காயமடைந்துள்ளனர். குளவியின் தாக்கதலுக்கு இலக்கான எவருக்கும் பாரதூரமான பாதிப்பு எதுவும் ஏற்பட வில்லை என்று மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (ஐ)




கனவொன்றைச் சுமந்தவரின் சரித்திரம்

## ரஞ்சன அவர்கள் 'Max Pora' ஆக மாறிய பயணம்

இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக, அவர்களுடன் நெருக்கமான ஒரு பிணைப்பைக் கொண்டுள்ள ஒரு உற்பத்தியான .:.பெயார் அன்ட் லவ்லி மெக்ஸ் .:.பெயார்னஸ், ஆண்களின் அழகை மேம்படுத்தும் திறன்மிக்க ஒரு தீர்வாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. ஆண்களுக்கென விசேடமாகத் தயாரிக்கப்படுகின்ற அழகுபடுத்தல் கிறீம்கள் போதுமான அளவில் சந்தையில் கிடைக்காமையைக் கருத்தில் கொண்டு, அதற்கு தீர்வளிக்கும் வகையில், .:.பெயார் அன்ட் லவ்லி மெக்ஸ் .:.பெயார்னஸ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆண்களைப் பாதிக்கின்ற சருமப் பராமரிப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு மிகவும் பொருத்தமான ஒரு தீர்வாகவும் அமைந்துள்ளது. இளைஞர்களை 'Max Pora' ஆக மாற்ற உதவும் வழிமுறைகளை ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில், மெக்ஸ் .:.பெயார்னஸ் ஆனது தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளது. அந்த வகையில், வெற்றியாளர்களுக்கு அதிநவீன Tivoli SUV வாகனங்களை வெகுமதியளிக்கும் வகையில் 'இரு உலகிற்கு இரு SUV வாகனங்கள்' என்ற பணம் கொடுத்தாலும் வாங்க முடியாத Tivoli Max SUV வாகனங்களை வழங்கும் ஊக்குவிப்புப் பிரச்சாரத்தை .:.பெயார் அன்ட் லவ்லி மெக்ஸ் .:.பெயார்னஸ் முன்னெடுத்து வருகின்றது. இன்றைய உலகில இளைஞர்களின் வேகம் கொண்ட, விறுவிறுப்பான வாழ்க்கைமுறைக்கு . கச்சிதமாகப் பொருந்துகின்ற வகையில வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ள Tivoli வாகனத்தை வென்றுகொண்ட அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களில் ரஞ்சன் விஜேசிங்க அவர்களும் ஒருவர். அவர் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவரை நாம் சந்தித்த போது அவரின் மட்டற்ற மகிழ்ச்சியை இன்னும் உணரக்கூடியதாக உள்ளது.

**நீங்கள் புதிய மோட்டார் காரைப் பெற்றுக்கொண்ட பின்னர் உங்களுடைய வாழ்க்கை எந்த அளவிற்கு மாற்றம் கண்டுள்ளது?**

நான் உண்மையில் கட்டுக்கடங்காத அளவில் பூரிப்படைந்துள்ளேன். இந்த வெற்றியையிட்டு எனது முழுக் குடும்பத்தினருமே மட்டற்ற அளவில் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**'இரு உலகிற்கு இரு SUV வாகனங்கள்' என்ற போட்டி தொடர்பில் நீங்கள் எவ்வாறு அறியப்பெற்றீர்கள்?**

நான் சில காலமாகவே மெக்ஸ் .:.பெயார்னஸ் கிறீமைப் பாவித்து வருகின்றேன். கிறீமின் புதிய கையிருப்பைக் கொள்வனவு செய்யச் சென்ற சமயத்தில் இப்போட்டி தொடர்பில் முதலில் அறிந்து கொண்டேன். அதன் பின்னர், ஊடகங்கள் வாயிலாக இது தொடர்பில் பல்வேறு விபரங்களையும் அறிந்துகொண்டேன். பக்கட்டில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றினேன். இரகசியக் குறியீட்டை 6997 என்ற இலக்கத்திற்கு எஸ்எம்எஸ் மூலமாக அனுப்பி வைத்தேன். உண்மையில், நான் ஒன்றுக்கு மேற்பட்டவற்றை அனுப்பி வைத்துள்ளேன். ஏராளமான எனது நண்பர்களும் இப்போட்டியில் பங்கெடுத்திருந்தனர். அது எமக்கிடையில் விறுவிறுப்பான ஒரு போட்டியை ஏற்படுத்தியது. அதனாலேயே ஒன்றுக்கு மேற்பட்ட எஸ்எம்எஸ் செய்திகளை அனுப்பி வைத்தேன். இரு SUV வாகனங்களுடன் மெக்ஸ் .:.பெயார்னஸ் பாடலை ஒவ்வொரு தடவை நான் பார்க்கும் போதும் நான் Tivoli ஒன்றை வெல்வேன் என்ற அறிகுறி எனக்குள் ஏற்பட்டதுடன், எனது கனவு நனவாகும் தூரம் வெகு தொலைவில் இல்லை என்ற உணர்வும் ஏற்பட்டது.

**அவரது கனவு உண்மையிலேயே நனவாகியுள்ளது என்பதை வலியுறுத்தும் வகையில் ரஞ்சன் தனது மோட்டார் காரை பெருமையுடன் காண்பித்தார்.**

**ரஞ்சன் அவர்களே, தங்களது குடும்பத்தை பற்றி எமக்கு கூற முடியுமா?**

எனது தந்தை ஒரு விவசாயி, தாய் ஒரு இல்லத்தரசி. எனக்கு இரு சகோதரிகள் [illegible] திணைக்களத்தின் தொழிற்பட்டறையில் தொழில்புரிந்து வருகின்றேன்.

**நீங்கள் Tivoli வாகனத்தை வென்றுள்ளீர்கள் என்பதை எவ்வாறு அறிந்துகொண்டீர்கள்?**

மெக்ஸ் .:.பெயார்னஸ் பிரதிநிதி ஒருவர் எனது அலுவலகத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி, நான் வழங்கியுள்ள தகவல்களை சரியானவையா என்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். எனது நண்பர்கள் வேண்டுமென்றே குறும்பு செய்கின்றனர் என்றே முதற்கணம் நினைத்தேன்.

அழைப்பினை ஏற்படுத்தியவர் நான் பரிசொன்றை வென்றுள்ளதாக குறிப்பிட்டதுடன், அது மோட்டார் கார் என்பதைக் குறிப்பிடவில்லை. மேலும் அது தொடர்பில் எவ்விதமான மறைமுக குறிப்பையும் வெளிப்படுத்தவில்லை. நான் மோட்டார் காரை வென்றுள்ளேன் என்பதை பின்னர் அறிந்து கொண்டதுடன், அதைப் பெற்றுக்கொண்டபோது உண்மையில் ஆச்சரியப்பட்டேன்.

**நீங்கள் மோட்டார் கார் ஒன்றை வென்றுள்ளதாக அறிந்த போது எத்தகைய உணர்வு ஏற்பட்டது?**

உண்மையில் அதனை வார்த்தைகளால் வடிக்க முடியாது. எனது வீட்டிற்கு அதனை எடுத்து வந்து கையளித்தபோதே நான் மோட்டார் காரை வென்றுள்ளதை அறிந்துகொண்டேன். போட்டியில் பரிசொன்றை நான் வென்றுள்ளதாக எனக்குகூறப்பட்டிருந்தாலும், அதன் பின்னர் என்னை எவரும் தொடர்பு கொள்ளவுமில்லை, பரிசைப் பெற்றுச் செல்வதற்கு வருமாறு அழைக்கவுமில்லை. மெக்ஸ் .:.பெயார்னஸ் அணி எனது வீட்டிற்கு மோட்டார் காரை எடுத்து வருவர் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் இது ஒரு அதிர்ச்சியான செய்தியாகவே மாறியது. எனது வீட்டு முற்றத்தில் காரைக் கண்ட போது எனக்கு ஆனந்தக்கண்ணீர் வழிந்ததுடன், இது உண்மையில் நம்ப முடியாத ஒரு சம்பவமாகவே அமைந்துவிட்டது.

**மட்டற்ற மகிழ்ச்சியால் அவரின் முகம் பிரகாசம் அடைந்ததுடன், இந்த வெற்றி அவரின் வாழ்க்கையில் எத்தகைய திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது என்பதை அவர் தொடர்ந்தும் எம்மிடம் கூறினார்.**

நான் கிராமப்புறப் பாடசாலையொன்றில் கல்வி கற்றவன், அதன் பின்னர் குருணாகல் புனித அன்னம்மாள் கல்லூரியில் தொடர்ந்தும் எனது கல்வியை முன்னெடுத்தேன். வாகனங்கள் தொடர்பாக, குறிப்பாக அவை எவ்வாறு தொழிற்படுகின்றன என்பது தொடர்பில் எனக்குள் பாரிய ஆர்வம் இருந்தது. ஆகவே எனது உயர் தரப் பரீட்சையில் சித்தியெய்திய பின்னர், இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் மூன்றரை ஆண்டுகள் கல்வி பயின்றதுடன், மோட்டார் பொறியியல் பாடநெறி ஒன்றையும் கற்றுள்ளேன். அதன் பின்னர் நான் இலங்கை புகையிரத திணைக்களத்தில் இணைந்து கொண்டேன்.

**நீங்கள் புதிய Tivoli வாகனத்தில் உங்களது குடும்பத்தை முதன்முதலாக எங்கு அழைத்துச் சென்றீர்கள்?**




நவம்பர் 19 ஆம் திகதியன்று மோட்டார் காரை நான் பெற்றுக்கொண்டேன். முதன்முதலாக எனது கிராமத்திலுள்ள ஆலயத்தில் ஆசி பெறுவதற்காக அதனைக் கொண்டு சென்றோம். எனது சொந்த வாகனத்தில் எனது குடும்பத்தை தலதா மாளிகைக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்ற கனவு எனக்குள் எப்போதும் இருந்தமையால், கண்டியிலுள்ள தலதா மாளிக்கைக்கு முடிந்த வரை விரைவாக எனது குடும்பத்தினரை அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளேன். மெக்ஸ் .:.பெயார்னஸ் கிறீமின் தயவால் அந்த கனவு தற்போது நனவாகியுள்ளது.

**ரஞ்சன் ஒரு கடின உழைப்பாளி, இலட்சியத்தை அடைந்து கொள்வதில்விடாப்பிடியாக உழைக்கும் ஒருவர். வேலைப்பளுமிக்க அவரின் பணிநேரத்திற்குப் புறம்பாக, அவர் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்வியையும் முன்னெடுத்து வருகின்றார். அவர் விசுவாசம் மிக்க மெக்ஸ் .:.பெயார்னஸ் வாடிக்கையாளராக இருக்கின்ற காரணத்தால், இந்த உற்பத்தி தொடர்பில் அவரது கருத்து என்ன என்பதை அவரிடம் கேட்டோம்.**

மெக்ஸ் .:.பெயார்னஸ் தனது பெயருக்கு ஏற்ப உண்மையாக அர்த்தம் கற்பித்து வருகின்றது. நான் பலவிதமான கிறீம் வகைகளை பாவித்துப் பார்த்துள்ளதுடன், இறுதியில் மெக்ஸ் .:.பெயார்னஸ் கிறீமைத் தெரிவு செய்தேன். அதன் தனிச்சிறப்பை உடனடியாகவே உணர முடிந்தது. அனைவருக்கும் இதனைப் பரிந்துரை செய்கின்றேன்.

**தற்போது இந்த SUV மூலமாக உங்களது எதிர்காலம் எவ்வாறு அமையும் என நீங்கள் எண்ணுகின்றீர்கள்?**

இந்த மோட்டார் காரை எனக்கு உயிருக்கு ஒப்பானதாக நேசிக்கின்றேன். ஆகவே மிகவும் கவனத்துடன் எனது வாகனத்தை பாவிக்கின்றேன். இன்னும் வியக்க வைக்கும் வகையில் சில கூடுதல் மாற்றங்களை செய்ய எண்ணியுள்ளேன்.

**அவர் முன்னெடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றிபெறுவதற்கு அவரை வாழ்த்தி, அவரிடமிருந்து விடை பெற்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IPS

இலவச கணினி வகுப்புக்கள் - பிரிவு V
பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், கணினி பரீட்சைகளிற்கு தோற்றுபவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

- Diploma in Ms Office
- Diploma in Internet Technology

ஆரம்பம் - 25.02.2017 சனிக்கிழமை 10.00 A.M
பெறுமதிமிக்க சான்றிதழ் காலம் : 3 மாதங்கள்
IPS திருநெல்வேலி.(சாயி சமித்திக்கு அருகில்)
Hot line - 076 685 2529

வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகர பகுதியில் வீடு
வாடகைக்கு தேவை .
தொடர்பு :-076 638 56 26

வீடு வாடகைக்கு

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு மேற்காகவும், சமீபமாகவும் சகல வசதிகளும் உடைய வீடொன்று வாடகைக்கு உண்டு.
நடுத்தர குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு - 072 280 9354

# கண்ணீர் அஞ்சலி

## சண்முகம் பிரபாகரன்

(உரிமையாளர் - அபிஷா கட்டட பொருள்கள் விற்பனை நிலையம், அளவெட்டி)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03.05.1971 | 17.02.2017 |

**பண்பாக பேசும் பண்பாளனே**
**அன்பாக நடக்கும் அறிவாளனே**
**நன்மதிப்பிற்குரிய வாடிக்கையாளனே**
**நேர்மையும் விசுவாசமும் உடையவனே**
**உமது பிரிவை எம்மால்**
**ஏற்றுக்கொள்ளமுடியவில்லை**
**கலங்குகின்றோம் நாம்**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பிரிவால் துயருறும் : உரிமையாளரும், ஊழியர்களும்.**
**சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்**
**55, 57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

## திருமலைசெல்வம் சஞ்சீவ்



நவிண்டில் கரணவாய் வடக்கு, சக்களாவத்தையைப் பிறப்பிடமாகவும், நவிண்டில் திருமகள் சோதி வீதியை, வதிவிடமாகவும் கொண்ட திருமலைசெல்வம் சஞ்சிவ் 18.02.2017 சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் நவிண்டில் சக்களாவத்தையைச் சேர்ந்த திருமலைசெல்வம் - சியாமினி (செல்லா டிஜிற்றல் வீடியோ) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் பிரதீப், தனுஷ்கர் (நெல்லியடி ம.மா.வி), கிஷோர் (நெல்லியடி ம.மா.வி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான கணவதிப்பிள்ளை, பத்மலோசினி மற்றும் சிவகுமார் - ஜெயசோதி தம்பதியரின் பேரனும் ஜெயக்குமார் (சுவிஸ்), சுபாசினி (சுவிஸ்), அன்னலட்சுமி (செல்வி - பிரான்ஸ்), ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான தவராஜா, செல்வராஜா, செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவிண்டில் எள்ளங்குள மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**திருமகள் சோதி வீதி,**
**நவிண்டில்.**
**021 226 2262**
**077 3144 808**

## நாட்டை சீர்குலைக்க பல தரப்பினர் முயற்சியாம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாட்டை முன்னேற்றும் முயற்சியைச் சீர்குலைக்கப் பலர் முயற்சிக்கின்றனர். இவ்வாறு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.


மாத்தளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

நலத் திட்டங்களை மேற் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பவே மைத்திரிபால சிறிசேன அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் தலைமையில் மக்கள் நல முயற்சிகள் மேற் கோள்ளப்படுகின்றபோது அதைத் தடுக்கப் பல நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுகின்றன. அத்தகைய முயற்சிகளுக்கு அரசு அடிபணியாது- என்றார். (ற)

# மரண அறிவித்தல்

## திருமதி அருளாம்பிகை ஆறுமுகம்

(வெற்றிலையூர் ஆறுமுகத்தின் மனைவி)



காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளாம்பிகை ஆறுமுகம் நேற்று (18.02.2017) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தங்கமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் பாசமிகு மனைவியும் பரமேஸ்வரன் கனகாம்பிகை காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் கமலாம்பிகை, விக்கினேஸ்வரன் (லண்டன்), வேதாம்பிகை, குகேஸ்வரன், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயும் மனோன்மணி, ஆறுமுகம் (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்), சந்திரமதி, சுந்தரலிங்கம், கௌரி, சத்தியராணி, பவானி (மருந்தகவியலாளர், காரைநகர் பிரதேச வைத்திய சாலை) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான தம்பையா, தங்கம்மா, சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற உமாதேவி, செல்வராணி மற்றும் இராசையா ஆகியோரின் அன்புச்சகோதரியும் மயூரன், கயூகரன், அகல்யா, நிரஞ்சினி, தனாகரன், குகநந்தினி, லோகானந்தன், கீதாஞ்சலி, கஜேந்திரன், வினோயினி, கஜானி, சசிதரன், அகிலன், ஜனகன், உமாகாந்தன், மாதுரி, திவாகரன், குயிலினி, சாரதா, தேனுசன், வித்தியாகர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2017) திங்கட்கிழமை அவரது இடைப்பிட்டி இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**இடைப்பிட்டி,**
**காரைநகர்.**
**077 175 4680**

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி கார்த்திகேசு



மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கு, கிராம்புவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதிமகேஸ்வரி கார்த்திகேசு (18.02.2017) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின்அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்புமனைவியும் பரமேஸ்வரி, சற்குணம் (கனடா) காலஞ்சென்ற கணேசபிள்ளை, மற்றும் பத்மநாதன், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் புவனேஸ்வரி, கமலேஸ்வரி, தங்கராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும் சந்திரசேகரம் மங்கையற்கரசி, குணசேகரம், சிவராசா, பிரபாகரன் (ஜேர்மனி), செல்வராணி (ஆசிரியை, கோகிலாக்கண்டி GTMS ), ஜெயசீலன் (செலிங்கோ இன்சூரன்ஸ் - சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத்தாயும் குமரகிருபாதேவி, திருநாவுக்கரசு, மகேஸ்வரி, சிவமங்கை (ஆசிரியை, கோகிலாக்கண்டி மகாலக்ஷ்மி மகாவித்தியாலயம்), றனிதா (ஜேர்மனி), கணேசலிங்கம் (AIA- யாழ்ப்பாணம்), சசீலா (Do -Ds Office - புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மாமியும விஜிதா (லண்டன்), தர்சனா, சுபேதா (வைத்தியர் திருகோணமலை), சதுர்ஷியா (லண்டன்), கஸ்தூரி, சங்கவி (மாணவி - J/CHC), சுதர்சன் (செயலாளர் வலி தெற்கு பிரதேசசபை), வினோதா (Co -Ds Office - பளை),துஷாந்தன் (பல் வைத்தியர்), மயூரி, மயூராம் (TO - யாழ்ப்பாணம்), மயூபரன் (மாணவன் - J/CHC), மயூகிருஷ்ணா (மாணவன் - JHC), சாம்பவி (மாணவி - J/CHC), திருவேள் (மாணவன் - JHC), திருவிழி (மாணவி - J/VGHS), அபிவாணி (மாணவி- J/CHC), அர்ச்சயன் (மாணவன்- J/CHPS), ரிஷிகேசன் (மாணவன்- J/CHPS), தபர்ணா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அரின் (லண்டன்), அக்ஷிகா, அக்ஷரன், ஹரிணிகா, டன்ஷிகா, ஷகீன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**1ஆம் கட்டை வீதி,**
**சாவகச்சேரி வடக்கு, கிராம்புவில்.**
**077 316 4549, 077 137 1097**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலைத்தாசர் சபை நிறுவுநர் யாழ். மண்ணின் மைந்தர் தோமஸ் அடிகளார் இறையடி சேர்ந்து 53 ஆண்டுகள்

## விரைவில் அவருக்குப் புனிதர் பட்டம் கிடைக்கச் செபிக்கும்படி செபமாலைத்தாசர் சபை முதல்வர் செபமாலை பிரான்சிஸ் அடிகளார் வேண்டுகோள்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

தோமஸ் அடிகளார் இறையடி சேர்ந்த 53ஆவது ஆண்டு நிறைவு கடந்த மாதம் 26 ஆம் திகதி இலக்கம் 5 கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் திருப்பலியுடன் நினைவு கூரப்பட்டது. அடுத்த மாதம் 7 ஆம் திகதி அவரின் 131ஆவது பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது.

**செபமாலைத்தாசர் சபையின் முதல்வர் செபமாலை பிரான்சிஸ் அடிகளார்**

செபமாலைத்தாசர் சபை முதல்வர் செபமாலை பிரான்சிஸ் அடிகளாரிடம் இந்தத் தினம் பற்றிக் கேட்ட போது அன்றைய தினம் அருள் ஆச்சிரமத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அவரின் கல்லறையும் ஆசீர்வதிக்கப்பட்டது. செபமாலைத் தாசர் சபை நிறுவுநர் யாழ் மண்ணின் மைந்தர் பி.எ. தோமஸ் அடிகளாருக்கு விரைவில் புனிதர் பட்டம் கிடைக்க செபிக் கும்படி அனைவருக்கும் அன்பான வேண்டுகோள் விடுக்கி றோம் என்றார்.

**தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டப்பணியை ஆற்றும் ஏ.எம்.ஸ்ரிபன் அடிகளார்**

செபமாலைத்தாசர் சபை முதல்வராக மூன்று தடவைகள் ((1996-1999) (2000-2003) (2003-2006)) பணியாற்றியவரும் செபமாலைத்தாசர் சபையின் உயர் தலைவராக இந்தியாவில் உள்ள தலைமைப் பீடத்தில் 2006 முதல் 2012 வரை பணியாற்றியவருமான ஏ.எம்.ஸ்ரிபன் அடி களார் செபமாலைத்தாசர் சபை, நிறுவுநர் யாழ் மண்ணின் மைந்தர் இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரின் புனிதர் பட்டப்பணியை இலங்கையில் ஆற்றி வருகிறார்.


இவரிடம் கலந்துரையாடியபோது. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்ட நிலைக்கான முதல் கட்ட ஆவணங்கள் அனைத் தும் யாழ். ஆயரால் இலங்கைக்கான திருத்தந்தையின் தூதுவர் மூலமாக உரோமாபுரியில் உள்ள திருத்தந்தைக்கு அனுப்பி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் இவர் இறையடியார் என அழைக்கப்படுகிறார். உரோமாபுரியில் உள்ள அமலமரித்தியாகிகள் சபையின் உயர் தலைவர் வழிநடத்தலில் புனிதர் பட்டத்திற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி தொடர்பாக உரோமாபுரியில் இருந்து குருவானவர் ஒருவர் இங்கு வந்து யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துள்ளார். அவர் மீண்டும் இங்கு மேலதிக பணி களுக்காக வரவுள்ளார்.

முதலில் அருளாளர் நிலையையும் தொடர்ந்து புனிதர் பட்டத் தையும் இவர் பெற்றுக் கொள்ள செபிக்க ஏராளமான பக்தர் கள் அருள் ஆச்சிரமத்தில் உள்ள இவரின் கல்லறைக்கு வந்து வேண்டுதல் செய்கிறார்கள். இவரின் புனிதர் பட்டத்திற் காக செபிக்கும் செபஅட்டையை பக்தர்கள் அருள் ஆச்சிர மத்தில் பெற்று செபிக்க முடியும். இவர் பெயரில் நடை பெறு கின்ற புதுமைகளை யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் ஆதாரங்களுடன் தெரிவிக்க அழைக் கப்படுகின்றனர் என ஏ.எம்.ஸ்ரிபன் அடிகளார் தெரிவித்தார்.

**சில மணி நேரமே உயிர் வாழ்வார் எனக்கருதப்பட்டவர்**

எலும்பும் தோலுமாக, நலிந்து மெலிந்த தோற்றத்துடன், ஒரே ஒரு சுவாசப்பையுடன் பிறந்து (1886 மார்ச் 07), சுவாசிக்கவே திணறிக்கொண்டு,ஒரு சில மணி நேரமே உயிர் வாழ்வார் எனக்கருதப்பட்டு, அன்றைய தினமே திருமுழுக்குப் பெற்று, 78 ஆண்டுகள் வாழ்ந்து (1886 - 1964) முதல் சுதேச தியான யோக செபமாலைத்தாசர் சபையை குருக்களுக்கும் கன்னி யர்களுக்கும் நிறுவி ஆசியாவின் ஜோதி என அழைக்கப்படு பவர் யாழ் பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் தவத்திரு பி.ஏ. தோமஸ் அடிகளார். பிறப்பிலிருந்தே நோயாளியான இவர் அன்றாடம் நோயோடு போராட வேண்டிய ஒருவராகவே இருந்தார். ஆனால் எவருக்குமே பாரமாகாமல், எந்தப் பணி யிலுமே குறை விடாமல் இறுதி வரை பயணித்தார் என்றே அறிய வருகிறது.

மெலிந்த உடல், சாந்தமான தோற்றம், வட்டக் கண்ணாடி, முகம் நிறைய தாடி வளர்ந்த , நிமிர்ந்த பார்வை, கையினில் செபமாலை, நிதானமான நடை, அன்பான பேச்சு என்பன எல்லாம் இவரை ஒரு முனிவராகவே இனம் காட்டின. திரு திருமதி பஸ்தியாம்பிள்ளை - லூசியா தம்பதிகளின் முதல் ஆண் குழந்தை பிறந்த உடன் இறந்து, இரண்டாவது குழந் தையான அந்தோனிப்பிள்ளை என்ற நாமம் பூண்ட தோமஸ் அடிகளாரின் நிலையும் கவலைக்கிடமாய் இருந்தமையால்



பெரும் அங்கலாய்ப்பே நிலவியது. ஆனால் இறைவன் ஆறு ஆண்கள் கொண்ட ஏழு குழந்தைகளால் அந்தக் குடும் பத்தை ஆசீர்வதித்ததோடு உயிர்வாழமாட்டார் எனக் கருதப்பட்டவரை பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை தோமஸ் அமதி அகளார் என்ற நிலைக்கு உயர்த்தி தம் கருவியாக பயன்படுத்தியுள்ளார்.

ஆரம்பக் கல்வி புனித சாள்ஸ் ஆரம் பள்ளி (1893 ஜூலை 20), புனித பத்திரிசியார் கல்லூரி, புனித மாட்டீனார் குரு மடம் (1904), சீனியர் கேம்பிறிச் பரீட்சையில் தேர்ச்சி (1904), அரசதுறை எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி (1904) , நவ சன்னியாசம் கொழும்பு அலோசியஸ் நவதுறவு இல்லம் (1907) துறவற அர்ப்பண வார்த்தைப்பாடு (1910 பெப்ரவரி 02), குருப்பட்டம் (1912 ஜனவரி 06), அந்தோனிப்பிள்ளை என்னும் பெயர் தோமஸ் என மாற்றம், செபமாலைத்தாசர் தியானயோக துறவுசபை தோலகட்டியில் நிறுவல் (1928 பெப்ரவரி 02), கன்னியர்க்கான செபமாலைக் கன்னியர் சபை வசாவிளானில் நிறுவல் (1948 செப்ரெம்பர் 8), குருத்துவப் பொன்விழா (1962), இறப்பு (1964 ஜனவரி 26) என இவரின் வாழ்வும் பணியும் 78 ஆண்டுகள் (1886 - 1964) வேகமாக முடிந்தன.

**ஆசியாவில் முதல் தியான யோக துறவு சபை**

குருப்பட்டத்தின் பின்னர் புனித பத்திரிசியார் கல் லூரியில் இந்து மாணவர்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட தோமஸ் அடிகளாருக்கும், புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியாற்றிக் கொண் டிருந்த பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஜே.ஏ.கியோமர் அமதி அடிகளாருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அப்போது இருவரும் தியான யோக துறவு சபைகள் ஆசியாவில் தோற்றம் பெற வேண் டியது காலத் தின் கட்டாயம் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். ஜே.ஏ.கியோமர் அமதி அடிகளார் யாழ். ஆயராக 1924 ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டார். 1926 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி 11 ஆம் பத்திநாதர் பாப்பரசர் திருச் சபையின் பணிகள் என்ற சுற்றுமடலில் கீழைத்தேய நாடுகளில் நடைபெறும் மனம் திரும்பல் பணிக்கு செப தப துறவு கொண்ட துறவற சபைகள் உருவாக் கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார். ஆயர் ஜே.ஏ.கியோமர் ஆண்டகை தோமஸ் அடிகளாருடன் தாம் கொண்டிருந்த எண்ணப்பாட்டை மனதில் கொண்டு இப்பணியை தோமஸ் அடிகளாரிடமே ஒப்படைத்தார்.



**ஆறு இளைஞர்களுடன் செபமாலைத்தாசர்சபை**

திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் பாப்பரசர், யாழ் ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமர் ஆண்டகை, தோமஸ் அடிகளார் ஆகிய மூவரையும் யாழ் மண்ணில் தியான யோக சபை ஒன்றை உருவாக்க தூய ஆவியானவர் ஒரே நேரத்தில் இயக்கினார் எனலாம். 1928 பெப்ரவரி 02 இல் ஆறு இளைஞர்களுடன் தோலகட்டியில் செபமாலைத்தாசர் சபை ஆரம்பிக்கப்பட்டது. விவசாயம், தச்சுத்தொழில், மேசன் வேலை, கொல்ல வேலை, நெசவு வேலை, சோப் தயாரித்தல், பாலில் இருந்து தயிர் மோர் வெண்ணெய் தயாரித்தல், களி மண்ணில் இருந்து சட்டி பானை சொரூபம் செய்தல், வைன் வகைகள், மெழுகு வர்த்தி , திருப்பலிக்குப் பாவிக்கப்படும் ஒஸ்தி, செபமாலை போன்றவற்றை தயார் செய்ததோடு ஆடு மாட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை, புறா, லவ்பேட்ஸ் முயல் போன்ற வற்றையும் வளர்க்கத் தொடங்கினர். நெல்லி ,முந்திரிகை, மாதுளை, நாவல், தோடை, அன்னாசி, எலுமிச்சை போன்ற பழ வகைகளில் இருந்தும் நன்னாரி போன்ற வேர் வகை களில் இருந்தும் குளிர்பானம் தயாரித்தனர். பழ மரங்கள், கிழங்கு வகைகள், காய்கறி வகைகள் என்பவற்றோடு மிளகாய், மல்லி, சீரகம் போன்ற பயிர் வகைகளையும் பயி ரிட்டனர்.

**முதல்முதலாக திராட்சைத் தோட்டங்களை உருவாக்கல்**

முதல் முதலாக திராட்சைத் தோட்டங்களை செபமாலைத் தாசர் சபையினர் தோலகட்டியில் உருவாக்கி நல்ல விளைச் சலைக் காட்டியமையால் வசாவிளான், அச்சுவேலி, இளவாலை, உரும்பிராய் போன்ற பகுதிகளில் மக்கள் திராட்சை பயிரிடத் தொடங்கினர். ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு, சமூக பொருளாதார சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் களைதல், சாதிக்கொடுமை மற்றும் தீண்டாமை என்பவற்றை ஒழித்தல் என அன்றைய சமுதாயத்தில் அமைதியான புரட்சியை ஏற்படுத்தினார். வாழ்வில் துன்புற்ற மக்களுக்கு ஒரு புதிய விடியலைத் தோமஸ் அடிகளார் காட்டினார். செப மாலைத்தாசர் சபையினரின் தியாகம் நிறைந்த அர்ப்பண வாழ்வு, உலக மக்களின் பாவமன்னிப்புக்காக செபித்தல், மற் றவர்களுக்காக நாள்தோறும் வேண்டுகின்ற செப உதவி, தொழில் வாய்ப்பு என்பவற்றை அறிந்து மத பேதமின்றி பலரும் தமக்காக செபிக்கும்படி வேண்டவும், வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளவும், இவர்களின் உற்பத்திப் பொருள்களை வாங்கவும் என வந்து குவியத் தொடங்கினர்.

**இறப்பதற்கு முதல்நாள் இறைதரிசனம்**

தனது அறையில் இறை தரிசனம் பெற்றுக்கொண்டார் என அவருக்கு அருகில் நின்று பணியாற்றியவர்கள் சான்று பகர்கின்றனர். 1964ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி தோலகட்டி ஆச்சிரம ஆலயத்தில் ஆயர் எமிலி யானுஸ் பிள்ளை ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தோலகட்டி சேமக்காலையில் தோமஸ் அடிகளார் நல்லடக்கம் செய்யப்பட்டார். தற்போது தோமஸ் அடிகளாரின் திருவுடல் அருள் ஆச்சிரமத்தில் அமைக் கப்பட்ட புதிய கல்லறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான சபை இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, மன்னார் இரத்தினபுரி ஆகிய மறைமாவட் டங்களிலும், வட இந்தியாவில் மத்திய பிரதேசம், ஜபல் பூர், சசாராம், ஜல்பைபுரி அம்பிகபூர், ஒரிசா கேர ளாவில் கண்ணூர், வெள்ளிக்குளங்கர, பெத்தேரி கர்நாட காவில் பெங்களூர் கார்மேலரம், ஆந் தராவில் ஏலூர் மறைமாவட்டம் தமிழ்நாட்டில் திருச்சி, சென்னை, தூத்துக்குடி , செங்கல்பட்டு, தஞ்சாவூர் ஆகிய மறைமாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. கனடாவில் லண்டன் ஒன் ராறியோ என்னுமிடத்தில் செபமாலைத் தாசர் ஆச்சிரம் ஒன்று ஏ.எம்.ஸ்ரீபன் செ.தா அடிகளார் உயர் தலைவராக இருந்த போது நிறுவப்பட்டுள்ளது.

பெண்களுக்கான சபை இலங்கையில் அச்சு வேலி,வசாவிளான், யாழ்ப்பாணம், தேவத்தை , புத் தளம், மன்னார், இந்தியாவில் திருச்சி, தூத்துக்குடி, சென்னை, பெரிய பாளையம், வட இந்தியாவில் அம் பீகபூர் ஜகல்புர் , பெங்களூர் ஆகிய இடங்களில் நிறு வப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு செபமாலைத்தாசர் சபையின் 80வது ஆண்டு விழாவின் போது அப்போதைய யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, நம்முடைய நாட்டிலே போர்த்துக்கேயருடைய காலம் தொடக்கம் துறவற சபைகள் இருந்துள்ளன. ஆனால் இந்தத் துறவற சபைகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்து வந்து இங்கு ஸ்தாபிக் கப்பட்டவை. ஆசியாக் கண்டத்திலே முதல் முதலாக ஆசிய நாட்டவரால் ஸ்தாபிக்கப்பட்ட காட்சி தியான யோகசபை தோமஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைத்தாசர் சபையே ஆகும் என்று தெரிவித்துள்ளார்.

தோமஸ் அடிகளார் விரைவில் புனிதர் பட்டம் பெற்று இலங் கையின் புனிதர் ஆக வர இறை வரம் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரியுடன்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிலக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு காணி விடுவிப்புத் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஏற்கனவே பேச்சு நடத்தினேன். இது தொடர்பில் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபை ஒத்திவைப்புப் பிரேரணையை ஏலவே கொண்டு வந்திருந்தார்.

காணிகளை இராணுவத்தினர் பிடித்து வைத்திருப்பது பிழை என்று தெரிந்தும் அரசு அசமந்தப் போக்கில் இருக்கின்றது. இராணுவத்தினர் மக்களின் காணிகளிலிருந்து வெளியேற வேண்டும். இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

காணி விடுவிப்புத் தொடர்பில் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணையை எதிர்வரும் புதன்கிழமை கொண்டு வர இருக்கின்றோம். பெரும்பாலும் அதற்கு முதல் நாள் செவ்வாய்க்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்துப் பேச உள்ளோம்.

காணி விடுவிக்கக் கோரும் மக்கள் போராட்டம் நியாயமானது. காணி விடுவிக்கப்படும் வரையில் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் தொடர்ந்தும் குரல் கொடுக்கும் - என்றார். (வ-5)

## இழுபறிக்குப் பின்...

தமிழக சட்டசபை இரு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டன. பிற்பகல் 3.30 மணியளவில் பெரும்பான்மை ஆதரவை நிரூபித்தார் எடப்பாடி பழனிச்சாமி.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தனது பதவியில் இருந்து விலகியதை அடுத்து, அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் தமது சட்டமன்றத் தலைவராக எடப்பாடி பழனிச்சாமியை தெரிவுசெய்தனர். சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுக் கடிதத்தை ஆளுநரிடம் ஒப்படைத்து ஆட்சியமைக்க உரிமை கோரினார் எடப்பாடி. இதன் அடிப்படையில் எடப்பாடியை முதல்வராக அழைப்பு விடுத்தார் ஆளுநர் வித்யாசாகர் ராவ்.

கடந்த வியாழக்கிழமை மாலை முதல்வராகப் பொறுப்பேற்றார் எடப்பாடி பழனிச்சாமி. தனது அமைச்சரவையையும் அவர் அறிவித்தார். அடுத்த 15 நாள்களுக்குள் தனது பெரும்பான்மையை அவர் நிரூபிக்க வேண்டும் என்றும் ஆளுநர் உத்தரவிட்டார். இந்த நிலையில் புதிய அமைச்சரவை தொடர்பிலான நம்பிக்கை வாக்கெடுப்பு தமிழக சட்டசபையில் நேற்று நடைபெற்றது.

காலை 11 மணிக்கு சட்டசபை கூடியது. முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் அவருக்குச் சார்பான அ.தி.மு. கழக உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். தி.மு. கழகத்தின் செயல் தலைவரும் தமிழக சட்டசபையின் எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலினும் இரகசிய வாக்கெடுப்பை வலியுறுத்தினார். இல்லாதுவிடில் சட்டமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிகளுக்கு சென்றுவந்த பின்னர் வாக்கெடுப்பு நடத்தலாம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பான கூச்சல்களும், குழப்பங்களும் தொடர்ந்து நடைபெற்றன. காலை 11 மணியில் இருந்து 1 மணி வரை சபை ஒத்தி வைக்கப்பட்டது. இரண்டாவது தடவையாகக் கூடியபோதும் கூச்சல்கள் நீடித்தன. இதனால் தி.மு. கழகத்தினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். காங்கிரஸ் தானாக வெளிநடப்புச் செய்தது. பின்னர் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் 122 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் பெரும்பான்மையை நிரூபித்தார் எடப்பாடி பழனிச்சாமி. 11 பேர் எதிராக வாக்களித்தனர். (வ-ம)

## அரிசி...

செய்யப்பட்ட சம்பா அரிசி ஒரு கிலோ 80 ரூபா, உள்நாட்டு சம்பா அரிசி ஒரு கிலோ 90 ரூபா என்று விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அரிசி விற்பனை தொடர்பாக ஏதேனும் மோசடிகள் இடம்பெற்றால் 1977 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொண்டு முறைப்பாடுகளை

தெரிவிக்க முடியும் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார். (வ-4)

## மகிந்த...

நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் உறுதியற்ற அரசியல் சூழ்நிலைகளை பொது எதிரணியே தோற்றுவித்து வருகிறது. இவர்கள் அரசமைப்புப் பணிகளில் இருந்து வெளியேறுவதால் குறித்த பணிகள் நின்றுவிடப் போவதில்லை. அது நன்மை பயக்கும் விடயமே. அதேபோல் அவர்களை நாட்டின் பொது விடயங்களில் இருந்தும் ஒதுக்கிவிட்டால் பெரும் நன்மைகள் ஏற்படும் என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (வ-4)

## கொழும்புக்கு...

தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுகளை நடத்துவார் என்று இந்தியத் தூதரகம் தெரிவித்தது.

கொழும்பு அரசின் அயலுறவு அமைச்சர் மற்றும் முக்கியபிரதிநிதிகளை அவர் நேற்றுச் சந்தித்தித்தார்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் விடயத்தில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம், போர்க்குற்ற விசாரணைக்கான நீதிப் பொறிமுறை அமைப்பில் வகுத்துள்ள தீர்மானம், மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை கொண்டுவரவுள்ள தீர்மானம், இந்தியா - இலங்கை இடையே எட்கா உடன்பாடு கைச்சாத்திடப்படுவது உள்ளிட்ட பல முக்கிய விடயங்களை இந்திய அயலுறவுச் செயலாளர் கொழும்பு அரசுடன் பேசுவார் என்று இந்தியத் தூதரகத்தினால் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களில், சீனக்குடாவில் இந்தியன் ஓயில் நிறுவனத்திடம் உள்ள எண்ணெய் தாங்கிகளில் சிலவற்றை, இலங்கை தனது பயன்பாட்டுக்காக மீளப் பெறும் விவகாரம் குறித்தும் ஆராயப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ-4)

## 19ஆவது நாள்...

- கால அவகாசங்கள் எவற்றையும் ஏற்கப்போவதில்லை என்பதில் உறுதியாக இருந்து போராட்டத்தை அந்த மக்கள் தொடர்கின்றனர்.

வான்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு கடந்த மாதம் 31ஆம் திகதி போராட்டத்தை மக்கள் ஆரம்பித்திருந்தனர். மக்கள் போராட்டம் நடத்த ஆரம்பத்திலிருந்து பல்வேறு தரப்புக்களும் ஆதரவு வழங்கி வருகின்றன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினர் பிலக்குடியிருப்புக்கு நேற்று நேரில் சென்று ஆதரவு வழங்கினர். சுமார் நூறு பேர் வரையில் இதில் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மாவட்ட சின்னவத்தை நாம் தமிழர் பண்பாட்டுக் கழகத்தினர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடன் இணைந்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். வன்னிப் பிராந்திய வான் படைத் தலைமைக் காரியாலயத்துக்கு முன்னால் தகரக்கொட்டகை அமைத்து போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடன் மதிய உணவைச் சமைத்து எல்லோரும் சாப்பிட்டார்கள்.

ஆதரவு தெரிவித்து கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்தனர். நேற்றைய தினம் அங்கிருந்து புறப்பட்டனர்.

காணிக்குள் கால் வைக்கும் வகையில் அங்கிருந்து வெளியேறுவதில்லை என்ற முடிவுடன் மக்கள் போராடி வருகின்றனர். (வ-5-7)

## நெல்லியடி...

பயணித்த மற்றொரு இளைஞன் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் [illegible] சந்தியில் நேற்று [illegible] மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நெல்லியடியைச் சேர்ந்த திருமலைச்செல்வன் சஞ்சீவ் (வயது - 22) என்ற இளைஞனே சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

விழுந்தாலடிச் சந்தி உள் ஒழுங்கையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிய உழவு இயந்திரமும் முதன்மை வீதியால் வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதால் விபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த கரவெட்டி, துன்னாலை மத்தியைச் சேர்ந்த கணேசலிங்கம் லம்போசன் (வயது - 19) என்ற இளைஞன் படுகாயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்தையடுத்து உழவு இயந்திர சாரதியான 22 வயது இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-10,26)

## இந்திய...

9 சமாசங்கள் நேற்றுக்கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு அரசின் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் கடந்த 8 ஆம் திகதி அவரது அமைச்சில்நடைபெற்றகலந்துரையாடலின் போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை நல்லெண்ண அடிப்படையில் விடுவிப்புத் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி விரைவில் எமது நாட்டுக்கு வரவுள்ளார். ஆகவே நல்லெண்ண அடிப்படையில் இந்தியப் படகுகளை விடுவிக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம். ஆகவே யாழ். மாவட்ட மீனவர் சமாசத்தின் கருத்து என்ன என்று அன்றைய தினம் அமைச்சரினால் வினவப்பட்டது. ஏனைய மீனவர் சங்கங்கள் மற்றும் சமாசங்கள் ஆகியவற்றுடன் கலந்துரையாடித் தீர்மானம் எடுத்தவுடன் எங்கள் பதிலைச் சொல்வதாக அமைச்சரிடம் தெரிவித்திருந்தோம்.

அதன்படி நேற்று 122 சங்கங்கள் 9 சமாசனங்கள் கூடி இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தோம். கூட்டத்தின் முடிவில் சில நிபந்தனைகள் கொழும்பு அரசுக்கு விதிக்கப்படும். அவற்றை நிறைவேற்றுவதாக அரசு ஒப்புதல் தந்தால் நாங்கள் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பதற்கு அனுமதிப்போம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்திய இழுவைப்படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழையாமல் இருக்கும் வகையில் இரு நாட்டு அரசுகளும் உத்தரவாதம் தரவேண்டும், இந்திய இழுவைப் படகுத் தொழிலால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், இனிவரும் காலங்களில் அத்துமீறும் இந்திய இழுவைப் படகுகளைப் பிடித்து அந்த நாட்டு மீனவர்களுக்கு எதிராக தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் ஆகிய 3 நிபந்தனைகள் விதிக்கப்பட்டு கொழும்பு அமைச்சருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது- என்றார். (வ-4,8)

## கிளியில்...

தெரிவிக்கப்பட்டது. கர்ப்பிணிகள் இருவரும் கிளிநொச்சி திருவையாறு மற்றும் மருதநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு கிளிநொச்சி வைத்தியசாலை தனிப் பிரிவில் வைத்துச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

கிளிநொச்சியில் ஏற்கனவே 3 சிறார்களும் 30 வயதுடைய ஒரு வரும் பன்றிக் காய்ச்சலால் பீடிக்கப் பட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணம், வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் 26 வயதுடைய பெண் ஒருவர் இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டுப் பின்னர் வீடு திரும்பியுள்ளார் என்று சுகாதாரத் துறையினரால் தெரிவிக்கப்பட்டது.

பன்றிக் காய்ச்சல் நோய்த் தொற்று சாதாரண [illegible] காய்ச்சல் மூலம் ஆரம்பிக்கின்றது. சிறந்த ஆய்வுகூட மற்றும் நிபுணத்துவ சேவைகள் மூலம்தான் இந்த நோய்த் தொற்றைக் கண்டறிய முடியும். காற்றினாலே இந்த நோய் பரவுகின்றது. எனவே அதிக நடமாட்டம் உள்ள பகுதிகளில் பேருந்துகள், நிகழ் வுகள், கோயில்கள், தொடருந்துகள் போன்றவற்றில் நோய்த் தொற்று உடைய ஒருவர் தும்மும் போது காற்றின் மூலம் மற்றவர்களுக்கும் அதன் தொற்றுப் பரவும் தன்மை உள்ளது. குறிப்பாக குளிரூட்டப்பட்ட அறைகள், மூடிய அறைகள் உள்ளிட்ட வெப்பம் குறைவாக உள்ள பகுதிகளில் பன்றிக் காய்ச்சல் தொற்று வேகமாகப் பரவும். அதிக காய்ச்சல், மூச்சுவிட சிரமப் படல், நெஞ்சுநோ, நெஞ்சுத் துடிப்பு, வயிற்றோட்டம் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரிடம் பரிசோதிப்பது அவசியம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். (வ-4,6,35)

## சந்திரிகாவின்...

தினரால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக, முன்னாள் அரச தலைவர் சந்திரிகா முன்வைத்த குற்றச்சாட்டை, இலங்கை இராணுவப் படைத் தலைமையகம் மறுத்துள்ளது.

கொழும்பில் பன்னாட்டு ஊடகர்களைச் சந்தித்த முன்னாள் அரச தலைவர் சந்திரிகா, போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ தமிழ்ப் பெண்கள் அவர்களது சமூகத்தின் அதிகாரிகளினாலும், இராணுவத்தினராலும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர் என்று தெரிவித்திருந்தார். இந்தக் குற்றச்சாட்டை இராணுவத் தலைமையகம் மறுத்துள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இரா ணுவம் சிவில் நடவடிக்கைகளில் எதிலுமே தலையீடு செய்வதில்லை என்று குறிப்பிட்டுள்ள இராணுவம், பாதுகாப்புத் தரப்பினர் பாலியல் துன்புறுத்தல் நடவடிக்கைகள் எதிலுமே ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளது. (வ-5)

## தோட்டக்...

அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் நீண்டகாலமாக பயன்படுத்தாமல் காணப்பட்ட காணியில் விவசாயப் பயிர்கள் நடுகை செய்வதற்காக நேற்று உழவு இயந்திரம் மூலம் உழவு வேலை செய்துள்ளார். அந்த வேளையில் மண்ணுக்குள் புதைந்திருந்த கைக்குண்டு ஒன்றும் மோட்டார் எறிகணையும் வெளியே வந்துள்ளன.

இவற்றைக் கண்ட காணி உரிமையாளர் உடனடியாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அந்தப் பகுதிக்கு பாதுகாப்பு வழங்கினர். சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்து அவற்றைச் சிறப்பு அதிரடிப் பொலிஸார் மூலம் அப்புறப்படுத்த அனுமதி கோரியிருந்தார். நீதிவான் அனுமதி வழங்கினார். (வ - 9)

## காணிகளை...

வகையில் கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து 48 மணிநேரம் நீராகாரம் எதுவும் இன்றி சுழற்சி முறையில் உணவு ஒறுப்புப் போராட்டத்திலும் அவர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

48 மணி நேர உணவு ஒறுப்புப் போராட்டத்தின் மூன்றாம் கட்டமாக நேற்றுக் காலையில் இருந்து இ.இராசலட்சுமி, செ. டயவதிலட்சுமி, மு. பற்குணராசா ஆகிய மூவர் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களுடன் காணி உரிமையாளர்களும், பொதுமக்களும் பிரதேச செயலகத்துக்கு முன்னாலேயே இருந்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (வ-7)

## பத்திரிகையாளரைக்...

சிப்பாய்கள் மூவர் குற்றத் தடுப்புப் பிரிவினால் கைதுசெய்யப்பட்டனர். நீண்ட நாள்களாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் நேற்று அதிகாலை சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் இராணுவ மேஜர் ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனைக்கு உதவாத அரிசி மீட்பு

கொழும்பு, பெப்.19

கெக்கிராவையில் பாவனைக்குப் பொருத்தமற்ற 9 ஆயிரத்து 530 கிலோ அரிசி நுகர்வோர் பாதுகாப் புத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு ஒன்றிலேயே அரிசி கைப்பற்றப் பட்டது.

அந்த அரிசியை விற்பனை செய்துள்ள நபர் காலாவதித் திகதியை மறைத்து விற்பனை செய்ய முயன்றமை விசாரணைகளில் தெரியவந்தது.

அந்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. (ற)

# மூன்று மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படாவிட்டால் போராட்டம்

## எச்சரிக்கின்றது கூட்டு எதிரணி

கொழும்பு, பெப்.19

மூன்று மாதங்களுக்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாத பட்சத்தில் அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

பதுளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசு நாட்டின் பொருளாதாரத்தை நிலை நிறுத்தத் தவறியுள்ளது. முறையற்ற பொருளாதார அணுகுமுறைகளால் அரசு நாட்டைச் சீரழிக்கின்றது. எதிர்காலத்தில் மக்கள் மூன்று வேளை உணவுக்குத் திண்டாடும் நிலை தோன்றும். அடுத்துவரும் 3 மாதங்களுக்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாவிட்டால் லட்சக் கணக்கான மக்களுடன் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை தம்பிராசா



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை தம்பிராசா 17.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், தம்பு - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், ரவீந்திரன், புவனேந்திரன், ரஜனி, நளினி, ஞானேந்திரன், சுதாகரன், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயசிறி, சித்திரா, கந்தசாமி, ராஜேந்திரம், வத்சலா, வினோ ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மினியின் பெரிய தாயாரும், ஜெனித், றெனோ, ஜெசி, ஐஸ்விந், கவிதாஞ்சன், அக்ஷயா, அபினாத், அகானா, அனோஜ், அஸ்வந், இமல்டன், எமினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சின்னத்து இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(AJA/683)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

## தொண்டருக்கான வெற்றிடங்கள்

மற்றவர்களுக்கு உதவுவதால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு நிகர் இல்லை.

உங்கள் நேரத்தில் ஒரு துளியை முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?

தற்கொலைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே எமது நோக்கம் மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும் அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் நாம் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். எம்முடன் இணையுங்கள் வாரத்தில் நான்கு மணித்தியாலயங்கள் மட்டுமே ஏற்ற பயிற்சி வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்திலோ, வவுனியாவிலோ தொண்டராகச் சேர உடனே அழையுங்கள்

கை கொடுக்கும் நண்பர்கள்
104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(021) 222 8117/ 077 900 8776
(முற்பகல் 9.00 - பிற்பகல் 1.00)

Advt.Sponsored by: Enlightement circle.UK (Saiva Munneta Sangam)

**வாடகைக்கு**
யாழ் உரும்பிராயில் பலாலி வீதிக்கு அண்மையில் 5படுக்கையறை, குளியலறையுடனான மாடி வீடு உடன் வாடகைக்குண்டு. காரியாலயமாகவும் பாவிக்கலாம். முன்பு சீன நிறுவனத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வாடகை பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். தொடர்பு: 077 365 8485

**வீடு வாடகைக்குண்டு**
நீர்வேலிச் சந்தி, பருத்தித்துறை வீதியில் 10 பரப்பு சுற்றுமதில் காணியுடன் வீடு வாடகைக்கு விடப்படும்.
077 633 1914

**பிரீத்தி அழகு நிலையம்**
* Special group classes in Jaffna, Mullaitivu, Puthukudiyirupu இல் 3மாத கால பயிற்சி வகுப்புக்கள் 05.03.2017 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.
* அழகுக்கலை (Beauty, All Makeups, Clensing, Hair Styles, Bleeching, Facials)
பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.
முதலில் இணைந்துகொள்ளும் 10 மாணவர்களுக்கு பதிவுக் கட்டணம் இலவசம்
Facial Bridal Makeup Cake icing order களை உரிய நேரத்தில் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: 077 914 5923

**வேலையாள் தேவை**
சுத்திகரிப்பு பணிக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. வங்கி, ஸ்தாபனங்கள் அலுவலகங்கள் என்பவற்றிற்கு யாழ் நகரினை அண்டியவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை 24-45 வரை
075 675 2597, 077 903 7288

**Vacancies**
முன்னனி கல்வி நிறுவனத்தின் Jaffna, Vavuniya கிளைக்கு
English Teacher — Part time Sat & Sunday
IELTS Teacher
Public Development Officer
Social Media துறையில் ஆர்வமுடையவர்களும், நிர்வாகத் திறமையுடையவர்களும் விண்ணப்பிக்கவும் (Girls)
Graphic Designer — Vavuniya Only
ஒரு வாரத்தினுள் email மூலம் விண்ணப்பிக்கவும்
BRITISH COLLEGE
103, Mannar Rd, Vavuniya.
Tel : 0777-596148
Email : vavuniyabritishcollege@gmail.com

சிவிலிம
யாழ்ப்பாணம்

## EXPRESS SHOW ROOM
### விநியோகஸ்தர்களுக்கான வாய்ப்பு

கட்டிடங்களுக்கான தரமான **i-Panel Ceiling** மற்றும் **i-Roof** கூரைகளை வெற்றிரகரமாக சந்தைபடுத்தும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பிரதேசங்களில் எமது கிளைகளை செயற்படுத்த, ஆர்வமுள்ள **முதலீட்டாளர்கள்** தேவை.

**பிரதேசம்:**
சாவகச்சேரி, சுன்னாகம், பருத்தித்துறை, அச்சுவேலி, சங்கானை, மானிப்பாய், ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு.

**தகைமை**
01. குறைந்த்து 5 லட்சம் ஆரம்ப முதலீடு.
02. காட்சியறைக்கு தேவையான சரியான இடம் குறைந்தது 200 சதுர அடி.
03. தேவையான ஆளனியினர், போக்குவரத்து வாகனம்.

**இவற்றுடன் நீங்கள் ஆயத்தம் என்றால் உங்கள் வருமானத்தை இரட்டிப்பாக்க எம்முடன் இணையுங்கள்.**

மேலதிக விபரங்களுக்கு -

சந்தைப்படுத்தல் பிரிவு :
சிவிலிம
644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 0779494200 / 0720400335

Life Insurance Corporation (Lanka) Ltd,
Sharnell Building, No. 29/2, Visaka Road, Colombo 04.
Telephone : 011 -2552277 / 0112590495

## EXPRESSION OF INTEREST

**Invitation for the Expression of Interest (EOI) from the Contractors for Construction of Five story Office Building for Life Insurance Corporation (Lanka) Ltd at Vembadi Road Jaffna.**

The Chief Executive officer of Life Insurance Corporation (Lanka) Ltd. invites eligible construction companies in Sri Lanka to submit Expression of Interest (EOI) to undertake the construction of Five Storey office Building for Life Insurance Corporation (Lanka) Ltd at Vembadi Road Jaffna.

The construction period is 180 calendar days from the date of commencement.

### Eligibility for Submission of EOIs

The companies who possess the following performance and qualifications are eligible to submit EOI for this project.

- Registered with the Institute for Construction Training and Development (ICTAD) for Grade C4 or above in the field of building construction in similar nature of projects will be short listed.
- Average annual turnover of construction works performed in the last five years as the prime contractor shall be at least Rs. 75 Million.
- Successful experience as the prime contractor in the execution and completion of at least 3 construction projects of similar nature and complexity and each project value at least Rs. 75 million during the last two to three years.

Interested construction companies may collect the complete set of pre-qualification documents in English language upon payment of a non-refundable cash fee of Rs. 10,000.00 from the Accountant, Life Insurance Corporation (Lanka) Ltd, Sharnell Building, No 29/2, Visaka Road, Colombo 04 **on a written request from the interested construction company** to The Accountant, Life Insurance Corporation (Lanka) Ltd, Sharnell Building 29/2, Visaka Road, Colombo 04. The pre- qualification documents will be issued from 20th February 2017 to 27th February 2017 from on 0830 hrs to 1600 hrs every working day.

### Submission of EOIs

The Expression of Interest (EOI) should be delivered / sent to the following address on or before 1500 hrs on 28th February 2018.

**The Chief Executive Officer,**
**Life Insurance Corporation (Lanka) Ltd,**
**Sharnell Building, No. 29/2, Visaka Road, Colombo 04.**

All late submissions will be rejected and returned unopened. EOI must be received in a sealed envelope clearly labeled **"EOI for the Proposed Office Building for Life Insurance Corporation (Lanka) Ltd at Jaffna."** on the top left hand corner of the envelope. Documents sent by email or facsimile will not be accepted. EOIs submitted without the requested information and documents will also be disqualified.

The Life Insurance Corporation (Lanka) Ltd reserves the right to accept or reject any or all EOIs without clarifying any reason for rejection.

**For further information, please contact the Manager Administration, Life Insurance Corporation (Lanka) Ltd, Sharnell Building, No. 29/2, Visaka Road, Colombo 04 working hours from 0830 hrs to 1600 hrs.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசிகர்கள் டெஸ்டை நேசிக்க வேண்டும்

## ஸ்ரோக்ஸ் கருத்து

கிரிக்கெட் ரசிகர்கள், டெஸ்ட் ஆட்டங்களை அதிகமாக நேசிக்க வேண்டும். அதுவே டெஸ்ட் ஆட்டங்கள் அழிவின் பாதையில் செல்லாமல் இருக்க உறுதுணையானதாக இருக்கும் என்று தெரிவித்தார் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் உபதலைவர் பென் ஸ்ரோக்ஸ்.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக இருந்த அலிஸ்டர்



குக், தனது பதவியில் இருந்து விலகியதை அடுத்து, துணைத் தலைவர் ரூட் தலைவராக நியமிக்கப்பட்டார். ஸ்ரோக்ஸ் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். துணைத் தலைமைப் பொறுப்பை ஏற்றபின்னர், நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ஸ்ரோக்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

ரி-20 ஆட்டங்களின் வருகையால் டெஸ்ட் ஆட்டங்கள் அதன் இயல்பான ரசிகர்களை இழந்து கொண்டு செல்கின்றன என்பது ஓரளவு ஏற்கக்கூடியதே. இதற்காக ரி-20 ஆட்டங்களை நிறுத்திவிடல் ஆகாது. அத்தகைய ஆட்டங்கள் கிரிக்கெட்டை அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்றுள்ளன. இதனால், டெஸ்ட் ஆட்டங்களைப் பாதுகாக்க பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம். ரசிகர்கள் டெஸ்ட் ஆட்டங்களை அதிகம் பார்க்க வேண்டும், விரும்ப வேண்டும். மிகவும் பழைமையானதும், சிறந்ததுமான டெஸ்ட் ஆட்டங்களை பாதுகாக்க வேண்டிய கடமை ரசிகர்களுக்கும் உண்டு.

டெஸ்ட் ஆட்டங்களின் பக்கம் ரசிகர்களை கவரும் விதமாக பன்னாட்டு கிரிக்கெட் சபையால் கொண்டு வரப்பட்டுள்ள பகலிரவு டெஸ்ட், நடுவரின் முடிவை மீண்டும் பரிசீலனை செய்யும் திட்டங்கள் ஆகியவற்றை ஆதரிக்கிறேன் என ஸ்ரோக்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)



# ஆஸ்திரேலிய அணி படுதோல்வியடையும்

## ஹர்பஜன் கணிப்பு

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியா அணி படுதோல்வியடையும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்.

நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் புனேயில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகிறது. தொடர் தொடர்பாக முன்னாள் -இன்நாள் வீரர்கள் பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஹர்பஜன் ஆஸ்திரேலிய அணி 0:4 என்று படுதோல்வியடையும் என்று தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிராக எமது (இந்தியாவின்) ஆடுகளங்களில் வைத்து ஆஸ்திரேலிய அணியால் வெற்றிபெற இயலாது. ஆஸ்திரேலிய அணி மிகச் சிறப்பாகச் செயற்பட்டால் ஓர் ஆட்டத்தை சமநிலையில் முடிக்க வாய்ப்புள்ளது. ஓர் ஆட்டத்தில் சமநிலை என்பதே ஆஸ்திரேலிய அணியின் சிறந்த அடைவாக இருக்கும். ஆஸ்திரேலியா, ஆசிய ஆடுகளங்களில் காட்டும் வழக்கமான தடுமாற்றத்தை வெளிப்படுத்தினால், இந்தியா 4:0 என்று கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று ஹர்பஜன் சிங் மேலும் தெரிவித்தார்.

இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக், இந்தியா தொடரை முழுமையாகக் கைப்பற்றும் என்றும், ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல் ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் ஆபத்து என்றும் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தண்டம்!

இங்கிலாந்து கால்பந்தாட்ட சம்மேளனம், தனது பிரீமியர் லீக்கில் விளையாடிவரும் மன்செஸ்டர் சிற்றி அணிக்கு தண்டம் விதித்தது.

இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் விளையாடும் முன்னணி கால்பந்து கழகங்களில் மன்செஸ்டர் சிற்றியும் ஒன்று. இங்கிலாந்து கால்பந்து சம்மேளனத்தின் ஊக்கமருந்து தடுப்பு விதிமுறைப்படி வீரர்களின் பயிற்சி, திகதி, பயிற்சி தொடங்கும் நேரம், முடியும் நேரம், எங்கே பயிற்சி எடுக்கிறார்கள், அவர்கள் வெளியிடத்தில் தங்கும் முகவரி போன்றவற்றை துள்ளியமாக வழங்க வேண்டும். ஆனால் மன்செஸ்டர் அணி அவ்வாறு செய்யவில்லை. இதனால் அந்த அணிக்கு 43 ஆயிரத்து 662 அமெரிக்க டொலர் தண்டமாக விதிக்கப்பட்டது. (ம)



# நியூசி. - தெ.ஆபிரிக்கா ஒருநாள் தொடர் இன்று

நியூசிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

நியூசிலாந்தின் ஹமில்டன் மைதானத்தில் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து அணியிடம் தென்னாபிரிக்கா தோல்வியடைந்தது. இந்தத் தோல்விக்கு இந்தத் தொடரில் பதிலடி கொடுக்கப்படும் என்று தென்னாபிரிக்க அணித்தலைவர் வில்லியர்ஸ் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இதனால் இந்தத் தொடர் எதிர்பார்ப்புக்கு உரியதொன்றாக மாறியுள்ளது. ஏனைய நான்கு ஆட்டங்களும் முறையே, பெப்ரவரி 22, பெப்ரவரி 25, மார்ச் 1, மார்ச் 4 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. (ம)

# இரண்டாவது ரி–20 ஆட்டம் இன்று

இலங்கை -ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுக்க வேண்டும் என்ற சிக்கல் ஆஸ்திரேலியாவுக்கு உள்ளது. மாறாக இன்றைய ஆட்டத்திலும் இலங்கை வெற்றிபெற்றால், அந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதி செய்யும். கடந்த ஆட்டத்தில் களமிறங்கிய இலங்கை அணியில் மாற்றம் இருக்காது என்று பொதுவான எதிர்பார்ப்பு உள்ளது.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக சிமித் தலைமையிலான முன்னணி வீரர்கள் இந்தியாவுக்குச்சென்றுள்ள நிலையில், இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரை இரண்டாம் தர ஆஸ்திரேலிய அணியே எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# பந்துவீச்சாளர்களின் தலைவர் கோக்லி அணி வீரர் யாதவ் புகழாரம்

இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி, பந்துவீச்சாளர்களின் தலைவர் எனக் குறிப்பிட்டு புகழாரம் சூட்டினார் உமேஸ் யாதவ்.

ஆஸ்திரேலியாவை எதிர்கொள்வதற்கான பயிற்சி முகாமை இந்தியா ஆரம்பித்துள்ளது. நேற்றுமுன்தினம் பயிற்சியின் பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விராட் கோக்லி பந்து வீச்சாளர்களின் தலைவர். அவர் எந்தவொரு பந்து வீச்சாளரையும் பந்து வீச அழைக்கும்போது, உங்களுடைய எண்ணத்தின்படி களத்தடுப்பை அமையுங்கள் என்று தெரிவிப்பார். என்னிடம் பந்தை கொடுக்கும்போது, என்னுடைய திட்டம் என்ன? என்று கேட்பார்.



உங்களுடைய நோக்கத்துக்கும், திட்டத்துக்கும் பின்னால் அவர் நிற்பார். உங்களுடைய திட்டம் சரியாக வேலை செய்யவில்லை என்றால் மட்டுமே, உங்களிடம் வந்து, மாற்று திட்டத்தைக் கூறுவார் என யாதவ் மேலும் தெரிவித்தார்.

விராட் கோக்லி குறிப்பிட்ட சில பந்துவீச்சாளர்களுக்கு மட்டும் என்றில்லாமல், பலருக்கும் மாறிமாறி வாய்ப்பளித்து வருகின்றார். அவரது இந்த வியூகம் பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிமித், மார்ஷ் சதம்

இந்திய 'ஏ' அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித், முன்னணித் துடுப்பாட்ட வீரர் மார்ஷ் இருவரும் சதம் கடந்தனர்.

இந்தியாவுக்கு எதிராக நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை எதிர்வரும் 23 ஆம் திகதியில் இருந்து எதிர்கொள்கிறது ஆஸ்திரேலிய அணி. இந்தியாவில் தொடர் நடை பெறுவதால் இந்திய அணியின் ஆதிக்கம் மிகைந் திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் இந்தியாவுக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் சிமித் 107 ஓட்டங்களையும், மார்ஷ் 104 ஓட்டங்களையும் பெற்றமை ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வரிசை இந்தியாவுக்கு எதிராகப் போராடும் என்பதற்கு சிறந்த அறிகுறியாக அமைந்தது என்று கருதப்படுகிறது. (ம)



கார்த்தீபன்

## கொக்குவில் இந்துவை வீழ்த்தியது யாழ். மத்தி

யாழ்ப்பாணம், பெப். 19

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை இன்னிங்ஸால் வீழ்த்தியது யாழ். மத்திய கல்லூரி அணி.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை என இரு தினங்கள் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 32 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக துசியந்தன் 32 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தசோபன் 4 இலக்குகளையும், சஜீவன்3 இலக்குகளையும், மதுசன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 429 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கார்த்தீபன் 167 ஓட்டங்களையும், ஜெறோசன் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் விதுசன் 3 இலக்குகளையும், நிசாந், நிமலதாஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 339 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடியான நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, 105 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இன்னிங்ஸாலும் 234 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி. (ம)



# மகாஜனா - ஸ்கந்தவரோதயா வீரர்கள் போர் சமநிலையில்

யாழ்ப்பாணம், பெப். 19

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான நடப்பு வருட வீரர்கள் போர் துடுப்பாட்டம் சமநிலையில் முடிவு கண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தவரோ தயக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப் பெடுத் தாடிய மகாஜனக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜசிந்தன் 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சோபிகன் 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலாம் நாள் முடிவில் 177-8 என்றிருந்தது. அஜிந்தன் 51 ஓட்டங்களுடனும், கோகுல லக்சன் 9 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிக மாக 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகல இலக்குகளையும் இழந்தது ஸ்கந்தா. பந்து வீச்சில் டினேஸ் 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 77 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் களமிறங்கிய மகாஜனக் கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 217 ஓட்டங்க ளைக் குவித்தது. அதிகபட்சமாக யனுசன் 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சோபிகன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

141 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 86-6 என்ற நிலையில் இருந்த போது நாள் முடிவடைய ஆட்டம் சமநிலை கண்டது.

சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்கந்தாவின் எஸ்.சயந் தன், சிறந்த பந்துவீச்சாளராக ஸ்கந்தாவின் எஸ்.சோபிகன், சிறந்த களத்தடுப்பாளராக மகாஜனாவின் யசிந்தன், சிறந்த சகலதுறை வீரராக மகாஜனாவின் டினேஸ், ஆட்டநாயகனாக மகாஜனாவின் ஜனுசன் ஆகியோர் தெரிவாகினர். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். (ம)



ஆட்டநாயகன் ஜனுசன்



சிறந்த களத்தடுப்பாளர் யசிந்தன்



சிறந்த பந்து வீச்சாளர் சோபிகன்



சகலதுறை வீரர் டினேஷ்



சிறந்த துடுப்பாட்ட வீரர் சயந்தன்

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் பெப்,19

**யங்ஸ்ராரின் ரி-20 தொடர்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் ரி-20 தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து ஸ்ரார் பைட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபை, கழகங்களுக்கு இடையில் தேசிய ரீதியில் துடுப்பாட்டத் தொடரை நடத்தி வருகிறது. இந்தத் தொடரின் ஆட்டமொன்று கம்பொல விக்ரமபாகு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில், யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து சாகிரியன்ஸ் அணி மோதவுள்ளது.

**வளர்மதியின் துடுப்பாட்டம்**

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், கே.ஸி,ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## குஜராத்தின் பயிற்சியாளராக மொகமட் கைப் நியமனம்

ஐ.பி.எல். தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்றான குஜராத் லயன்ஸின் பயிற்சியாளராக, மொகமட் கைப் நியமிக்கப்பட்டார். ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி ஐ.பி. எல். தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் கைப், குஜராத்தின் பயிற்சியாளராக நியமிக்கப் பட்டார். அற்புதமான வீரர்கள் மற்றும் சிறந்த நிர்வாகத்தைக் கொண்ட குஜராத் அணியின் ஒரு பகுதியாக இருக்கப்போவது மகிழ்ச்சிஎன்று கைப் தெரிவித்தார். நடப்பு வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரின் ஏலம் பெங்களூரில் நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நல்லூர் பிரதேச கழகங்களின் தடகளம் நாளை

யாழ்ப்பாணம், பெப். 19

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நாளை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இருபாலாருக்குமான 100 மீற்றர் ஓட்டம், இருபாலாருக்குமான 200 மீற்றர் ஓட்டம், இருபாலாருக்குமான ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டம், பெண்களுக்கான குண்டு எறிதல், ஆண்களுக்கான உயரம் பாய்தல், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான கயிறிழுத்தல் இறுதிப் போட்டியும் நாளை நடைபெறவுள்ளது. இதில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நண்பர்கள் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வார்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காணி விற்பனைக்கு

ஆறுகால் மடம் வீதியில் யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 077 91 31 128

### அறை வாடகைக்கு

கொக்குவில் சந்தியில் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு :- 075 041 58 58

### வேலையாள் தேவை

யாழ் நகரில் பிரபல்யமான உடற்பயிற்சி நிலையத்திற்கு (Gym) பகுதி நேர வேலையாள் தேவை.

தொடர்பு :- 077 02 50 339


## தடையை நீக்க சிறிசாந் வலியுறுத்தல்

தன் மீதான தடையை நீக்கவேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சிறிசாந் வலியுறுத்தினார். அயல் நாடுகளில் நடைபெறும் தொடர்களிலாவது விளையாட அனுமதிக்க வேண்டும். என்மீதான தடையை கிரிக்கெட் சபை நீக்கவேண்டும்.


### SLAS (Open /Limited) வகுப்புக்கள்

சனி ,ஞாயிறு தினங்களில் 9.00-4.00 மணி வரை நடை பெறும்.

* SLAS,SLEAS திறந்த மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகள் மட்டுமல்ல அனைத்து போட்டிப் பரீட்சைகளிலும் முன்னணியில் திகழ்பவர்கள் எமது மாணவர்களே .

*வேலைவாய்ப்புக்கள்,பதவியுயர்வுகள் பெற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் .

தொடர்புகளுக்கு - 076 68 83 394,021 22 23 382

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)

### SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 617

சீட்டிழுப்பு திகதி 18.02.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 27 33 69 72 F

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,760,471/=

### விற்பனைக்கு

நல்லூரில் Journey L model 28 ஆசனங்கள் கொண்ட பஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 077 500 67 69

### வீட்டுப்பணிப்பெண் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை. தங்கி நின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு :- 077 02 50 339

### தாதியர் தேவை

நெல்லியடியில் இயங்கும்
கஜமுகன் டென்டல் கெயார் வைத்தியசாலைக்கு
தாதியர்தேவை.

அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பயில விரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும். (மாலை 4.00 மணிக்கு நேரில்வரவும்)

தொ.பே. 021 226 0000

### விற்பனைக்கு

நல்ல இன பசு மாடுகள் ,கன்றுகள் விற்பனைக்கு உண்டு
ஜேர்சி,பிறிசியர்,ஜசார்

தொடர்பு :- கஜன் - 077 61 01 458

### வான் வாடகைக்கு விடப்படும்

வருடக்கணக்கிலாக அல்லது மாதக் கணக்கிலாக நிறுவனங்கள், அலுவலகங்கள், தனியார் வீட்டுத் தேவைகளுக்காக சாரதியுடன் வான் வாடகைக்கு விடப்படும்.

076 568 3727, 076 706 9958

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2845 திகதி 18.02.2017

07 14 44 69 O 72

ரூ. 47,942,722/-

### Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 18

சீட்டிழுப்பு திகதி 18.02.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 05 10 16 40 03

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 76,46,982/= அடுத்த சுப்பர் ஜக்பொட் 32,59,447/= அடுத்த ஜக்பொட் 1,000,000/=

அபிவிருத்தி லொத்தர் சபை

www.dlb.lk

### Spoken English and Motivational Lessons

Spoken English and Motivational by Well experienced Tutor from Colombo for A/L Students, School Leavers University Student, Officers and House Wifes

077 316 4227, 077 724 7774
E-mail: Kirtionebiz@gmail.com

### வேலையாள்கள் தேவை

கொக்குவிலுள்ள நிறுவனத்துக்குப் பொதி செய்வதற்கு வேலையாள்கள் தேவை.

077 642 2208

### காரைநகரில் சிவாச்சாரியாருக்கு வீடு தேவை

காரைநகர் மேற்கு வீதியில் வடக்குப் பக்கமாக (பிரதான றோட்டிற்கு வடக்குப் பக்கமாக) சுப்பிரமணிய வித்தியா சாலைக்கும் சயம்பு வீதிக்கும் இடையில் உள்ள மெயின் வீதியை அண்மித்ததாகவும், பெரிய குடிநீர் பவுசர் செல்லக்கூடிய பாதையாகவும், சகல விதமான வசதிகளுடன் இரண்டு கோல்களும் 5இற்கு மேற்பட்ட பரப்பளவுடைய காணியை உடையதாகவும் அமைந்த வீடு மாத வாடகைக்கு அல்லது விலையாகப் பெற்றுக் கொள்வதற்கு மிக அவசரமாகத் தேவைப்படுகிறது. முற்பணம் வழங்கப்படும்.

காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 774 2316

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

## பிரெஞ்சு வகுப்புக்கள்

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்

பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம்
AF உலகம் முழுவதும் 1000 கிளைகள்.

(இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது)



பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை)



International Diploma
A1 பரீட்சைக்கட்டணம்

AF இல் படிப்போருக்கு 4000/- ஏனையோருக்கு 10300/-
யாழில் எங்கு படித்தாலும் இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்.

ஆரம்பம் சில தினங்களில், உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் → புகையிரதக் கடவை → AF (வெள்ளை மாடிக் கட்டடம்)

## ஜூஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்





தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL (PVT) LTD.

## பணியாளர்கள் தேவை

- எழுது வினைஞர் (ஆண்)
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (ஆண்)



வவுனியாவில் உள்ள எமது நிறுவனத்திற்கு எழுது வினைஞர்கள் மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை.

உங்கள் சுயவிவரக்கோவையுடன் நாளை (20.02.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்.

உதயன் அலுவலகம்
இல.60,பஸ்தரிப்பு நிலையம், வவுனியா.
(பஸ்தரிப்பு நிலைய மேல்மாடி)

## பதவி வெற்றிடம்

### சுப்பர் மார்க்கெற்றிற்கு வேலையாள்கள் தேவை

* வயதெல்லை 18- 30
* ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

### கலர் லாப்பிற்கு வேலையாள்கள் தேவை

* வயதெல்லை 18- 35
* வரவேற்பாளர்
* வடிவமைப்பாளர் (Photoshop)

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

### திருமண மண்டபத்திற்கு வேலையாள்கள் தேவை.

* உதவியாளர்
* பராமரிப்பாளர்
* வயதெல்லை 30 -50

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் யாவரும் சுயவிவரக் கோவையுடன் 24.02.2017 இற்கு முன்பாக கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Mega mall Super Market**
**No.114, Navalar Road, Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.